(307)

T.N.L.C. Debates

Official Report

1983

Vol: CXCVI

No: 1, 2, 3

D
V211,32'N83
N83.196.1-3'1
143171

[Issued 22—9—1983]

S. No. 142/55/B

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

SATURDAY 26th MARCH 1983

Volume CXCVI (No. 1)

GOVERNMENT OF TAMIL NADU
1983

*Legislative Council Department*
*Fort St. George, Madras*-600 009.

Price Rs. 2.75 *Paise*]

9. THE HONOURABLE THIRU C. PONNAIYAN, Minister for Co-operation and Law, in charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. THE HONOURABLE THIRU P. KOLANDAIVELU, Minister for Local Administration, in charge of Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. THE HONOURABLE THIRU S. RAGHAVANANDAM, Minister for Labour, in charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. THE HONOURABLE DR. H. V. HANDE, Minister for Health, in charge of Health.

13. THE HONOURABLE THIRU K. RAJA MOHAMMED Minister for Irrigation, in charge of Agro-Service Co-operative Societies, Irrigation including Minor-Irrigation and Wakf.

14. THE HONOURABLE THIRU S. MUTHUSWAMY, Minister for Transport, in charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. THE HONOURABLE THIRU S. THIRUNAVUKKARASU, Minister for Industries, in charge of Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. THE HONOURABLE THIRU S. N. RAJENDRAN, Minister for Khadi and Public Works in charge of Kadhi, Prohibition excluding grant of liquor Permits, Passports, Public Works Department and Establishment matters relating to Public Works Department.

17. THE HONOURABLE THIRU M. VIJAYASARATHI, Minister for Adi Dravidar Welfare, in charge of Adi Dravidar Welfare, Stationery and Printing, Government Press, Newsprint Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. THE HONOURABLE THIRUMATHI GOMATHI SRINIVASAN, Minister for Social Welfare, in charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indian Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

302

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. சுந்தர் லால் குரானா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப் பாகுக் கழிவு மற்றும் தோல் பொருள் இயல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன்வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மின்சாரம், மற்றும் இரும்பு, எஃகு கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கிராம, குடிசை, சிறுதொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வருவாய், வணிக வரிகள், ஆயத்துறை, மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா, மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி மற்றும் கைத்தறி.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு, கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை, பூமிதானம், கிராம தானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ப்.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பெருந்தொழில்கள், சுரங்கமும்-கனிவளமும் மற்றும் நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. செ. நீ. இராசேந்திரன் (கதர் மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு வகிப்பார் :—

கதர், மது விலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக) மற்றும் பயண இசைவுச் சீட்டு, பொதுப்பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (அரிசன நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

அரிசன நலம், எழுது பொருள்-அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால் நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்,

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்

டாக்டர் ம. பொ. சிவஞானம்

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்

திரு. புலவர் புலமைப்பித்தன்

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

1. திரு. க. இராமமூர்த்தி
2. திரு. சி. இராமலிங்கம்
3. திரு. பா. ரா. தாமஸ்
4. திரு. ஜே. எம். மியாகான்

மேலவைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

சார்புச் செயலாளர்

திரு. த. பி. டெல்லிதுரை, பி. எஸ். சி., பி, எல்.,

விவாதப் பதிப்பாளர்

திரு. நா. கோதண்டராமன், பி. ஏ., பி. ஜி. எல். , பி. எல.

தலைமை நிருபர்

திரு. ச. சுவாமிநாதன்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 1 அருணாசலம், திரு. க. .. | நியமனம். |
| 2 ஆறுமுகம், திரு. சோ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 3 ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 4 ஆனந்தம், திரு. வி.வி.வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 5 இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்). .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 6 இராசா முகமது, திரு. கா. (பாசனத் துறை அமைச்சர்). .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 7 இராதா, திரு. எஸ். ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 8 இராமமூர்த்தி, திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 9 இராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 10 கண்ணப்பன், திரு. காடு வெட்டி .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 11 சங்கரலிங்கம், திரு. ம. எம். ஏ. .. | திருநெல்வேலி—கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 12 சந்தோஷம், திரு. த. எம். ஏ. பி. எல். | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 13 சனார்த்தனம், டாக்டர் இரா. .. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 14 சிவஞானம், டாக்டர் ம. பொ. (மாண்புமிகு தலைவர்). .. | நியமனம். |
| 15 சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி. | நியமனம். |
| 16 சீத்தாபதி, திரு. ஆர். டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 17 சுவாமிநாதன், திரு. ஜி. பி. பார்ம். | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
| --- | --- |
| (1) | (2) |
| 18 தாமஸ், திரு. பா. ரா. .. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 19 தாமோதரன், திரு. ஏ. ஆர். .. | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 20 தாரா செரியன், திருமதி. | நியமனம். |
| 21 தாஸ், திரு. ஏ. ஜே. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 22 துரைசாமி, திரு. ஓ. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 23 நல்லசிவன், திரு. ஆ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 24 நீலநாராயணன், திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 25 ஜேப்பியார், திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 26 புலவர் புலமைப்பித்தன், (மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்) | நியமனம். |
| 27 மந்தாகினி கிருஷ்ண மூர்த்தி, திருமதி. | நியமனம். |
| 28 மாணிக்கம், திரு. ப. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 29 மியாகான், திரு. ஜே. எம். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 30 மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை ஆசிரியர்கள் தொகுதி. |
| 31 முத்து, திரு. எஸ். .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 32 முத்துசாமி, திரு. செ. .. | சேலம்,தர்மபுரி, கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 33 முத்தையா செட்டியார், டாக்டர் எம். ஏ. | நியமனம். |
| 34 முனுசாமி, திரு. பி. .. | நியமனம். |
| 35 லீலாவதி செல்வி, ஆ. .. | சென்னை, செங்கல்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |



| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
| --- | --- |
| (1) | (2) |
| 36 லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. .. | வடஆற்காடு-தென்ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி. |
| 37 வசந்த பை, திரு. ஜி. .. | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 38 வள்ளிமுத்து, திரு. ஈ. வெ. அ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 39 வீரப்பன், திரு. இராம. (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 40 வெங்கடேசன், திரு. ஈ. எஸ். | நியமனம். |
| 41 ஹண்டே, டாக்டர் எச். வி. | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 42 வெற்றிடம் .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 43 ஷை | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 44 ஷை | ஷை |
| 45 ஷை | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 46 ஷை | ஷை |
| 47 ஷை | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 48 ஷை | ஷை |
| 49 ஷை | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50 ஷை | செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51 ஷை | கோயம்புத்தூர் நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 52 ஷை | ஷை |
| 53 ஷை | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54 ஷை | ஷை |

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். | | தொகுதி. |
|---|---|---|
| | (1) | (2) |
| 55 | வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56 | ஷை | ஷை |
| 57 | ஷை | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 | ஷை | ஷை |
| 59 | ஷை | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 | ஷை | ஷை |
| 61 | ஷை | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 | ஷை | ஷை |
| 63 | ஷை | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

*சனிக்கிழமை, 1983 மார்ச் 26.*

*பங்குனி 12, துந்துபி, திருவள்ளுவராண்டு—2014.*

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 11-00 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர் (**புலவர் புலமைப்பித்தன்**) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** வினா எண்கள் 185, 186, 187 ஆகிய மூன்றும் ஒத்திவைக்கப்படுகின்றன.

### கன்னியாகுமரி மருத்துவமனை

* 188 **வினா.—திரு. ம. சங்காலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி நகரிய பகுதியில் உள்ள மருத்துவமனையில் எத்தனை படுக்கைகள் உள்ளன?

(இ) அப்படுக்கை வசதிகளையும் மருத்துவமனையில் இதர வசதிகளையும் அதிகரிக்கும் செயற்குறிப்பு ஏதேனுமுண்டா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** (அ) ஒன்பது படுக்கைகள் உள்ளன.

(இ) 1983-84 ஆம் ஆண்டு இரண்டாம் பகுதி திட்டத்தில் (Part II Scheme) ஆறு படுக்கை வசதிகொண்ட கட்டடம் கட்டுவதற்குரிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ம. சங்காலிங்கம்:** கன்னியாகுமரி நகரியப் பகுதி அகில உலக சுற்றுலாப் பயணிகள் வந்து பெருமளவில் கூடுகிற நகரமாக உருவாகிக் கொண்டிருக்கிறது. குறிப்பாக கோடை மாதங்களில், கேரளாவில் ஐயப்பன் திருவிழா நடக்கும் காலங்களில் பதினாயிரக் கணக்கான மக்கள் வந்து பல நாள் தங்கிப் போகிறார்கள். ஆனால் ஒரு கிராமப் பகுதியில் உள்ள வசதியைப் போல ஒன்பது படுக்கைகள் கொண்ட மருத்துவமனை மட்டுமே இருக்கிறது. அகில உலக சுற்றுலாப் பயணிகள் வந்து போகும் அளவிற்கு அமைப்புகள்

[1983 மார்ச் 26

அங்கே இல்லை. எனவே படுக்கைகளின் எண்ணிக்கையை குறைந்தது 50 ஆக உயர்த்த அரசு நிதி ஒதுக்குமா? இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** அங்கேயுள்ள மருத்துவமனையில் ஒன்பது படுக்கைகள் இருக்கின்றன. சராசரியாக அங்கே எத்தனை உள் நோயாளிகள் அனுமதிக்கப்படுகிறார்கள் என்ற கணக்கை எடுத்திருக்கிறோம். 1979 ஆம் ஆண்டில் இரண்டு உட்புற நோயாளிகளும், 1980 ஆம் ஆண்டில் மூன்று நோயாளிகளும், 1981 ஆம் ஆண்டில் ஐந்து நோயாளிகளும் சராசரியாக அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். புறநோயாளிகளைப் பொறுத்தவரையில், 1979 ஆம் ஆண்டில் 209 பேரும், 1980-ல் 180 பேரும், 1981 ஆம் ஆண்டில் 225 பேரும் வந்து போயிருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர் சொன்ன மாதிரி, கூடுதலாக படுக்கைகளை அதிகரிக்கலாமா என்றுகூட சிந்தித்தோம். பிறகு, ஆறு படுக்கைகள் இருக்கட்டும், அதற்குப் பிறகு வரக் கூடிய உட்புற நோயாளிகளைப் பொறுத்து அதை உயர்த்தலாம் என்ற முடிவுக்கு வந்து திட்டமிட்டிருக்கிறோம்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** கடந்த மூன்று ஆண்டுகளில் எத்தனை உள் நோயாளிகள் வந்திருக்கிறார்கள் என்ற கணக்கை எடுத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருப்தி அடைகிறார்கள். நோயாளிகள் உள்நோயாளி களாக இருக்கத்தக்க அளவிற்கு வசதிகள் இல்லாமல் இருப்பதால்தான், நோயாளிகள் அதிகமாக வரவில்லை. நோயாளிகள் குணம் அடைவதற்காகத் தான் மருத்துவமனைக்கு வருகிறார்கள். படுக்கைகளில் படுப்பதற்காக அல்ல. அவர்கள் குணமடையக்கூடிய அளவிற்குண்டான கருவிகள், மருத்துவர்கள், சிறப்பு பெற்ற மருத்துவர்கள் இல்லாததால், நோயாளிகள் அங்கேயிருந்து நாகர்கோயில் நகரை நோக்கி வருகிறார்கள். ஆகவே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி நகரியப் பகுதி யிலிருந்து நாகர்கோயில் தலைமை மருத்துவ மனைக்கு எத்தனை பேர் வந்து சேர்கிறார்கள் என்ற புள்ளிவிவரத்தை எடுத்து ஆராய்ந்தால், நான் சொல்லும் நிலை புரியும். அந்த முறையில் ஆராய்ச்சி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** எதிர்க் கட்சி உறுப்பினர் சொன்னது அருமையான கருத்து என்பதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை. எத்தனை நோயாளிகள் அங்கேயிருந்து இங்கே வருகிறார்கள் என்பதை அக்யுரேட்டாகக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றாலும் தோராயமாகக் கண்டுபிடிக்கத் தயாராக இருக்கிறோம். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் சொன்ன கருத்து நிச்சயமாக ஏற்றுக்கொள்ளப்படும்.



1983 மார்ச் 26]

அதே நேரத்தில் மேலும் சில வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே கூட நிச்சயமாகக் கவனிக்கலாம். ஆனால் எங்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய தகவல்கள் எல்லாம் அங்கே ஃப்ளோட்டிங் பாப்புலேஷன் அதிகமாக இருப்பதால், அங்கே புற நோயாளிகள்தான் அதிகமாக இருக்கிறார்கள் என்பதுதான். இருந்தாலும் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதால், அவருடைய கருத்து நிச்சயமாகக் கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** கன்னியாகுமரி பகுதியில் ஆண்டவனைத் தேடி அலைவோரும், அழகைத் தேடி அலைவோரும் பெருமளவிற்குப் பயணிகளாக வருகிறார்கள். ஆகவே அங்குள்ள மருத்துவ மனைகளில் ஸ்பெஷலிஸ்ட் இருப்பது உதவிகரமாக இருக்கும். குறிப்பாக சென்ட்ரலி மானிட்டர்ட் கார்டியாக் யூனிட்டை ஏற்படுத்தினால், உதவியாக இருக்கும். அந்த வகையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** 'சென்ட்ரலி மானிட்டர்ட் கார்டியாக் யூனிட்' என்பது பெரிய விஷயம். சாதாரணமாக சிங்கிள் யூனிட் இருந்தாலே பெரிய விஷயம். ஆகவே என்னென்ன வசதிகள் செய்து கொடுக்கலாம் என்பதைப் பற்றி ஆராய்ந்து, இன்னும் அதிக அளவிலே செய்வதற்கு மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் . சொன்ன கருத்தின் அடிப்படையிலே ஆராயலாம். மாண்புமிகு கொறடா சொன்ன கருத்தின் அடிப்படையிலும் இன்னும் வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** குறிப்பாக அங்கே வெளிநாட்டுப் பயணிகள் வருகிறார்கள். அவர்கள் கடலில் குளிக்கிறார்கள். அதனாலே அது தொடர்பான வியாதிகள் ஏற்பட்டால், அதைக் கவனிக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** ஒட்டுமொத்தமாக வசதிகள் கூடுதலாகச் செய்வதற்கு (அரசாங்கம் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜேப்பியார்:** கன்னியாகுமரியில் தினந்தோறும் ஐம்பதுக்குக் குறையாமல் பிரயாணிகள் வந்து போவதால், கடலில் குளிக்கும்போது பாறையில் அடிபடுவதும், வெளிமாநிலத்திலிருந்து வந்தவர்கள் திடீரென்று

நோய்வாய்ப்படுவதும் ஏற்படுவதால், நாகர்கோயில் மருத்துவமனையிலிருந்து ஒரு நடமாடும் ஊர்தியை நியமித்து அவர்களுக்குச் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** இதுவும் நல்ல யோசனை. இதனையும் ஆராயத் தயாராக இருக்கிறோம்.

**திரு. க. இராமமூர்த்தி:** நாகர்கோயிலில் தனியார் மருத்துவமனைகள் அங்கு இடம் கிடைக்காத அளவிற்குப் பெரிய அளவில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. Will the Government make a study and find out what the reasons are and will the Government try to rectify it ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** நாகர்கோயில் டவுனைப் பொறுத்தவரையில், அங்கே பல்லாண்டுகளாக தனியார் மருத்துவமனைகள் ஏராளமாக இருக்கின்றன. பெரிய நர்சிங் ஹோம்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்களுக்குக்கூட தெரியும். அரசியலில் குதிக்கக்கூடியவர்கள்கூட இருக்கிறார்கள். நல்ல செல்வாக்குப் படைத்த, நல்ல வசதிபடைத்தவர்கள் பலர் இருக்கிறார்கள். இப்போதுதான் அவர்களோடு போட்டி போட்டுப் பணியாற்ற நாகர்கோயில் தலைமை மருத்துவமனை துவங்கியிருக்கிறது. அது எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன்.

## மருத்துவக் கல்லூரிகளில் பட்டமேற்படிப்பு இடங்கள்

*189 வினா.—**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மருத்துவக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்புக்கான இடங்களை அதிகரிப்பது குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** (அ) இப்பொழுது இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1983 மார்ச் 26

கிராமங்களில் பணியாற்றி வருகின்றவர்களுக்கு பிரையாரிட்டி கொடுக்க வேண்டும் என்பதைக் கொள்கையளவில் அரசு கொள்ளவேண்டும். அப்படிச் செய்து கிராமப்பகுதிகளிலே இருப்பவர்களை ஊக்குவிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** கிராமப்பகுதிகளில் பிரைமரி ஹெல்த் சென்டர்ஸ் போன்ற இடங்களில் பணியாற்றுகின்ற மருத்துவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய அளவிற்கு நாம் அவர்களுக்கு இன்டர்வியூவில் மார்க்குகள் போடுகின்ற நேரத்திலே ஒவ்வொரு பிரிவாகப் பிரித்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் கூறிய கருத்தின் அடிப்படையிலே, இந்த ஆண்டு, சென்ற ஆண்டைவிடக் கூடுதலான இடங்கள் கொடுக்கின்ற அளவிற்கு நிலைமைகள் உருவாக்கப்படுகின்றன. எட்டு மார்க்குகள் அந்த டாக்டர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி மாறுதல்கள் செய்ததன் மூலமாக கிராமப் பகுதிகளிலே பணியாற்றுகின்ற டாக்டர்களுக்கு, மருத்துவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்காலிங்கம் :** பட்ட மேற்படிப்புக்கு மேலே இருக்கக்கூடிய ஆராய்ச்சி வாய்ப்புக்களை நாம் ஏற்படுத்தியிருக்கிறோமா? தரமணியில் நடைபெறுகின்ற ரிசர்ச் சென்டருக்கு மத்திய அரசு, யூ.ஜி.சி. மூலம் எவ்வளவு மான்யம் அளிக்கிறது? நாம் 'மேட்சிங் கிரான்ட்' கொடுக்காததால் ஏதாவது இழப்பு ஏற்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** அதுபற்றிய தகவல் இப்போது என்னிடம் இல்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** புதிய மேற்படிப்புக்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்திருப்பதுபற்றி நான் மகிழ்ச்சி தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் திருநெல்வேலி, கோவை ஆகிய இடங்களில் படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த இங்கே அதிகமாகப் படிக்கின்ற மாணவர்கள் எண்ணிக்கையைக் குறைத்து அங்கே அதிகப்படுத்த அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** எம்.சிஎச். கார்டியோ தொராசி சர்ஜரி அட் மதுரை மெடிகல் காலேஜ், டிப்ளோமா இன் ஆர்தோபடிக் அட் கோயம்புத்தூர் மெடிகல் காலேஜ், அது மாதிரியாக டிப்ளோமோ கோர்ஸ் இன் பார்மசி அட் செங்கல்பட்டு அண்ட் திருநெல்வேலி மெடிகல் காலேஜஸ்—இவைகள் எல்லாம் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1983 மார்ச் 26]

**திரு. செ. முத்துசாமி :** மருத்துவக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு படித்தவர்களுக்கும் மற்ற உத்தியோகத்திலே இருப்பவர்களுக்கும், அரசு கலைக் கல்லூரியைச் சேர்ந்தவர்களுக்கு யூ.ஜி.சி. ஸ்கேலை அமுல்படுத்தியபோது கிடைத்த சம்பளம் போல் கிடைக்கவில்லை. மருத்துவக் கல்லூரிகளில் மேற்படிப்பு படித்தவர்களுக்கு யூ.ஜி.சி. ஸ்கேலை அமுல்படுத்தாததால் அவர்களுக்குச் சம்பளம் குறைந்துவிட்டது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஆர்டினரியாக இருக்கக்கூடிய கலைக்கல்லூரியில் இருப்பவர்களுக்குக் கூடுதலாக இருப்பதற்குச் சமமாக, இவர்களுக்கும் சம்பளத்தை உயர்த்தும் நோக்கம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** கலைக்கல்லூரியிலிருந்து வந்து பணியாற்றுகின்றவர்களுடைய எண்ணிக்கை மிகவும் குறைந்ததாக இருக்கிறது. இருந்தாலும் பிரி புரோபஷனல் கோர்ஸ் என்று முன்பு ஒரு கோர்ஸ் இருந்தது. அதிலே கெமிஸ்ட்ரி, பிசிக்ஸ், இங்கிலீஷ் என்று எல்லாம் இருந்தது. இந்த பிரி-புரோபஷனல் கோர்ஸ் என்பது இப்போது இல்லை. ஆகவே அந்தப் பிரச்சினை இல்லை என்று கருதுகிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஆணையாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள ஊரல் டாக்டர்களுக்கும் மேற்படிப்புக்கு இருமாதிரி வாய்ப்பு அளிக்கப்படுகிறதா என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு என்று ஒரு உதவித் தொகையும், பிரைமரி ஹெல்த் சென்டர்களில் உள்ளவர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஒரு வித்தியாசமான மேற்படிப்பு உதவித் தொகையும் அளிக்கப்படுகிறதா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** இது ஒரு அருமையான கேள்வி. ஏனென்றால் 15 நாட்களுக்கு முன்பு இந்தக் குறைபாடுபற்றி என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. "பஞ்சாயத்து மருத்துவ மனையிலே பணியாற்றுகின்ற அந்த டாக்டர்கள் பிரைமரி ஹெல்த் சென்டரில் உள்ள டாக்டர்களுக்கு ஈக்குவலாக கருதப்படுவதில்லை, அந்த வாய்ப்புக்கள் கொடுக்கப்படுவதில்லை" என்ற குறைபாடுபற்றி என்னிடம் கொடுக்கப் பட்டிருக்கிறது. நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மகிழ்ச்சியோடு சொல்கிறேன். இதைப்பற்றி உடனடியாக ஆராய்ந்து இவர்களையும் இந்த எல்லைக்குள்ளே கொண்டுவர முயற்சி எடுக்க வேண்டும் என்று ஆணை யிட்டுள்ளேன். It is all in the processing of the Department.

## அறுவை சிகிச்சை அரங்குகள்

* 190 வினா.—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து, அரசினர் இராயப்பேட்டை மருத்துவமனையில் இரண்டு அறுவை சிகிச்சை அரங்குகள் இன்றுவரை மூடப்பட்டிருக்கின்றன என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணங்கள் யாது?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** (அ) 1981 டிசம்பர் 1982 ஜனவரி மாதங்களில் இம்மருத்துவமனையில் நான்கு அறுவை சிகிச்சை அரங்குகள் கீழ்க்கண்டவாறு தற்காலிகமாக மூடப்பட்டு திறக்கப்பட்டன.

| அறுவை அரங்கின் பெயர். | மூடப்பட்ட நாள். | திறக்கப்பட்ட நாள். |
|---|---|---|
| அறுவை அரங்குகள் | 17—12—1981 | 28—12—1981 |
| பி. அறுவை அரங்கு | 18—12—1981 | 28—12—1981 |
| ஏ.பி. அறுவை அரங்கு | 3—1—1982 | 6—1—1982 |

(இ) திடீரென்று ஏற்பட்ட டெட்டனஸ் காரணமாக தற்காலிகமாக இந்த அறுவை அரங்குகள் மூடப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** டெட்டனஸ் நோய் ஏற்பட்டு அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட நோயாளிகளில் இந்த மருத்துவமனையில் இந்த குறிப்பிட்ட காலகட்டத்தில் எத்தனை பேர் இறந்தனர்? அப்படிப்பட்ட நோய் வாராமல் இருக்கக்கூடிய நிலைமைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றனவா? இதுமாதிரி எல்லா மருத்துவமனைகளிலும் அடிக்கடி உருவாகிவிடுகின்றதா? அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்தது?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** துணைத் தலைவர் அவர்களே, அப்படி இறந்ததாகத் தகவல் எதுவும் எனக்குக் கிடைக்கவில்லை. நான் கேட்டவுடனே அப்படிப்பட்டவர்கள் யாரும் இறந்து போகவில்லை என்று தான் சொன்னார்கள். அதைப்பற்றி மீண்டும் போய்ப்பார்த்து உண்மைதானா என்று பரிசீலனை செய்து பார்த்திருக்கிறேன். அது உண்மைதான் என்று அதிகாரிகளும் சொல்லியிருக்கிறார்கள். நான் முன்பு படித்த மூல பதிலில் பார்த்தால் தெரியும். ஏ.பி. அறுவை அரங்கு, 3—1—1982 மூடப்பட்ட நாள் என்றால், 6—1—1982 திறக்கப்பட்ட நாள். ஆக 3 **நாட்கள்தான்.**



18—12—1981 மூடப்பட்ட நாள் என்றால் 28—12—1981 திறக்கப்பட்ட நாள், ஆக 10 நாட்கள்தான். இது சாதாரணமாக இருக்கக்கூடியதுதான். எந்தப் பகுதியாக இருந்தாலும்கூட இப்படி டெட்டனஸ் வரத்தான் செய்யும். ஏர் கண்டிஷனும் செய்துகொண்டிருக்கின்றார்கள். எப்படியிருந்தாலும் இது வரும். கம்ப்ளிட்டாக செண்ட்ரலைஸ் செய்துவிட்டால் டெட்டனஸ் வராது. இப்போது ‘கம்ப்ளிட் சென்ட்ரலைலேஷன்’ செய்யமுடியாத நிலை இருக்கிறது. ஏர்கண்டிஷன் என்று சொல்லும்போது 1½ டன். 1 டன் என்று வைத்திருக்கிறார்கள். பெரிய ஆப்பரேஷன் தியேட்டராக இருந்தால், 2 ஏ.சி. அதாவது 1½ டன், 1½ டன் ஆக, 3 டன்னில் ஏ.சி. பிளாண்ட் அமைக்க வேண்டியிருக்கிறது.

இதுபோன்று பல மாநிலங்களில் இருக்கின்றன. அதை செக்கிங் செய்வது, ஸ்குவாபிங் என்று சொல்வார்கள். டெட்டனஸ் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும் என்று சொல்வார்கள். மாதம் ஒரு முறையாவது ‘செக்’ செய்து பார்க்கவேண்டும் என்பார்கள். இதுபற்றி தகவல் வருகிறதோ இல்லையோ, உடனடியாக ‘ஸ்குவாப்’ எடுத்துப்பார்க்க வேண்டும் என்று சொல்கிறோம். குறைந்தபட்சம் மூன்று மாதத்திற்கு ஒரு முறை டெட்டனஸ் கல்சர் போட்டுப் பார்க்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறோம்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** அறுவை சிகிச்சை செய்யக்கூடிய மருத்துவ மனையைச் சுற்றியுள்ள பகுதிகள் தூய்மைப்பகுதிகளாக அறிவிக்கப்பட்டு, அந்தப் பகுதியைத் தூய்மையாக வைத்து அந்த டெட்டனஸ் ஏற்படாமல் இருக்கச் செய்ய ஏதாவது செயற்குறிப்பு உள்ளதா? அறுவை சிகிச்சையைச் செயல்படுத்துகின்ற மருத்துவமனையைச் சுற்றுவட்டாரத்தில் தூய்மை குறைந்த காற்று மற்றவைகள் வாராத நிலை உள்ளவாறு, புதிய அறுவை சிகிச்சை அரங்குகளை ஏற்படுத்த அரசிடம் இந்தக் கால கட்டத்தில் திட்டம் உள்ளதா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. ராயப்பேட்டை மருத்துவமனை போன்ற பல மருத்துவ மனைகளில் ஏற்கெனவே பல ஆண்டுகளாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. இந்த மருத்துவ மனைகளின் சுற்றுப்புறத்தைச் சுத்தப்படுத்துவது என்பதை இன்றுள்ள நிலையில் செய்ய முடியாது. சில நேரங்களில் நம்முடைய அனுபவம் ஒரு கட்டிடத்தை இடிக்க ஆரம்பித்தால். அதனாலேயே டெட்டனஸ் வரக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே புதிதாக மருத்துவமனை கட்டுகின்ற நேரத்தில் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[1983 மார்ச் 26

THIRU A. R. DAMODARAN: Sir, tetanus is practically unknown in modern hospitals abroad. What the Hon. Minister pointed out is about construction difficulties, dust etc. Is it impossible for the Government of Tamil Nadu, with the engineering expertise they have, to see that this tetanus is totally eradicated, instead of offering some excuses for the occurrence of this in our operation theatres?

THE HON. DR. H. V. HANDE: Hon. Deputy Chairman, Sir, I do not know whether the hon. Member Thiru Damodaran has understood me properly. When we want to start new hospitals, we can keep in mind all the suggestions given by the hon. the Leader of the Opposition. As far as the present hospitals are concerned, we have already got the Operation Theatres there. Our object is to see that the presence of tetanus is discovered sufficiently early—this is an important point—without any casualty taking place. Here and there we hear about tetanus in our State because we take abundant precautions and send swabs. I would also like to tell the hon. Member that the world over this problem of infection in the operation theatres is an ubiquitous phenomenon and all-pervading phenomenon. They are only able to reduce it to a certain extent. Arthur Hailey will tell you that infection was a problem in a very sophisticated private hospital.

(முற்பகல் 11-20)

**திரு. பா. ரா. தாமஸ்:** 1982-ஆம் ஆண்டில் மதுரை இராஜாஜி மருத்துவ மனையில் பல தாய்மார்கள் கர்ப்பப் பை ஆபரேஷனில் சம்பந்தப்பட்டபோது, பல தாய்மார்கள் இறந்துவிட்டதாகக் கேள்விப்பட்டோம். உடனே அந்த மருத்துவ மனையிலே ஆபரேஷன் தியேட்டர்கள் மூடப்பட்டதாகக் கேள்விப் பட்டேன். இவ்வாறான சூழ்நிலைகள் உருவாகாமல் இருப்பதற்கு, மருத்துவ மனைகளிலே உள்ள ஆப்ரேஷன் தியேட்டர்களை ஏர்-கண்டிஷன் செய்ய வேண்டுமென்றால், உடனடியாக அப்படி மாற்ற வேண்டும். இல்லையென்றால் மக்களிடையே நம்பிக்கையில்லாத நிலை ஏற்படுமென்று கூறி, அதுகுறித்து என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறியதில் ஒரு பகுதியை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. நிறைய கர்ப்பிணிகள் பாதிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அது தவறு.



1983 மார்ச் 26]

**திரு. பா. ரா. தாமஸ்:** கர்ப்பப் பை நீக்கக்கூடிய சிகிச்சையிலே தங்களை அர்ப்பணித்தவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** 'ரிமூவல் ஆஃப் யூடரஸ்' என்று சொல்லுகிறார்கள். அப்படி தகவல் இல்லை. நிச்சயமாகச் சொல்லுகிறேன். இந்த மன்றத்தின் மூலமாக ஒரு பீதியை மக்களிடையே பரப்ப வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் எதைச் சொல்லுகிறார்கள் என்பது தெரியவில்லை. இருந்தாலும் அது முற்றிலும் ஆதாரமற்ற கூற்று என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆபரேஷன் தியேட்டர்களைப் பொறுத்தவரையில், படிப்படியாக ஏர்-கண்டிஷன் செய்து கொண்டு வருகிறோம். அதில் பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. நிதி நிலைமையைப் பார்க்க வேண்டும். எந்த அளவிற்குத் தொகையை அதற்கு ஒதுக்கலாமென்பதைப் பார்க்க வேண்டியிருக்கிறது. மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் கொண்டு வர இருக்கிற அப்ரோப்பிரியேஷன் பில்லிலே பேச இருக்கிறார்கள். அந்த நேரத்திலே கொஞ்சம் கூடுதலாக இதற்கு நிதி கொடுத்தால் நல்லதென்று கூற வேண்டும். அப்போது 'வாக்-அவுட்' செய்யாமல் இருந்தால் நல்லது.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** 'டெடனஸ்' காரணமாக அவ்வப்போது பல மாவட்ட மருத்துவ மனைகளிலே உள்ள அறுவை சிகிச்சை அறைகள் மூடப்படுகின்றன. அப்போது மாவட்டத் தலைமை மருத்துவ அதிகாரி அதுபற்றி மேலே எழுதுவதைக் காட்டிலும், அவரே அது குறித்து நடவடிக்கை எடுக்க தனி அதிகாரம் அவருக்கு வழங்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** 'டெலிகேஷன் ஆஃப் பவர்ஸ்' என்று மாவட்ட தலைமை மருத்துவ அதிகாரிகளுக்கு மட்டுமல்ல, அந்தந்த மருத்துவ மனைகளிலே உள்ள சீஃப் மெடிகல் ஆபிசர்களுக்கும் உரிய அதிகாரங்கள் கொடுத்திருக்கிறோமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** நான் அரசு பொது மருத்துவ மனைக்கு சில நோயாளிகளைப் பார்க்கச் சென்றிருக்கிறேன். அங்கே, அறுவை சிகிச்சைகள் நடக்கும் தியேட்டர்களுக்குப் பக்கத்திலே நடந்து செல்லும்போது, மூக்கைத் துளைக்கக்கூடிய அளவிற்கு மோசமான வாடை வீசும் நிலை இன்னும் நீடிக்கிறது. அதுபற்றி நான் இரண்டொரு தடவை சொல்லியிருக்கிறேன். அதற்கு என்ன காரணம்? அதை அங்குள்ள ஊழியர்களால் தடுக்க முடியவில்லை என்றால், வேறு ஆட்களைப் போடுங்கள். ஆட்கள் போதவில்லை என்றால், அதிகப்படியாக ஆட்களைப் போடுங்கள். அங்கே துர்வாடை வீசாமல் இருக்க அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன். ஆபரேஷன் தியேட்டர்களுக்குப் பக்கத்தில் மூக்கைத்

துளைக்கிறது. ஜி.எச்.-ல் அப்படி இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அதற்கான நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹன்டே:** மாண்புமிகு உறுப்பினரவர்கள் 'ஃபார்மலின்' பற்றிச் சொல்லுகிறார்களா அல்லது வேறு வாடை பற்றிச் சொல்லுகிறார்களா என்பது தெரியவில்லை. வேண்டுமென்றால் அவரை சில ஆபரேஷன் தியேட்டர்களுக்கு அழைத்துக்கொண்டு போக நான் தயாராக இருக்கிறேன். அப்போது,
He can distinguish what is Pharmalin smell and what is the smell that comes out of unclean atmosphere
எந்த ஆப்பரேஷன் தியேட்டரில் இப்படி இருக்கிறதென்று சொன்னால் நடவடிக்கை எடுக்கலாம். பொதுவாகச் சொல்ல வேண்டுமென்றால், மிகக் கடுமையாக நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம். 'செக்ஸ் அண்டு கவுண்டர் செக்ஸ்' (checks and counter checks) என்ற வகையிலே வைத்திருக்கிறோம். அதைத் தரிதப்படுத்த ஆயத்தமாக இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் எந்த வாடைபற்றிச் சொல்லுகிறார்கள் என்பது தெரியவில்லை. பழக்கம் இல்லை என்றால், ஒரு வாடைக்கும் இன்னொரு வாடைக்கும் வித்தியாசம் தெரியாமல் இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களை நானே அழைத்துப் போகத் தயாராக இருக்கிறேன்.

THIRUMATHI TARA CHERIAN: Sir, is it a fact that there was a tetanus case and was there elimination of causes to pinpoint the reason why there has been tetanus? I have seen some of the doctors and nurses freely going into the operation theatres. I do not know whether there is sterilisation of the dress and even the shoes worn by them. Anyhow I can say that it is not in the manner as it should be in our hospitals. There have been many cases of tetanus. Will the Hon. Minister be able to tell us the particular reason for tetanus in the particular case mentioned by the hon. the Leader of the Opposition?

THE HON. DR. H. V. HANDE: Hon. Deputy Chairman, I do not know what particular instance the hon. the Lady Member is referring to. I may tell her that as far as the dress of doctors and para medical personnel is concerned, it is absolutely sterilised. When they go into the operation theatres, they wear only sterilised material. Making such a sweeping remark is very unfair to the profession itself and I strongly deprecate this sort of comments in any forum for that matter.





It is all sterilised. To say that it is not sterilised is preposterous and I am not prepared to share that view. The other question the hon. Lady Member raised is with regard to Royapettah Hospital. We tried to pinpoint the source of tetanus and we found that tetans was because of the dusty road, dung outside and our way of life. Everything has to be reformed. When we take into consideration the way of our living, the incidence of tetanus is minimal. There is no point in unnecessarily exaggerating it and trying to frighten the people.

THIRUMATHI TARA CHERIAN: I am sorry I have been mistaken. Being the wife of a doctor who had served in a Hospital in Madras for years together, I will be the last person to criticise the doctors. I have gone to Government Royapettah Hospital and I have seen the wardboys coming and going out of the operation theatres. Only if we have an Advisory Council which may not interfere with the internal administration of the Hospital, people can give useful suggestions in all these things. It will be nice to have a doctor in that body to give useful ideas so that people may become conscious of the conditions in the hospital and the efforts taken in fighting tetanus.

(முற்பகல் 11-30)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** கேள்வி நேரத்தின்போது உறுப்பினர் கேள்வி மாத்திரம்தான் கேட்கலாம்.

**திருமதி தாரா செரியன்:** கேள்வி தான் கேட்கிறேன்.

THE HON. DR. H. V. HANDE: Hon. Deputy Chairman, the hon. Lady Member comes out with another point totally different from what she has earlier mentioned and that is about ward-boys. The ward-boys do not go into the operation theatre. Their work is outside in the wards. Operation theatre work is done by distinctly different staff and all the staff members who go into the operation theatres will be wearing only sterilised dress. For the information of the hon. Member, I would like to say that these dresses are brown in colour. The hon. Member should not get a mistaken impression by the colour. They are not absolutely white but they are sterilised. As far as sterilisation is concerned, the colour does not come into the picture at all. They are brought to 300 degree Centigrade by increasing

கே.எம்.சி.-யில் பெட்டலஸ் ஒன்றும் கிடையாது. ஆனால் அங்கே ஆபரேஷன் தியேட்டருக்கான சில முக்கிய கருவிகள் கிடைக்கவில்லை என்ற காரணத்தால், உடனடியாக டாக்டர் வாசுதேவன் அவர்களை அழைத்து செக்ரட்டேரியட்டில் மீட்டிங் ஒன்றைக் கூட்டி, உடனடியாக அதைத் துவக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** இங்கே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் டாக்டர்கள் மீது தெளிவாக நம்பிக்கை வைத்து கருத்துக்களைச் சொன்னார்கள். ஆனால் நான் என்னுடைய சொந்த அனுபவத்தை இங்கே சொல்கிறேன். எவ்வளவு பெரிய தவறுகள் நடைபெறுகின்றன என்பதுடன் கூட, அது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காகவும் சொல்கிறேன். முட்டியிலே, ஷோல்டரிலே எல்லாம் உள்ளே ஊசி போடுகிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** 'ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்.' மூலக் கேள்விக்கு எந்தவிதமான தொடர்பும் இல்லாமல் இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்கிறார்கள். எந்த ஒரு கருத்தைக் கேட்டாலும் நான் அதற்கு பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். ஆனால் அது விவாதமாகி எங்கேயோ கொண்டு போய் விட்டு விடும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திடீரென்று இம்மாதிரி கேள்வி கேட்டால் நான் உடனடியாக எப்படி பதில் சொல்ல முடியும்?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** தொடர்பு இல்லாத கேள்வியை மூட்டிக்கொள்ள வேண்டாம். (சிரிப்பு)

*Seizure of Cement Bags in South Arcot District.*

* 191. THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(a) the number of cement bags seized for want of permits from Private Residences and Godowns in the past one year in South Arcot District;

(b) the number of bags seized in Tindivanam Taluk; and

(c) the action taken thereon?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** 1—4—1980 முதல் 31—12—1881

(அ) 7,522.

(இ) 1,386.

(உ) பறிமுதல் செய்யப்பட்டவை 5,607½ மூட்டைகள். மீதியுள்ள 1,914½ மூட்டைகளில் 1,714½ மூட்டைகள் திருப்பியளிக்கப்பட்டன. மற்றும் 200 மூட்டைகள் விசாரணையிலுள்ளது. எனினும் அவைகள் விற்று வருவாய் வைப்புத் தொகையில் சேர்க்கப்பட்டுள்ளது.





**திரு. க. இராமமூர்த்தி:** I think it has lost the importance, as I said. Even the Collector has been transferred. இந்தக் கேள்வி கேட்டு இரண்டு வருடமாயிற்று. என்னுடைய கேள்வியின் முக்கியத்துவம் போய்விட்ட நிலையில் இது வந்திருக்கிறது. இருந்தாலும் பரவாயில்லை. இவ்வளவு பேர் பதுக்கி வைத்திருந்திருக்கிறார்கள். இதில் எத்தனை பேர் வியாபாரிகள்? வியாபாரிகளாக இருந்து அவர்கள் பதுக்கி வைத்திருந்தார்கள் என்றால், அவர்கள் மீது எடுத்த நடவடிக்கை என்ன? அதுபோல் தனிப்பட்டவர்கள் பதுக்கி வைத்திருந்தால், அவர்கள் எத்தனை பேர்? அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** தென்னாற்காடு மாவட்டம் முழுவதும் சுமார் 7,500 மூட்டைகள் கைப்பற்றப்பட்டது பற்றியது இந்தக் கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்குப் பதில் சொல்வதென்றால், நீண்ட பட்டியல் கொண்டது அது. ஆனால் சுருக்கமாகச் சொல்கிறேன். ஏற்கெனவே டீலர் ஆக இருந்தவர்களிடமிருந்த டீலர் உரிமை ரத்து செய்யப்பட்டு, அவர்கள் மீது குற்றவியல் நீதிமன்றங்களில் வழக்கு தொடரப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு சிலர் தண்டனைக்கும் உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது மாதிரி பிரச்சினை இல்லை. காரணம் இப்போது சிமெண்ட் விலை குறைந்துவிட்டது, தாராளமாக வெளியே கிடைக்கவும் செய்கிறது. ஆகவே தவறு செய்தவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** இப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று சொல்லும்போது, மிக சில பேர் மீது மட்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. பின்னாலே அதுவும் கைவிடப்பட்டது. எந்தச் சூழ்நிலையிலே அவை கைவிடப்பட்டன என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்ததா? காரணம் இது அத்தியாவசியப் பண்டம் என்பதன்கீழ் வருகிறது. ஆகவே எந்த ஒரு சூழ்நிலையிலேயும் இனிமேல் அதுபோன்ற நிலைமைகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். வழக்கு பதிவு செய்து, பிடிபட்டவர்கள் மீது வழக்கை நடத்துகின்றபோது, அதைத் தொடர்ந்து நடத்தி அவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்கிற நிலையும் இருக்க வேண்டும். "Because it is all concerned with Essential Commodities" அந்த அளவில் நடவடிக்கை எடுக்க மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் பார்த்துக்கொள்வார்களா?

(முற்பகல் 11-40)

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, உடனடியாகக் கைப்பற்றப்பட்ட மூட்டைகள் 7,500. அதிலே விசாரணைக்குப் பின்னாலே திருப்பிக் கொடுக்கப்பட்டவை சுமார் ஆயிரம் மூட்டைகள். ஆனால் தவறு என்று கண்டுபிடிக்கப்பட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்த பிறகு, அதிலிருந்து கேசை 'வித்டிரா' பண்ணி வழக்குத் தொடராமல் விடுபட்ட நிலை யாருக்கும் உருவாக்கப்படவில்லை. முறையாக விசாரித்த பிறகு, அரசு அதிகாரிகள் பரிசீலனைக்குப் பிறகு திருப்பிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது லெவி சிமெண்டைப் பொறுத்த வரைக்கும், சொசைட்டிகளின் மூலமாக விநியோகம் செய்து கொண்டிருக்கிறோம். எனவே இந்தப் பிரச்சினை இதிலே இல்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** அரசு முறையாக பெர்மிட் வழங்குகிறது என்றாலும், கட்டிடம் கட்டுவதில் ஒவ்வொரு நிலை முடிந்த பிறகும், சிமெண்டைத் தருகிற நிலை இருப்பதால், அந்த சிமெண்டை வாங்குபவர்கள் நல்ல விலை கிடைக்கும் என்று கருதி பதுக்கி வைக்கிறார்கள். ஆகவே இவ்வளவு காலம்தான் சிமெண்டை வைத்திருக்க வேண்டும். இவ்வளவு காலத்திற்குள் பயன்படுத்தவில்லையென்றால் அதைத் திருப்பித் தர வேண்டும் என்ற முறையை வகுத்தால் இந்த பதுக்கலைத் தவிர்க்கலாம் என்று அமைச்சர் கருதுகிறாரா ?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** இப்போது இருக்கின்ற பிரச்சினை சிமெண்ட் பற்றாக்குறைதான். வாங்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது பிரச்சினையல்ல.

**திரு. ம. சங்கரலிங்கம் :** சிமெண்ட் பற்றாக்குறை இருப்பதன் காரணமாகத்தான் வெளியிலே கூடுதல் விலைக்கு விற்கும் நிலை உருவாகிவிட்டது. முறையாக வீடு கட்ட அனுமதி கேட்டு, பிளான் கொடுத்து சிமெண்ட் வாங்கும் போது ஏற்படும் காலதாமதத்தின் காரணமாகத்தான் கூடுதலாக விலை கொடுத்து சிமெண்டை வாங்கி வீட்டைக் கட்டி முடிக்கிறார்கள். பிறகு அவருக்கு சிமெண்ட் வருகிறபோது தான் ஏற்கெனவே கூடுதல் விலை கொடுத்து சிமெண்ட் வாங்கிய காரணத்தால், அதை ஈடு செய்ய தனக்கு வந்த சிமெண்டை கூடுதலாக பிளாக் மார்க்கெட்டில் விற்கும் வியாபாரியாக அவர் மாறுகிறார். சிமெண்ட் வழங்குவதில் காலதாமதம் இருப்பதால், சாதாரணமாக நல்லவர்கள் கூட பிளாக் மார்க்கெட்டில் விற்கக் கூடியவர்களாக மாறுகிறார்கள். ஆகவே சிமெண்ட் பற்றாக்குறை உள்ள நேரத்தில் முறையாக அரசிலிருந்தோ, வெளியாரிடமிருந்தோ கிடைக்க வேண்டும். கூடுதலாக விலை கொடுத்தாலும் வெளியே கிடைக்காத நிலையை உருவாக்க வேண்டும்.





**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** இப்போது நடைமுறையிலே இருக்கின்ற இருவிலைக் கொள்கையின்படி, லெவி சிமெண்ட், நான்-லெவி சிமெண்ட் என்று இருக்கிறது. நான்-லெவி சிமெண்டைப் பொறுத்தவரையில், அதிகாரபூர்வமாக விலையை நிர்ணயிக்க இயலாது. ஆகவே தனியாக சிமெண்ட் தொழிற்சாலையை நடத்துகிற தொழிலதிபர்கள் எல்லாம் சேர்ந்து தங்களுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலையை நிர்ணயம் செய்து விற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட லெவி சிமெண்டைப் பொறுத்த வரையில், ஒருவர் ரிப்பேர் செய்ய வேண்டுமென்றால், 20 மூட்டை வரையில் கொடுக்கலாம் என்று வைத்திருக்கிறோம். அது கூட வீட்டு எண், வீட்டு வரி ரசீது ஆகியவற்றைக் கொடுத்த பிறகுதான் கொடுக்கிறோம். புதிதாக வீடு கட்டுவதென்றால், பிளான் அப்ரூவ் ஆகி அப்ளை செய்த பிறகுதான், ஸ்டேஜ் வாரியாக, ஃபவுண்டேஷன், சீலிங் என்று ஸ்டேஜ் வாரியாக என்ஜினியர் வைத்து இன்ஸ்பெக்ட் செய்த பிறகு கொடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல, ரிப்பேர் என்று சொல்லி நான்கு மூட்டைகளுக்கு 'அப்ளை' செய்கிறார்கள். உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கருதி வெளியே வாங்கிச் செய்கிறார்கள். பின்னாலே தனக்குத் தேவையில்லாத போது அதை விற்கிறார்கள். இதிலே சட்டபூர்வமாக நடவடிக்கை எப்படி எடுப்பது என்று தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் கேட்கும் கேள்வி பொதுமக்களுக்கு நன்மை செய்வதாக இருக்க வேண்டும், மேலும் சிக்கல்களை உண்டாக்கி கஷ்டப்படுத்துவதாக இருக்கக் கூடாது. ஆகவே அந்த வகையிலே நடவடிக்கையை மேற்கொள்ளுவது நியாயமாக இருக்காது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

## *Petroleum Oil Refinery Plant.*

* 192 Q. THIRU C. R. LAKSHMIKANDHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether it is a fact that the Tamil Nadu Chief Minister has written to the Central Government to establish a Petroleum Oil Refinery Plant in Thanjavur District;

(*b*) whether any reply has been received from the Central Government; and

(*c*) if so, the details thereof?

[1983 மார்ச் 26

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : (அ), (இ) & (உ) எண்ணெய் மற்றும் நிலவாயுக் குழு பால்க் ஜலசந்தியில் எண்ணெய் வளம் இருப்பது கண்டு பிடித்துள்ளதைத் தொடர்ந்து நிறுவனத்தின் அதிகமான வேலைகள் தோண்டும் நடவடிக்கையின் காரணமாக, எண்ணெய்த் தாய்மைத் திறனை அதிகரிப்பது அவசியமாகிறது எனத் தெரிவிக்கும். மேலும், பெட்ரோ இரசாயன தொழிற்சாலை தமிழ்நாட்டில் அமைக்க வேண்டியதின் அவசியத்தைப்பற்றியும் முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசின் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கும் கடிதம் எழுதி யுள்ளார்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இந்தக் கடிதம் எப்போது மத்திய அரசுக்கு எழுதப்பட்டது? இந்தக் கடிதத்தின் மீது மத்திய அரசு ஏதேனும் தன்னுடைய நிலையை தமிழகத்திற்குத் தெரிவித்திருக்கிறதா? இது சம்பந்தமாக நேரிடையாகச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : பெட்ரோ கெமிக்கல்ஸ் ஆலையை அமைப்பதென்றால், பத்தாண்டுக் காலம் ஆகும். அதற்காக முதலீடு ரூபாய் 700, 800 கோடி வரை ஆகும். ஏற்கெனவே அந்தப் பகுதியில் எண்ணெய் வளம் இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால், பெட்ரோ-கெமிக்கல் காம்பிளக்சை ஆரம்பிப்பதற்கான ஆரம்ப வேலைகளை இப்போதே மத்திய அரசு துவக்கினால் உதவியாக இருக்கும் என்று கடிதம் எழுதப்பட்டது. 30—12—1981-ல் முதல் தடவையாக பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடிதம் எழுதினார். அதற்குப் பிறகு நேரிடையாகச் சந்திக்கிறபோதும், கடிதங்கள் மூலமும் தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். அரசு இது குறித்து உடனடியாக முடிவு சொல்ல முடியாது. எவ்வளவு எண்ணெய் கிடைக்கிறது, அதனுடைய தரம் என்ன, எவ்வளவு முதலீட்டில் பெட்ரோ-கெமிக்கல்ஸ் ஆலையை அமைக்கலாம் என்பதையெல்லாம் உடனடியாக நிர்ணயித்துச் சொல்ல இயலாது என்று அவர்கள் சொல்லி யிருந்தாலும், தகுந்த தருணம் வருகிறபோது, அதைப்பற்றி மைய அரசு பரிசீலிக்கும் என்ற கடிதம் நமக்குக் கிடைத்திருக்கிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : பாக் ஜலசந்தியில் எண்ணெய் கிடைப்பது சம்பந்தமாகச் செய்திகள் முன்பு சில பத்திரிகைகளில் வந்தன. ஆனால் தொடர்ந்து அதனுடைய முன்னேற்றம் என்ன என்பது தெரியவில்லை. அங்கே எண்ணெய் எடுக்க நடவடிக்கை எடுப்பது குறித்து மத்திய அரசிடமிருந்து அல்லது எரிவாயுக் கமிஷனிடமிருந்து தமிழக அரசிற்கு அதிகார பூர்வமான செய்திகள் வந்திருக்கின்றனவா? தற்போது அப்பணிகளில் முன்னேற்றம் என்ன?



1983 மார்ச் 26]

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : இது மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாத கேள்வி. எவ்வளவு டன் கிடைக்கிறது, அதன் தரம் என்ன, எடுக்கப் பட்ட நடவடிக்கை என்ன என்பது பற்றியெல்லாம் தனிக் கேள்வி போட்டால், முழு விவரத்தையும் தருகிறேன். எண்ணெய் கிடைக்கிறது என்ற செய்தி அறிந்தவுடனே பெட்ரோ-கெமிக்கல்ஸ் ஆலையை அமைக்குமாறு தமிழக முதல்வர் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறாரா என்பதுதான். அதற்கு எழுதியிருக்கிறோம் என்று பதில் கொடுத்திருக்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : சென்னையிலே பெட்ரோ-கெமிக்கல்ஸ் ஆலை வரப்போகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு எ. ஆர். தாமோதரன் அவர்கள் பல முறை சொல்லியிருக்கிறார்கள். வந்தால் அது எப்படி அமையும் என்று கூட சொல்லியிருக்கிறார்கள். இப்போது அது தமிழகத்திற்கு இல்லை என்று மத்திய அமைச்சர் தெரிவித்திருக்கிறார். ஆகவே இதுவும் பயமாக இருக்கிறது. பரிசீலிப்பது என்பது பரிகசிப்பதாக இருக்கிறது. ஆகவே இதையும் விட்டுவிடுவார்களோ என்ற பயம் இருக்கிறது. சென்னையிலே பெட்ரோ-கெமிக்கல்ஸ் ஆலை அமைவது என்பதில் தமிழகத்தின் எதிர்காலம் அமைந்திருக்கிறது என்ற முறையில் அமைச்சர் அவர்கள் மீண்டும் வலியுறுத்துவார்களா?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : பரிசீலிப்பது என்பது பரிகசிப்பதாக ஆகாமல் பலன் அளிப்பதாக இருக்கும் என்று நம்புவோம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. உரிமைப் பிரச்சினை.

அகில இந்திய தீப்பெட்டி தொழிற்சாலைகள் சம்மேளனத் தலைவர், உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்களுக்கு அவர் அவையில் ஆற்றிய உரைபற்றி எழுதிய கடிதம் குறித்து.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள், மேலவை விதி 157-ன்கீழ் அகில இந்திய தீப்பெட்டி தொழிற்சாலைகள் சம்மேளனத் தலைவர்மீது ஓர் உரிமைப் பிரச்சினைக்கான முன்னறிவிப்பைக் கொடுத்திருக்கிறார். அது எவ்வாறு விதிகளின்கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

[1983 மார்ச் 26

* **திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த உரிமைப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், நான் இரண்டு தேவைகளைப் பூர்த்தி செய்தாக வேண்டும். ஒன்று இந்த நிகழ்ச்சி சமீபத்திலே நடந்ததாக இருக்க வேண்டும். என்னுடைய இந்த உரிமைப் பிரச்சினை, இந்த அவையில் நான் இந்த மாதம் 12 ஆம் தேதி நிதிநிலை அறிக்கையின் மீது ஆற்றிய உரையைத் தொடர்ந்து ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு எனக்கு அனுப்பப்பட்ட கடிதம் 16 ஆம் தேதியிட்டு, 18 ஆம் தேதி எனக்குக் கையில் கிடைத்திருக்கிறது. ஆகவே இது சமீபத்திலேதான் நடைபெற்றது. உடனடியாக எவ்வளவு துரிதமாக அவையின் கவனத்திற்குக் கொண்டுவர முடியுமோ அந்தக் கால கட்டத்திற்குள் கொண்டு வந்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்ததாக உரிமைப் பிரச்சினைக்கு மேலெழுந்த வாரியாக, அதிலே 'பிரைமா பேசி கேஸ்' (Prima facie case)

(முற்பகல் 11-50)

இருக்கிறது என்பதற்காக நான் சில தகவல்களை மட்டும் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்தபோது, இந்த அவையினுடைய உறுப்பினர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று அவையினுடைய விதி 67 என்ன தெரிவித்திருக்கிறதோ அதற்கேற்ற வகையிலே என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறேன். அவையினுடைய விதி 67-ல் மிகத் தெளிவாக என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அது கொஞ்சம்கூட கெடாமல் என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறேன். என்னுடைய பேச்சின்போது நம்முடைய மாநிலத்திலே இருக்கின்ற குழந்தைகளை வேலை வாங்குகின்ற நிலைமை பற்றி பொதுவான கருத்துக்களை மிகுந்த வேதனையோடு தெரிவித்தேன். அப்படி தெரிவித்தபோது, அரசாங்கம் இந்த நிலைமையைக் களைவதிலே மெத்தனமாக இருந்துவிடக்கூடாது என்பதை வலியுறுத்தினேன். தீப்பெட்டித் தொழிற்சாலைகளிலே மட்டுமல்ல, மற்ற தொழிற்சாலைகளிலும் இது அதிகமாக இருக்கிறது என்று சொன்னேன். மற்ற தொழிற்சாலைகளில் இருந்தாலும்கூட, இதிலே அதிகமாக இருக்கின்றது என்று ஒரு பொதுவான கருத்தைத் தெரிவித்தேன். அன்றையதினம் இந்த அவையிலே இருந்த தொழில் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய பேச்சில் குறுக்கிட்டு, அவர்களும்கூட குழந்தைகளையும் வேலைக்கு வைக்கின்ற நிலைமைகள் இந்த மாநிலத்திலே



இருக்கின்றன என்பதை ஒப்புக்கொண்டதோடு, அதைக் களைவதற்கு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களே கருத்தைத் தெரிவித்தும். அதன் அடிப்படையிலே அமைச்சரவையைக் கூட்டி சில முடிவுகள் எடுக்கப் போவதாகவும், அவற்றுக்கான சட்டங்கள் கூட அவசியமானால், அந்த நிலைமைகள் ஏற்படுமானால், அதையும் செய்வோம் என்று மிகத் தெளிவாகத் தெரிவித்தார்கள். இத்தனைக்கும் பிறகு அன்றைக்கு அந்த அறிவிப்பிற்காக நான் நன்றி தெரிவித்தேன். அன்றைக்கு இதைப்பற்றி பத்திரிகையிலே வந்தது. பல பத்திரிகைகளிலே வந்தது, அன்றையதினம். இந்தச் செய்தி ரேடியோவிலே, மற்றும் டி.வி.யிலும்கூட வந்தது. எனக்கே அன்றைக்கு வருத்தம்கூட. நான் நிதிநிலை அறிக்கையிலே பேசியபோது மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் நமது மாநிலத்தில் "குழந்தைகளை வேலைக்கு வைத்துக் கொள்கின்ற நிலைமை இருக்கிறது. அதைத் தடுக்க தடைச் சட்டம் கொண்டு வரப்போகிறோம்" என்ற செய்தியை அறிவித்ததால், மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களுடைய அந்தக் கருத்துக்கு முக்கியத்துவம் தந்து சொன்னதால் என்னுடைய பேச்சே முக்கியத்துவம் இழந்துவிட்டதோ என்ற அளவுக்கு வெளியிடப்பட்டிருக்கிறது. அந்தப் பிரச்சினைக்கு அந்த அளவுக்கு முக்கியத்துவம் தரப்பட்டு பத்திரிகையிலே வந்தது. 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையிலே தரப்பட்டிருக்கிறது.

"Regulations soon to stop exploitation of child—labour" என்று சொல்லிவிட்டு மேலும் சொல்கிறார்.

"Government will shortly announce measures to regulate employment of child-labour in match and other industries, Labour Minister Mr. S. Raghavanandam informed the Legislative Council on Saturday. Besides taking preventive steps in the matter, it was also essential to ensure that fair wages were paid to these employees. The issue would go to the Cabinet in due course and, thereafter, regulations would be made soon, he said while intervening in the Budget Debate."

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நான்கூட யோசித்துக்கொண்டிருக்கிறேன். நான் சொல்லாத ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கின்றார்களோ என்று நினைக்கிறேன். தொழில் அமைச்சர் என்பதற்குப் பதிலாக தொழிலாளர் நலத் துறை அமைச்சர் என்று அவைக் குறிப்பிலே மாற்றிக்கொள்வது நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

[1983 மார்ச் 26

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : 'நல' என்ற வார்த்தையை இடையில் சேர்ந்தால் சரியாக இருக்கும்.

திரு. க. இராமமூர்த்தி : தொழிலாளர் நலத் துறை அமைச்சர் என்றே திருத்திக்கொள்கிறேன். லேபர் மினிஸ்ட்டர் திரு. இராகவானந்தம் என்ற பெயரே வந்திருக்கிறது.

The Industries Minister can be safe now.

THE HON. THIRU S. RAMACHANDRAN : Safe from whom.

THIRU K. RAMAMOORTHY : Safe from the match Industry.

"Mr. Tindivanam Ramamoorthy, leader of the Congress (I) group, complained of Government inaction to curb the practice of employing child-labour and said that, besides the match industry, the cashew industry in the country also employed a large number of them. In this, Tamil Nadu took the lead."

இதுதான் என்னுடைய பேச்சு. இதுகூட மற்ற பத்திரிகைகளிலே வரவில்லை. ஏதோ ஒரு சில பத்திரிகைகளிலேதான் வந்திருக்கிறது. இது தெளிவாகத் தெரிகிறது. இந்தப் பத்திரிகைச் செய்தியேகூட. நான் குழந்தைகளுக்குக் குறைந்த கூலி கொடுக்கின்ற நிலை பற்றி சொல்லவில்லை. குழந்தைகளுக்கு அதிகமான வேலை கொடுக்கிறார்கள் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, கூலி மற்ற பிரச்சினைகளைப்பற்றி அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. ஆல் இந்தியா சேம்பர் ஆப் மேட்ச் இன்டஸ்ட்ரி (The All-India Cmaber of Match Industry) அதாவது அகில இந்திய தீப்பெட்டித் தொழிற்சாலைகள் சம்மேளனத்தின் தலைவர் அவர்கள், சிவகாசியிலே இருந்து எழுதியிருக்கிறார்கள். அவர் பிரசிடெண்ட். அவருடைய பெயர் தெரியவில்லை. அவருடைய கையெழுத்து சரியாகத் தெரியவில்லை. ஆனால் அவர் நல்ல விவரம் தெரிந்தவர் என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். காரணம் அவர் ஆங்கிலத்திலே அந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறார்கள். அவர் மிகத் தெளிவாக வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்கிறார். He has chosen his words குறிப்பிட்ட வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்தியிருக்கிறார். அதற்குமேல் அரசியல் ரீதியாக ஒருவர் எப்படி செயல்பட வேண்டும், சட்டமன்றத்திலே எப்படி ஒருவர் செயல்பட வேண்டும், சட்டமன்ற உறுப்பினர்கள் எப்படி



1983 மார்ச் 26] [திரு. க. இராமமூர்த்தி]

செயல்பட வேண்டும், அரசியல் கட்சிகள் எப்படி செயல்பட வேண்டும் என்பதை எல்லாம் ரொம்ப தெரிந்து அந்தக் கடிதத்திலே எழுதியிருக்கிறார்கள். இரண்டாவதாக "இந்தியாவிலே உற்பத்தி செய்கின்ற தீப்பெட்டிகளிலே 75 சதவிகிதம் உற்பத்தி நாங்கள்தான் செய்கிறோம்" என்ற அளவிற்கு மிகப் பெரிய முதலாளிகள் உள்ள, பெரும் பணம் புரள்கின்ற மிகப் பெரிய பண முதலாளிகள் இருக்கின்ற சம்மேளனத்தினுடைய தலைவர் என்ற முறையிலே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவருடைய சக்தி என்ன என்று எனக்குத் தெரிகிறது. அந்த சக்தியிலே இருந்துகொண்டு அவர் எனக்குக் கடிதம் எழுதுகிறார். அந்தக் கடிதத்தினுடைய முக்கியத்துவம், பின்னணி என்ன என்று எனக்கு நன்றாகப் புரிகிறது. அதை நான் உணர்ந்து பார்க்க முடிந்தது. அந்தப் பின்னணியிலே பார்க்கிறபோது, நான் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக இந்த அவையின் முன் வைக்க விரும்புகிறேன். அவர் எழுதியிருக்கின்ற கடிதத்தில் இருக்கிறது.

"From the papers and the news-broadcast through the All India Radio, that you had, during your speech in the Tamil Nadu Legislative Council, mentioned that children below ten years are being employed in the match industry in Sivakasi and they are being paid lower wages and cheated of wages due to them."

இதிலே நான் சிவகாசி என்று பேசவில்லை. குழந்தைகள் வயதைப் பற்றியும் நான் பேசவில்லை. ஆனால் அவர் இவைகளைப்பற்றி நான் பேசியதாகச் சொல்கின்றார்.

'This statement, if it had been made, is very unfortunate. You can note the words there. '. . . as it is far from the truth.'

இரண்டாவதாகச் சொல்கிறார்.

'of your standing', அதாவது என்னுடைய 'ஸ்டாண்டிங்' என்ன என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது என்பது தெரிகிறது.

'It is regrettable that a politician of your standing."

உண்மைகளை அறிந்துதான் பேச வேண்டும், எழுத வேண்டும் என்பதைத் தெளிவாகத் தெரிந்தவர். அவர் சொல்கின்றார் இந்த மாதிரி. 'பேசியிருந்தால்' என்று அவர் எழுதுகின்றார். சர்வ ஜாக்கிரதையாக 'பேசியிருந்தால்' என்று

எழுதுகிறார். அடுத்து வருகின்றபோது 4-வது பாராவில் சொல்கின்றார்.

" Equal wages are paid for equal work, irrespective of age and sex."

குழந்தைகள் வேலைக்கு வைக்கப்படுகிறார்கள் என்பதை அவர் மறுக்கவில்லை.

" . . . and there is absolutely no exploitation of child-labour." Exploitation. . . . என்று நான் சொல்லவில்லை. இந்த அவையிலே நான் சொல்ல உரிமை இருக்கிறது.

" We are surprised that our politicians are so uninformed as to cast unwarranted aspersions on this industry."

அது வேறு விஷயம். அதற்குப் பிறகு அவர் சொல்கின்றார்.

முதலிலே சொல்லும்போது, பேசியிருந்தால் என்று சொன்னார். இங்கே அழுத்தந்திருத்தமாகச் சொல்கின்றார்.

" We are surprised that our politicians are so uninformed as to cast unwarranted aspersions on this industry."

இந்தத் தொழிலிலே குழந்தைகள் வேலைக்கு வைக்கப்படுகிறார்கள் என்பது அறிவிக்கப்பட்ட ஒன்று, பார்க்கப்பட்ட ஒன்று, அறிந்த ஒன்று, நாடு முழுக்க இதுபற்றி வேதனையோடு சிந்தித்துக்கொண்டிருக்கின்ற ஒன்று, ஆனால் அதைப்பற்றி அவர் we are uninformed என்று சொல்கிறார். பாலிட்டிஷியன் என்று சொல்கின்றபோது, காங்கிரஸ்காரர் என்று சொல்லவில்லை, திரு. இராமமூர்த்தி என்று சொல்லவில்லை. இந்த அவையைக் குறிப்பிடுகிறார். இதிலே தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அவருடைய கருத்தைத் தான் சொல்லியிருக்கிறார். அடுத்ததாக மீண்டும் அவருடைய கடிதத்திலே எழுதுகிறார் :

" We appreciate that, as a member of the Opposition, you have the right to criticise the Government of the day. But that should not be done by condemning a particular industry or a section of the society, resorting to ill-informed arguments."

It is an aspersion on the very argument that I had been making before this House. This particular gentleman knows where he is making his statement and to whom he is writing his letter. Obviously, he knows what he is doing. He knows to whom he is writing this letter.

(நண்பகல் 12-00)



ஆனால் இந்தச் சூழ்நிலையிலே அவர் இந்த வார்த்தைகளை எழுதியிருக்கிறார்.

அடுத்த பாராவில் சொல்கிறார் :

" After all, you belong to the Congress (I) Party which has its local set-up like the Town Congress Committee, the Congress Committee and so on. If some one had conveyed the idea to you that children are being exploited in the match industry you could have had report verified through your local Congress Committee and then ventured upon making a statement.

" உங்களுக்கு தைரியம் வருவதற்கு முன்னால்— " ventured"—That is the word be has used . . . .He knows— இந்த அவையிலே சொல்லுவதற்கு தைரியம் வருவதற்கு முன்னால், அதைப் பற்றித் துணிந்து பேசுவதற்கு முன்னால் யாரை கன்சல்ட் பண்ண வேண்டும்" என்று சொல்லுகிறார். இந்த அவையிலே பேசுவதற்கு முன்னால் யாரையெல்லாம் கேட்டிருக்க வேண்டுமென்ற விவரம் தெரிந்தவர் கடிதம் எழுதியிருக்கிறார். அதைச் சொல்லியதால் அவர் யார் என்பதை அடையாளம் காண்பித்திருக்கிறார். such a procedure would behave a responsible politician அப்படிச் செய்வதன் மூலமாகத்தான் ஒரு பொறுப்பான அரசியல்வாதியாக அடையாளம் காட்டிக் கொள்ள முடியும். எந்த அரசியல்வாதியும் அப்படிச் செய்தால்தான், ரெஸ்பான்சிபிள் பாலிடீஷியனாக be have a responsible politician பொறுப்புள்ள அரசியல்வாதியாக இருக்க முடியுமென்று இலக்கணம் கற்றுத் தந்திருக்கிறார். இந்த அவையிலே பேசப்பட்ட பேச்சின் அடிப்படையிலே நான் இங்கே கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு முன்பு யாரிடமெல்லாம் கலந்து கொண்டு, பேசியிருக்க வேண்டுமென்று சொல்லியிருப்பதிலிருந்து அவர் விவரம் அறிந்தவர் என்பதை அவருடைய கடிதம் தெரிவிக்கிறது.

இறுதியாக எழுதியிருக்கிறார். " we request you kindly to desist from making statements not based on facts."

இதிலே இன்னொன்று. அவர் எழுதிய கடிதம் குழந்தைகளை வேலைக்கு வைத்துக்கொள்ளும் நிலைமைகளைப்பற்றி மட்டும் குறிப்பிடவில்லை. அதற்கு மாறாக, ஒரு படி மேலே போய் சொல்லுகிறது.

We request you kindly to desist from making statements not based on facts."

மற்றொன்றையும் சொல்லுகிறது. அது எது என்று தெரியவில்லை. This is more or threat. மிகப் பலம் வாய்ந்த, தமிழகத்தில் பணம் புழங்குகிற ஒரு தொழிலினுடைய அகில இந்தியத் தலைவர் எழுதுகிறார். அகில

3. கவன ஈர்ப்பு.

தென்னார்க்காடு மாவட்டத்தில் சில வட்டங்களில் மின் வழங்கல் அடிக்கடி தடைபடுவதால் ஏற்படும் இன்னல்கள் குறித்து.

THIRU A.R. DAMODARAN : Sir, I wish to call the attention of the Hon. the Minister for Electricity to a matter of urgent public importance, namely, the frequent load-shedding in power supply in Vridhachalam/Pennadam/Panruti Taluks in South Arcot district resulting in erratic and inadequate supply to consumers in the industrial and agricultural sectors leading to a loss of production and damage to agricultural crops.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

Thiru A.R. DAMODARAN : Sir, it is reported that this defect arises in Virdhachalam, Pennadam and Panruti taluks because of the radial feeding from Neyveli. I do not know the technical term. But, would it be possible to put these sectors under the grid itself? I realise that the Neyveli radial feeder has to be shut do,n because of the overloading problem. But, since this broblem arises only because of direct feeding fromNeyveli, would it be possible to bring these sectors under the grid so that we may not have load-shedding for almost 14 hours in a day as we had during the month of February?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கிரிட்டின் நிலைமை பொறுத்து மின் வாரியத்தில் தொடர்பு கொண்டு, திடீரென்று மின் உற்பத்தி குறைகிறபோது மின் தேவையைச் சரிக்கட்டுவதற்கு நெய்வேலி நிறுவனம் இக்காரியத்தை மேற்கொண்டது. நானும் அந்த நேரத்தில் தென் ஆற்காடு மாவட்டத்திற்குச் சென்றபோது நெய்வேலி நிறுவனத்திடம் பேசினேன். மூன்று, நான்கு நாட்கள் மிகவும் மோசமான நிலை, பிப்ரவரி மாதத்தில் இருந்தது. அதற்குப் பிறகு நிலைமை சரியானது. அதோடு மட்டுமல்ல. தமிழகத்தைப் பொறுத்தவரையில், அனல் மின் உற்பத்தியை நம்பி இருப்பதால், மின் தேவையில் ஏற்ற இறக்கங்கள் ஏற்படுகிறபோது, அதற்கேற்ப அனல் மின் நிலையத்தை இயக்குவது கடினமாக இருந்தது. அண்டை மாநிலமான கேரள மாநிலத்தோடு பேசி, அவர்களுடைய புனல் மின் திட்டங்களையும், நம்முடைய அனல் மின் திட்டங்களையும் ஒருசேர இணைத்து இயங்குவதால், இப்போது இந்தப் பிரச்சினையில்லை.

---

@ 36 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



(பிற்பகல் 12-10)

4. 1982-83 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை நிதிநிலை அறிக்கையை அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

1982-83 ஆம் ஆண்டுக்குரிய இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன். இவற்றில் சேர்க்கப்பட்டுள்ள மொத்தம் ரூ. 540.46 கோடியில், ரூ. 207.17 கோடி வருவாய்க் கணக்கிலும், ரூ. 333.29 கோடி மூலதன, கடன் கணக்குகளிலும் வருகின்றன. பல்வேறு கோரிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ள தொகை பற்றிய விவரங்களும் கூடுதல் நிதி ஒதுக்கத்திற்கான காரணங்களும் இத்துடன் இணைத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. முதல் துணை மானியக் கோரிக்கை வைக்கப்பட்ட பின்னர் அனுமதிக்கப்பட்ட செலவினங்களும் இப்போதுள்ள நிதி ஒதுக்கத்துக்கு மேற்பட்டுக் கூடுதலாக நிதி ஒதுக்கம் தேவைப்படுகிற செலவினங்களும் இந்த மதிப்பீடுகளில் உள்ளன. இந்த மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு இனங்களில் முக்கியமான சிலவற்றைக் கோடிட்டுக் காட்ட விழைகிறேன்.

2. அநுகூலமற்ற பருவ நிலைகள் காரணமாக, மக்களுக்கு ஏற்பட்ட துன்பத்தைப் போக்குவதற்கு அவசியமான நடவடிக்கை அனைத்தையும் இம் மாநில அரசு எடுத்து வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் வழங்கலைப் பெருந் தவதன் அவசியத்தை உணர்ந்து, ஊராட்சி ஒன்றியங்களின் வறட்சிப் பாதிப்புப் பகுதிகளில் குடிதண்ணீர் வழங்குவதற்காக இவ்வரசு இதுவரை ரூ. 12.78 கோடி அனுமதித்துள்ளது. இப்போது வைக்கப்பட்டுள்ள துணை மதிப்பீடுகளில் இத்தொகை சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், வறட்சிப் பாதிப்புப் பகுதிகளில் குடிதண்ணீர் வழங்குவதற்காக நகராட்சிகளுக்கு ஒரு பகுதி மானியமாகவும் ஒரு பகுதி கடனாகவும் ரூ. 277 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகை இறுதித் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் 1,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகளை அமைக்க அரசு, ரூ. 150 இலட்சம் அனுமதித்திருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இறுதித் துணை மதிப்பீடுகளில் இத்தொகை சேர்க்கப்பட்டுள்ளது.

3. அடுத்த இரண்டு ஆண்டுகளில் இம் மாநிலத்தின் கிராமப் பகுதிகள் அனைத்திலும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்குவது என்ற இவ்வரசின் கொள்கை முடிவிற்கிணங்க, வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் கிராமக் குடிதண்ணீர் வழங்கலுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூ. 32 கோடி இவ்வாண்டில்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 மார்ச் 26

ரூ. 44 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளுக்கு மேற்பட்டுள்ள தொகைக்கு இறுதித் துணை மதிப்பீடுகளில் வகை செய்யப் பட்டுள்ளது.

4. இம் மாநிலத்தின் வறட்சிப் பாதிப்புப் பகுதிகளில் சாலை செப்பனிடும் பணிகள் மேற்கொள்வதற்காக ரூ. 2.00 கோடியும் அப் பகுதிகளில் ஏரிகளைச் செப்பனிடவும் ஆழப்படுத்தவும் ரூ. 6 கோடியும் இவ்வரசு அனுமதித்துள்ளது. வறட்சிப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு இதனால் வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும். இறுதித் துணை மதிப்பீடுகளில் இத் தொகைகள் சேர்க்கப் பட்டுள்ளன.

5. முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் முதியோர் உதவித் தொகை பெறுபவர்களுக்கு 15—1—1983 முதல் நீட்டிக்கப்பட்டுள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இதற்கென, நடப்பாண்டில் ரூ. 90 இலட்சம் நிதிப் பொறுப்பு ஏற்படுமென எதிர்பார்த்து அத் தொகை இப்போது வைக்கப் பட்டுள்ள துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தின்கீழ் இயங்கி வருகிற உணவளிக்கும் நிலையங்களில் குடிதண்ணீர் வழங்குவதற்காக அனுமதிக்கப்பட்ட ரூ. 140 இலட்சமும் இறுதித் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

6. கைத்தறி நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களும் கோ ஆப்டெக்ஸ் நிறுவனமும் விற்பனை செய்த கைத்தறித் துணிகளை முன்னிட்ட கழிவுத் தொகை வகையில் இவ்வரசு ரூ. 13.21 கோடி அனுமதித் துள்ளது. இத் தொகையில் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கி யுள்ளதைவிட கூடுதலான ரூ. 10.71 கோடி, இறுதித் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

7. இவ்வாண்டில் தொடங்கப்பட்ட பாரதியார், பாரதிதாசன் பல்கலைக் கழகங்களுக்குக் கணிசமான அளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் பல்கலைக் கழகங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 2 கோடி மானியம் இறுதித் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது

8. கிராமப் பகுதிகளில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பள்ளிக் கட்டிடங்களைக் கட்டி முடிப்பதற்காக இவ்வரசு மேற்கொண்டும் ரூ. 3 கோடி அனுமதித்துள்ளது. இறுதித் துணை மதிப்பீடுகளில் இத் தொகை சேர்க்கப்பட்டுள்ளது.



1983 மார்ச் 26] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

9. அவை முன் வைக்கப்பட்டுள்ள 1982-83 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மானியக் கோரிக்கையில் உள்ள சில முக்கியச் செலவினங்களை மட்டுமே எடுத்துக் கூறியுள்ளேன். இந்தக் கோரிக்கைகளில் அரசு கேட்டுள்ள தொகைகளை வழங்கி, திட்டங்கள் அனைத்திற்கும் இசைவளிக்குமாறு அவையை வேண்டி அமருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, அவை மீண்டும் 28—3—1983 முற்பகல் 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-14)

5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

## A. Statutory Rules and Orders.

194. Notification issued with G.O. Ms. No. 831, Prohibition and Excise (II), dated the 8th December 1982 regarding amendments to the Tamil Nadu Arrack (Retail Shops) Rules, 1981. [Laid on the table of the House under section 54(3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

195. Notification issued with G.O. Ms. No. 1974, Rural Development and Local Administration, dated the 31st December 1982 regarding declaration of certain villages in Nanguneri and Sankarankoil taluks in Tirunelveli district as Gramdhan Villages. [Laid on the table of the House under section 28 (4) of the Tamil Nadu Bhoodan Yagna Act, 1958 (Tamil Nadu Act XV of 1958)].

196. Notification issued with G.O. Ms. No. 2723, Home, dated the 25th October 1982 regarding amendment to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940 [Laid on the table of the House under section 133(3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

197. Notification issued with G.O. Ms. No. 118, Revenue, dated the 21st January 1983 regarding amendment to the rules published with Revenue Department Notification SRO No. B-570(a)/80, dated the 18th November 1980, at pages 1–4 in Part III—Section 1(b) of the Tamil Nadu Government Gazette

Extraordinary, dated the 20th November 1980. [Laid on the table of the House under section 12(3) of the Tamil Nadu Abolition of Posts of Part-time Village Officers Act, 1981 (Tamil Nadu Act 3 of 1981).]

198. Notification issued with G.O. Ms. No. 714, Prohibition and Excise (VIII), dated the 5th October 1982 regarding amendments to the Tamil Nadu Molasses Control and Regulation Rules, 1958. [Laid on the table of the House under section 54(3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

199. Notification issued with G.O. Ms. No. 861, Prohibition and Excise, dated the 22nd December 1982 regarding amendment to the Tamil Nadu Arrack (Manufacture) Rules, 1981. [Laid on the table of the House under section 54(3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

200. Eighth Annual Report of the Poompuhar Shipping Corporation Limited for the year 1982. (English). [Laid on the table of the House under section 619(A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

201. The Audit Report on the Accounts of the Tamil Nadu Housing Board for the year 1977–78 (English). [Laid on the table of the House under section 125(2) (a) of the Tamil Nadu State Housing Board Act, 1961 (Tamil Nadu Act 17 of 1961).]

202. Tenth Annual Report of the Tamil Nadu Agricultural University for the year 1980–81 (Tamil). [Laid on the table of the House under section 49(3) of the Tamil Nadu Agricultural University Act, 1971 (Tamil Nadu Act 8 of 1971).]

203. The Annual Accounts of the Tamil Nadu Agricultural University for the year 1980–81 (English). [Laid on the table of the House under section 33(3) of the Tamil Nadu Agricultural University Act, 1971 (Tamil Nadu Act 8 of 1971).]

204. The Audit Report on the Accounts of the Tamil Nadu Agricultural University for the year 1980–81 (English). [Laid on the table of the House under section 33(3) of the Tamil Nadu Agricultural University Act, 1971 (Tamil Nadu Act 8 of 1971).]



205. Seventh Annual Report of the Thanthai Periyar Transport Corporation Limited for the year 1982 (Tamil). [Laid on the table of the House under section 619(A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

206. The Audit Report on the Accounts of the Tamil Nadu Housing Board for the year 1978–79 (English). [Laid on the table of the House under section 125(2) (a) of the Tamil Nadu State Housing Board Act, 1961 (Tamil Nadu Act 17 of 1961).]

B. *Reports, Notifications and Other Papers.*

63. An Economic-*cum*-Functional Classification of Budgetary transactions, 1981–82 (English).

* 64. The Tamil Nadu Co-operative Societies Bill, 1983 (L.A. Bill No. 45 of 1980), as passed by the Assembly.

65. Policy Note on Education. (Tamil and English).

66. Performance Budgets on School Education, Collegiate Education and Technical Education, 1983–84. (English).

67. Policy Note on Agriculture, 1983–84 (Tamil and English).

68. Performance Budget on Agriculture Department, 1983—84 (Tamil and English).

69. Review of the Road Development Programmes in Tamil Nadu, 1982–83 and Programmes for 1983–84. (Tamil and English).

70. Policy Note on Dairy Development Department and Milk Supply Schemes, 1983–84 (Tamil and English).

71. A Review of the activities of the Tamil Nadu Co-operative Milk Producers' Federation Limited for the year 1982. (Tamil and English).

72. A Review of the Tamil Nadu Agro Industries Corporation Limited, 1982–83 (Tamil and English).

73. A Review of the Tamil Nadu Agro Engineering and Service Co-operative Federation Limited, 1982-83 (Tamil and English).

* Sent by Post to all M. L. C's on 19th March 1983.

74. Eighteenth Report of the Committee on Public Accounts on the Excesses over Voted Grants and Charged Appropriations for the year 1977-78 (Tamil and English).

£ 75. Consensus arrived at the Meeting of the Chief-Ministers and Finance Ministers of the Three Southern States of Andhra Pradesh, Karnataka, Tamil Nadu and the Union Territory of Pondicherry held at Bangalore on 20th March 1983. (Tamil and English).

### இணைப்பு

(30 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

விருத்தாசலம், பெண்ணாடம் மற்றும் பண்ருட்டி வட்டங்களில் மின் இணைப்புகள் பொதுவாக விவசாயத்திற்காகவே பயன்படுத்தப்படுகின்றன. நகரப் பஞ்சாயத்துக்கு வழங்கப்படும் மின் இணைப்புகள் முற்பகலில் ஒரு மணிநேரமும், பிற்பகலில் ஒரு மணி நேரமும் மின் தடைக்கு உட்படுத்தப் பட்டுள்ளன. விவசாய இணைப்புகள் பகுதி நேர கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டவை. விவசாயத்திற்கு ஆறு மணி நேரம் மும்முனையில் மின்சாரம் வழங்கப்படுகின்றன. மற்ற நேரங்களில் விளக்கு வசதிகளுக்கு மட்டும் ஒரு முனையில் மின்சாரம் வழங்கப்படுகிறது.

கடந்த பிப்ரவரி பிற்பகுதியில் நெய்வேலி மின் நிலையத்தில் ஏற்பட்ட மின் உற்பத்தி குறைவினால் தமிழ் நாட்டின் மின் இணைப்பில் (grid) எதிர்பாராத தடை ஏற்பட்டதால் முன் அறிவிப்பின்றி மின் தடை ஏற்படுத்தப் பட்டது. மேற்கூறிய பகுதிகளில் நெய்வேலி அனல் மின் நிலையத்தாராலேயே மின் அழுத்தத்தின் நிலைமைக்கு ஏற்றவாறு மின் தடை செய்யப்பட்டது. ஏனென்றால் குறைந்த மின் அழுத்தத்தில் மின் உற்பத்தி செய்தால், மின் இயந்திரங்கள் பாதிக்கப்பட்டு, மின் உற்பத்தி மேலும் மோசமாகுமாதலால் மேற்கூறிய மின் தடை ஏற்படுத்தப்பட்டது.

£ Circulated to all M.L.C's on 25th March 1983.

(Issued 30—11—1983

ஆணையர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்று
வரலாற்று ஆராய்ச்சி
5 ஏப் 1984
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

MONDAY 28th MARCH 1983

Volume CXCVI (No. 2)

©
GOVERNMENT OF TAMIL NADU
1983

Legislative Council Department
Fort St. George, Madras-600 009.

Price Rs. 2.75 Paise

(307)

## பொருளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள் .. .. .. .. | 37—49 |
| 2. கவன ஈர்ப்பு— | |
| மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் உட்படுத்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு உரிய தகுதி வழங்காமலும், ஊதியம் நிர்ணயிக்காமலும் இருப்பது குறித்து .. .. | 49—51 |
| 3. 1982–83 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம் .. | 51—141 |
| 4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் | 141—143 |



ஆணையர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாறு ஆராய்ச்சி
5 ஏப் 1984
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

307

தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

திங்கட்கிழமை, 1983 மார்ச் 28.

பங்குனி 14, துந்துபி—திருவள்ளுவராண்டு 2014.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### பள்ளிகளில் கூட்டுறவு சங்கங்கள்

*193. வினா—திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளியிலும், மாணவர்களின் நலன்களுக்காக கூட்டுறவுச் சங்கங்கள் துவக்குவது பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறதா ?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (இ) அரசாணை நிலை எண் 406, கல்வி, 15—3—1979-ல், எல்லா மேல்நிலைப் பள்ளிகளிலும், உயர் நிலைப் பள்ளிகளிலும் மாணவர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

1,080 மேல் நிலைப் பள்ளிகளிலும். 1,667 உயர் நிலைப் பள்ளிகளிலும் மாணவர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மீதமுள்ள மற்றப் பள்ளிகளிலும் அம்மாதிரியான சங்கங்கள் அமைத்து புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் மாணவர்களுக்கு தடையின்றி கிடைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

[1983 மார்ச் 28

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்கு நியாயமான விலையில், புத்தகங்களும் நோட்டுப் புத்தகங்களும், குறிப்பேடுகளும் கிடைக்கச் செய்யவேண்டும் என்ற அடிப்படையில்தான் இத்தகைய கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. ஆனால் இவ்வாறு அமைக்கப்பட்ட பள்ளி மாணவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் நடைமுறையில் இயங்காமல் இருக்கின்றன என்ற புகார்கள் பரவலாக எங்களுக்கு வந்து கொண்டிருக்கின்றன. இதற்கு முக்கியமான காரணம் என்னவென்றால், மாணவர்களுக்குத் தேவையான புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், குறிப்பேடுகள் ஆகியவைகளை வாங்குவதற்காக, பள்ளிகள் ஒரு பெரும் தொகையை முன்பணமாகக் கட்ட வேண்டிய அவசியமிருக்கிறது. அவ்வாறு பெருந்தொகையை முன்பணமாகக் கட்டக்கூடிய அளவுக்குப் பல பள்ளிகளின் நிதி வசதி இல்லை. நிதிப் பற்றாக்குறையின் காரணமாக இவ்வாறு பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. எனவே மாணவர்களின் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகளை பாட நூல் நிறுவனம் வழங்கிய பிறகு ஒரு குறிப்பிட்ட கால அவகாசம் கொடுத்து, அதற்குப் பிறகு அவைகளுக்குரிய தொகைகளை வசூலிப்பது குறித்து நடைமுறைகளை உருவாக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாணவர்களுடைய கூட்டுறவுச் சங்கங்களை நடத்துவதில் ஏதாவது சிரமம் இருந்தால், அவைகளை முறைப்படி மேலதிகாரிகளுக்குத் தெரிவித்தால், அவர்கள் அவைகளைப் பரிசீலித்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடும். இப்போது இருக்கிற நிலைமை என்னவென்றால், இத்தகைய கூட்டுறவுச் சங்கங்கள் பல பள்ளிகளில் இன்னமும் ஆரம்பிக்கப்படாமல் இருக்கின்றன என்பதுதான்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அவ்வாறு இன்னமும் மாணவர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்காமல் இருக்கும் பள்ளிகளிலும் அவைகளை ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா ? நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, மாணவர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் புத்தகங்கள், நோட்டுகள் மற்றும் குறிப்பேடுகள் ஆகியவற்றை வாங்கி விநியோகிப்பதற்கு அப்பள்ளிகள் தங்களுடைய பள்ளி வசதி நிதியிலிருந்து தேவையான தொகையை எடுத்து முன்பணமாகக் கட்டுவதற்கான ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் உண்மையில் பல பள்ளிகளில், பள்ளி வசதி நிதியில்



1983 மார்ச் 28]

பணமே இல்லாத நிலைமைதான் இருக்கிறது. இப்படிப்பட்ட பள்ளிகள் முன்பணம் கட்ட இயலாமல் இருக்கின்றன என்று அவற்றின் தலைமை ஆசிரியர்கள் பலர் எங்களிடம் குறைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே நான் இங்கே குறிப்பிட்ட இந்தக் கருத்தையே ஒரு கோரிக்கையாக அரசு ஏற்று, நான் ஏற்கெனவே வேண்டியபடி ஆணையிட அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அப்படி ஏதாவது பிரச்சினைகள் இருக்கின்றனவா என்று ஆராய்ந்து பார்த்து, தக்க நடவடிக்கைகள் எடுக்கப் படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** பொதுவாக, கூட்டுறவுத் துறையே கூட மாணவர் சங்கங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஓரளவுக்கு முன்பணமாக ஒரு தொகையைக் கொடுக்கலாம். அதன்படி அந்தச் சங்கங்கள் திறம்படச் செயல்பட உதவுகிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அந்தத் தொகையைக் கூட அதிகரித்துக் கொடுத்தால் நலமாக இருக்கும். அதற்கான வட்டியைக்கூட அவர்கள் வசூலித்துக் கொள்ளலாம். எனவே இதைச் செய்வதற்கு கூட்டுறவுத் துறை முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அதோடு மாணவர்களுக்குத் தேவைப்படும் வெள்ளைக் காகிதங்கள், தேர்வுத் தாள்கள் முதலியவை மாணவர்களின் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நேரடியாக வழங்கப்பட்டுவிட்டால், மாணவர்களுக்கு இருக்கும் தொல்லைகள் நீங்கும். எனவே இதற்கும் நல்லதொரு ஏற்பாட்டினைச் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தமிழ் நாடு பாட நூல் நிறுவனத்தின் மூலமாக வெளியிடப்படும் புத்தகங்கள், குறிப்பேடுகள் முதலியவை உரிய காலத்தில் குறிப்பிட்ட விலைகளில் மாணவர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் நாம் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களைத் துவக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். அத்தகைய மாணவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக பல்வேறு முறைகளில் பயன் தரத் தக்க சேவைகளைச் செய்ய முடியும் என்றால், அதற்கான உரிய நடவடிக்கைகளை நிச்சயமாக இந்த அரசு எடுக்கும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, பள்ளி மாணவர்களுக்குத் தேவைப்படும் புத்தகங்கள், குறிப்பேடுகள் ஆகியவை தற்போது அரசு பாட நூல் நிறுவனம் வழியாக வெளியிட்டு விநியோகிக்கப்படுகின்றன. அத்தகைய புத்தகங்கள் மாவட்டங்களில் உள்ள சூப்பர் மார்க்கெட்டுகள் அல்லது

[1983 மார்ச் 28

கூட்டுறவு அங்காடிகளுக்குச் சென்று அவைகள் மூலமாக விநியோகிக்கப் பட்டன. இதில் கால தாமதம் ஏற்பட்டுவிடக்கூடாது என்ற நல்ல நோக்கத்தோடுதான் பள்ளிகளில் மாணவர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப் பட்டன. அதோடு அதே விலையில் மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று நாம் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். ஆனால் நடை முறையில் பல பள்ளிகள் இதற்குத் தேவையான முன்பணம் கட்ட வாய்ப் பில்லாமல் இருக்கின்றன. எனவே அந்தந்த மாவட்டங்களில் உள்ள கூட்டுறவு வங்கிகளிலிருந்து கடன் கொடுத்தோ அல்லது பாட நூல் நிறுவனத் திலிருந்தோ இத்தகைய பள்ளி மாணவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மூன்று மாத காலத்திற்காவது கடனாக புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் கொடுக்கப்பட்டு, பிறகு வசூலித்துக் கொள்வதற்கான ஏற்பாடு செய்யப் படுமா? அதோடு இத்தகைய புத்தகங்கள் கோடை விடுமுறையிலேயே மாணவர் கூட்டுறவுச் சங்கங்களைச் சென்றடைவதற்கான ஒரு முறையை ஏற்படுத்திவிட்டால், பிறகு பள்ளிகள் திறக்கப்படும்போது, மாணவர்களுக்குப் புத்தகங்கள் உடனே கிடைக்கிற நிலை உருவாகும் என்பதால், இதனையும் அரசு பரிசீலித்து உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாணவர் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் செயல்படுமானால், மாணவர்களுக்கு இன்னும் எப்படி யெல்லாம் உதவி செய்ய முடியும் என்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நாம் மாணவர் கூட்டுறவுச் சங்கங்களை நல்ல முறையில்தான் நடத்த விரும்பு கிறோம். அதன் அடிப்படையில் மாணவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்கூட்டியே கூட புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகளை அனுப்பச் செய்யலாம். தற்போது மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு குறிப்பிட்ட பிரச்சினையைக் குறித்து என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக் கிறார்கள். அதாவது பல பள்ளிகள் முன்பணம் கட்ட முடியாத காரணத் தால், இத்தகைய சங்கங்கள் சரிவரச் செயல்படாமல் இருக்கின்றன என்கிற இந்தப் பிரச்சினை இதுவரை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. எனவே இந்தப் பிரச்சினையைக் குறித்து அதனை ஆராயச் சொல்லி, தக்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



3 மார்ச் 28]

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாணவர் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டு ன்றி ஆசிரியர் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. ஆசிரியர் ட்டுறவுச் சங்கங்கள் என்பவை மாணவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன் திரியாகச் செயல்பட்டு வருகின்றனவா? கூட்டுறவு முறையில் வெறும் த்தகங்கள், குறிப்பேடுகள் முதலியவற்றை மட்டும் வாங்கித் தருவதைவிட ணவர்களுக்குத் தேவைப்படும் சாக்லேட், கம்மர்கட் போன்ற தின் பண்டங் ளையும் மற்ற நல்ல பொருள்களையும் மாணவர்களுக்கு கூட்டுறவு முறையில் ங்கித் தந்து அவர்களின் மேற்படிப்புக்கும் உதவி செய்யும் வகையில் ந்தச் சங்கங்கள் செயல்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தற்போது நாம் எதிர்பார்க்கும் றைந்தபட்சத் தேவையை மட்டும் மாணவர் கூட்டுறவுச் சங்கங்கள் ய்தாலே போதும். அதற்குப் பிறகு மற்றவைகளைப்பற்றி யோசிக் லாம்.

**திரு. க. இராமமூர்த்தி:** பள்ளிகளில் உள்ள மாணவர் கூட்டுறவுச் ங்கங்கள் என்பவை நியாய விலைக் கடைகளின் அடிப்படையில் செயல் கின்றனவா? மாணவர் கூட்டுறவுச் சங்கங்கள் என்றால், அவற்றில் ணவர்கள் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் வர்களின் வயது வரம்பு, சப்ஸ்கிருப்ஷன் போன்றவைகள் தளர்த்தப் ட்டிருக்கின்றனவா? மானிட்டர்டு (Monitered) கூட்டுறவுச் சங்கங்கள் ன்ற முறையில் ஒரு மூலக் கூட்டுறவுச் சங்கம் அமைத்து, ஒவ்வொரு பள்ளி லும் ஒரு கிளைக் கூட்டுறவுச் சங்கம் இயங்குகிற வகையில் வழி செய்யப் ட்டிருக்கிறதா? எந்த முறையில் அரசு இந்தச் சங்கங்களை நடத்தி ருகின்றது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** கூட்டுறவுச் சங்கங்கள் என்ற றையில் விற்பனை செய்கிற நிலையைத்தான் நாம் இவைகளில் உருவாக்கி ருக்கிறோம். மாணவர்களைக் கொண்டுதான் இதைச் செய்கிறோம்.

**திரு. க. இராமமூர்த்தி:** ஒரு குறிப்பிட்ட வயது வந்தால்தான், கூட்டுறவுச் ங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர முடியும் என்ற நிலை இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அதுபற்றிய விவரம் என்னிடம் ல்லை.

[1983 மார்ச் 28

Thiru A. R. DAMODARAN: Sir, instead of opening co-operative societies which are fraught with legal difficulties, will the Government consider the desirability of having a system of loan? As the hon. the Leader of the Opposition mentioned, at least 75 per cent could be given as loan and 25 per cent collected from the Managements for the sale of books to the students concerned. Will the Government consider such a scheme?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இந்த யோசனையும் அரசின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. சி. இராமலிங்கம்:** தனியார் பள்ளிகளானாலும் சரி, அரசுப் பள்ளிகளானாலும் சரி, இத்தகைய மாணவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக சீருடையை வழங்கும் உத்தேசம் உண்டா? இத்தகைய பள்ளிகள் அனைத்திலும் தற்போது சீருடை அணிய வேண்டும் என்ற நிலை இருக்கிறது. எனவே மாணவர்களுக்குத் தேவையான சீருடையைத் தயார் செய்து மாணவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அத்தகைய ஏற்பாட்டைச் செய்யும்போது, கைத்தறித் துணியை வாங்கி சீருடையாகத் தயாரித்து மாணவர்களுக்கு வழங்குவதற்கான ஒரு நல்ல ஏற்பாட்டைச் செய்வதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தற்போது புத்தகங்களும், குறிப்பேடுகளும் மட்டுமாவது குறைந்தபட்சம் ஒழுங்காகக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதுதான் அரசின் நோக்கமாக இருக்கிறது.

**திரு. பா. ரா. தாமஸ்:** தற்போதுள்ள விதிகளின்படி, மாணவர் கூட்டுறவுச் சங்கங்களில் ஆசிரியர்களும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றுதான் விதிமுறையே இருக்கிறது. முன்பணமாகக் கட்ட வேண்டிய தொகையை பள்ளிகளின் வசதி நிதியிலிருந்தோ அல்லது பெற்றோர்—ஆசிரியர்கள் நிதியிலிருந்தோ கட்ட வசதியை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். இதில் உள்ள பிரச்சினை என்னவென்றால், மாணவர்கள் பள்ளிகளை விட்டுப் போகிறபோது, அவர்களுடைய பங்குத் தொகையைத் திருப்பிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. எனவேதான் மொத்தத் தொகையையும் பள்ளி வசதி நிதியிலிருந்தோ அல்லது பெற்றோர்-ஆசிரியர் நிதியிலிருந்தோ கொடுக்கச் செய்தால் நலமாக இருக்கும். **எனவே இதுகுறித்து அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா?**



1983 மார்ச் 28]

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அது குறித்துத்தான் பரிசீலிக்கப்படும் என்று நான் சொல்லியிருக்கிறேன்.

### தேர்வு மையங்கள்.

*194. வினா—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) மேல்நிலைப் பள்ளி அரசினர் தேர்வு மையங்கள் என்ன அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றன?

(இ) தங்கள் பள்ளிகளில் தேர்வு மையம் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று, கன்னியாகுமரி மாவட்டம், ஆரல்வாய்மொழி அரசினர் மேல்நிலைப் பள்ளியிலிருந்தும், திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், இடையன் குடி சி.சி.எம். மேல்நிலைப் பள்ளியிலிருந்தும், அந்தந்த ஊர் பொது மக்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரிடமிருந்தும் முறையீடுகள் அரசுக்கு வந்துள்ளனவா?

(உ) ஆம் எனில், அவைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) மேல்நிலைப்பள்ளி தேர்வு மையமாக ஒரு பள்ளியைத் தேர்ந்தெடுப்பதற்கு, ஆண்கள் மேல்நிலைப் பள்ளியாயிருப்பின் 150க்கு குறைவில்லாத மாணவர்களும், பெண்கள் மேல்நிலைப் பள்ளியாயிருப்பின் 75-க்கு குறைவில்லாத மாணவிகளும் அப்பள்ளிகளில் பயின்று மேல்நிலைத் தேர்வு எழுதுபவர்களாக இருத்தல் வேண்டும் என்ற அடிப்படையில் அந்தந்த மாவட்ட சூழ்நிலைகளுக்கு ஏற்ப முதன்மைக் கல்வி அலுவலர் செய்யும் பரிந்துரையின்பேரில் தேர்வு மையங்கள் நிர்ணயிக்கப்படுகிறது.

(இ) ஆம்.

(உ) கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய்மொழி அரசினர் மேல்நிலைப் பள்ளி கடந்த ஏப்ரல் 1981, ஏப்ரல் 1982 மற்றும் ஏப்ரல் 1983 மேல் நிலைத் தேர்வுகளுக்கு தனித்தேர்வு மையமாகச் செயல்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி வட்டம் இடையன்குடி சி.சி.எம். மேல்நிலைப்

பள்ளியில் ஏப்ரல் 1983 தேர்வுக்கு 62 (37 ஆண்கள், 25 பெண்கள்) மாணவ மாணவியர் மட்டுமே பயிலுவதால் அளவுகோல்படி மேற்படி பள்ளி தனித் தேர்வு மையமாக அமைக்கப்படவில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மேல் நிலைப் பள்ளிகளில் தேர்வு மையம் ஏற்படுத்துவதற்காக சில நெறிமுறைகளை வைத்திருக்கிறார்கள். அதில் குறைந்தது 150 மாணவர்கள் தேர்வு எழுத வேண்டும் என்று இருக்கிறது. திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டம், இடையன்குடி, சி.சி.எம். மேல் நிலைப் பள்ளியில் 62 மாணவர்கள் இருக்கிறார்கள். அதிலே 25 மாணவிகள் இருக்கிறார்கள். ஆகவே தேர்வு மையம் கொடுக்கவில்லை. ஆகவே ஏழு, எட்டு மைல்களுக்கு அப்பால் உள்ள வேறு ஒரு தேர்வு மையத்திற்குச் சென்று தேர்வு எழுத வேண்டியிருக்கிறது. 150 மாணவர்களுக்குக் குறைவாக இருந்தால், அப்பள்ளியிலிருந்து மூன்று மைல்களுக்குள்ளாக வேறு ஒரு தேர்வு மையம் இருக்குமானால், அப்பள்ளியில் தேர்வு மையம் தேவையில்லை என்றும், ஏழு, எட்டு மைல்களுக்கு அப்பால் போக வேண்டி இருந்தால், அந்த நிலையில் 150 என்ற எண்ணிக்கையைத் தளர்த்தி முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களே அங்கே ஒரு தேர்வு மையத்தை ஏற்படுத்துகிற அளவிற்கு ஏதேனும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தேர்வு மையத்திற்கும் அதனோடு இணைக்கப்பட்டுள்ள பள்ளிகளின் தூரத்தையும் கவனித்துத்தான் இதையெல்லாம் செய்கின்றோம். அந்த அடிப்படையைப் பார்த்த பிறகுதான் தனியாக ஒரு தேர்வு மையம் இருக்க முடியாது என்று கருதி திசையன்விளை ஹோலி ரெடீமர்ஸ் ( ) மையத்துடன் ஏப்ரல் 1983 தேர்வுக்காக இணைக்கப்பட்டிருக்கிறது.

## பட்டதாரி ஆசிரியர்கள்.

* 195. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (செல்வி ஆ. லீலாவதி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 5—12—1979 முதல் 15 நாட்கள் தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கழகம் தொடர் உண்ணாவிரதம் நடத்தியபோது, 1980 பிப்ரவரிக்குள் பிரச்சினைகளைத் தீர்ப்பதாக அரசின் சார்பில் உறுதியளிக்கப்பட்டது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், பிரச்சினைகள் இதுகாறும் தீர்க்கப்படாததற்குக் காரணங்கள் யாவை ?



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) மற்றும் (இ) உண்ணாவிரதத்திற்கு அடிப்படையாக இருந்த 4 கோரிக்கைகளின் மீதும் உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுவிட்டன.

## ஊரக விளையாட்டு மையங்கள்.

* 196. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ் நாட்டில் எத்தனை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் விளையாட்டு பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன ?

(இ) எஞ்சியுள்ள ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் விளையாட்டு பயிற்சி நிலையங்கள் எப்போது அமைக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) தமிழ் நாட்டில் 275 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் ஊரக விளையாட்டு மையங்கள் ( Rural Sports Centres ) இதுவரை அமைக்கப்பட்டுள்ளன.

(இ) எஞ்சியுள்ள ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் படிப்படியாக ஊரக விளையாட்டு மையங்கள் அமைக்க தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் அமைக்கப்படுகிற விளையாட்டுப் பயிற்சி நிலையங்களில் ஆண்டுதோறும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி ஊக்கம் தருகிற முயற்சி செய்யப்பட்டு வருகிறதா ? அப்படியில்லையென்றால், அப்படிச் செய்கிற முயற்சியை அரசு மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகின்றன. மாவட்ட அளவிலே கூட விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

## Absorption of Teachers.

*197. Q.—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether the Government have issued orders in G.O. Ms. No. 1664, Education, dated 4th September 1978, for the absorption in needy schools, of the teachers and other persons, whose services were terminated by Aided Managements and in whose cases, the orders of the appellate authority have not been implemented;

(b) if so, the number of such affected teachers and other persons; and

(c) the number, among them, absorbed?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1977-78 முதல் 1979-80 வரை 151.

(உ) இவற்றில், வேறு பள்ளிகளில் அமர்த்தப்பட்டவர்கள் எண்ணிக்கை 115.

திரு. பா. ரா. தாமஸ்: ஆசிரியர்கள் ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக்கு மாற்றல் செய்யும் சூழ்நிலை உருவாகும்போது, சில நிர்வாகங்கள் வேண்டுமென்றே ஆசிரியர்களை பணியிலிருந்து விரட்டுவதற்காக பணியிடங் களையும் ஆசிரியர்களையும் மாற்றிக் கொடுக்கிறார்கள். இந்த இடைக்காலங் களில் ஆசிரியர்களுக்கு நிய இழப்பு ஏற்படுகிறது. அவ்வாறு மாற்றல் கொடுக்கும்போது, மாற்றம் கொடுத்த தேதி வரையில் ஊதியத்தை வழங்கி விட்டு மாற்ற வேண்டும் என்ற கருத்துருவை அரசு ஆராய்ந்து ஆணை பிறப்பிக்குமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மேலாண்மை மீது தவறு இருக்கு மானால், அப்படிச் சொல்லலாம். சட்டப்படி ஒரு தவறு செய்திருந்தால், தர வேண்டுமென்று சொல்லி அவர்களைக் கேட்கலாம். மற்றபடி ஆசிரியர்களும் மேலாண்மையும் ஒத்துப் போக முடியாத நிலைமையில், வேறு பள்ளிக்கு மாற்ற வேண்டும் என்று இரண்டு பேரும் விரும்பினால், இன்னு மொரு மேலாண்மை அவரை எடுத்துக்கொள்ள விரும்பினால், ஆசிரியர் பணியிடத்தோடு ஆசிரியரையும் மாற்ற முடியும். அந்த அடிப்படையிலே தான் சில பள்ளிகளில் பிரச்சினைகளை நாம் தீர்த்து வருகிறோம்.



திரு. பா. ரா. தாமஸ்: இது ஆசிரியர்களுக்குப் பெரிய இடையூறாக அமைந்திருக்கிறது. இன்றுள்ள தனியார் பள்ளிகள் ஒழுங்கு படுத்தும் பட்டத்தின் அடிப்படையில் புதிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. சில நிர்வாகங்கள் தங்களுடைய ஆணவத்தால் சில ஆசிரியர்களை ஃபிசிக்கலாக 'பிரவென்ட்' பண்ணிவிட்டு ஆசிரியர்கள் பள்ளிக்கு வரவில்லை என்று பழி சுமத்தி ஆசிரியர்களை மாற்றுகிறார்கள். இத்தகைய சூழ்நிலை உருவாகும் போது, இந்தக் காலம் வரை உள்ள ஊதியத்தைக் கொடுத்துவிட்டு, வேண்டு மென்றால் பணியிடத்தை மாற்றம் செய்யலாம் என்று மாண்புமிகு கல்வி யமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஒரு குறிப்பிட்ட ஆசிரியரையும், ஒரு குறிப்பிட்ட பள்ளியையும் மனதிலே வைத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். அது பற்றிய முழு விவரம் என்னிடத்திலே இல்லை. அதுபற்றி முறையாக விண்ணப்பித்தால், நாம் அதுபற்றி ஆராயலாம்.

திரு. ஜே. எம். மியாகான்: தனியார் பள்ளி, தனியார் பள்ளி என்று சொல்லி பிரயோஜனம் இல்லை. எந்தத் தனியார் பள்ளி என்று சொல்ல வேண்டும். Otherwise, it reflects on all the private institutions.

திரு. பா. ரா. தாமஸ்: முகவை மாவட்டத்திலுள்ள கோட்டையூரில் உள்ள சிதம்பரம் செட்டியார் மேல்நிலைப் பள்ளியில் ஃபிலோமினா கலைச்செல்வி என்ற ஆசிரியர் கடந்த 15 மாதங்களாக வலுக்கட்டாயமாக அரசுச் சட்டங்களை மீறி தடுத்து நிறுத்தப்பட்டிருப்பதால், அங்கே ஊரில் உண்ணாவிரதம், போராட்டம் எல்லாம் நடந்தன.

திரு. க. இராமமூர்த்தி: இதிலே அமைச்சர் யார் என்று தெரியவில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள் கூறிய கருத்து புதிய சட்டச் சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அதை விடச் சிக்கல், விடை எங்கே யிருந்து வருகிறது என்பது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள் குறிப்பிட்ட ஒரு சம்பவம் மட்டுமல்லாமல், இது போன்று பல சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. இதை முறையிடும்போது, அந்த

[1983 மார்ச் 28

நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுத்து ஆசிரியர்களுக்கு உரிய பாதுகாப்பு கொடுக்கக் கூடிய அளவிற்கு போதிய பிரிவுகள் சட்டத்திலே இல்லை என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். இப்படிப்பட்ட பிரச்சினைகள் வரும் போது, அதைச் சமாளிக்க சட்டத்திலே பிரிவுகள் இல்லையென்பதால், அத்தகைய பிரிவுகளைக் கொண்டு வந்தால்தான், இப்படிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அது குறித்து நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சினைகளை நாம் தீர்க்க முயற்சி எடுக்கிறபோது, சட்டப்படியாக அரசுக்கு அதிகாரம் இல்லையென்ற நிலை வருமானால், அந்த ஒழுங்கு படுத்துகிற சட்டத்தைத் திருத்த வேண்டிய நிலைமைக்கு அரசு வருகிறது. அதுபற்றி இப்போது பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். அது மட்டு மல்லாமல், பள்ளிகள் ஒழுங்காக நடைபெறுகிற அளவில் வேறுபல முறைகளில் சட்டங்களைத் திருத்த வேண்டியிருக்கிறது.

## *Gratuity for Aided College Teachers.*

*198. Q.—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

*(a)* whether it is a fact that Aided College Teachers are not eligible for gratuity, at the time of their retirement; and

*(b)* if so, the reasons therefor?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. பா. ரா. தாமஸ்:**

The teaching staff of the Engineering Colleges are not given that gratuity. I would like to know whether they are now getting it or not. தனியார் பொறியியல் கல்லூரிகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட வில்லை. அது இப்போது கொடுக்கப் படுகிறதா என்ற கருத்தை மட்டும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.



1983 மார்ச் 28]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தனியார் கல்லூரியைப் பொறுத்த வரையில்தான் விவரம் தந்திருக்கிறார்கள். என்ஜினியரிங் கல்லூரி, கலைக் கல்லூரி என்று தனித்தனியாக விவரம் இல்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினாக்கள் 199, 200 ஆகியவை ஒத்தி வைக்கப்படுகின்றன. வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. கவன ஈர்ப்பு.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் இருக்கையில் இல்லாததால் அவருடைய கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

**மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் உட்படுத்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு உரிய தகுதி வழங்காமலும், ஊதியம் நிர்ணயிக்காமலும் இருப்பது குறித்து.**

---

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானம். திரு. செ. முத்துசாமி. அதே பொருள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்களும் முன்னறிவிப்பு கொடுத்திருப்பதால் அவர் பெயரை இதனோடு இணைத்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"தமிழ்நாட்டிலுள்ள மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றி வரும் உட்படுத்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் 1978 முதல் 5 ஆண்டுகளாக பணியாற்றிய பின்னரும் அவர்களுக்கு உரிய தகுதி வழங்காமலும், ஊதியம் நிர்ணயிக்காமலும் உள்ளதால் பல ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து."

அறிகிறோம். அது ஒரு சட்டச் சிக்கலை ஏற்படுத்தியிருந்தால், அந்தப் பள்ளிக்கூடங்களில் இன்றுவரையில் பகுதிநேர சத்துணவுப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படாததால், அங்கே தொடர்ந்து ஆசிரியர்களே அந்தப் பணியை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து அவர்கள் அதைச் செய்து வருகிறார்கள். ஆகவே இது ஒரு பெரிய பிரச்சினையை ஏற்படுத்தியிருக்கிறது. அரசினுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்ற பள்ளிக்கூடங்களிலும் நகராட்சியின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற பள்ளிகளிலும் உள்ள ஆசிரியர்கள் அந்தப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு, அங்கு பகுதி நேர சத்துணவுப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் தனியார் பள்ளிகளில் ஆசிரியர்கள் அந்தப் பணியிலிருந்து விடுவிக்கப்படாத காரணத்தினால், அதை அவர்கள் தொடர்ந்து செய்யவேண்டிய சுமையில் இருக்கிறார்கள்.

ஆகவே அரசிடம் நான் இந்த சமயத்தில் கேட்டுக்கொள்ள விரும்புவது, இப்போது உயர்நீதி மன்றத்திலே வழக்கு போட்டு சட்டச் சிக்கல் இருப்பதால், ஒன்று வழக்கைத் துரிதப்படுத்தி அதை முடிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும், அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் அல்லது வழக்குத் தொடுத்திருக்கின்ற காரணங்கள் நியாயமாக இருந்தால், அரசே அந்த நிர்வாகங்களுடன் ஓர் உடன்பாட்டிற்கு வந்து அவர்களுடைய கோரிக்கையை ஏற்பது நியாயம் என்று அரசு கருதினால், அந்தக் கோரிக்கைகளுக்கு இணக்கம் தெரிவித்து அந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம். ஆகவே இந்தக் கருத்தைக் குறித்து விரைவான பரிசீலனை செய்து அரசு ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். தனியார் பள்ளிகளில் சத்துணவு மையங்களிலே ஆசிரியர்கள் தொடர்ந்து பணியிலே இருப்பதால், இப்போது அவர்களுக்குக் கோடை விடுமுறை காலத்திலே அந்த பணிச்சுமை வருகிறது. கோடை விடுமுறை காலத்திலே அந்தப் பணிச்சுமை வந்தால், அவர்களுக்கு நம்முடைய அரசு விதிகளின்படி ஈட்டிய விடுப்பு கொடுப்பது முறையாகும்.

'If a teacher is prevented from enjoying summer vacation, he can be granted Earned Leave as per rules என்று அடிப்படை விதிகளிலே இருக்கிறது. அந்த அடிப்படை விதிகளின்படி அவர்களுக்கு உரிய அந்த ஈட்டிய விடுப்பைத் தருவது குறித்து ஒரு தனி ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





இன்னொன்று, ஏற்கெனவே சத்துணவுத் திட்டம் தொடங்கிய காலத்திலே இருந்து ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் இதற்கு தங்களுடைய முழு ஒத்துழைப்பை நல்கி, ஆரம்ப காலத்தில் எந்த இடர்ப்பாடும் இல்லாமல் தொடர்ந்து தங்களுடைய கடமைகளைச் செய்ததால், அரசினுடைய மகப் பெரிய கொள்கைத் திட்டத்திற்கு ஆரம்பகாலத்தில் வெற்றியைத் தேடித் தந்ததனுடைய பொறுப்பை அவர்கள் ஏற்றிருக்கிறார்கள். ஆகவே அப்படிப் பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு, எப்போதும் போல இந்த அரசு மறவாமல், அவர்கள் பணியாற்றிய சிலபல மாதங்களுக்கு ஊக்கத் தொகையாக அல்லது சிறப்பூதியமாக ஒரு குறிப்பிட்ட தொகையை வழங்குவது குறித்து அரசு பரிசிலிக்க வேண்டும் என்று இந்த சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரத்தில் கல்லூரி அமைப்பது குறித்து அதற்கான நிதி ஒதுக்கீட்டைப் பற்றி இந்தத் துணை நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. சிதம்பரம் கலைக் கல்லூரி தொடங்கப்பட்டதை நாங்கள் வரவேற்று முன்பே இந்த அரசுக்கு நன்றி தெரிவித்திருக்கிறோம். அது மட்டுமல்ல, நான் அந்த ஊரைச் சேர்ந்தவன் என்ற முறையில் இரட்டிப்பு மகிழ்ச்சியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே ஒரு பிரச்சினை என்னவென்றால், ஆரம்பிக்கப்பட்ட அந்தக் கலைக் கல்லூரியில் அறிவியல் பாடங்களுக்கு ஏற்பாடு செய்யவில்லை. கலைப் பாடங்களுக்கு மட்டும் தான் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே அறிவியல் பாடங்களுக்கு வருகின்ற ஆண்டுத் தொடக்கத்திலே சிதம்பரம் அரசு கலைக் கல்லூரியில் தக்க ஏற்பாடுகளைச் செய்யுமாறும், அங்கு அறிவியல் பாடங்களைத் தொடங்கி அந்தப் பாடங்களைப் படிக்க தற்போது வாய்ப்பில்லாமல் இருக்கின்ற மாணவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்துகின்ற நடவடிக்கைகளை எடுக்குமாறும் இந்த அரசை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அவ்வாறு அறிவியல் பாடங்கள் ஆரம்பிக்காமலிருப்பதற்கு ஒரு காரணமாக இடப் பற்றாக்குறை சொல்லப்படுகிறது. இந்த இடப் பற்றாக்குறையை நீக்க இப்போது சிதம்பரம் நகர எல்லைக்குள்ளாக நந்தனார் கல்விக் கழகம் என்ற அமைப்பு இருக்கிறது. அந்த நந்தனார் கல்விக் கழகத்திற்கு கிட்டத்தட்ட 25 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த 25 ஏக்கர் நிலத்தில் நம்முடைய அரசு நலத்துறைக்குச் சொந்தமாக 22 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த நிலத்தை நாம் கையகப்படுத்தி அந்த நிலத்தில் அந்த அரசுக் கல்லூரியைத் தொடங்க ஏற்பாடுகள் செய்யலாம் என்று இந்த சமயத்திலே ஒரு ஆலோசனையாகச் சொல்லிக்கொள்கிறேன். காரணம், அரசுக்குச் சொந்த

(திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்) [1983 மார்ச் 28

மான நிலமாக இருப்பதால், நந்தனார் கல்விக் கழகமும் தங்களுடைய சொந்தமான நிலத்தையும் இந்த அறப் பணிகளுக்குத் தர முன்வந்திருப்பதால், இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பல்கலைக் கழகத்தினுக்குப் புதிதாக ஒதுக்கீடுகள் என்பதுபற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. பல்கலைக் கழகங்கள் பற்றி நான் இதிலே கேட்டுக்கொள்ள விரும்புவது, பல்கலைக் கழகங்களுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கினாலும், பிளாக் கிராண்ட் ஆக அல்லது அட் ஹாக் கிராண்ட் ஆக, எந்தப் பெயரிலே கொடுத்தாலும், எந்தெந்தப் பல்கலைக் கழகங்களுக்கு எவ்வளவு இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது என்ற விவரத்தை தனித்தனியாகக் கொடுத்தால், தமிழகத்திலே இருக்கின்ற ஒவ்வொரு பல்கலைக் கழகத்திற்கும் எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய வாய்ப்பாக இருக்கும். ஆகவே வருங்காலத்தில், அது நிதி நிலை அறிக்கையிலே என்றாலும் சரி அல்லது துணை நிதி நிலை அறிக்கையிலே என்றாலும் சரி, அப்படிப்பட்ட ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்கலைக் கழக நிதி ஒதுக்கீடு என்று நான் குறிப்பிடும்போது, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இது நிதி சம்பந்தமான பிரச்சினையாக இருப்பதால், நான் ஒரு கருத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழக நிதி, வரவு செலவு பற்றிக் கண்காணிக்க தமிழக அரசு, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, நம்முடைய அரசினுடைய பிரதிநிதியாக பைனான்ஸ் ஆபீசர் என்ற பதவியில் ஒருவரை டெபுடேஷனில் அங்கே அனுப்பியிருக்கிறது. அந்த பைனான்ஸ்

(முற்பகல் 10-00)

ஆபீசர் இருக்கின்ற வரவு-செலவுக் கணக்குகளை செம்மைப்படுத்தி, நெறிமுறைப்படுத்தி, ஒழுங்குபடுத்தி, பல்கலைக் கழகத்தின் வரவு-செலவுக் கணக்கில் எந்தக் கோளாறும் இருக்கக் கூடாது என்பதற்காக அனுப்பப்பட்ட பொறுப்புள்ள அதிகாரி. ஆரம்பத்தில் ஒருசில மாதங்கள் அவர் தனது கடமைகளை ஒழுங்காகச் செய்தார் என்ற நல்ல பெயரை வாங்கினார். 6 மாதங்களுக்குப் பிறகு அவரைப்பற்றிப் பல புகார்கள் வருகின்றன. நான் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஆசிரியர்களுக்காக வழங்கப்படுகிற மானியங்கள் எல்லாம் அங்கே ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் போடப்பட்டிருந்தது. அதாவது இந்தியன் வங்கியில் வரவு



1983 மார்ச் 28] (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்)

செலவுக் கணக்கை வைத்திருந்தார்கள். சில மாதங்களுக்கு முன்பு அந்தக் கணக்கை ஒரு தனியார் வங்கிக்கு மாற்றுவதற்கு நம்மால் அனுப்பப்பட்ட பைனான்ஸ் ஆபீசர் ஒப்புதல் அளித்திருக்கிறார் என்றால், எவ்வளவு பெரிய தவறை அவர் செய்திருக்கிறார் என்பதை அரசு உணர வேண்டும். பல்கலைக் கழக நிர்வாகத்தின்மீது நான் தவறு சொல்லவில்லை. நம்முடைய பிரதிநிதி அங்கே உட்கார்ந்து கொண்டு தவறு செய்கிறார். அதைப்பற்றி அரசு விசாரணை செய்ய வேண்டும். மேலும் இவ்வாறு அனுப்பப்படுகிற அதிகாரிகள் எல்லாம் 2 ஆண்டுகளுக்கு மேல் அங்கே பணியில் நீடிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும், அல்லது 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை அவர்களை மாற்றுவது என்ற நியதியைக் கடைப்பிடிப்பது நல்லது என்பதை என் கருத்தாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்)

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** துணைத் தலைவரவர்களே, ஏதாவது ஒரு வங்கியில் பணத்தைப் போட வேண்டியது தான் முறையாக இருக்கும். முன்பு இந்தியன் வங்கியில் போட்டதை குறை சொன்னார்கள். இப்போது மாற்றியதைக் குறை சொல்லுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் எந்த வங்கி என்று சொன்னால் அதைப்பற்றிப் பரிசீலிக்க உதவியாக இருக்கும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** துணைத் தலைவரவர்களே, நான் வங்கியின் பெயரைக் குறிப்பிடாமல் சொன்னேன். முன்பு இந்தியன் வங்கி தனியார் பொறுப்பில் இருந்தது. இப்போது அது தேசியமயமாக்கப்பட்டு விட்டது. அந்த வங்கியிலே தொகை இருப்பதில் எந்தத் தவறுமில்லை. அதை பேங்க் ஆஃப் மதுரைக்கு ஏன் மாற்றினார்கள் என்பது சந்தேகங்களை எழுப்புகிறது. ஆதலால் தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து தனியார் வங்கிக்கு மாற்றுவதை நம்முடைய பிரதிநிதி அனுமதிக்கலாமா என்பதை அரசு விசாரித்து உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அவரைப் பற்றிப் பல்வேறு புகார்கள் இருக்கின்றன. அதைப் பற்றி விரிவாகக் குறிப்பிட விரும்பவில்லை. ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். நிலுவைத் தொகைகளை வழங்கும்போது சரி, ஒப்பந்தக்காரர்களுக்குத் தொகை அங்கீகரிக்கும்போதும் சரி, ஆசிரியர்கள், அலுவலர்களுக்கு நிலுவைத் தொகைகளை அனுமதிக்கும்போதும் சரி, ஒரு பைனான்ஸ் ஆபீசர் நேர்மையாகச் செயல்பட வேண்டும். ஆனால் அவருடைய செயல் தமிழக

அரசுக்குக் களங்கத்தை ஏற்படுத்துகிறது. நிலுவைத் தொகைகளை அளிக்கும்போதும், தமிழக அரசின் பிரதிநிதியாக இருக்கும் அவர் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளாகிறார் என்றால், இந்த அரசுக்கு எவ்வளவு பெரிய களங்கத்தை உருவாக்குகிறார் என்பதையும் தமிழக அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டியது என்னுடைய கடமை என்ற அளவில் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து, சிதம்பரம் நகரத்தை வறட்சிப் பகுதியாக அறிவிப்பதில் கால தாமதம் செய்கிறார்கள். அங்கு குடிநீர் பிரச்சினை ஆரம்பித்துவிட்டது. வறட்சி, கிராமங்களை மட்டுமல்ல, நகரங்களையும் சேர்ந்து தாக்குகிறது. பக்கத்தில் வீராணம் ஏரி இருக்கிறது என்பதாலோ என்னவோ, அதை வறட்சிப் பகுதியில் சேர்க்காமல் இருக்கிறார்கள். அதனால் சிதம்பரம் நகரத்தில் உள்ள மக்கள் அவதிப்படுகிறார்கள். வறட்சியால் பாதிக்கப்பட்ட மற்ற பகுதிகளில் என்னென்ன தொல்லைகள், இடர்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றனவோ அந்தப் பிரச்சினைகள் சிதம்பரம் நகரிலும் ஏற்பட்டிருக்கின்றன. எனவே சிதம்பரம் நகரை வறட்சிப் பகுதியாக அறிவிக்க உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, பல்கலைக் கழகங்களைப் பொறுத்தவரையில், ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கும், மதுரைப் பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கும், சென்னைப் பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கும் ஊதிய விகிதத்தை 1,100 ரூபாய் என்று துவக்க, முன்பே தமிழக அரசின் சார்பில் ஒரு உறுதிமொழி அளிக்கப்பட்டது. மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள், 1980 என்று நினைக்கிறேன், அப்போது நடைபெற்ற விவாதத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கும் 1,100 ரூபாய் என்று ஊதிய நிர்ணயம் செய்வது அரசின் பரிசிலனையில் இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். குறிப்பேடுகள் இருக்கின்றன. அதற்குப் பிறகு, அமைச்சரவர்கள் வாக்குறுதி அளித்த பிறகு, சென்னைப் பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கும், மதுரைப் பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கும் 1,100 ரூபாய் என்று ஊதிய நிர்ணயம் அறிவிக்கப்பட்டது. அந்தப் பல்கலைக் கழகங்களைப் பொறுத்தவரையில் அது அமுல்படுத்தப் பட்டுவிட்டது. ஆனால் அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு இன்றுவரை அளிக்கப்பட்ட உறுதிமொழி செயல்படுத்தப்படவில்லை என்பதை இந்தச் சமயத்தில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, பல்கலைக் கழகங்கள் எல்லாவற்றுக்கும் ஒரேவிதமான அணுகுமுறையைக் கையாண்டால், அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் பாதிப்புக்கு ஆளாகாமல் இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டு பல்கலைக் கழகங்களுக்கு அளிக்கப்பட்ட சலுகை அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கும் அளிக்கப்பட வேண்டுமென்ற கருத்தை மீண்டும் இந்தச் சமயத்தில் நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.





இதைப்போல, அரசுக் கல்லூரி ஆசிரியர்கள், தனியார் கல்லூரி ஆசிரியர்கள் ஆகியோர்களுக்கு ஊதியம் நிர்ணயம் சம்பந்தமான பல குறைபாடுகள் பல மாதங்களாக சுட்டிக்காட்டப்பட்டும், தீர்க்கப்படாமல் இருக்கின்றன என்பதை அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களுடைய குறைபாடுகளைப் போக்கும் வகையில் தமிழக அரசு விரைவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இறுதித் துணை மதிப்பீட்டின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். துணை மதிப்பீட்டிலே பல்வேறு நல்ல காரியங்கள் ஆற்ற இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. குறிப்பாக தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஆழ் குழாய் கிணறுகள் அமைக்க ஏற்பாடு செய்யப் பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

சத்துணவுத் திட்டம் சம்பந்தமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்றைய பத்திரிகையிலே மத்திய அரசு அதனுடைய ஊழியர்களுக்கு 2 தவணைகள் அகவிலைப் படியையும், பட்டுவாடா செய்ய வேண்டிய நிலுவைத் தொகையையும் வழங்கியிருப்பதாக அறிவிப்பு வந்திருக்கிறது. துணை மதிப்பீட்டிற்கு விடை அளிக்கின்றபோது, நம்முடைய அரசுத் தரப்பிலிருந்து அப்படிப்பட்ட ஒரு அறிவிப்பு வந்தால் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், இன்றைக்கு ஏமாற்றம் அடைந்திருக்கிற அவர்கள் சற்று நிம்மதி அடைவார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகிறேன். முதலிலே முழுத் தன்மை வாய்ந்த நிதி நிலை அறிக்கையை விமர்சனம் செய்த பின்னாலே, நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் இறுதியாக விளக்கம் அளிக்க முனைந்தார்கள். அந்த நேரத்திலே அரசியல் கட்சிகள் எல்லாம் நுழைவு வரியை எதிர்த்து, அதை அரசு கைவிடாததைக் கண்டித்து வெளி நடப்பு செய்தன. ஆசிரியர்கள் பிரதிநிதிகள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு எதுவுமே செய்யப்படவில்லை, அவர்கள் புறக்கணிக்கப் பட்டிருக்கிறார்கள், அவர்களை இந்த அரசு மிக மிக மோசமாகக் கருதுகிறது,

என்று சொல்லி, அதற்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் வெளி நடப்பு செய்தோம். அவையிலே ஆட்களே இல்லை. நாங்கள் எல்லோரும் போனதற்குப் பிறகு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அரை மணி நேரம் விளக்கம் அளித்துக் கொண்டிருந்தார்கள். எதிர் வரிசையில் யாருமே இல்லாத நேரத்தில் விளக்கம் அளித்துக் கொண்டிருந்தார்கள்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சிகளிலே இருக்கின்றவர்கள் பொறுப்புணர்ச்சியோடு வெளி நடப்பு செய்து, 5 நிமிடங்களில் வந்து உட்கார்ந்திருந்தால் நல்லதுதான். அது ஒரு அடையாளம்தான். வியாபாரிகளுக்காக, அரசு ஊழியர்களுக்காக நாங்கள் அனுதாபம் காட்டுகிறோம் என்று தெரிவிக்கும் வகையில் வெளி நடப்பு செய்கிறார்கள். அது ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். வெளியே அரை மணி நேரம் உட்கார்ந்துகொண்டு கேட்டார்கள்.

(முற்பகல் 10-10)

அதுவல்ல அதனுடைய நோக்கம். நிதியமைச்சர் பதில் சொல்லும்போது, உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்த உடனேயே உரையை நிறுத்தி விட முடியாது. பத்திரிகை மூலமாகவும், பல்வேறு அமைப்புகள் மூலமாகவும் அவர் சொல்லும் செய்திகள் மக்களுக்குப் போய் சேர வேண்டும். ஏற்கெனவே குறைந்த எண்ணிக்கையில் உறுப்பினர்களை வைத்து அவையை நடத்திக் கொண்டிருக்கிறோம். எதிர்க் கட்சி உறுப்பினர்களும் வெளியேறினால், இன்றைக்கு மேலவையே தேவைதானா, ஒரு ரிப்ளிகா ஆப் அசெம்பிளி தானே என்கிற பிரச்சினை வெளி மாநிலங்களில் எல்லாம் இருந்துகொண்டிருக்கிறது. அதற்கேற்றாற்போல் நாமாக நிலைமைகளைக் கொண்டு போய்விடக் கூடாது என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். வெளிநடப்பு செய்து போனவர்கள் திருப்ப வந்திருந்தால், நன்றாக இருந்திருக்கும் என்றுதான் நாங்களும், நாட்டு மக்களும் எதிர்பார்த்தோம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் எதுவும் இல்லாத நிலையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் உரையை முடிக்கிற நேரத்தில்தான் வெளிநடப்பு செய்தோம். நாங்கள் வெளிநடப்பு செய்த பிறகு, அவர்கள் பதில் சொல்லியதால்தான் அதையொட்டி சில வேண்டுகோள்களை இங்கே சொல்கிறேன். மேலவை இருக்க வேண்டுமா அல்லது இருக்க வேண்டாமா என்பது வேறு பிரச்சினை. இது இல்லையென்றால் இங்கு வர வேண்டியவர்கள் தேர்தலில் வெற்றிபெற்று அங்கு வரப் போகிறார்கள்.



**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** ஒரு அவையை நாம் இப்போதே குறைந்த எண்ணிக்கையில் உள்ள உறுப்பினர்களைக் கொண்டு நடத்திக்கொண்டிருக்கிறோம். இப்போதே கூட இருக்கிற 10 பேரை வைத்துக்கொண்டு தான் பதில் அளிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட கருத்தின்படி வெற்றிபெற்று அங்கே வருவதை நாம் எல்லோரும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம்.

**திரு. செ. முத்துசாமி :** மேலவையை நல்லமுறையில் நடத்த வேண்டுமென்ற நல்ல கருத்து மாண்புமிகு அவை முன்னவர் அவர்களிடம் இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்து உட்கார்ந்தால், உறுப்பினர்களும் வந்து உட்காருவார்கள்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** இருக்கிற உறுப்பினர்கள் வந்து கடமையாற்றினாலே போதும். முதலமைச்சருக்கு வெளியில் பல்வேறு பணிகள் இருக்கின்றன. இப்போதுகூட கவன ஈர்ப்புத் தீர்மானம் வந்தது. மாண்புமிகு உறுப்பினர் வரவில்லை. அவர்களுக்கு வேறு வேலை இருந்திருக்கலாம். முதலமைச்சர் வரவில்லை, ஆகவே நாங்கள் வரவில்லை என்பதல்ல பிரச்சினை. முதலமைச்சர் அவர்கள் கூட இங்கே வந்து உட்கார்ந்து பதில் சொல்லியிருக்கிறார்கள். உறுப்பினர் ஏதோ நோக்கம் வைத்துக்கொண்டு நிழல் யுத்தம் செய்வது அவைக்குப் பெருமையளிக்காது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முதலமைச்சர் வந்தால்தான் உறுப்பினர்கள் வர வேண்டும் என்பதல்ல.

**திரு. செ. முத்துசாமி :** அப்போதுதான் முடிவுகள் வரும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முதலமைச்சர் வரா விட்டாலும், முடிவுகள் வரும்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** அப்படி முதலமைச்சர் வந்தால் தான் முடிவுகள் வரும் என்றால், நாங்கள் பேச வேண்டியதும் அதை மற்றவர்கள் கேட்க வேண்டியதும் வாராது. உறுப்பினர்களுக்குப் பதில் சொல்கிறோம் என்பதல்ல. மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டும். காரணம் இது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** எதிர்த்தரப்பில் இருப்பவர்கள் வெளிநடப்பு செய்வது என்பது ஒரு கடமை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** துணை நிதிநிலை அறிக்கை மீது மாத்திரம் உறுப்பினர் பேசினால் போதும். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவையில் இல்லாதபோது நிதியமைச்சர் அவர்கள் பேசினார்கள் என்பதைப் பற்றியே திரும்பத் திரும்பப் பேசக்கூடாது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அவர்கள் பேசுகிறபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். "அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஓய்வு பெறும்போது ரூபாய் பத்தாயிரம் வேண்டுமென்று கேட்கிறார்கள். இப்போதே எட்டாயிரம் முதல் முப்பத்தாறாயிரம் ரூபாய் வரை கிராஜுவட்டி கொடுத்துத்தான் அனுப்புகிறோம். இதற்கு மேலும் 10 ஆயிரம் ரூபாய் வேண்டுமென்று கேட்கிறார்கள்" என்று ஏதோ நாங்கள் நியாயமற்ற முறையில் கேட்பது போல் பத்திரிகையில் வரும்படி பதில் அளித்திருக்கிறார்கள். கிராஜுவட்டி என்பது வெள்ளைக்காரர்கள் காலத்திலேயே கொடுக்கப்பட்டது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்ததற்குப் பிறகு கொடுக்கப்பட்டதல்ல.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** சம்பளம் கூட அவர்கள் காலத்திலேயிருந்து கொடுத்து வந்ததுதான். அது வேறு. ஆனால் மக்களுடைய வரிப்பணத்திலிருந்துதான் கொடுக்கிறோம் என்பதை உறுப்பினர் ஒத்துக் கொண்டால் நன்றாக இருக்கும்.

(திரு. க. மீனாட்சிசுந்தரம் இருக்கையிலிருந்து எழுந்தார்)

நான் பேசி முடித்த பிறகு உறுப்பினர் பேசினால் நன்றாக இருக்கும். முதலில் ஆசிரியர் பிரதிநிதி என்பதற்கேற்ப நடைமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும். என்னைப் பேசவிடக் கற்றுக் கொள்ள வேண்டும். வரிப் பணத்தை மக்களிடமிருந்து பெற்று, பிறகு அதை எப்படி கொடுக்க வேண்டுமென்று அனுமதிப்பதற்கு ஒரு அரசுக்குத்தான் உரிமை உண்டு. அரசுதான் அதைத் தீர்மானிக்க வேண்டும். கொடுப்பதா இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டியது அரசின் பொறுப்பு.

(திரு. க. மீனாட்சிசுந்தரம் உட்கார்ந்துகொண்டு பேசினார்)

நான் நின்றுகொண்டு பேசிக்கொண்டிருக்கும்போது உறுப்பினர் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கக்கூடாது. "மாண்புமிகு" என்று சொல்வதை காப்பாற்ற வேண்டும்.





**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அரசு தருவதற்கு உரிமை படைத்தது. நாங்கள் எல்லாம் கேட்பதற்காகத்தான் வந்திருக்கிறோம். நாங்கள் தவறாகக் கேட்பதைப் போல ஒரு எண்ணத்தை உருவாக்கி, "கிராஜுவட்டி தந்துதான் அனுப்புகிறோம்" என்று, அதுவும் இப்போதுதான், இவர்கள் வந்துதான் தந்து அனுப்புவது போலவும், முன்பு இருந்த அரசு இவர்களைக் கைவிட்டது போலவும் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** விவாதத்திற்காகச் சொல்கிறேன். முன்பு இருந்த அரசு, உறுப்பினர் அவர்கள் ஆதரித்த கட்சி ஆட்சியில் இருந்த போதும், காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபோதும் இதனைக் கொடுக்க வில்லை. "அவர்கள் யாரும் கொடுக்காததை ஏன் கேட்கிறீர்கள்?" என்று நாங்கள் கேட்கலாமா? நிலைமைகளைப் பார்த்துத்தான் ஒரு அரசு தரும். நிதி நிலைகளை எப்படி பங்கீடு செய்வது என்பதை அரசு தான் முடிவு செய்யும். உறுப்பினர் சொல்ல வேண்டியதைச் சொல்லலாம். செய்ய வேண்டியதை நாங்கள் செய்கிறோம். நாங்கள் செய்யாவிட்டால், அதை எதிர்த்து வெளியே போய் உறுப்பினர் பிரச்சாரம் செய்துகொள்ள வேண்டியதுதான்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இறந்துவிட்ட ஊழியர் குடும்பத்திற்கு ரூபாய் பத்தாயிரம் எந்தவித முன்னுதாரணமும் இல்லாமல் முன்பு இருந்த அரசு தந்தது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கிராஜுவட்டி பற்றிச் சொல்லும்போது, அடித்தளத்தில் இருக்கிற ஊழியர்களுக்குக்கூட எட்டாயிரம் ரூபாய் தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் ஓய்வு பெறும்போது ரூபாய் 10 ஆயிரம் ரூபாய்க்கு மேல் கடனில் தான் செல்கிறார்கள். அதனால்தான் இதைக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறோம். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் * * * என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** * * என்பதாக நிதியமைச்சர் இந்த அவையில் சொல்லவில்லை. அதை மறுக்கிறேன். அவ்வாறு நிதியமைச்சர் அவர்கள் * * * குறிப்பிட்டார்களா என்பதைப் பார்க்க வேண்டும். அதுவரை அந்தப் பேச்சு அவைக்குறிப்பில் இடம் பெறக்கூடாது. * * * என்று ஒரு அமைச்சர் பேசியிருக்க முடியாது. உறுப்பினர் தவறாகச் சொல்வதெல்லாம் அவைக்குறிப்பிலே இடம் பெறுவது நல்லதல்ல.

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** * * * என்று சொல்லிய பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** நம்முடைய அவைக் குறிப்புகளில் பார்த்து எந்த கான்டெக்ஸ்டிலாவது நிதியமைச்சர் அவ்வாறு பேசியிருக்கிறாரா என்பதைப் பார்த்து உரிமைக் குழுவினுடைய பரிசீலனைக்குக் கொண்டுவருவது பற்றிக் கூட தீர்மானிக்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முடிவு தெரியும்வரை குறிப்பிட்ட பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நிறுத்தி வைக்க உத்தரவிடுகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அடுத்து, தஞ்சையிலுள்ள பல பகுதிகளை வறட்சிப் பகுதிகளாக அறிவிக்க வேண்டும். அடுத்து, ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், பாலிடெக்னிக்குகளில் இருப்பவர்களும் ஆசிரியர்களாகத்தான் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தேர்வு நிலை, சிறப்பு நிலை, மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு உள்ள சிறப்பு ஊதியம் நாற்பது ரூபாய் ஆகியவைப் பற்றியெல்லாம் ஆணை வெளியிடப்படவில்லை. அவர்களுக்கு இந்தத் துணை நிதிநிலை அறிக்கையில், பொருந்துகிற மாதிரி ஏதாவது செய்ய வேண்டும். சத்துணவுத் திட்டப் பணி ஆசிரியர்களிடமிருந்து எங்களுடைய வேண்டுகோளுக்கிணங்க எடுக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். ஆனால் தனியார் பள்ளி ஆசிரியர்கள் இன்றைக்கும் அந்தப் பணியை ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். அரசு வற்புறுத்தலின் பேரில் அப்பணியை அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். கோடை விடுமுறைக்குக்கூட அவர்கள் வீட்டுக்குச் செல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறது. தனியார் பள்ளிகளில் இருக்கிற சத்துணவுக் கூடங்களில் பொறுப்பாளர்களை உடனடியாக நியமிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

பொதுவாக, ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பால்வாடி பள்ளிகள் இருப்பதில்லை. ஆனால் கோட்டூர், மன்னார்குடி ஊராட்சி ஒன்றியங்களில் மட்டும் பெரும்பாலான ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் இருக்குமிடங்களிலேயே

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



பால்வாடிப் பள்ளிகள் இருப்பதன் காரணமாக, அங்கேயுள்ள பள்ளிகளைச் சரியாக நடத்த முடியாத நிலைமை இருக்கிறது. ஆசிரியர்களும் தங்களுடைய பணியைப் பார்க்க முடியாத சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. எனவே அப்படிப்பட்ட பள்ளிகளைத் தனியாகப் பிரித்தெடுத்து, பால்வாடிப் பள்ளிகளாக நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கிராமப்புறங்களில் இருக்கும் வீடு கட்டும் கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்களுக்கு எந்தத் தொகையும் அரசு ஒதுக்கிடவில்லை. ஆனால் அதே நேரத்தில் நகர்ப்புறங்களில் உள்ளவைகளுக்கு மட்டும் நிதி ஒதுக்கப் படுகிறது. ஆசிரியர்கள் கிராமப்புறங்களுக்குச் சென்று பணியாற்ற வேண்டும் என்கிறீர்கள். டாக்டர்கள் கிராமப்புறங்களுக்குச் சென்று பணியாற்ற வேண்டும் என்று சொல்கிறீர்கள். அரசு ஊழியர்கள் கிராமப்புறங்களுக்குச் சென்று பணியாற்ற வேண்டும் என்று சொல்கிறீர்கள். ஆனால் இவ்வாறு அனைத்து அலுவலர்களும் அங்கே சென்று பணியாற்ற வேண்டும் என்று சொல்லுகிற இந்தச் சூழ்நிலையில் கிராமங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும், அவர்களைப் போன்ற இதர பணியாளர்களுக்கும் உதவும் வகையில் அவர்கள் தாங்களே கடன் வாங்கி வீடு கட்டிக் கொள்ளுவதற்கு ஏற்ற வகையில் கிராமப்புறங்களில் உள்ள வீடுகட்டும் கூட்டுறவு கடன் வழங்கு சங்கங்களுக்கு நிதி ஒதுக்கப்படாமல் இருக்கும் சூழ்நிலை தவிர்க்கப் பட வேண்டும். இதற்கான உரிய நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் இன்று அவைக்கு வருவதற்கு முன்பாகவே ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் இங்கே எடுத்துக்கொள்ளப்பட்டது. அதில் நான் கலந்துகொள்ள முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. காரணம், இந்த அரசின் போக்கைக் கண்டித்து, இந்த அரசின் தொழிலாளர் விரோதப் போக்கை, பழி வாங்கும் நடவடிக்கைகளை எதிர்த்து, ஒரு பெரிய தொழிற் சங்கப் பேரணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதில் போய் பங்கேற்று ஆரம்பித்து வைத்து விட்டு வந்தேன். நிகழ்ச்சிகள் இங்கே ஒரு மணி நேரம் சீக்கிரமாகவே முடிந்துவிட்ட காரணத்தால்தான் நான் அதில் கலந்துகொள்ள முடியவில்லை. தஞ்சை மாவட்டம் கூத்தாநல்லூர் அரசினர் மேல்நிலைப் பள்ளிக் கட்டிடம் பிளந்து, கூரைகள் சரிந்து விழுந்துவிடும் நிலையில் இருக்கின்றன. கோடை விடுமுறையிலேயே கூரைக் கட்டிடத்தைப் போட்டுவிடலாம் என்ற குறிப்பு

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1983 மார்ச் 28

இங்கே இருக்கிறது. தனவந்தர்களிடம் இதுபற்றி பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்றும், அந்தக் கட்டிடத்திற்குரிய நிதியை வசூலித்து விடலாம் என்று நம்புவதாகவும் சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால் அங்கே உள்ளவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், "அரசே அந்தக் கட்டிடத்தைக் கட்டிக் கொடுக்கட்டும், இல்லையென்றால் எங்களிடமே அதை விட்டுவிடட்டும் - அதாவது அந்தச் சமுதாயத்திடமே, தனியார் நிர்வாகத்தின் கீழே விட்டுவிடுங்கள் – நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்" என்று சொல்லுகிறார்கள். தனியார் நிர்வாகத்திடம் விட்டுவிட வேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனால் அங்கே உள்ளவர்களின் எண்ணம் அப்படி இருக்கிறது. எனவே அவர்களை எதிர்பார்த்தால் வேலை நடக்கும், கட்டிடம் கட்டி முடிக்கப்படும் என்று எண்ண வேண்டாம். ஏற்கெனவே உடைந்துவிட்ட நிலையில் அந்தக் கட்டிடம் இருக்கிறது. மாணவர்கள் எல்லாம் அச்சப்படுகிற அளவுக்கு எந்த நேரத்திலும் விழுந்துவிடும் நிலையில் அது இருக்கிறது. கரையான் புற்றுகூட அந்தப் பள்ளியில் வந்துவிட்டது. இதன் காரணமாக அங்கே பாம்பு வந்துவிடுமோ என்று அச்சப்படும் சூழ்நிலை இருக்கிறது. எனவே அப்படிப்பட்ட சூழ்நிலையில் உள்ள கட்டிடத்திலிருந்து மாணவர்களை வெளியேற்றியாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. மற்ற மற்ற கட்டிடங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதைப் போல் இதற்கு ஒரு 'டாப் பிரையாரிட்டி' கொடுத்து உடனடியாக கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளைத் தெரிவித்து, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

* Thiru A. R. DAMODARAN: Hon. Deputy Chairman, Sir, before I speak on the Supplementary Estimates, may I preface my remarks by expressing the relief of the people of Tamil Nadu at the visit of the Hon. the Prime Minister to our State to see for herself the acute distressing conditions that exist not only in the Metropolitan City of Madras but also in other districts and the hope of the people that at least for the next four months, we will lay at rest the bitter political controversies that have arisen and the people of Tamil Nadu can expect substantial assistance from the Government of India by way of provision of foodgrains for the public distribution system as well as grants for improvements in water-supply not only to the City of Madras but also to other areas of Tamil Nadu where acute scarcity of water exists? I hope that the Government of Tamil Nadu will be able to impress on the Hon. the Prime Minister the imperative need for urgent aid because these things cannot wait for visits of other teams.



1983 மார்ச் 28] [Thiru A. R. Damodaran]

Having said this, may I now pass on to certain demands that have been made for Grants in the Supplementary Estimates that have been placed before this House? My first request is about the announcement made by the Hon. the Finance Minister in his Budget speech on March 5th regarding the new Bill that he seeks to introduce in the House introducing a new taxation measure in the States. It was announced in the Budget that this would take effect from the 1st April 1983. Today, we are on the 28th March 1983. Exactly three days remain before this statute is to be adopted by the Houses of the Legislature and I do not know whether the Bill is to be introduced before the 31st March or not. But, my request to the Government is this. In view of the complicated nature of this Bill, in view of the fact that this is a new taxation and fiscal enactment that is to be introduced in Tamil Nadu, and in view of the various repercussions that it would have on the prices of various commodities, my request to the Government of Tamil Nadu is that this Entry Tax Bill may be postponed for a period of three months, or even four months, and that the Bill may be circulated, after having been introduced in the Assembly, to elicit public opinion. We are in the midst of acute distress in so far as drought conditions are concerned and, in my humble opinion, his is neither the time nor occasion for the Government to introduce a complicated fiscal enactment like the Entry Tax Bill. I would, therefore, request the Government to consider this and postpone the introduction of this Bill by three months and also give an opportunity not only to Chambers of Trade and Commerce but also to the consumers' associations because the repercussions are likely to be considerable.

Secondly, after having announced in the Budget that a 2 per cent entry tax will be levied on 13 items, what is the position in so far as trade and commerce is concerned? How do they set about this task from the 1st April? I would not like any sector of trade or commerce unilaterally to start revising selling prices from the 1st April under the impression that even if a Bill is introduced by the Government later on, it would have retrospective effect from the 1st April. That is why I would like a categorical statement from the Hon. the Finance Minister whether he agrees with me that it should be postponed by three months or not. I would liake a statement from him in this House that until the Bill is introduced and passed, it will not take effect that, therefore, prices should not increase from the 1st April. This is in the interests, not of trade or commerce, but in the interests of the consumers who are likely to be

[Thiru A. R. Damodaran] [1983 மார்ச் 28

put to considerable trouble if this is not done. I would request the Hon. the Finance Minister to give an assurance on the floor of this House regarding this matter.

Sir, I now pass on to Grant 4, relating to the administration of Urban Land Tax. In the Budget statement of 1982, the Hon. the Finance Minister mentioned, in paragraph 119, "The existing structure of Urban Land Tax is based on the market-value of lands as on 1st July 1971. It is proposed to up-to-date the market-value of the lands as on 1st July 1981." May I point out, with considerable regret, that so far no such notification has been made? The public are not aware of the revision in market-values. We have only three months more before the present fasli ends. There are a number of towns that are involved in the application of the Urban Land Tax. I would request the Hon. the Finance Minister to inform us whether the value is going to be notified and published in the newspapers because there is a tremendous difference between the value in 1971 and the value in 1981. In fact, my request to the Hon. Minister would be that, in view of the acute conditions of distress that exist in the State, even this measure should not be given effect to because, if I may point out a parallel assurance given by the Finance Minister of the Government of India, the Wealth Tax has been pegged to values of the houses that were existing on the

(முற்பகல் 10-30)

1st April 1971 for owner-occupied houses. Such a facility has not been extended in so far as urban land tax is concerned, excepting for the exemption of 2 grounds. My request to the Government is this. If the Government has not moved in the matter so far, let them not move for another six months to the satisfaction of the people, because the Government will be making demands in April-May; and I speak because I am a house-owner in Madras and I would like to pay urban land tax before March 31st for certain obvious reasons like tax exemption. But I have not received any demand from the Urban Land Tax authorities. In fact, the administration of the Urban Land Tax Act requires considerable improvement. Even for payments made, receipts are not sent and punitive action is taken for non-payment of tax even in cases where tax has been paid. The administrative apparatus will have to be improved. My request is that this also may be postponed by six months.



1983 மார்ச் 28] [Thiru A. R. Damodaran]

Regarding registration, I pointed out in 1981 when the values of land were unilaterally enhanced by Government notification that considerable hardship and distress would be caused to the people of Tamil Nadu; and this is reflected in the Budget documents for the year 1982-83 wherein, surprisingly the revenue from registration has not kept pace and has not increased to the extent it should have under normal conditions. It only indicates that there are thousands of cases pending before Revenue Officials for valuation of the property in respect of which documents have been submitted for registration. I would appeal to the Hon. the Minister for Registration that there is need for a review of the Government Order passed in 1981. Great distress is being caused in the registration of of documents and people are not able to register sale documents which are kept pending for one year to one and a half years. The Government are losing the revenue and the public are put to much difficulty.

Sir, in the Administration of Justice, Grant 13, we have a new provision for the establishment of six Special Courts for the trial of offences under the Essential Commodities Act. The Essential Commodities Act has been amended about 6 or 9 months ago by the Government of India to provide for the establishment of Special Courts. My quarrel is not with establishment of Special Courts because it will lead to expeditious disposal of cases. But one provision has been made by the Ministry and that is that in the case of seizure of essential commodities, the people affected can no longer appeal to the Court and that they have to appeal to a body of three officers of the Government of Tamil Nadu, highly placed, probably of the rank of Commissioners and Secretaries. But I would plead that there is tremendous delay in the disposal of applications made by affected parties and it is necessary for us to transfer this power to the Essential Commodities Courts which have been constituted. I am sure the hon. Members of this House will appreciate this because when they go on tour, they will find that the people affected most are the people who try to transport paddy and rice in bullock carts and the Taluk Supply Officers restrain these bullock carts and seize paddy and rice. These poor farmers have to go to these Revenue Courts and obtain redress. My request is that in the seizure of essential commodities the appellate authority should not be a body of Government officials, however highly placed they may be; and when we have accepted the principle of separation of the Executive from the Judiciary, to bring back an obsolete provision of making the Executive sit in judgment over such matters is, in my

[Thiru A. R. Damodaran] [1983 மார்ச் 28

opinion, a retrograde step. I hope this Government, in spite of the amendment that has been made by the Government of India, will consider restoring the power to the Courts.

Sir, under Grant 39, there is very intriguing provision to which I would like to invite the attention of the hon. Members of this House. It relates to the provision for roads and bridges. I am sure the Hon. the Leader of the House, if he has a copy, would also note this. This is one of the most peculiar Demands I have come across in my life as a Legislator. It is worth notting. The items are all given in Latin numerals and I am afraid my knowledge of Latin numerals is limited only to 20 or 30. I am not able to quote the item but it is on page 70 of the Supplementary Estimates. A sum of Rupees one crore has been set apart in the Supplementary Estimates for urgent repairs to district roads and another sum of one crore of rupees has been set apart for rural roads. Now, my quarrel is not with this allocation; but the explanation is very intriguing. It is stated, "The additional funds required is due to taking up of several urgent repair works required by the Collectors, Very Important Persons, etc." Hence a sum of Rs. one crore is included in the Supplementary Estimates in so far as district roads are concerned. In so far as rural roads are concerned, it is stated, "The additional funds required is due to taking up of certain repairs as per the requests of Collectors, Very Important Persons, and other Transport Corporations." This is the first time I find a reference to Very Important Persons. I would have thought that the most important person in Tamil Nadu is the M.L.A. of the respective Constituency. I exclude even M.L.C.'s because we represent a very wide area and it is not fair. In fact, in the United States of America, when a new President takes charge and when 10,000 appointments are made for posts in various department like the Posts and Telegraph Department, etc., the President has enormous powers of appointment. Every four years, the previous appointees go out and the President has the power of making new appointments. Then, the Senators have a supreme right in vetoing the appointments made by the President and, therefore, the President consults the Senator concerned, even though he may belong to another Party, regarding the appointments to be made. Our Constitution is different. But may I plea that in the selection of district roads and rural roads the list should be provided by the M.L.A. of the Constituency and not by Very Imporant Persons, the classification of which is unknown. This is a dangerous provision and may lead to all sorts of demands being put up by persons unconnected with



1983 மார்ச் 28] [Thiru A. R. Damodaran]

the Legislature. My plea to the Hon. the Finance Minister is this. Although he has made this healthy provision of funds, I would request him to take in to confidence the Members of the Legislature who represent these Constituencies and, after they give their approval for the list of these roads, then, and then only, it should be taken up by the Executive for execution. Otherwise, some official who is interested in a particular road may suggest it and the Collector may not know the full implications. I would request the Ministry to consider whether this could be done. This would also help certain M.L.A.'s because we are all pleading for roads and bridges and, as the Hon. Minister knows, invariably the answer that we receive is that the matter is receiving the 'Aazhndha sinthanai' or deep consideration of the Government. But, it is buried so deep that it takes us even five years to sanction the estimates. Therefore, this small help will enable us to see that we have some of the roads that we want in our respective areas.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீடுகள்பற்றி சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இந்தத் துணை மதிப்பீடுகள் ஒரு மகத்தான நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன என்பதை நான் சொல்ல விரும்புகிறேன் காரணம், சமுதாய நலத்திலும், சமூக நலத்திலும் இந்த அரசு எவ்வளவு அக்கறை வைத்திருக்கிறது என்பதைக் காட்டுகிற ஒரு காரியமாக இருக்கிறது. வறட்சி அதிகமாக இருக்கிற சூழ்நிலையில் குடி நீருக்காகவும், வறட்சி நிலையைச் சமாளிப்பதற்காகவும் இந்தத் துணை மதிப்பீடுகளில் பெரும் ஒதுக்கீட்டை அரசு செய்திருக்கிறது என்பது, மக்கள் நல்வாழ்வில் அரசு எடுத்து வருகிற அக்கறையை வெளிப்படுத்துகிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். எந்தவித இலாப நோக்கும் இல்லாமல் அத்தனை மக்களுடைய நல்வாழ்விற்காகவும் செலவு செய்கிற தொகையாக அது அமைந்திருக்கிறது.

வெளியே ஒரு பிரச்சாரம் செய்கிறார்கள். அரசு மெத்தனமாக இருக்கிறது என்றும், வறட்சி பற்றி அக்கறை காட்டவில்லை என்றும், உரிய காலத்திலே நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் பிரச்சாரம் செய்யும் நேரத்தில் இந்த அவை அதைப்பற்றிச் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறது. அப்படிக் குரல் கொடுப்போர் நேரிடையாக வறட்சிக்கு உதவுங்கள் என்று மத்திய அரசைக் கேட்பதோடு கூட, இந்த அரசு மெத்தனமாக இருந்து விட்டாலும், இதற்காக மக்களைத் தண்டிக்க வேண்டாம் என்று பிரச்சாரம்

செய்வதைப் பார்த்தால், உள்ளபடியாக வேடிக்கையாக இருக்கிறது. இங்கே உள்ள வறட்சி நிலைகுறித்து உரிய காலத்திலே தெரிவிக்கவில்லை என்ற குற்றச்சாட்டை மன்றங்களிலே எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். உள்ளபடியே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சிறந்த முறையில் பதில் சொல்லுவார்கள் என்று கருதுகிறேன். காரணம், 1974-75 முதற்கொண்டு அவ்வப்போது ஏற்பட்ட வறட்சி நிலைகள் குறித்து எப்படி இந்த மாநிலத்திலிருந்து மத்திய அரசுக்கு எந்தக் கால கட்டத்திலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கொஞ்சம் எண்ணிப்பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். முழு வறட்சியைப்

(முற்பகல் 10-40)

பற்றித் தெரிவித்து எவ்வளவு அதிகமாகப் பெறவேண்டுமோ அந்த அளவுக்குப் பெற வேண்டும் என்பதுதான் எல்லா மாநிலங்களிலும் கையாளப்படுகின்ற ஒரு வரைமுறையாகும். இதையேதான் இந்த மாநிலமும் கையாண்டு வந்திருக்கிறது என்பதை நாம் யாரும் மறுக்க முடியாது. ஆட்சிப் பொறுப்பில் யாரும் வரலாம். ஆனால் அதிகாரிகள் ஒரு குறிப்பிட்ட நடைமுறையைப் பின்பற்றிச் சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மத்திய அரசு வகுத்திருக்கின்ற சில விதிமுறைகளையொட்டி அவ்வப்போது வறட்சியைப்பற்றித் தெரிவிக்கின்ற ஒரு பாங்கிலே இயங்கிக்கொண்டிருக்கிறார்கள். பழைய ஆண்டுகளிலே இருக்கின்ற நிலைமைகளை ஒப்பிட்டுப் பார்த்தால், இதிலே இருக்கும் உண்மைகள் தெரியும். இப்போது நமது பிரதம அமைச்சர் அவர்கள் வருகை என்பது நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இந்தியப் பிரதம அமைச்சர் அவர்களே வருகின்றார்கள். இங்குள்ள நிலைமைகளைப்பற்றி அறிந்து போகப்போகிறார்கள். அவர்கள் வந்துபோவதற்கு முன் அவர்களுடைய குழுவினரும் இங்கே வந்தார்கள். அந்தக் குழுவினரும் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு பெரும் வறட்சிக்கு தமிழகம் ஆளாகி இருக்கின்றது என்று சொல்லியிருக்கிறார்கள். நம்மைக் காட்டிலும் அதிகமாகவே ஆராய்ந்து அவர்களுக்குத் தெரிவித்த நிலைமையில் பிரதமர் வந்திருப்பது நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. அதிலேயும்கூட அதிக காலமாக நாம் கவனிக்காமல் இருந்ததுபோல, ஒரு அரசியல் நோக்கம் அதிலே குறிப்பிட்டுப் பேசிவருகிறார்கள். அப்படி நோக்கங்களைச் சொல்வது மக்களுடைய நலனிலே அக்கறை கொண்டிருக்கின்றவர்கள் செய்கின்ற செயல் அல்ல என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.



வறட்சிக்குட்பட்ட மாவட்டங்கள் என்று "சில மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவியுங்கள்" என்று சொல்கின்றார்கள். தமிழகம் முழுவதும் வறட்சியாக இருக்கிறது என்று அறிவிக்க வேண்டும். ஆனால் வறட்சிநிலை பற்றி அறிவிப்பதற்கு வெள்ளைக்காரர்கள் காலத்திலேயே சில விதிமுறைகள் வகுத்திருக்கிறார்கள். அதாவது ஒரு மாவட்டத்தில் ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டால், அந்த கிராமத்திலிருந்து பிழைப்பைத் தேடி வெளி மாநிலங்களுக்கு மக்கள் செல்கின்ற நிலை வரவேண்டும். சாவு இருக்கின்ற நிலைமை இருக்க வேண்டும். அப்படி விதி முறைகளை வகுத்திருக்கிறார்கள். அப்படி இல்லாத இடங்களில் வறட்சி இருக்கின்றது என்று சொல்லிவிடக்கூடாது. சாவு இருக்கின்ற அளவுக்கு இருந்தால்தான் வறட்சிநிலை என்ற விதி முறைகளை இந்தியா முழுவதும் வைத்திருக்கின்றார்கள். அந்த முறைப்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சிரமப்பட்டு பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் இப்போது கூக்குரல் கொடுப்போர்கள் எல்லாம் மத்திய அரசைப் பார்த்து என்ன சொல்லவேண்டுமென்றால், இந்த வறட்சிக்கு நிதி ஒதுக்குகிறார்களோ இல்லையோ அது பற்றி நான் சொல்லவில்லை, ஆனால் அப்படி சாவு வந்தால்தான் வறட்சி என்ற வரைமுறையை வைத்துக்கொண்டு வறட்சியை அறிவியுங்கள், அறிவியுங்கள் என்று சொல்வது எப்படி முடியும் என்பதைப் பார்க்க வேண்டும். இன்றைக்கு தஞ்சாவூரிலே வறட்சி இருக்கிறது என்று சொல்லி விடலாம் என்றால், இதையே வைத்துக்கொண்டு மத்திய அரசை மாநில அரசு ஏமாற்றுவதாகச் சொல்லிவிடும். அங்கே பசுமை இருக்கிறது, இங்கே செழுமை இருக்கிறது என்று ஒரு மாவட்டத்தை வைத்து அவர்கள் ஏதாவது சொல்வார்களானால், அப்படி மத்திய அரசு மாநில அரசைக் கேட்டால், அதற்கு நாம் பதில் சொல்ல வேண்டிய நிலையிலே இருப்போம். நம் அரசு ஏமாற்றுகிறதாக பதில் வந்து சேரும். நாம் அனைவரும் சேர்ந்து இந்திய அரசிடம் "ஒரு மாவட்டம் வறட்சி மாவட்டம் என்று சொல்வதற்கு என்ன விதிமுறைகள் வைத்திருக்கிறார்களோ அதைக் கொஞ்சம் மாற்றுங்கள்" என்று சொல்ல வேண்டும். இப்போதுள்ள நிலைமை அதைச் சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். காரணம் நம்முடைய அரசைப் பொறுத்தவரையிலே, அதிகமான பணம் பெறுவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். எப்படி வறட்சி என்று சொல்வது என்று அதிகாரிகள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். உதவித் தொகை வேண்டுமென்று குரல் கொடுப்பதற்கு நாம் ஏன் தயங்கப்போகிறோம்? ஆனால் நாம் சொல்வதைச் சொல்லவேண்டிய நிலையில் இருப்பதால், அதைப்பற்றி முழுமையாகச்

சொல்ல வேண்டும் என்று இருக்கிறோம். குறிப்பாக சத்துணவுத் திட்டத்தில் குடிநீர் வசதிக்கு என்று ரூ. 140 இலட்சம் ஒதுக்கியிருப்பது வரவேற்க வேண்டிய ஒன்றாகும். அதிலே வேடிக்கை என்னவென்றால், கழிப்பிடங்கள் என்று சொல்லிக் காட்டுகின்றார்கள். அதையெல்லாம் வைத்துக் கொண்டு கேலி பேசுகிறார்கள். ராஜாஜி அவர்கள்கூட வெளிநாட்டுக்காரர்கள் இந்த நாட்டிலே ரெயிலிலே போனால் எவ்வளவு வேதனையான காட்சியைப் பார்க்கின்ற நிலை இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். கடற்கரையில் விடியற்காலையில் வந்துபார்க்கின்றபோது, மக்கள் அங்குள்ள கழிப்பிடங்களைப் பயன்படுத்துவதில்லை. அப்படி பயன்படுத்தாமல் இருக்கின்ற முறையை அந்த வெளிநாட்டுக்காரர்கள் எள்ளி நகையாடுகிறார்கள். ஆகவேதான் அப்படி கழிப்பிடங்கள் அங்கேயிருந்தால் அங்கே போவார்கள் என்று கட்டுகிறோம்.

இப்போது நீலகிரியிலே மழை பெய்துகொண்டிருக்கிறது. அங்கே கோடைக்காலம் வருகிறது. நல்ல சீசன் வருகிறது. அந்த நிலைமைகள் அங்கு ஏற்பட்டிருப்பது நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. கழிப்பிடங்கள் பற்றிக் கேலிசெய்து பேசிய நேரத்தில், மதுரையைப்பற்றிக் கேலியாகப் பேசிய நேரத்தில், அங்கே கழிப்பிடங்களுக்காக இருக்கின்ற தண்ணீருக்கு குடிநீரைத் தந்ததாக பிரச்சாரம் செய்திருக்கிறார்கள். நல்ல தண்ணீரைத் தான் அங்கு பயன்படுத்தியிருக்கின்றார்களே தவிர வேறல்ல. திசை திருப்புகின்ற நிலையிலே அப்படிச் சொல்லவேண்டாம் என்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அவையைப்பற்றிக் குறிப்பிடும்போது, வெளி நடப்பு இவ்வளவு நேரம் செய்துவிட்டு இந்த நேரத்தில் திரும்பி வந்துவிடுவோம் என்று சொல்லிவிட்டுச் சென்றால், நன்றாக இருக்கும். அப்படி அவர்கள் திரும்பி வந்துவிட்டால், அவை கொஞ்சம் களை கட்டி இருக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்த மட்டில், அவர்களுக்கு இருக்கும் நேரத்திலே அவர்கள் இரண்டு அவைக்கும் வருவதுடன், அவ்வப்போது எழுகின்ற நாட்டுப் பிரச்சினைகளையும் அவ்வப்போது கவனிக்கவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. நுழைவு வரியைப்பற்றிக் கருத்து தெரிவிப்பதற்கு பல வணிகர்களும் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசினார்கள். அப்போது நானும் உடன் இருக்கின்ற ஒரு வாய்ப்பினைப் பெற்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு பொறுப்புக்களை ஆற்றிக் கொண்டிருப்பதால், முழு நேரமும் இங்கு வருவதற்கில்லை.





நுழைவு வரியைப்பற்றிச் சொல்கின்றபோது, அதிலுள்ள குறைகளையும் அதனாலே வருகின்ற இடர்ப்பாடுகளையும் எடுத்து வைப்பதிலே தவறில்லை. இந்த அரசின் நுழைவு வரியைப்பற்றி நாம் நன்கு அறிவோம். அதைப்பற்றி வணிகர்களும் வியாபாரிகளும் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழ் நாட்டில் என்ன நடக்கிறது என்று பார்க்க வேண்டும். காசிச் செட்டி தெரு என்பது போல சில தெருக்கள் இருக்கின்றன. அங்கே என்ன நடக்கிறது என்று பார்க்க வேண்டும். அங்கே இருக்கின்ற முதலாளிகள் எப்படி இருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். அந்த வணிகர்களிடையே இருக்கின்ற நிலைமைகளைப் பற்றி நாம் கொஞ்சம் சிந்திக்க வேண்டும். அந்த வணிகர்கள் அவர்கள் கீழ் பணியாற்றுகின்றவர்களுக்கு ஊதியம் சரியாகத் தருவதில்லை. அதிகாரிகள் மீது குறை சொல்கின்றார்கள். அந்த அதிகாரிகள் தவறு செய்திருந்தால், அதனால் லாபம் அடைபவர்கள் அதற்குக் காரணமாக இருக்கிறார்கள். அவர்களும் கொடுத்திருப்பார்கள் என்ற கருத்தும் தெரிகிறது. வியாபாரிகள் சொல்கின்ற நியாயங்களை வைத்து இந்த அரசும் நடவடிக்கை எடுக்கும்.

Thiru A. R. DAMODARAN: Sir, in Tamil Nadu, out of one million traders. I do not know if 30,000 or 40,000 are from other States. But, I do not wish Dr. Janarthanam to introduce a new concept of North-South dialogue in the matter of traders. Regarding corruption, let him not repeat the thesis of Hon. Ministers that two persons are required for corruption. We know it very well. But, if he had been a trader, he would also have known that we have to give to survive and I would like to tell him that, even as a member of the Legislative Council, I have had to give bribes. But, I do not wish to point out now why you should give bribes to survive in business. If he does not know it, then, he has not understood business.

திரு. ப. மாணிக்கம் : துணைத் தலைவர் அவர்களே, நுழைவு வரி வியாபாரிகளைப் பாதிக்கின்றது என்ற பொருளிலேதான் உறுப்பினர்கள் சொல்கின்றார்கள். நுழைவு வரி மக்களை எந்த விதத்திலே தாக்குகிறது என்பதும் முக்கியமானது அல்லவா ? வியாபாரிகளை ஒட்டி மட்டுமல்ல, மக்களுடைய எதிர்ப்பும் இருக்கிறது. நுழைவு வரி மூலம் ஒரு ஆண்டுக்கு எவ்வளவு வருமானம் வருகிறது ? புதிதாக இந்த வரி மக்கள் மீதும் விழுகிறதா ? இதைப் பற்றி என்ன சொல்கின்றார்கள் ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** துணைத் தலைவர் அவர்களே, நுழைவு வரி என்பது கடைசியாகப் போய் யார் தலையில் விழுகிறது என்று கேட்கிறார்கள். அது மக்கள் தலைமீது விழுகிறது என்பதுதான் அவர் சொல்வதில் உள்ள அர்த்தம் நுழைவு வரியை எதிர்த்து மக்கள் சார்பிலே யாரும் முதலிலே வரவில்லை. வியாபாரிகள்தான் தாங்கள் பாதிக்கப் படுவதாகச் சொல்கிறார்கள். அப்போதுதான் நமக்கும் சந்தேகம் வருகிறது. இப்படி ஏன் பண்ணுகின்றார்கள் என்று பார்க்கிறோம். குறிப்பாக அவர்கள் எப்படி வாணிபம் செய்துகொண்டு வருகிறார்கள் என்று கவனித்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள்கூட சொன்னார்கள். ஒரு இலட்சம் இரண்டு இலட்சம் பேர்கள் வாணிபம் செய்கிறார்கள். அவர்களில் 30 ஆயிரம் பேர்கள் மற்ற மாநிலத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். இந்த நுழைவு வரியிலே இருக்கக்கூடிய அம்சம் என்ன? இந்தப் பக்கம் என்ன நடக்கிறது ? 10 லாரிகள் வருகின்றன. சென்னைக்கு காசிச் செட்டி தெருவிற்கு வருகின்றது என்றால், அதிலே 5 லாரிகளைத் தான் கணக்கிலே சொல்கிறார்கள். 5 லாரிகளைப்பற்றி கணக்கிலே எடுப்பதில்லை. யார் யார் பேரிலோ விற்பனை நடந்துகொண்டிருக்கிறது. அங்கு நுழைவு வரி என்று போட்டால், அதிலேயிருந்து தப்பித்துவிட முடியாது. நாம் அதற்குக் கணக்கு எடுக்க வாய்ப்பிருக்கிறது. ஒட்டுமொத்தமாக மக்கள் பாதிக்கப் படுகிறார்கள் என்றால், அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யக்கூடாது என்று கருதவில்லை. நமது தொழில் அமைச்சர் அவர்கள் கூட இந்தப் பிரச் சினையை இன்னொரு கோணத்திலே பரிசீலனை செய்துகொண்டிருக் கிறார்கள். 10 லாரிகள் 20 லாரிகள் உள்ளே வருகின்றபோது, அதிலே எப்படியெல்லாம் அவர்கள் நடந்துகொள்கின்றார்கள் என்று பார்க்க வேண்டும். எத்தனையோ பொருள்களை கணக்கிலே இல்லாமலேயே விற்பனை செய்கின்றார்கள். அதையெல்லாம் தடுப்பது எப்படி என்பதைப் பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவேதான் அந்த வரி நல்லது என்று நாங்கள் நினைக்கிறோம்.

Thiru A.R. DAMODARAN : According to the statement of the Finance Minister, he is not going to have a gate to check the lorries or the railway wagons coming into Tamil Nadu. He said that he was going to accept the returns of the traders. If traders are already playing the fool in not giving accurate returns, how is this measure going to get the tax that is envisaged ? That is why I want detailed examination so that we may advise you. We are not interested in your protecting those people who are evading certain types of



taxes or duties. But, to help us to give you suggestions, give us a chance and do not make the black attack that all traders and merchanqe and do not make the blank attack that all traders and merattention from a Government.

(முற்பகல் 10-50)

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு துணைத் தலைவ ரவர்களே, மாண்புமிகு முதல்வரவர்களே, வணிகப் பெருமக்களையும், மாண்பு மிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். டி. அவர்களையும் சந்தித்துப் பேசியதை நாங்கள் கவனித்துக்கொண்டுதான் வந்தோம். எந்த அளவிற்கு முதலமைச் சரவர்கள் கவனம் செலுத்தியிருக்கிறார்கள் என்பது தெரியும். எந்த வணிகமாக இருந்தாலும், ஒவ்வொரு தரப்பிலும் தவறு நடக்கத்தான் செய்யும். அதற்காக ஒட்டுமொத்தமாக வணிகப் பெருமக்களைச் சாடுவது என்பது அரசின் கொள்கையல்ல. வணிகம் சரியாக இருந்தால்தான், தொழில் வளர்ச்சி இருக்கும். ' இன்டஸ்ட்ரிஸ் அன்ட் காமர்ஸ் ' என்று வைத்திருப் பதற்குக் காரணம், உற்பத்தி செய்யும் பொருள்களுக்குச் சரியான சந்தை ஏற்படுத்திக் கொடுத்து, மக்களிடம் அந்தப் பொருள்கள் போய்ச் சேரும் அளவிற்கு முயற்சிகள் எடுப்பவர்கள் வணிகர்கள். வணிகர்கள் இல்லாமல் தொழில்கள் வளர முடியாது. அதை அரசு புரிந்துகொண்டிருக்கிறது. பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்காக திட்டங்களைத் தயாரித்து, அதற்காக முதலீடு செய்கிறோம். அதற்காக நியாயமான இடங்களிலிருந்து வரி பெற வேண்டுமென்று கருதுகிறோம். அதிலே ஒன்று நுழைவு வரி. அதிலே ஏதாவது பாதிப்புகள் ஏற்படுமானால், அரசு பரிசீலனை செய்யும். பரிசீலனை செய்ய மாட்டோம் என்று கருதவில்லை. பில்லில் வருகின்றவரை

(மாற்றுத் தலைவர் திரு. பா. ரா. தாமஸ் தலைமை)

என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள். நிதி அமைச்சர வர்கள் என்ன செய்யலாமென்று பரிசீலிக்கலாம். இன்றைக்கே, இப்போதே, உடனடியாக நாம் கெடுபிடி செய்ய வேண்டுமென்ற நோக்கம் அரசுக்கில்லை. வளர்ந்து வரும் மாநிலத்தில் பல்வேறு திட்டப் பணிகளை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. அதற்கு நிதி தேவைப்படுகிறது. ஒவ்வொரு இனமாகப் பார்த்து வரி போடுகிறோம். வணிகர்கள் ஊர்வலம் வந்தாலும், முதலாளிகள் ஊர்வலம் வந்தாலும், கடைசியில் கன்ஸ்யூமர்கள்தான் பாதிக்கப் படுகிறார்கள். எல்லோருக்கும் அது தெரிந்த விஷயம்தான். இதை எப்படி ஒழுங்குபடுத்த வேண்டுமென்பதில் அரசு வணிகர்களின் கருத்தை ஆழ்ந்து பரிசீலிக்கும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, வருமானத்தில் நுழைகிற வரியாக இருக்கிறது. வரி போட்ட குதிரைகூட பார்க்க அழகாகத்தான் இருக்கிறது. நீங்கள் வியாபாரியாக இருந்தால் தெரியும் என்று சொன்னார்கள். நானும் கோவையில் வியாபாரம் செய்து, நஷ்டப்பட்டு, விட்டுவிட்டேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன ராஜ தந்திரம் பழக்கப்படாமல், மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் கை கொடுப்பார்கள் என்று கருதினேன்.

**திரு. ஜே. எம். மியாகான் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரியான வியாபாரி அல்ல என்று தெரிகிறது.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஒழுங்காக வரி கட்டியிருப்பார்கள் என்று கருதுகிறேன். அதனால்தான் நஷ்டம் வந்திருக்கும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** வணிகர்களிடம் ஒரு புதிய சிந்தனை வர வேண்டும். காலை 8 மணிக்குக் கடை திறந்து இரவு 10 மணிவரை கடை நடத்துகிறவர்களுக்குப் புதிய சிந்தனை வர வேண்டும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு கொறடா அவர்கள் சொன்னதுபோல புதிய சிந்தனை வந்தால் வியாபாரத்தையே விடவேண்டி வந்துவிடும். அப்போது என்ன செய்வது? எல்லோரும் எம்.எல்.சி. ஆக முடியுமா ?

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் நல்ல கருத்தைச் சொன்னார்கள். வியாபாரிகள் எண்ணிக்கை குறைந்தால், போட்டி குறைந்து, நியாயமான வியாபாரம் செய்வார்கள் என்று சொல்ல விரும்புகிறேன். விடிய விடியக் கடை திறந்து வைத்திருக்கிறவர்களுக்குக் கிடைக்கும் லாபத்தைப் பார்க்கும் போது, பெரிய முதலாளிகளின் ஆதிக்கத்திற்கு அது போகிறதா என்று பார்க்க வேண்டும். இன்றைய தினம் இரவிலே ஒரு மருந்துக் கடை கூட திறந்து வைப்பதில்லை. நானே ஒரு நாள் இரவிலே சென்று, மருந்து கிடைக்காமல், திரும்பினேன். இரவிலே கடையைத் திறந்து வைத்தால் வியாபாரமும் நடக்கும், லாபமும் பெறுவார்கள், மக்களுக்கும் நன்மை ஏற்படுமென்று சொல்ல விரும்புகிறேன்.



பாரதியார் பெயராலும், பாரதிதாசன் பெயராலும் பல்கலைக் கழகங்களை ஏற்படுத்தியிருக்கிறோம். இரண்டு தமிழ்க் கவிஞர்கள் பெயராலே பல்கலைக் கழகங்கள் துவக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் தமிழ் உணர்வை மட்டும் சொல்லித் தந்தார்கள் என்பதல்ல. அவர்கள் அறிவியலை விரும்பினார்கள். அவர்கள் பெயராலே பல்கலைக் கழகங்கள் வைத்திருக்கும்போது, மற்ற பல்கலைக் கழகங்களின் பாணியிலேயே இவற்றையும் இயங்கவிடாமல், புதிய விஞ்ஞான அடிப்படையிலே செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழிலே மட்டும் என்று சொல்லும்போது, ஆங்கில மோகத்தை விட வேண்டுமென்றுதான் சொல்கிறோம்; ஆங்கிலத்தையே விட்டுவிட வேண்டுமென்பதல்ல. அண்ணா பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் திரு. குழந்தைசாமி அவர்கள் ஐ.நா. அமைப்பில் பணியாற்றி புகழ் பெற்றவர்கள். ஆங்கிலத்திலும், அறிவியலிலும் திறமை பெற்றவர்கள். தமிழிலும் அவர்கள் திறமை பெற்றவர்கள். அப்படிப்பட்ட துணை வேந்தர்களால் இந்த நாட்டுக்கு நல்ல பலன் கிடைக்கும் என்று கருதுகிறேன்.

உலகப் பல்கலைக் கழகங்களைப் பாருங்கள். எந்த அளவிற்கு வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்றால், பேராசிரியர்களே மாணவர்களைப் பார்த்து பயப்படுகிறார்கள். அங்கே பயப்படுகிறார்கள் என்றால், அவர்களுக்குப் பயிற்றுவிக்கப் பயப்படுகிறார்கள். மாணவர்கள் அந்த அளவிற்கு அறிவில் வளர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்குச் சொல்லித் தர பயப்படுகிறார்கள்.

**மாற்றுத் தலைவர் (திரு. பா. ரா. தாமஸ்) :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேச ஆரம்பித்து அதிக நேரமாகிவிட்டது. விரைவாக முடிக்க வேண்டும்

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாற்றுத் தலைவரவர்களே, விரைவிலே முடித்துவிடுகிறேன். பல்கலைக் கழகங்கள் சிறந்த முறையில் செயல்பட வேண்டுமென்று தெரிவித்து, புதிய முறைகளிலே பயிற்சியை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வீடியோ. கேஸட் போன்றவற்றின் மூலம் வெளிநாடுகளில் மாணவர்களுக்குக் கல்வி புகட்டுகிறார்கள். இங்கே விளையாட்டு வீரர்களை உருவாக்க வேண்டும். பல்கலைக் கழகங்கள் விளையாட்டிலே அதிக அக்கறை காட்டி, உலகப் போட்டிகளில் திறமை பெற்றவர்களாக நம்முடைய மாணவர்களை விளங்கச் செய்ய வேண்டும்.

கோளாவிலே கால்பந்து இறுதி ஆட்டம் நடக்க இருக்கிறது. நம்முடைய மாணவர்கள் உலக அளவில் சிறந்த விளையாட்டு வீரர்களாகத் திகழும் நாளை எதிர்பார்க்கிறேன்.

'செல்ஃப்-இம்போஸ்ட் டிசிப்ளின்' என்று வெளிநாடுகளில் மாணவர்களிடம் கையாள்கிறார்கள். நாமும் நம்முடைய மாணவர்களுக்கு அந்தப் பயிற்சியைக் கொடுக்க வேண்டும். 'ஸ்போர்ட்ஸ் மெடிசின்' என்று புதிய கல்வி முறையைக் கடைபிடிக்கிறார்கள். மாணவர்கள் தாங்களாகவே கட்டுப்பாட்டை உருவாக்கிக்கொண்டு நடக்கத் தேவையான முயற்சிகளை உருவாக்க வேண்டும். நான் பாரிசுக்குப் போனபோது சிட்டேல் என்ற இடத்திலே மாணவர்கள் அறையிலே தங்கினேன். இரண்டாம் மாடியிலே இருந்தேன். அங்கே தண்ணீர் குழாயை நான் திறந்தபோது அதிலே தண்ணீர் வரவில்லை. எனவே மூன்றாம் மாடிக்குப் போனேன். அங்கே 4 குளியல் அறைகளிலே பெண்கள் நிர்வாணமாகக் குளித்துக் கொண்டிருந்தார்கள். நான் உடனே திரும்பி வந்துவிட்டேன். நான் வியப்பு அடைந்தேன். இது குறித்து அவர்களிடம் கேட்டபோது, இரண்டாவது மாடியிலே ஆண்களும், மூன்றாம் மாடியிலே பெண்களும் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆண்களானாலும், பெண்களானாலும் அவர்கள் அங்கேயே இருக்கும் அளவிற்கு, சுய கட்டுப்பாட்டோடு, சகோதர உணர்வோடு இருக்கிறார்கள். அந்த நிலைமையை அங்கே பார்க்க முடிந்தது.

Thiru A. R. DAMODARAN: If the hon. Member is referring to Sourbourne University, may I tell him that, in such Universities, they permit boys and girls to sleep also in the same dormitory?

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு உறுப்பினரவர்கள் நல்லதொரு கருத்தைத் தெரிவித்தார்கள். ஒரு பெண், ஒரு ஆணை விரும்பினால்தான். . .

திரு. செ. முத்துசாமி: இந்தப் பண்பாடு தமிழ் நாட்டுக்கும் வர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிபாரிசு செய்கிறாரா?

டாக்டர் இரா. சனார்த்தனம்: ஆசிரியர் பிரதிநிதிகள் ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். இங்கே சில விழாக்கள் நடக்கின்றன. ஒன்றை வேதனையோடு தெரிவிக்க விரும்புகிறேன். ஆண்கள் இருக்கும் இடத்திற்குப் பெண்கள் சென்று வர வேண்டுமென்றால், பாதுகாப்போடு போய் வருகிறார்கள். அவர்களைச் சமமாகப் பழகவிடுங்கள். அதனால் ஆபத்தில்லை. அவர்



களைத் தடுத்து, தடுத்து தூரத்தில் வைப்பதால்தான், ஆபத்துகள் வருகின்றன என்று சொல்ல விரும்புகிறேன். பண்பாடு என்பது இவற்றாலே வருவதல்ல. ஆண்கள், பெண்கள் * * * தவறல்ல. * * * தவறு.

Thiru A. R. DAMODARAN: I hope that the hon. Members will consider that such a statement made by Dr. Janarthanam casts a reflection on the entire student population of Tamil Nadu. There may be a few who misbehave. But, let him not think that all of us are waiting to pounce on our counterparts in Colleges.

(முற்பகல் 11-00)

டாக்டர் இரா. சனார்த்தனம்: நேற்று பச்சையப்பன் கல்லூரியிலே பேசினேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: * * * என்கிற சொற்றொடர்களை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுவது நல்லது.

மாற்றுத் தலைவர் (திரு. பா. ரா. தாமஸ்): மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கூறியதன் அடிப்படையில் * * * என்று குறிப்பிட்ட வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: இவர்கள் தன்னடக்கத்தையும் சுய கட்டுப்பாட்டையும் கடைப்பிடிக்கிற சூழ்நிலை நமது நாட்டில் வர வேண்டுமென்ற கருத்தைக் கூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: மாற்றுத் தலைவரவர்களே, 1982-83 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். தமிழ் நாட்டிலே வறட்சி, வறட்சி என்று சொல்லி, தமிழக அரசு பல்வேறு சங்கடங்களுக்கு உட்பட்டு, தன்னுடைய நிர்வாக இயந்திரங்களை எல்லாம் இதற்காக உட்படுத்தி மத்திய அரசு இதற்காக உதவி செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கும் வேளையில் இன்றைக்கு இந்தியாவினுடைய பிரதமர் அவர்கள் தமிழகத்திற்கு 'விசிட்' பண்ண வருகிறார்கள் என்பதும், அவர்கள் ஒரு நல்ல முடிவை அறிவிக்க இருக்கிறார்கள் என்பதும் வரவேற்கத் தக்கவையாகும். அந்த வகையில் இன்றைக்கு தமிழகத்திற்கு வரக்கூடிய அவர்களுடைய வருகையை இந்த அவையின் சார்பாகவும், நான் பொறுப்பேற்றிருக்கிற ஆசிரியர் பெருமக்கள் சார்பாகவும்

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

வரவேற்கிறேன். அவர்கள் நல்ல முறையில் தமிழ் நாட்டுக்குத் தேவையான நிதியைத் தர வேண்டுமென்று நான் இந்த அவையின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன். சமீபத்தில் நடைபெற்ற கூட்டுச்சேரா நாடுகளின் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமைக்குரிய சிறப்பைப் பெற்ற பிறகு, அவர்கள் மேற்கொண்டுள்ள முதல் மாநில 'விசிட்' இது. பாராட்டத் தகுந்த வகையில் இத்தகைய பெரிய பொறுப்புக்கு இதற்கு முனபு பெண் ஒருத்தி வந்ததில்லை. நான் அலைன்ட் கன்ட்ரீஸுடைய சேர்மேன் ஆக அவர்கள் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் பாராட்டக்கூடிய வகையில் அவர்களுடைய பணியைச் செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த அவையின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** 'பெண் ஒருத்தி' என்பதற்கு பதிலாக 'பெண் ஒருவர்' என்று மாற்றிச் சொன்னால் நன்றாக இருக்கும்.

**மாற்றுத் தலைவர் (திரு. பா. ரா. தாமஸ்) :** பெண் 'அம்மையார்' என்று சொல்லலாம்.

**திரு. செ. முத்துசாமி :** 'பெண் ஒருவர்' என்று மாற்றிக் கொள்கிறேன்.

அடுத்து, குடிதண்ணீர் பிரச்சினையைப் பொறுத்தவரையில், குடிநீர்த் தொட்டிகளுக்கு காவலுக்கு ஒருவரைப் புதிதாக நியமிப்பதுபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்கெனவே கட்சி அமைப்புகளை வைத்திருக்கிறது. அந்தக் கட்சித் தொண்டர்கள் மூலம் ஆங்காங்கு இருக்கிற இம்மாதிரி பகுதிகளில் தவறுகள் நடைபெறாது இருக்க, மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்வதன் மூலம், நல்ல பெயர் கட்சிக்கு ஏற்படும். அதற்கு அவர்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு எதிர்க் கட்சியாக இருந்த நேரத்தில் கூட எங்கள் கட்சித் தொண்டர்கள் நிதி வசூல் செய்து இராமநாதபுரம் போன்ற இடங்களில் மக்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட நேரத்தில் கஞ்சி ஊற்றினார்கள். அந்தவகையில் அன்றைக்கே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மை செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**திரு. செ. முத்துசாமி :** நீங்கள் கையிலிருந்து உதவ வேண்டும் என்பதல்ல. அரசு கொடுக்கிற நிதி தவறாக வேறு இடங்களுக்குச் செல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்பதற்காகவும், இந்த ஆட்சிக்குக் கெட்ட பெயர் வாராமலிருக்க, நல்ல பெயரைப் பெற்றுத் தர அவர்கள் உதவி செய்ய வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் தான் இதை நான் சொல்கிறேன். * * *

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அப்படிச் சொல்வது சரியில்லை * * * என்று சொல்வது சரியில்லை. தொழிலாளர்களுடைய நேர்மையை சந்தேகிக்கின்ற வகையில் உறுப்பினருடைய கருத்து இருப்பதால், அதை 'எக்ஸ்பன்ச்' பண்ண வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** நான் யாரையும் சந்தேகிக்கவில்லை. நாட்டிலுள்ள உண்மை நடைமுறையைத் தான் சொல்கிறேன். அதை எந்த அடிப்படையில் 'எக்ஸ்பன்ச்' பண்ணச் சொல்கிறார்கள் என்று சொன்னால், நான் புரிந்துகொள்ளவும் அவர்களைப் பாராட்டவும் வாய்ப்பாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** * * * என்று தொழிலாளர்களை மிகக் கேவலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேலவையில் இருந்துகொண்டு சொல்வது மிகவும் வருந்தத்தக்கது. அது வேண்டாமென்று அவருடைய நன்மைக்காகத்தான் சொல்கிறேன். அப்படியே இருக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால், அவரைப்பற்றி நாட்டு மக்கள் புரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும்.

**மாற்றுத் தலைவர் (திரு. பா. ரா. தாமஸ்) :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியபடி, அந்த வார்த்தைகளை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட உத்தரவிடுகிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்கள் சொல்லிவிட்ட பிறகு, நான் எதுவும் சொல்லவில்லை. ஆனால் நாட்டிலே இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறுகின்றன என்பதை அவர்களே மறுக்க மாட்டார்கள் என்பதைச் சொல்லி, இத்துடன் இப்பிரச்சினையை விட்டுவிடுகிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே பேசுகிறபோது, தமிழகத்திலே இருக்கிற ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் தென் மாநிலங்களிலேயே குறைவான சம்பளம் அளிக்கப்படுகிறது என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதை நான் முதலில் இந்த அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பாண்டிச்சேரி உள்ளிட்டு தமிழகத்திலுள்ளவர்கள் குறைந்த சம்பளத்தைப்

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். கிராஜுவிட்டி, பி.எப். எல்லாம் தந்துகொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்களுக்கும் தந்துகொண்டிருக்கிறார்கள். இதெல்லாம் தெரிந்த பிறகு தான், இந்த அரசு ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் 10 ஆயிரம் ரூபாய் தருவதுபற்றிப் பரிசீலனை செய்ய ஒரு கமிட்டியைப் போட்டது. கமிட்டி போட்டு 2 ஆண்டு ஆகிவிட்டது. அதனுடைய முடிவு என்ன ஆயிற்று? அதை அறிவிக்கப் போகிறார்களா இல்லையா? அதைத் தரவில்லையே என்பதற்காக நாங்கள் ஒன்றும் குற்றம் சொல்லவில்லை. ஏற்கெனவே கிராஜுவிட்டி தருகிறார்கள். அது அனைவருக்கும் தெரியும். ஆனாலும் ரிட்டையர் ஆகும்போது, ரூ. 10 ஆயிரம் தர வேண்டுமென்று கேட்டோம். அரசும் அதை ஒப்புக்கொண்டுதான் கமிட்டி போட்டது. அதனை ஆராய்ச்சி செய்ய 2 ஆண்டுகளா? தயவுசெய்து கமிட்டியினுடைய முடிவை விரைவிலே வெளியிடுங்கள். எந்த அடிப்படையில் ரூ. 10 ஆயிரம் கொடுப்பது என்பதுபற்றி இவ்வளவு நாள் ஆராய்ச்சி தேவையா?

அடுத்து, வாக்காளர் பட்டியலைத் தயாரிக்கிறார்கள். இப்போது பள்ளிகளுக்கு வேறு விடுமுறை விடப்பட்டிருக்கிறது. அசெம்பிளி எலெக்ஷனுக்காக வேண்டி வாக்காளர் பட்டியல் தயாரிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். நாட்டிலே இப்படிப்பட்ட பணிகளுக்காக ஆசிரியர்களை எப்போது பயன்படுத்தினோம் என்றால், கிராமங்களில் படித்தவர்கள் இல்லாதபோது ஆசிரியர்கள் இப்பணிக்கு வசதியாக இருப்பார்கள் என்கிற எண்ணத்தில் பயன்படுத்தப்பட்டார்கள். சென்சஸ், ஆடு மாடு கணக்கு எடுப்பது போன்ற பணிகளைக் கொடுக்கிறார்கள். அப்படி பணிகளைக் கொடுத்துவிட்டு, ரெம்யூனரேஷன் கொடுக்கிறார்களா என்றால், 5 ரூபாய், 10 ரூபாய் கூட தருவதில்லை. எலெக்ஷன் நடைபெறும்போது, அதற்குப் பொறுப்பாளர்களை நியமிப்பார்கள். அப்போது நல்ல ரெம்யூனரேஷன் கொடுப்பார்கள். அந்த சமயத்தில் மட்டும் ஆசிரியர்களை ஒதுக்கி விடுவார்கள்.

முன்புபோல் ஆசிரியர் உத்தியோகத்தில் இருப்பவர்களைத் தான் இத்தகைய பணிகளுக்கு நியமிக்க வேண்டுமென்ற நிலை இப்போது இல்லை. காரணம் வேலையில்லாத கிராஜுவேட்ஸ் கிராமங்களில் ஏராளமான பேர் இருக்கிறார்கள். அது மாத்திரமல்லாமல், வேலையில்லாத ஆசிரியர்கள் 40 ஆயிரத்திற்கு மேல் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் இந்தப் பணிக்குப் பயன்படுத்தலாம்.

அடுத்து, தனியார் பள்ளிகளிலுள்ள சத்துணவுக் கூடங்களைப் பொறுத்தவரையில், இன்றைக்கும் கூட யாரை அங்கு நியமிப்பது என்கிற பிரச்சினை வந்தது. ஏப்ரல் 1ஆம் தேதிக்குப் பிறகும் அவர்களே சமைக்க வேண்டுமென்ற



நிலை இருக்குமேயானால், தலைமை ஆசிரியர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து அப்படிச் செய்ய மாட்டோம் என்று ஏற்கெனவே தெரிவித்திருக்கிறார்கள். இங்கே 34 ஆயிரம் பேர்களை நியமிக்க இருக்கின்ற நல்ல எண்ணத்தை, அரசின் நடவடிக்கையை நான் பாராட்டுகிறேன். தனியார் பள்ளிகளிலுள்ள சத்துணவுக் கூடங்களுக்கு இதுவரை அப்படிப் போடவில்லை என்கிற பிரச்சினை வந்ததால் தான், நான் இங்கே சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. தயவுசெய்து இது குறித்து அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏப்ரல் 1ஆம் தேதி முதல் தனியார் பள்ளிகளிலுள்ள சத்துணவுக் கூடங்களுக்கு பொறுப்பாளர்களை நியமிக்க வேண்டும். ஏப்ரல் 1ஆம் தேதி விடுமுறை நாள். அன்றைக்கு அவர்கள் அப்பணியைச் செய்ய நிச்சயம் மறுப்பார்கள். இதனை பல பேர் வேதனையோடு சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்து, உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களுக்குச் சம்பளம் நிர்ணயம் செய்யப்படவில்லை. அதைத் தெளிவாக இங்கே சொல்ல வேண்டும். அவர்களுடைய சர்வீஸ் என்ன ஆயிற்று? அவர்களுக்குப் பல்வேறு சலுகைகள் கிடைப்பதில்லை. இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே பல விஷயங்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு கோர்ஸ் நடத்துவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் என்ன சம்பளம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லவில்லை. அவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்பட்டு இன்றைக்கு என்ன அடிப்படையில் சம்பளம் வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெளிவாகச் சொல்ல வேண்டும்.

அடுத்து, தமிழ் ஆசிரியர்களுக்காக வேண்டி சமீபத்திலே உயர் நீதிமன்றத்திலிருந்து ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது. தமிழ் ஆசிரியர்கள் பி.டி. ஆசிரியராக 5 ஆண்டுகள் பணியாற்றிய பிறகு தான், ஹெட்மாஸ்டர் பதவிக்கு அமர்த்தப்பட வேண்டுமென்று இந்த அரசு ஆணையிட்டிருக்கிறது. அது போல் மேல் நிலைப் பள்ளிகளில் 10 ஆண்டுகள் பணியாற்றிய பிறகு தான், தலைமையாசிரியர் பதவி அளிக்க வேண்டுமென்று இந்த அரசு ஆணையிட்டிருக்கிறது. ஆனால் உயர் நீதிமன்றத்தில் 'பட்டதாரி ஆசிரியர்களுடைய சர்வீஸ் எந்த அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்படுகிறதோ அதேபோல் பி.டி. ஆசிரியர்களாக இல்லாவிட்டால் கூட' தமிழ் ஆசிரியர்களாகப் பணியாற்றிய காலத்தையும் பி.டி. ஆசிரியர்களுடைய பணிக் காலத்தைப் போல கணக்கிட தகுதி பெற்றவர்கள்' என்று நீதிபதி திரு. மோகன் அவர்கள் தீர்ப்பளித்திருக்கிறார்கள். தமிழ் ஆசிரியர்களுக்கு இருந்த குறையை நீக்கி தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். மதுரையிலே ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு

அளவுக்கு வளர்ந்துள்ள அந்த ஊரில் 300 ஏக்கர் வரை ஏற்கெனவே இந்தக் காரியத்திற்காக என்று பெற்றிருக்கிறார்கள். என்றாலும் வீடுகள் ஏதும் கட்டப்படவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து உடனடியாக இதைச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நாமக்கல்லிலிருந்து கரூருக்கு ஒரு பாதை செல்கிறது. வேலூர் வழியாக ஒரு பாலம் போட்டு அந்த வழியாக அந்தப் பாதை செல்கிறது. பல ஆண்டுகளுக்கு முன்னால் ராஜாஜி அவர்கள் காலத்தில் அது போடப்பட்டது. இப்போது நாமக்கல்லிலிருந்து போகனூர் வழியாக கரூருக்குப் போக ஒரு பாலம் அமைத்தால், அதன் காரணமாக தேசிய நெடுஞ்சாலையில் 12 மைல் வரை குறையும். அப்படியானால் நமக்கு எந்த அளவுக்குப் பெட்ரோல், டீசல் முதலானவைகளில் மிச்சமேற்படும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே இதையும் அரசு ஆராய்ந்து பார்த்து விரைவில் மோகனூர் வழியாகச் செல்லுவதற்கு பாலம் அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு குடிநீர் வடிகால் வாரிய அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். இன்றையதினம் குடிநீர்ப் பிரச்சினை "தண்ணீர் தண்ணீர்" பிரச்சினை நாடு முழுவதும் இருக்கிறது. அவரே கூட சங்கீதம் பாடுபவர்களையெல்லாம் அழைத்துப் போய் பாடச் சொல்லிப் பார்த்து மழை வரவழைக்க முயன்று பார்த்தார். அவர் பகுத்தறிவுவாதியாக இருந்தாலும் கூட, மற்றவர்கள் சொல்லும்போது, அவர்களைத் திருப்திப்படுத்தவாவது இதைச் செய்வோம் என்றுதான் அவர் செய்தார் என்று நினைக்கிறேன். இன்றைக்கு மாநிலம் முழுவதும் தண்ணீர் பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. சென்னையைப் பொறுத்த வரையிலாவது, இங்கே லாரிகள் மூலம் மக்களுக்குத் தண்ணீர் வழங்கப்படுகிறது. ஆனால் நாமக்கல்லில் உள்ள நகராட்சியோ அதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் நாமக்கல்லுக்கு வந்திருந்தபோது, லாரிகள் மூலம் பொதுமக்களுக்குத் தண்ணீர் தருவதாக ஏழை எளிய மக்களுக்கு வாக்களித்தார்கள். ஒரு போர்க் கால நடவடிக்கையாக இது மேற்கொள்ளப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால் நடைமுறையில் நடப்பது நேர்மாறாக இருக்கிறது. இந்தக் குறையை இங்கே சொல்லித்தான் ஆக வேண்டிய நிலைமை இருக்கிறது. இதற்குத் தேவையான நிதியை ஒதுக்கித்தான் இருக்கிறீர்கள். நான் ஏதோ வேண்டுமென்றே குறையைச் சொல்வதற்காக இதைக் குறிப்பிடவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல வகையில் இந்தப் பணிக்காக நிதியை ஒதுக்கியிருக்கிறார்.



ஆனால் அது கடைசியாக மக்களுக்குப் போய்ச் சேரும்போது, முழுமையாகப் போய்ச் சேருகிறதா என்றால் இல்லை. ஒரு நல்ல அரசாங்கம் செயல்படுகிறது என்றால், அது போடும் திட்டங்களும் மேற்கொள்ளும் செயல்முறைகளும் முறையாக பொது மக்களைப் போய்ச் சேர வேண்டும். ஒரு நல்ல அட்மினிஸ்ட்டிரேஷனுக்கு அதுதான் இலக்கணம். ஆனால் இங்கே நீங்கள் எவ்வளவுதான் நிதியை ஒதுக்கினாலும், இடையில் இருக்கிற இடைத்தரகர்கள் அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு போய்விடுவதால், பொது மக்களுக்கு அந்த நன்மை போய்ச் சேருவதில்லை. வறட்சி நிவாரணத் திட்டமானாலும் சரி, பஞ்சத்தைப் போக்க மேற்கொள்ளும் திட்டமானாலும் சரி, இவைகளுக்கான நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே தெரிவித்தார்கள். எனவே இந்தத் திட்டங்கள் அனைத்தும் உண்மையிலேயே போர்க்கால அடிப்படையில்தான் செயல்படுத்தப்படுகின்றனவா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் பரிசீலனை செய்து தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்களெல்லாம் வேண்டியவர்களோ வேண்டாதவர்களோ என்று பாராமல் தவுதாட்சண்யம் ஏதுமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வண்டிகளிலும், சைக்கிள்களிலும் நெல் அல்லது அரிசியைக் கொண்டு செல்லும்போது, சோதனைச் சாவடிகள் என்ற பெயரில் உள்ள வேதனைச் சாவடிகள்—மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் நன்றாகவே சொன்னார்கள்—சாதாரண மக்களைத் துன்புறுத்திக் கொண்டிருக்கின்றன. ஆனால் லாரிகளில் நெல், அரிசி முதலியவற்றை கடத்திச் செல்லும்போது. அவர்களுக்கு எவ்வளவு மரியாதையாக இருந்து அந்தச் சோதனைச் சாவடிகளைச் சார்ந்தவர்கள் அவர்களை அனுப்பி வைக்கிறார்கள் என்பதை நேரில் போய்ப் பார்க்க வேண்டும். இவ்வாறு கடத்திச் செல்லும் லாரிகளுக்கு வழியை விட்டுவிட்டு, சிறியவர்கள் வருகிறபோது பிடித்துக் கொண்டு அவர்களைக் கொடுமைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு முன்னாலே தவறுகள் நடந்திருக்கலாம். நீங்கள் வந்த பிறகும் இந்தத் தவறுகள் நடக்க வேண்டுமா என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் பேசும்போதுகூட ரூ. 10,000 வழங்குவது எந்த நிலையில் இருக்கிறது என்று கேட்டார். மாண்புமிகு நாவலர் அவர்கள் கலைஞர் அவர்கள் மந்திரி சபையில் இருந்தபோதே, இறந்தால் 10,000 ரூபாய் கொடுப்பது என்று முடிவெடுத்து செயல்படுத்தப் பட்டது. ஆனால் இன்றைக்கு அதற்கு ஆயிரம் ரெஸ்ட்டிரிக்ஷன்களைப்

ஏற்ப, தமிழ் ஆசிரியர்களுக்கு நன்மை அளிக்கக் கூடிய இதனை, விரைந்து செய்ய வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-10)

அடுத்து, நாமக்கல் பகுதியிலே மக்கள் முன்னணி இயக்கம் என்று ஒன்று செயல்பட்டு வருகிறது. நாமக்கல் நகரத்தைப் பொறுத்த வரையில், அது எந்த அளவுக்கு வளர்ந்து கொண்டிருக்கிற நகரமாக இருக்கிறது என்பது மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். லாரி தொழில் மிகப் பெரிய அளவுக்கு அங்கே வளர்ந்து கொண்டிருக்கிறது. அதோடு மாநிலத்திலேயே மிகப் பெரிய அளவில் முட்டை உற்பத்தி செய்யும் இடமாக இருக்கிறது. இப்படி பல்வேறு வகைகளிலும் தொழில் ரீதியாக வளர்நது வருகிற நாமக்கல் நகரில் வெள்ளைக்காரன் காலத்தில் எவ்வளவு போலீஸ்காரர்கள் இருந்தார்களோ அதே அளவுக்குத்தான் இன்றைக்கும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மிகக் குறைவான எண்ணிக்கையில் அங்கே போலீஸ்காரர்கள் இருப்பதன் காரணமாக போக்குவரத்தைக்கூட கன்ட்ரோல் செய்ய முடியாத நிலைமை நாமக்கல் நகரத்தில் இருக்கிறது. காவல் துறையைப் பொறுத்தவரையில், மேலே உள்ள அதிகாரிகளின் எண்ணிக்கையை அடிக்கடி உயர்த்திக்கொண்டே போகிறார்கள். ஒரு ஐ.ஜி. இருந்த இடத்தில் 6 ஐ.ஜி. க்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், கீழ் மட்டத்தில் உள்ள காவல்காரர்களின் எண்ணிக்கை உயர்த்தப்படவில்லை. நாமக்கல் நகரில் போதுமான அளவுக்கு போலீஸ்காரர்களின் எண்ணிக்கை உயர்த்தப்படாததன் காரணமாக, அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. ஒரு சமயம் நான் 2 பர்லாங் தூரம் நடந்துபோய் போலீஸ் நிலையத்தில் ரிப்போர்ட் செய்தேன். அங்குள்ளவர்களோ நாங்கள் என்ன செய்வது, இருக்கிற ஆட்களை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியுமோ அதைத்தான் செய்கிறோம் என்று சொல்லுகிறார்கள். எனவே தயவு செய்து அங்கே உள்ள போலீஸ்காரர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காவல் துறையைப் பொறுத்த வரையில், மேல் மட்டத்தில் உள்ளவர்களின் பதவிகளை உயர்த்தும்போது, அதற்கு ஏதுவாக கீழ் மட்டத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கையையும் உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதிகாரம் செய்வதற்கு மட்டும் அதிகாரிகளைப் பெருக்கிக் கொண்டிருப்பதில் பயனில்லை, பணியாற்றுவதற்காகக் கீழே அடிமட்டத்தில் இருப்பவர்களின் எண்ணிக்கையையும்கூட உயர்த்த வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதைப்போலவே தான் அநேகமாக எல்லாத்



துறைகளிலும் நிலைமை இருக்கிறது. எனவே அந்தந்தத் துறையைப்பற்றிப் பேசும்போது, இந்தக் கருத்தைத் தொடர்ந்து குறிப்பிடலாம் என்று இப்போது இதை விட்டுவிடுகிறேன்.

நாமக்கல் நகரம், நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல், மிகப் பெருமளவுக்கு வளர்ந்துவிட்ட ஒரு நகரமாக இருக்கிறது. எனவே இதன் காரணமாக அதை ஒரு தனி மாவட்டமாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே அங்கே எல்லாவிதமான அலுவலகங்களும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகமும் மாவட்ட நீதிமன்றமும்தான் அங்கே இல்லையே தவிர, மற்ற அனைத்து அலுவலகங்களும் அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒரு மாவட்டமாவதற்கு உரிய அனைத்துத் தகுதிகளும் நாமக்கல் நகருக்கு இருக்கின்றன. எனவே மாவட்டங்களைப் பிரிக்கும்போது, நாமக்கல் நகரை ஒரு தனி மாவட்டமாகப் பிரிக்க வேண்டுமென்று அரசின் கவனத்திற்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதோடு, நாமக்கல் நகரம் வளர்ந்து விரிந்திருக்கிற காரணத்தால், அதற்காக ஒரு “பை-பாஸ்” ரோடு போடுவது குறித்து ஏற்கெனவே இருந்த திட்டம் நடைமுறையில் இன்னும் அமுல்படுத்தப்படாமல் இருக்கிறது. அதையும் விரைவில் செயல்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நாமக்கல் இந்த அளவுக்கு வளர்ந்திருந்த போதிலும்கூட, இந்த நகரில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்காக ரொம்ப காலத்திற்கு முன்பே நிலத்தை அரசு பெற்றிருந்தும்கூட, இன்றுவரை ஒரு வீடு கூட அங்கே கட்டப்படவில்லை. மாண்புமிகு வீட்டுவசதி வாரியத்துறை அமைச்சர் அவர்களே இங்கே அவையில் இருப்பதால், இதை தயவு செய்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருச்செங்கோட்டில் கூட நிறைய வீடுகளை வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் கட்டியிருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் என்ன காரணத்தாலோ நாமக்கல் நகரில் ஒரு வீடு அத்துறையின் மூலம் இதுவரை கட்டப்படவில்லை என்பதையும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். ஒருவேளை அந்தப் பகுதியைச் சேர்ந்த யாரும் அமைச்சராக இல்லை என்ற காரணத்தால், இதைப் பற்றி யாரும் அக்கறை கொள்ளவில்லையோ என்னவோ தெரியவில்லை. இதற்காக என்று ஏற்கெனவே நிதி ஒதுக்கப்பட்டும் இது ஏன் செய்யப்படவில்லை என்று எனக்குப் புரியவில்லை. ஒரு மாவட்டத்தின் தலைநகராக ஆகக்கூடிய

போட்டு, இறந்தால் அவர்களுடைய குடும்பம் 10,000 ரூபாய் பெறமுடியாத நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். டாக்டர் நாவலர் அவர்கள் காலத்தில் கொண்டுவரப்பட்ட இந்தத் திட்டம் இன்றைக்கு அவருடைய காலத்திலேயே இப்படிப்பட்ட நிலைமைக்குக் கொண்டு வரப்பட்டிருப்பது நியாயம்தானா என்பதை வேதனையோடு மாண்புமிகு நாவலர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அவர்களுடைய துறையிலிருந்து தான் இப்படி ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. செத்தால்—அது எந்தக் காரணமாக இருந்தாலும்—ரூ. 10,000 தரப்படும் என்று முதலில் சொல்லிவிட்டு இன்றைக்கு அந்த உத்தரவு திருத்தப்பட்டு, மறுக்கப்பட்டிருக்கிறது. எனவே இதை மாண்புமிகு நாவலர்பெருமான் அவர்கள் கவனத்தில் கொண்டு இருக்கிற தடைகளை நீக்கி, இறந்தால் ரூ. 10,000 கிடைக்க வழி வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஓய்வு பெறும்போது ரூ. 10,000 தருவது குறித்து மாண்புமிகு நாவலர் அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி போடப்பட்டு இரண்டாண்டுகளுக்கு மேலாகிறது. அவருடைய தலைமையில் கமிட்டி போட்டு இன்னும் எவ்வளவு காலத்திற்கு ஆய்வு செய்து கொண்டிருப்பது? தயவுசெய்து இன்னும் காலம் தாழ்த்தாமல் ஒரு சிறப்பான முடிவைத் தெரிவிக்க வேண்டும். அருள்கூர்ந்து காலம் தாழ்த்தாதீர்கள் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. அவர்களுக்கு மனம் இருக்கிறது. ஏராளமாக இருக்கிறது. அதோடு தாராளமும் வர வேண்டும். இதற்குத் தேவையான நிதி நிச்சயமாக இருக்கிறது. ரெவின்யூவைக் குறைத்துத்தான் மதிப்பிட்டிருக்கிறார்கள் என்று நம்புகிறேன். வரும் பொருள் உரைத்தல் அமைச்சருக்கு அழகு என்று சொல்லுவார்கள். இங்கே நான் அமைச்சராக இல்லை என்றாலும், உறுப்பினர் என்ற முறையில் நிச்சயமாக நிதி இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். இந்த ஆண்டு நிச்சயமாக கூடுதல் நிதிதான் அரசுக்குக் கிடைக்கும். எனவே விரைவில் இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்கை வேண்டும், இன்னமும் காலம் தாழ்த்தக்கூடாது என்று சொல்லி தென் மாநிலங்களிலேயே தமிழகத்தில் தான் ஆசிரியர்களின் ஊதியம் குறைவாக இருக்கிறது என்று நிதியமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். நாவலர் பெருமான் காலத்தில் அப்படி இருக்கலாமா? தமிழ் நாட்டில் ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்தித் தர வேண்டாமா? உங்கள் காலத்தில் கண்டிப்பாக உயர்த்தித் தர வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் இதைப்பற்றிக் குறிப்பிட்டார் என்று கருதுகிறேன். அன்றைக்கு நான் சொன்னது இதுதான். இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் தமிழகத்தில் மட்டும்தான் மிகக் குறைவான ஊதியம் தரப்படுகிறது என்ற குற்றச்சாட்டு அப்போது சொல்லப்பட்டது. அதற்கு பதில் சொல்லும் வகையில் இந்த முறையில் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களில் உள்ளவைகளையும்பற்றி ஒரு பட்டியல் போட்டுப் பார்த்தால், சில பல இனங்களில் குறைந்திருக்கலாம் என்றாலும், மற்றுமுள்ள சில பல இனங்களில் நிச்சயமாக உயர்ந்துதான் இருக்கும் என்றுதான் குறிப்பிட்டேன். வேண்டுமானால் தனியாகப் பட்டியல் போட்டுக்கூட காட்டுகிறேன் என்று சொன்னேன். ஆனால் தென்னக மாநிலங்களைப் பொறுத்த வரையில், ஒப்பிட்டுப் பார்க்கிற சூழ்நிலை இதுவரை எனக்கு ஏற்படவில்லை. நான் எல்லா மாநிலங்களோடும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சில பல இனங்களில் குறைந்தாலும், சில பல இடங்களில் கண்டிப்பாக உயர்ந்துதான் இருக்கிறோம் என்றுதான் குறிப்பிட்டேன். தென் மாநிலங்களிலேயே தமிழகத்தில் தான் குறைவான ஊதியம் இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. பல இனங்களில் மற்ற மாநிலங்களைவிட நாம் உயர்ந்துதான் இருக்கிறோம் என்று தான் குறிப்பிட்டேன். பின்னால் வேண்டுமானால் ஒப்பிட்டுப் பார்த்து கட்டிக் காட்டத் தயாராக இருக்கிறேன் என்றுதான் அப்போது சொன்னேன். வேறு ஒன்றுமில்லை.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு நாவலர் அவர்கள் மிக நல்ல விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். ஒப்பிட்டுப் பார்த்துச் செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே அதைக் காலம் தாழ்த்தாமல் செய்து விரைவாக ஒப்பிட்டுப் பார்த்து நியாயம் வழங்க வேண்டுமென்று நாவலர் பெருமானிடத்தில் வேண்டுகோள் விடுத்து இதோடு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. இராமலிங்கம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, துணை நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்குக் கிட்டத்தட்ட 13 கோடி ரூபாய் அளவுக்கு நிதி ஒதுக்கியிருப்பதன் மூலம் தமிழக கைத்தறி நெசவாளர்களின் வாழ்வுக்கு மிகப் பெரிய உதவி செய்துள்ள மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையில் உள்ள மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களுக்கு நான் நெசவாளர் சமுதாயத்தின் சார்பில் மிகுந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே 10 கோடி ஒதுக்கியிருப்பதோடு தற்போது 3 கோடி அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படி ரிபேட்டுக்காக, கழிவுத் தொகைக்காக ஒதுக்கப்பட்ட தொகையாக தமிழகத்தில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களும் கோ-ஆப்டெக்ஸ்-ல் துணி வாங்கும்போது ரூபாய்க்கு 10 காசு என்று உதவி பெறுகிறார்கள். இத்தகைய சிறந்த ஒரு ஏற்பாட்டை அவர்கள் செய்தமைக்காக நான் மீண்டும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

அடுத்து, மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் பேரவையில் ஒரு அறிவிப்பு செய்திருக்கிறார்கள். நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு கைத்தறி ஆடைகள் இலவசமாகக் கொடுக்கப்படும் என்ற மாபெரும் திட்டத்தை அறிவித்தார்கள். நிலமற்ற விவசாயிகளுக்கு கைத்தறி ஆடைகளை வழங்குவதிலே நெசவாளர்களுக்கு என்ன நன்மை என்று கூர்ந்து பார்க்கும்போது, அதனால் எங்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. நிதிநிலை அறிக்கையின் மீது பேசுகின்றபோதுகூட. நான் சொன்னேன். "ஆண்டு ஒன்றுக்கு 120 கோடி ரூபாய் கைத்தறித் துணி உற்பத்தியாகிறது. அதிலே 70 கோடி ரூபாய் துணி விற்கிறது. மீதி 50 கோடி ரூபாய் துணி தேங்கி நிற்கிறது" என்று சொன்னேன். அப்படி தேங்கியிருக்கக்கூடிய. துணியை வறட்சிக் காலத்திலே வேலை இல்லாமல் தவித்துக் கொண்டிருப்பவர்களுக்கு வழங்கும் திட்டத்தின்கீழ் எங்களுக்குக் கணிசமான அளவிற்கு சரக்குகள் செலவாகிறது. அதை வைத்து நெசவாளர்கள் சுபிட்சமாகப் பிழைக்கிறார்கள். வறட்சிக் காலத்தில் வேலையில்லாமல் உள்ள எங்களுக்கு வேலை கொடுக்கவும், சுபிட்சமாக வாழ வழி வகுக்கவும் இந்தத் திட்டம் உதவி செய்கிறது. ஏழை விவசாயிகளுக்கு இலவசமாக கைத்தறித் துணி கொடுப்பதன் மூலமாக, என்னுடைய கணக்கின்படி எங்களுடைய இருப்பு அநேகமாகத் தீர்ந்துவிடும் என்று நினைக்கிறேன். இருக்கின்ற இருப்பு தீர்ந்துவிட்டால், உற்பத்தி செய்ய வேண்டி வரும். உற்பத்தி செய்ய வேண்டி வந்தால், எங்களுக்கு வேலை கிடைக்கும். வேலை கிடைத்தால் கூலி கிடைக்கும். கூலி கிடைத்தால் அதை வைத்துக் கொண்டு ரேஷன் வாங்கி கஞ்சி காய்ச்சிக் குடித்து நெசவாளர்கள் வாழ வழி வகை ஏற்படும்.

நுழைவு வரியைப் பொறுத்தவரையில், கைத்தறித் துணிக்கும், கைத்தறிப் பட்டுத் துணிக்கும் அது கிடையாது என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இதுபற்றி வெளியே பரவலாகச் சொல்லுகின்ற கருத்தை இங்கே அவருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நுழைவு



வரியிலிருந்து கைத்தறித் துணிக்கும், பட்டுத் துணிக்கும் விலக்கு அளித்தார்களே தவிர, நூலுக்கு அளித்தார்களா என்று நேற்றுகூட தென் இந்திய கைத்தறி உற்பத்தியாளர்கள் அசோசியேஷனில் என்னிடத்திலே கேட்டார்கள். கைத்தறிக்கு என்று பயன்படுவது சிட்டம் என்ற நூல். கோன் என்பது மில்களுக்குப் பயன்படுவது. ஆகவே சிட்டம் என்ற நூலுக்கு வரிவிலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் சிட்டம் என்ற நூலை பவர்லூம் முதலாளிகள் வாங்கி பயன்படுத்தமாட்டார்கள். அதே போல கைத்தறிப் பட்டுத் துணிக்குப் பயன்படும் நூலுக்கும் வரிவிலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்கிறார்கள்.

அதற்கடுத்து கைத்தறித் துணிக்கென்று சாயப் பொருள்கள் வாங்க பில் போடும்போது நுழைவு வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்கிறார்கள்.

இந்தச் சூழ்நிலையில் நான் எந்த அளவிற்கு இந்த அரசைப் பாராட்ட வேண்டுமென்று நினைக்கிறேனோ அதே அளவு நெசவாளர்கள் உள்ளத்திலும் பாராட்டுகிற அளவிற்கு எண்ணம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் முதலமைச்சர் அவர்கள், அமைச்சர்கள் அவைக்கு வருவதில்லை என்று தெரிவித்தார்கள். முதலமைச்சர் இங்கே வருகிறாரோ இல்லையோ, மக்களிடத்திலே வருகிறார்கள். மக்கள் உள்ளத்திலே வருகிறார்கள். நெசவாளர்கள் உள்ளத்திலே முதலமைச்சர் அவர்கள் இன்றைக்குக் கடவுளாக வீற்றிருக்கிறார்கள். ஆகவே அந்த அளவிற்கு நெசவாளர்களுக்கு நன்மை செய்ததற்காக நெசவாளர்கள் சார்பாக நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து இந்த வாய்ப்பு நல்கிய துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே. துணை மதிப்பீடுகளின் மீது பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருந்தாலும், ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் நான் தெரிவித்துவிட்டு என்னுடைய உரையை முடிக்கலாம் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் கைத்தறி நெசவாளர்களுக்காக இந்த அரசு செய்ததை வெகுவாகப் பாராட்டி அவருடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படிப் பாராட்டுவதோடு, அந்த நெசவாளர்கள் சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் இன்றைக்குத் தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணியை வாங்கி ஏழையெளிய விவசாயிகளுக்குத் தர ஏற்பாடு செய்கிற முயற்சியின் காரணமாக ஏழையெளிய நெசவாளர்கள்

குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படுகிற அளவிற்கு நல்ல நிலைமை நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட்டுக் கூற வேண்டும் என்பதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். பத்து கோடி ரூபாய் அளவிற்கு கைத்தறி நெசவாளர்களிடத்திலேயிருந்து துணியை வாங்கி கிராமத்திலுள்ள ஏழை விவசாயிகளுக்குத் தரப்படுகிறது என்றால், இது வறட்சி நிவாரணப் பணியில் மிகச் சிறந்த பணி என்பதைக் குறிப்பிட்டுக் கூற வேண்டும். வறட்சி நிவாரணப்பணியில் எந்தக் காரியத்தைச் செய்தாலும், அது மக்களுக்கு நல்ல முறையிலே, பயன்படுகிற அளவிலே அமைய வேண்டும் என்பதிலே அதிகமான கவனம் கொண்டு இந்த அரசாங்கம் திட்டமிடுகிற நேரத்தில் எதிர்க் கட்சியில் உள்ளவர்கள், வறட்சி நிவாரணப் பணியைப் பொறுத்த வரையில், எடுக்க வேண்டிய முன் நடவடிக்கைகளை இந்த அரசு காலம் தாழ்த்தி எடுத்திருப்பதைப் போலச் சொல்லுகிறார்கள். அதற்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், இதற்கு முன்னால் இருந்த அரசு 1974 ஆம் ஆண்டு, 1975 ஆம் ஆண்டு ஆகிய ஆண்டுகளில் எந்தக் காலத்திலே நடவடிக்கை எடுத்தார்கள் என்பதை புள்ளிவிவரத்தோடு, ஆதாரத்தோடு சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொன்னாலும், பல பேருக்குப் புரியவில்லை. பிப்ரவரி. மார்ச் மாதத்தில் வறட்சி வரப் போகிறது என்றால், அதற்கு முன் ஆண்டு செப்டம்பர் மாதத்திலேயே சொல்லி விட வேண்டும் என்று சொல்லுகிற அளவிற்கு எதிர்க் கட்சியில் உள்ளவர்களுடைய நிலை வளர்ந்திருக்கிறது என்று சொன்னால், அவர்கள் விஞ்ஞானரீதியில் வளர்ந்திருக்கிறார்களா அல்லது வைதீகத்தின் ரீதியில் வளர்ந்திருக்கிறார்களா என்று எனக்குப் புரியவில்லை. பிப்ரவரியில் வறட்சி வரப்போகிறது. மார்ச்சில் தண்ணீர் கிடைக்காது, மழை வராது என்றால், அதற்கு முன்பே செப்டம்பர் மாதத்தில் அதைப்பற்றிச் சொன்னால் என்ன என்று கேட்கிறார்கள் என்றால், அப்படிச் சொல்லுவதற்கு விஞ்ஞானரீதியாக ஏதாவது கண்டு பிடித்திருக்கிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் அறிக்கையை அனுப்புவதிலே ஏற்பட்ட காலதாமதம் காரணமாக வறட்சி நிவாரணப் பணிகள் நடைபெறவில்லை என்று பரவலாகச் சொன்னால், அதை நாட்டு மக்கள் தெரிந்து கொள்வார்கள், அதற்குப் பிறகு பெரிய அளவிற்கு இந்த அரசு தவறிவிட்டது என்ற குற்றத்தை உருவாக்கலாம் என்பதற்காக திட்டமிட்டுக் காரியங்கள் நடைபெறுகின்றன. தமிழகத்தைப் பொறுத்த வரையில், இதற்கு முன்னால் எந்த அரசும் செய்யாத அளவிற்கு வறட்சிக் காலத்திலே செய்ய வேண்டிய பணிகளை அதிகமான அளவிற்கு மிகுந்த முயற்சி எடுத்துக்கொண்டு செய்திருக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டு கைத்தறி நெசவாளர்களிடம் துணியை வாங்கி ஏழை விவசாயிகளுக்கு வழங்குகிறார்கள் என்பதுதான்.





ஒரு ஆட்சிக் காலத்திலே—பெயர் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை—வறட்சி நிவாரணப் பணி என்ற பெயரை வைத்துக் கொண்டு திடீரென்று கமிஷன் வாங்குவதற்காக ஆயிரக்கணக்கான பைப்புகளை கல்கத்தாவிலிருந்தும், பம்பாயிலிருந்தும் அவசர அவசரமாக வாங்கியதும், பிறகு தண்ணீர் வரவில்லை என்று அதைப் பிடுங்கி அது யார் கையில் போனது என்பது பற்றிய வறட்சி நிவாரணக் கணக்குகள் எல்லாம் இருக்கின்றன. ஆனால் இந்த ஆட்சியில் எந்தப் பணியாக இருந்தாலும், ஒழுங்காக நடைபெறுகிறது. இந்த அரசு மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சொல்லுகிறார்கள். குற்றச்சாட்டுக்களைச் சொல்லுகிற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருப்பதைப் பார்க்கும்போது, எனக்கே அச்சமாக இருக்கிறது. முதலமைச்சர் அவர்களைப் பார்க்க முடியவில்லை, அவரோடு பேச முடியவில்லை, முதலமைச்சரிடம் குறைகளைச் சொல்ல முடியவில்லை. அவர் அவைக்கு வருவதில்லை என்ற குற்றச்சாட்டுக்களை ஆரம்பக் காலத்திலேயிருந்து இன்று வரை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர் ஏன் அப்படிக் கேட்கிறார் என்று சிலர் கோபித்துக்கொள்கிறார்கள். உள்ளபடியே முதலமைச்சர் வரவில்லை, அவரிடம் குறைகளைச் சொல்ல முடியவில்லை என்று அவர் சொல்லுவதற்கான காரணத்தை நான் தைரியமாகச் சொல்வேன். இதற்கு முன்னாலே இருந்த முதலமைச்சர்கள் யார் எதைச் சொன்னாலும் செவிடர்களாக இருந்திருக்கிறார்கள். பல முதலமைச்சர்களைப்பற்றிச் சொல்ல முடியும். முதலமைச்சரைப் பார்த்து விட்டு வந்தவரைப் பார்த்து, "முதலமைச்சரைப் பார்த்து விட்டு வந்தீர்களா?" என்று கேட்டால், "முதலமைச்சரிடம் பேசினால் என்ன பிரயோஜனம் கிடைக்கிறது? அவர் காதில் விழவில்லை. பார்க்கலாம் என்று சொன்னார்" என்று சொல்லும் நிலைமை இருந்தது. எதுவும் நடக்கவில்லை என்று சொல்லுகிற நிலை இருந்தது. இப்போது முதலமைச்சரைப் பார்த்தாலே போதும், காரியம் நடக்கும் என்ற நிலை இருக்கிறது. இதை எதிர்க் கட்சி

(முற்பகல் 11-30)

யிலே இருப்பவர்களும் மறுக்க முடியாது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். நான் இன்னும் சொல்வேன். நண்பர் திரு. அனகாபுத்தூர் இராமலிங்கம் அவர்கள் சொன்னதனாலே சொல்கிறேன். அவர்கள் ஆண்டவனின் பெயரை அழைக்கிறார்கள். ஆண்டவனைக்கூட பிடிக்க வேண்டுமென்று சொன்னால், வெங்கடாசலபதியைப் பிடிக்க வேண்டுமென்று சொன்னால், உண்டியலிலே எவ்வளவு பணம் போட்டார்கள் என்று பார்த்த பின்னாலேதான் காரியம் செய்கின்றான். உண்டியலிலே போடுகின்ற பணம் குறைந்தால் இந்தப்பயல்

பணம் போடவில்லை, பின்னாலே பார்த்துக்கொள்ளலாம் என்று காரியத்தை நீடித்துவிடுகிறானே தவிர, அந்த ஆண்டவனே கூட அந்தக் காரியத்தைச் செய்ததாக வரலாறு கிடையாது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** பணம் அதிகமாகப் போட்டவர்களுக்குக் காரியம் நடந்திருக்கிறதா ?

**திரு. எஸ். ஆர். இராதா :** அவர்கள் கேட்கின்ற வேண்டுகோளும் அதற்கு அவர்கள் தருகின்ற பணமும் சரியாக இருக்க வேண்டும். அது வெங்கடாசலபதி கணக்கிலேதான் தெரியும்.

**திரு. ஏ. ஜே. தாஸ் :** அந்த அனுபவம் உறுப்பினர் அவர்களுக்கு உண்டா ?

**திரு. எஸ். ஆர். இராதா :** திரு. தாஸ அவர்கள் நல்ல நேரத்திலே சொன்னார்கள். அனுபவத்தின் அடிப்படையிலேதான் சொல்கிறார்கள். இப்போது காசு இருந்தால்தான் இந்தக் காரியம் நடக்கும். இப்போது ஆண்டவனையே கூட மாற்றுகிறார்கள். இந்த மாதம் ஐயப்பன் என்றால், அடுத்த மாதம் மூகாம்பிகை, அதற்கு அடுத்த மாதம் வேறு ஆண்டவன். இப்படி மாதம் மாதம் கடவுளை மாற்றுவதற்கு என்ன காரணம் என்று சொன்னால், அந்த சாமி சரியில்லை, இந்த சாமி சரியில்லை, இன்னொரு சாமியிடத்திலே போய்ப் பார்க்கலாம் என்று போகிறார்கள். அவர்கள் காரியம் நடக்க வேண்டும் என்பதற்காகப் போகிறார்களே தவிர, வேறல்ல. காரியம் நடக்குமா என்ற அளவிலேதான் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

THIRU A. R. DAMODARAN: This happens in politics.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** துணை மான்யத்திற்கும் இந்தக் கடவுளர்களுக்கும் என்ன சம்பந்தம் என்பதையும்கூட உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் நல்லது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆண்டவர்களைப் பற்றிக் கவலைப்படாமல் இப்போது ஆண்டு கொண்டிருப்பவர்களைப்பற்றிக் கொஞ்சம் கவலைப்பட்டால் நல்லது. அதற்கு கருத்துக்களைச் சொன்னால் நல்லது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் பேசியிருப்பது அவ்வளவுதானா ? இத்துடன் முடித்துவிடுகிறார்களா ?



**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய நோக்கம் புரிந்துவிட்டது என்று நினைப்பதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். எந்த நோக்கத்தைக் கொண்டுவரவேண்டும் என்று நினைத்தேனோ அதை உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் உணர்ந்துவிட்டார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** ஆண்டவனை அடிக்கடி மாற்றுவது என்பது, ஆண்டவனுடைய கோயிலுக்குச் செல்வது என்பது தாங்கள் செய்திருக்கக் கூடிய தவறுகளை, பாவங்களைச் சரிப்படுத்திக்கொள்ள ஏதோ காணிக்கை செலுத்தி பாவ மன்னிப்பு பெற்றுக்கொள்வதற்காக அவர்கள் செல்வதாக நான் அறிகிறேன். அடிக்கடி மாற்றுகிறார்கள் என்று சொன்னால், பாவம் தீரவில்லை என்பதற்காக அப்படி அடிக்கடி மாற்றுகிறார்களா ?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இங்கே அந்த சாமிகளைப் பற்றிச் சொன்னதோடு நிறுத்திவிடலாம். திரு. முத்துசாமி பற்றி எல்லாம் குறிப்பிட்டுக்கொண்டிருப்பதை விட்டுவிடலாம்.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் "ஆண்டவர்களைப் பற்றிக் கவலைப் படாமல் இருக்க வேண்டும். அது பழைய பிரச்சினை. இப்போது ஆண்டு கொண்டிருப்பவர்களைப் பற்றிக் கவலைப்படுங்கள்" என்று சொன்ன பின்னால் நான் ஆண்டவர்களைப்பற்றி நினைக்கவில்லை. அதை நான் விரும்பவில்லை. இன்றைக்கு முதலமைச்சர் அவர்களைக் கண்ணால் பார்த்தால் போதும். அவரிடம் சொன்னால் போதும் என்று இருப்பதிலே நான் மனநிறைவோடு சொல்கிறேன். நான் ஒப்பிட்டுக்கூறுவதற்குக் காரணம் என்ன என்று சொன்னால், அவர்கள் சில காரியங்களை வைத்துக் கொண்டு சில நேரங்களிலே பார்க்க விரும்புகிறார்கள். ஆனால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தான் யாரைப் பார்ப்பது என்ற நிலையில் இல்லாமல், சாதாரணமாக தோட்டி முதல் தொண்டைமான் வரையில் யாராக இருந்தாலும், அவர்களைப் பார்த்து அவர்கள் குறைகளைக் களைய வேண்டிய காரியங்களைச் செய்யக்கூடிய நிலைமையில்தான் இருக்கிறார்கள். அப்படி நம் முதலமைச்சரைப் போல இந்தியாவிலேயே, உலகத்திலேயே யாரும் இல்லை. அப்படி யாராவது இருக்கிறார்களா என்று ஒரு உதாரணம் சொன்னால், அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். முதலமைச்சர் என்று சொன்னால், இன்னாரைத் தான் பார்க்க வேண்டும், இன்னாரைப் பார்க்கக் கூடாது என்று இல்லை. இன்றைக்கு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் யாரை வேண்டுமானாலும் பார்க்கிறார். யாருடைய குறையை

வேண்டுமானாலும் கேட்பார். யார் எதைச் சொன்னாலும் கேட்கின்ற நிலையில் இருப்பதால்தான், இன்றைக்கு நம்மிடையே ஒரு ஆவல் இருக்கிறது. அந்த ஆவலை நான் பாராட்டுகிறேன். ஆனால் அவருடைய நேரம்தான் குறைவாக இருக்கிறது. அவரைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் இருந்தாலும், நேரக்குறைவு காரணமாக பார்க்க முடியவில்லை என்று சொல்லலாமே தவிர, வேறல்ல. அந்த நிலைமைதான் இருக்கிறது.

**திரு. செ. முத்துசாமி:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை எளிமையாகப் பார்ப்பதற்கு சில வரைமுறைகளை வைத்திருக்கிறார்கள் என்பதிலே நான் மாறுபடவில்லை. ஆனால் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் பிரச்சினைகளைப்பற்றிப் பேசித் தீர்ப்பதற்கு வாய்ப்பு கேட்டுக் கொண்டே இருக்கிறோம். அது இன்னும் கிடைக்கவில்லை. அதற்கு அவர்கள் சிபாரிசு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பாரத பிரதமர் அவர்கள் அடிக்கடி ஒரு வாரத்தில் 4 நாட்கள், 5 நாட்கள் அவர்கள் வீட்டிற்கு வருபவர்களை எல்லாரையும் பார்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். அதுபோலவே நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் அவருடைய வீட்டிலோ அல்லது வேறு ஒரு இடத்திலோ சென்று எல்லா மக்களும் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா? அதற்கு உறுப்பினர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

**திரு. எஸ். ஆர். இராதா:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் பிரதமரை இந்த அவையில் பிரச்சினைக்குரியவராக ஆக்கியிருக்கிறார்கள். நான் அவர்களுக்குப் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். அவர்கள் என்ன செய்கின்றார்கள் என்பது ஒரு விவாதத்திற்குரிய பிரச்சினை அல்ல. அவருடைய நடவடிக்கைகள் ஒரு மாதிரியாக அமைந்திருக்கின்றன. என்னுடைய தலைவரைப் பொறுத்தவரையிலே, அவரை எப்படி அணுக வேண்டுமென்று ஒரு சில வரைமுறைகளை வைத்திருக்கிறார்கள். அந்த முறையிலேதான் அவரைப் பார்க்கிறார்கள். இங்கே பெரிய அதிகாரிகளைப் பார்த்துவிட்டு, சாதாரணமாக காரிலே ரோடிலே போகிறபோதுகூட, யாராவது சாகக்கிடக்கின்ற கிழவியே கை நீட்டினாலும்கூட, நிறுத்தி பேசிவிட்டுப் போகின்ற அளவிற்கு இருக்கிறார்கள். அப்படி ஒரு முதலமைச்சரை இந்த நாட்டிலேதான் பார்க்க முடியும் என்று சொன்னால், நான் என் உள்ளத்திலே இருக்கின்ற நிலைமைகளைத் தான் சொல்கிறேன். இதைச் சொல்வதற்குக் காரணம் என்னவென்றால், மற்றவர்கள் என்ன செய்கின்றார்கள் என்பதல்ல,





மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் அடிக்கடி மணி அடிக்கிறார்கள். நான் ஒன்றை மட்டும் சொல்லிவிட்டு முடித்துக்கொள்கிறேன். இன்றைய நம்முடைய தமிழக முதலமைச்சரைப் பொறுத்தவரையில், இன்றைக்கு தமிழக அரசு தண்ணீர் கொண்டுவர வேண்டுமென்று எடுத்துக் கொண்டிருக்கின்ற முயற்சிகள் சாதாரணமான முயற்சிகள் அல்ல. இன்று இந்தியாவின் வரலாற்றிலேயே, தமிழகத்தின் வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு முயற்சி எடுத்திருக்கிறார்கள். சரித்திரம் குறிப்பிடுகின்ற அளவுக்கு வேகமாக உருவாக்கியிருக்கிறார்கள். இந்த நிலையிலே பார்த்தால், பெங்களூரிலே நடைபெற்ற ஒரு மாநாடு இருக்கிறது. இந்தியாவை மட்டுமல்ல, இந்த உலகத்தையே குலுங்க வைக்கின்ற அளவுக்கு, ஒரு சரித்திரத்தைப் படைக்கின்ற அளவுக்கு மாநாடு நடைபெற்றிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இதெல்லாம் துணை மானிய அறிக்கையில் வரவில்லை.

**திரு. எஸ். ஆர். இராதா:** அந்த அளவுக்கு அந்த மாநாடு நடைபெற்றிருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வறட்சிக் காலத்திலே பல்வேறு பணிகளைச் செய்வதற்கு இந்த அரசு திட்டமிட்டு காரியங்களைச் செய்துகொண்டிருக்கின்றது என்பதிலே நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள்கூட சொன்னார்கள். நிவாரணப் பணிகளிலே கட்சியில் உள்ள தொண்டர்களையெல்லாம் ஈடுபடுத்த வேண்டும் என்று சொன்னார்கள். சில நேரங்களில் அவர்கள் நல்ல யோசனைகளைச் சொல்வார்கள். ஆனால் சில நேரங்களில் கோபத்திலே ஏதாவது சொல்வார்கள். அப்படி இருந்தாலும், அவர்கள் சொன்ன நல்ல யோசனைகளை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அப்படிச் சொல்கின்ற யோசனையை உள்ளபடியே நான் ஏற்றுக்கொண்டாலும், எனக்கு இருக்கின்ற அச்சம் எதிர்க் கட்சிகள் இன்றைக்கு எப்படிச் செயல்படுகின்றன என்பதைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். சாதாரண தொண்டன் ஆளுங் கட்சியிலே இருந்து போய்ச் செய்தாலும்கூட பலவாறாகச் சொல்கின்றார்கள். நான் திருசெந்தூர் தேர்தலிலே கூட பார்த்தேன். திருச்செந்தூரில் நாங்கள் செய்த காரியத்தை விட அங்கே இருக்கின்ற ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் சொன்ன காரியங்கள்தான் அதிகமாக நடந்தன. அப்படி இருக்கும்போது, ஆளும் கட்சிக்காரர்கள்தான் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்கின்றார்கள். இப்படி குற்றச்சாட்டைச் சொல்கின்ற மனப்போக்கை இந்த நிவாரணப் பணியிலே மட்டும் கொஞ்ச நாட்களுக்கு அதாவது ஜூலை மாதம் வரையிலாவது சொல்வதில்லை என்று ஒரு பொது முடிவு எடுத்துக்கொண்டால்,

(முற்பகல் 11-40)

நல்லது. ஜூன் மாதம் வரையிலே எல்லாக் கட்சிக்காரர்களும் ஒன்றாக வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுவரையிலே போர் நடவடிக்கை போல எல்லோரும் இந்த நிவாரணப் பணிகளிலே ஈடுபட வேண்டும். அதிலே கட்சிப் பாகுபாடு கிடையாது என்ற அளவிலே, அதாவது அண்ணா சமாதியிலே நம்பிக்கை இல்லை என்றால், பக்கத்திலே எங்கேயாவது நின்று கொண்டு சத்தியம் செய்து, அத்தனை பேரும் ஒன்றாக இருந்தால், நிச்சயமாக தமிழகத்திலே வறட்சியே இல்லாத அளவுக்குச் செய்துவிடலாம் என்று கூறி, இந்தத் துணை மதிப்பீட்டை வரவேற்று, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

* **திரு. வலம்புரி ஜான்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, துணை மான்யத்தில் கண்டபடி, மாவட்ட செஷன்ஸ் நீதிபதி சிறப்பு நீதி மன்றங்கள் 6, இயஜூர்தி நீதிமன்றங்கள் இரண்டு சென்னையில் ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது என்கின்ற நிலைதனை நான் வெகுவாக வரவேற்கிறேன். அதைப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் அரசு நீதி மன்றங்களுக்கு உறுதுணையாக இருக்கிறது என்று சொல்லவருகின்றபோது, கொஞ்சம் அச்ச உணர்வோடும் கவனத்தோடும் வார்த்தைகளை வகைப்படுத்திப் பேச வேண்டியிருக்கிறது. காரணம் அரசாங்கம் நீதிமன்றங்களுக்கு இந்த அளவுக்கு ஆக்கம் தருகிறது, ஊக்கம் தருகிறது என்று சொல்லிவிட்டு, நீதிபதிகளின் நிலைபற்றி சட்டத்தினுடைய வரம்புக்குட்பட்டே நான் சொல்வதாக இருக்கிறேன். உடனே, “என்ன மனைவிக்கே மல்லிகை வாங்கி கொடுப்பதற்கு ஊரெல்லாம் சுவரொட்டி ஒட்டி ஒரு மகாநாடு நடத்துகிறார்கள், விளம்பரம் தேடுகிறார்கள் இந்த ஆளுங்கட்சிக்காரர்கள்” என்று சொல்பவர்கள் சில இடங்களிலே இருக்கிறார்கள். ஆகவே ஒன்றை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டம் எந்த அளவுக்கு அனுமதிக்கிறதோ, அதற்கு என்ன வரைமுறை இருக்கிறதோ, அதை நான் தெளிவாகப் புரிந்துகொண்டு இங்கே சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். நமக்கு ஏற்படுகின்ற வருத்தமெல்லாம் அரசாங்கம் நீதிமன்றத்திற்கு என்ன செய்கிறது என்பதல்ல, சில நீதிபதிகளை எப்படி காப்பாற்றுகிறது என்பதுகூட அல்ல. என்னைப் பொறுத்து சொல்ல வேண்டுமென்றால், நீதிபதிகள் தேவ தூதர்கள் என்கின்ற மூடநம்பிக்கையிலிருந்து ஒரு சமுதாயம் தன்னை விடுவித்துக்கொண்டால் அல்லாது அது நாகரீக சமுத்தாயத்தில் கலாச்சாரத்திலும் பண்பாட்டிலும் ஊறி வளர்கின்ற சமுதாயம் என்று மெய்ப்பிக்கப்படாது என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். நீதிபதிகள் தேவ தூதர்கள் அல்ல. அப்படி கருதுவது ஒரு மூட நம்பிக்கை. நான் இதைச் சொல்வதற்குக் காரணம் இன்றைக்கே கூட



வெளிவந்திருக்கின்ற ஒரு மிகச்சிறந்த ஆங்கில வாரப் பத்திரிகை, ஏதோ ஒரு பத்திரிகை அல்ல, மிகச் சிறந்தது என்று சொல்லப்படும், அளவில் ஏறத்தாழ 10 லட்சம் பேர்கள் படிக்கின்ற ஒரு பத்திரிகை தெளிவாகச் சொல்கிறது. சென்னை உயர்நீதிமன்றத்திலே இருக்கிற ஒரு நீதிபதி மற்றொரு கவிஞருடைய கவிதைப் புத்தகத்தை தன் புத்தகம் என்று சொல்லுகிறார் என்று குற்றம் சாட்டுகிறது. பத்திரிகைக்காரர்கள் பொறுப்பு இல்லாமல் சொல்லுகிறார்கள் என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. சென்னை உயர்நீதிமன்றத்திலே ஒரு பொறுப்பிலே இருக்கும் நீதிபதி, இது இன்னவர் சொத்து, இனி-யவர் சொத்து என்று வழக்கும், வாட்டமும் வருகிற நேரத்தில், வாயாடுகிறவர்கள், வழக்கறிஞர்களின் வாதங்களைக் கேட்ட பிறகு, இன்னவர் சொத்துத்தான், இவர் சொத்துத்தான் என்று தீர்மானிக்க வேண்டிய இடத்தில் இருக்கும் நீதிபதி, ஊரார் சொத்தை அபேட்சிக்காமல் இருப்பாயாக என்று சாத்திரம் மாத்திரமல்ல, சரித்திரம் மாத்திரமல்ல, சட்டமும் சொல்லுகிறது, ஆகவே நீதி வழங்கி, இது இன்னவர் சொத்துத்தான் என்று சொல்ல வேண்டிய நீதிபதி, அபகரித்திருந்தால் அவரை தண்டனைக்குள்ளாக்க வேண்டிய நீதிபதி, எழுத்து என்ற பிறருடைய சொத்தை, புத்தகம் என்ற பிறருடைய சொத்தை ‘என் சொத்து’ என்று சொல்லுகிறார் என்று குற்றச்சாட்டு வருகிறது. குற்றச்சாட்டு வருகிற நேரத்தில். சொன்னவர்மீது வழக்கு வருகிறதா என்றால் இல்லை. அவர்களுக்கெல்லாம் கோர்ட் நோட்டீஸ் போகிறதா என்றால், இல்லை. ஆகவே சொன்னது உண்மை என்று ஆகிறது. ஆகவே நீதிபதிகள் அப்படிப்பட்ட சூழ்நிலையிலேதான் இருக்கிறார்களே தவிர, அவர்கள் தேவ தூதர்கள் அல்ல. நான் குறிப்பாகவும், சிறப்பாகவும் ஒன்றை இந்த மன்றத்திற்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஜஸ்டிஸ் கைலாசம் அவர்கள் உயர்நீதி மன்றத்தின் நீதிபதியாக நியமனம் பெற்ற அன்றைக்கு, அட்வகேட் ஜெனரல் கோவிந்த சுவாமிநாதன் அவர்கள் எடுத்துச் சொன்ன விவகாரம் இன்றைக்கும் சரித்திரத்தில் இடம் பெறும் விவகாரமாகும். எல்லா நீதிபதிகளும் வழக்கறிஞர்களும் இருக்கின்ற மன்றத்திலேதான், பொறுப்புள்ளவர் என்று கருதி நீதித் துறையாலே வணங்கப்படுகிற இடத்திலே இருக்கிற திரு. கோவிந்த சாமிநாதன் அவர்கள் சொன்னார்கள். பாரீஸ் முனையிலும், மாம்பலத்திலும் இன்றைக்கு மக்களிடத்திலே நடைபெறும் பேச்சு என்னவென்றால், இந்த வழக்குரைஞரை நியமித்தால், இந்த நீதிபதியிடம் அனுப்பினால், இவ்வளவு மணி நேரத்திற்குள்ளாக இப்படிப்பட்ட தீர்ப்பைப் பெறலாம் என்கிற நிலை இருக்கிறது என்று சொன்னார்கள். ஆக, அதற்கு அரசாங்கம் காரணமா என்றால் இல்லை. நீதிபதிகளின் நிலைமை அப்படி இருக்கிறது. ஆகவே சொல்கிறேன், கீழ்க் கோர்ட்டிலே ஒரு தீர்ப்பு வரலாம்; மேல் கோர்ட்டிலே அது மாற்றப்படலாம்;

உயர் நீதிமன்றத்திலே அதுவும் மாறிப் போகலாம், உச்ச நீதி மன்றத்திலே அதுவும் மாறிப் போகலாம் என்றால், சட்டத்திற்கு விளக்கம் சொல்கிற நேரத்தில் வியாக்கியானம் சொல்கிற நேரத்திலே நீதிபதிகளின் சொந்தக் கருத்துகளும், அவர்களுடைய அணுகு முறைகளும், அவர்களுடைய ஆசைகளும், ஆவல்களும் அதற்குள்ளே இடம் பெறுகின்றன என்பதை உலகத்திலே உள்ள சட்ட வல்லாளர்கள் அத்தனை பேரும் ஏற்றுக்கொள்கிறார்கள். அந்த நிலையிலேதான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பதவியிலே, பொறுப்பிலே தொடர்ந்து நீடிக்கலாமா, வேண்டாமா என்று வழக்கு நடக்கிறது. அந்த வழக்கைப்பற்றிச் சொல்லும்போது, மாண்புமிகு புரட்சித் தலைவர் முதல்வராக இருக்கிறார் என்பதற்காக அல்ல, அவர் இந்த அவையிலே உறுப்பினராக இல்லை என்பதை நன்றாகத் தெரிந்துகொண்டுதான் சொல்கிறேன், அந்த வழக்கிலே வருகிற ஒரு தீர்ப்பு, வழக்கிலே எடுக்கப்படும் நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கு ஒரு மாற்று தீர்ப்பு வருகிற காலம் வரையில், எல்லா உறுப்பினர்களும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதால் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய மனத்திலே இருந்தாலும், வெளிப்படுத்திச் சொல்ல முடியாத விவகாரங்கள் உண்டு. எல்லா மன உணர்வுகளுக்கும். . .

**திரு. ம. சங்காலிங்கம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நீதிமன்றத்திலே பிரச்சினை இருக்கும்போது, நாம் அதைப்பற்றி விவாதிப்பது முறைதானா என்பதை, துணைத் தலைவரவர்களே, உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினரவர்கள் இந்தச் செய்தியைவிட்டு, இறுதித் துணை மதிப்பீட்டிலே பேசலாம்.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் நீதிபதிகளைப்பற்றி மொத்தமாக சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். நீதிபதிகளும் மனிதர்கள்தான். சிலர் தவறுகள்கூடச் செய்யலாம். டேட். ஆப் பெர்த்தை தவறாக எழுதியதால் ஒருவர் ராஜிநாமா செய்த நிகழ்ச்சியும் உண்டு. நீதிபதிகளும் தவறு செய்வார்கள் என்பதற்காகத்தான் அப்பீல் கோர்ட்ஸ் இருக்கின்றன. அப்பீல் கோர்ட் இல்லையென்றால் தேவையில்லை. நீதிமன்றத்தில் உள்ள இரண்டொரு தவற்றைச் சொல்லி, மொத்தமாக நீதிபதிகள் அப்படிப்பட்டவர்கள் என்ற கருத்தை வெளியிட்டால், நாட்டு மக்களுக்கு நீதி மன்றங்கள் பற்றி இருக்கும் கருத்து கேவலமாகப் போய்விடும். எனவே மொத்தமாகச் சொல்லுவது என்ன நியாயம் என்று கேட்க விரும்புகிறேன்.





**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உண்மை, விமர்சனத்தைப் பற்றிக்கூட அல்ல. வழக்கு பற்றிய செய்தியைப் பேச வேண்டாமென்று நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வலம்புரி ஜான்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, வழக்கு பற்றிப் பேசக்கூடாது என்றால், அது அவையின் எந்த விதியை மீறுகிறது என்பதைச் சொல்ல வேண்டும். காரணம், மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் பேசும்போது, பிறந்த தினம் பற்றி எல்லாம் சொல்லுகிறார்கள். பிறந்த தேதி பற்றியல்ல. பிறந்த தேதிக்காக தீர்மானம் கொடுக்கிறவர்கள், பிறந்த தேதி போன்ற வழக்கிலே நீதிபதி என்று சொல்லி அமர்ந்துகொண்டு நீதியைச் சொல்லுகிறவர்களில் சிலரே கூட, தங்களுடைய பிறந்த தேதியைத் திருத்திக்கொண்டுதான் அங்கே அமர்ந்திருக்கிறார்கள் என்பதையும் சான்றுகளோடு வேண்டுமானால் இந்த மன்றத்தில் வைக்கிறேன் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** துணைத் தலைவரவர்களே, நான் அந்தக் கருத்தைத்தான் சொன்னேன். யாராவது ஒரு நீதிபதி தவறு செய்யலாம். அவர்களும் மனிதர்கள்தான். தேவ தூதர்கள் என்று சொல்லவில்லை. முதலமைச்சரவர்கள்மீது வந்திருக்கும் வழக்கு என்பது வேறு. அது பரிசிலனையில் இருக்கிறது. அந்தப் பிரச்சினைக்கு நான் செல்லவில்லை. மொத்தமாக இன்றைக்கு நீதிபதிகளின் அமைப்புபற்றி கருத்துக்கள் சொல்வதாக இருந்தால், இன்னும் கருத்துக்களைச் சொல்லலாம். நான்கூடப் பேசினேன். நீதிமன்றங்களுக்குச் சென்று ஒரு காப்பி வாங்கக்கூட கையூட்டு கேட்கிறார்கள். 5 ரூபாய் கையூட்டு வாங்கிய வழக்கில், 50 ரூபாய் கொடுத்தால்தான் காப்பி கிடைக்கிறது என்று சொன்னபோது, அதை இந்த அவையில் அனுமதிக்க மறுத்துவிட்டார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அதற்காக இரண்டு பேரும் அதைப் பேச வேண்டியதில்லை.

**திரு. செ. முத்துசாமி:** துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு இருக்கும் விஷயத்தைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்வர்களே, இந்தப் பிரச்சினையைப்பற்றி அதிகம் பேசாமல் இருப்பதுதான் நல்லது. ஏனென்றால் பிரச்சினை இரண்டுக்கும் அரசியல்

அமைப்புச் சட்டத்திலே கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன. பிரிவு 194(2)-ன் கீழ் சட்டமன்றத்திலே நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கட்டுப்படுத்துபவர் சட்டசபைக்குத் தலைமை தாங்குபவர்தான் என்று சொல்லி, அவருக்கு முழு உரிமை தரப்பட்டிருக்கிறது. அப்படிச் சொல்லும்போது, நீதிபதிகளைப் பற்றிப் பேசக்கூடாது என்று பிரிவு 211-ல் சொல்லியிருக்கிறது. இப்போது ஏற்பட்டிருக்கிற பிரச்சினை சட்டமன்றப் பேரவைக்குள்ளே நடக்கும் நிகழ்ச்சியைக் கட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்தி. தீர்ப்பளிக்க வேண்டியவர் பேரவைத் தலைவரா அல்லது நீதிபதி ஆணையிட்டு அதன்படி நடந்துகொள்ள வேண்டுமா என்பதுதான். இத்தகைய நிலைமையிலே தீர்ப்பு வழங்கும் சூழ்நிலை வரும் வரையில், இந்தப் பிரச்சினைபற்றி அதிகம் பேசாமல் இருப்பது நல்லது. பேரவையிலே இது பற்றி விவாதங்கள் வந்தபோதும், எந்த ஒரு நடவடிக்கையாக இருந்தாலும், பேச்சாக இருந்தாலும், அதைக் கட்டுப்படுத்தி, தீர்ப்பு அளிக்க வேண்டிய பொறுப்பு ஸ்பீக்கருக்குத்தான் உண்டு, இங்கே, மேலவையிலே அவைத் தலைவருக்குத் தான் உண்டு என்பதை 194வது பிரிவு சொல்கிறது. ஆகவே பேசக்கூடாது என்றாலும், பேசுவதா, பேசக்கூடாதா என்று முடிவு செய்து. அதைத் தடுத்து நிறுத்துகிற, ரூலிங் கொடுக்கும் பொறுப்பு தலைவருக்குத்தான் உண்டு. இதை வழக்காக எடுத்துக்கொள்ளக்கூடாது. ஆகவே 194, 211 பிரிவுகளின்கீழ் இந்தப் பிரச்சினை இருப்பதால், பேரவை அது பற்றிய ஒரு பிரச்சினையில் ஈடுபட்டு, முறைப்படி வர வேண்டுமென்று இருப்பதன் காரணமாகவும், பேரவைத் தலைவர் அவர்கள் எக்காரணம் கொண்டும் நீதிமன்றத்திற்கும், சட்டமன்றத்திற்கும் ஒரு மாச்சரியமான சூழ்நிலை ஏற்படாமல், இந்தப் பிரச்சினையில் நல்லதொரு தீர்வு ஏற்படவும், அதே நேரத்தில் மன்றத்தினுடைய உறுப்பினர்களுடைய உரிமைகள் காப்பாற்றப்பட வேண்டுமென்ற முறையில் இதில் அணுக வேண்டுமென்றும் எடுத்துச் சொல்லியிருப்பதால் இதுபற்றி நாம் அதிகமாக இப்போது விவாதிக்காமல் இருப்பது நல்லது.

**Thiru A. R. DAMODARAN:** May I take it that the entire speech of my hon. friend is sought to be deleted from the Proceedings of the House, because of the Hon. Minister's elucidation?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்வர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வலம்புரி ஜான் அவர்கள், துணை மதிப்பீட்டின் மக்களுடைய வரிப் பணத்தை நாம் வசூல் செய்து அல்லது வேறு இனங்களில் வசூல் செய்து ஒவ்வொரு இனத்திற்கும் ஒதுக்கும் போது, நீதிமன்றத்திற்கும் உட்பட்டு நிதியை ஒதுக்குகிறோம் என்பதால்தான் பேசுகிறார். அவருக்குள்ள பொதுக் கருத்தை வைத்து, அவருக்குள்ள





கொள்கைப் பிரச்சினையை வைத்துப் பேசுகிறார். அவர் குறிப்பிட்ட சில அம்சங்களுக்குள் வரவில்லை. எனவே அதை குறிப்பிலிருந்து எடுக்க வேண்டிய அவசியமில்லை. அவருடைய கொள்கைப்படி ஜூடிஷியரி என்பது எப்படி இருக்க வேண்டும் என்பதைக் கூறுகிறார். அரசியல் அமைப்புச் சட்டப்படி இப்போதுள்ள பாராளுமன்றம் அல்லது சட்டமன்றங்கள்கூட மக்கள் ஜனநாயகத்தை ஏற்றுக் கொள்ளவில்லை, எனவே ஜூடிஷியரியை மாற்றியமைக்க வேண்டுமென்று சில கருத்துக்கள் வெளியே சொல்லப்பட்டிருக்கின்றன. அவர்களுக்குத் தோன்றுகிற பொது அர்த்தத்திலே பேசியதை, எடுத்துவிட வேண்டியதில்லை.

**Thiru A. R. DAMODARAN:** Sir, may I submit this? If the hon. Member was making certain general suggestions for the improvement of the Judiciary, it is all right. But, he has referred to some book the authorship of which has been claimed by a Judge and he has cast a doubt on the morality of the Judge. May I request that that passage be excluded because we do not want to come into unneccssary conflict? Just as the House has its privilege, the Court has its privilege. I would request the Hon. the Leader of the House to at least have that portion expunged.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இதுமாதிரி ஒரு வழக்கு உத்திரப் பிரதேசத்தில் சட்டசபையிலே நடைபெற்றிருக்கிறது. சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு இருக்கிறது. அதைத் தெரிந்து கொண்டு. சிலர் புதுப் புது விஷயங்களைக் கிளப்புகிறார்கள். அது உள் நோக்கமல்ல. உண்மையைச் சொல்ல வேண்டுமென்று வரும்போது, திறந்த மனத்தோடு சொல்லும்போது, உள் நோக்கம் இல்லையென்றால் அப்படியே இருக்கட்டும்.

(முற்பகல் 11-50)

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்தார்கள். ஒரே ஒரு விஷயத்தை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன் There must be a Code of Conduct even for Judges also. அரசியல் சட்டத்திலே அது சொல்லப்பட்டிருக்கிறதா? 'கோட் ஆப் காண்டக்டை' மீறினால், he will be subject to disciplinary action என்று அதிலே நிச்சயமாக இருக்க வேண்டும். இப்போது அப்படி ஒரு புரவிஷன் இல்லாதிருந்தால், எதிர்காலத்திலே, அப்படி வர வேண்டும். யாராக இருந்தாலும், தவறு செய்தால், அவர்கள் நடவடிக்கைக்கு உட்பட வேண்டும், அந்தக் கருத்தை நான் ஒப்புக்கொள்

கிறேன். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எக்ஸ்பெர்ட் கமிட்டியில் நடவடிக்கை எடுக்கச் சொல்லி தீர்ப்பு சொன்னால், அவர்கள் பயந்துகொண்டு வர மாட்டார்கள், எப்படி அவர்களுக்குப் பாதுகாப்பு என்று கேட்டார்கள். நான் அதையே திருப்பி மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் அவையில் இருப்பதால் கேட்கிறேன். Are the Judiciary and the Judges exempt? இங்கே வந்து ஜட்ஜுகள் விமர்சிக்கப்பட்டால், ஜட்ஜுகள் எப்படி பாதுகாப்போடு தீர்ப்பு கூற முடியும்? இந்த லெஜிஸ் சேச்சரில் சொல்லப்படுகிற டைரக்ஷனை எல்லாம் வைத்து அவர்கள் தீர்ப்பு எழுத முடியுமா?

There is a mistake. தவறாக, உண்மையில்லாத ஒரு அபிடவிட் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைக் கண்டுபிடித்தது தவறு என்று சொல்லட்டும், ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் ஜுடீஷியரிலே கொடுக்கப்பட்டிருக்கிற ஒரு தீர்ப்பால் இவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று கருதினால், அப்போது நிபுணர்கள் தவறு செய்வதில் நிபுணத்துவம் பெறலாமா? நிபுணர்கள் மீது நடவடிக்கை ஏது? இத்தகைய ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த அரசு பாதுகாத்தால்தான் ஜுடீஷியரி இருக்க முடியும்? ஜட்ஜ் கீழே இறங்கினால், போலீசை விட்டு கைது பண்ணினால்—கைது பண்ணலாம்—அது வேறு சமாச்சாரம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலிலேயே கூறியபடி, இதை விவாத அளவுக்குக் கொண்டு போகக் கூடாது. நீதிபதிகளை யாரும் விமர்சிக்கலாம். கீழ்க் கோர்ட் அளித்த தீர்ப்பு சரியாக இல்லை, அது அநீதி என்று மேல் கோர்ட்டுக்குச் செல்ல உரிமை இருக்கிறது. அதனால்தான் சுப்ரீம் கோர்ட் வரை வைத்திருக்கிறார்கள். நீதித் துறை இப்படி இருக்க வேண்டுமென்று சொல்வதில் தவறில்லை. பொதுவாக நீதிபதிகள் இப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று எடுத்துச்சொல்வதிலும் தவறில்லை. எதைச் சொல்லக் கூடாது என்று கீழ்க்கண்டவாறு கான்ஸ்டிட்யூஷன் தெளிவாகச் சொல்கிறது:

"No discussion shall take place in the Legislature of a State with respect to the conduct of any Judge of the Supreme Court or of a High Court in the discharge of his duty."





அவருடைய பணிகளை ஆற்றுகின்றபோது, அவருடைய பணிகளுக்கு நோக்கம் கற்பித்து அவருடைய கான்டக்ட் பற்றிப் பேசக்கூடாது. தவிர நீதியைப் பற்றியோ, வேறு குறைகளைப் பற்றியோ, மாற்றங்களைப் பற்றியோ பேசலாம். ஆக, நான் சொன்ன அளவுக்குத்தான் போகக் கூடாது. அதைப்பற்றித்தான் இப்போது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால், அந்த அளவுக்குப் போகாமல் பொதுப்படையாக உறுப்பினர் பேசுவதில் எந்தத் தவறுமில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் பொதுப் படையாகப் பேசலாம்.

**திரு. எஸ். முத்து :** நான் நீதிமன்றத்திற்கு அதிகாரமா அல்லது சட்ட மன்றத்திற்கு அதிகாரமா என்கிற பிரச்சினைக்குள் போகத் தயாராக வர வில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன். அவர்கள் நகராட்சித் தலைவராக இருந்திருக்கிறார். நானும் ஏழாண்டுக் காலம் தலைவராகவும், மேயராகவும் இருந்திருக்கிறேன். அங்கு ஏற்படுகின்ற சங்கடங்களைச் சொல்கிறேன். சில ஆக்கிரமிப்பாளர்கள் ஆக்கிரமிக்கிரபோது நகராட்சிக்கோ, மாநகராட்சிக்கோ நோட்டீஸ் கொடுக்காமல் கேஸ் போட்ட போது, ஸ்டே கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்காக என்றைக்கு சனிக் கிழமை இரவு வருமென்று பார்த்து ஞாயிற்றுக் கிழமை இரவு—கோர்ட் ஞாயிற்றுக் கிழமை இல்லையாதலால்—கோர்ட் இல்லாமலிருக்கிற நேரத்தில் தான் ஆக்கிரமிப்பாளர்களை அப்புறப்படுத்த வேண்டி இருந்திருக்கிறது. இது உண்மை. ஆக்கிரமிப்பாளர்கள் கேஸ் போட்டால், உடனே நோட்டீஸ் கொடுக் காமலே அவர்களுக்காக 'ஸ்டே' கொடுத்து விடுகிறார்கள். இதனால் பொது மக்கள் தான் பாதிக்கப்படுகிறார்கள். அதற்கு ஏற்றவாறு சட்டத்தைத் திருத்த முடியுமா என்று பார்க்க வேண்டும். இதனால் நிர்வாகத்தில் பல கஷ்டங்கள் இருக்கின்றன.

**திரு. வலம்புரி ஜான் :** குறிப்பிட்ட எந்த நீதிபதிகளைப்பற்றியும் நான் இந்த மன்றத்திலே குறிப்பிடவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** விதி எண் 67-(1)-ன் கீழ் நீதி விசாரணையில் இருக்கும் எந்தப் பொருள் மீதும் தமது கருத்தைச் சொல்லவோ, அப்பொருள்பற்றிப் பேசவோ உறுப்பினர்களுக்கு அதிகாரம் இல்லை என்கிற வகையில் நீதி விசாரணையில் இருக்கிற பகுதியைப்பற்றிப் பேசியதை மட்டும் நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன். எஞ்சிய பகுதிகள் இருக்கலாம்.

திரு. வலம்புரி ஜான் : மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் ஒரு பிறந்த தேதி பற்றியும், வழக்கு நடந்ததுபற்றியும இங்கே குறிப்பிட்டார். ஆனால அவர் ஒன்றை மறந்து விட்டு இங்கே பேசிக் கொண்டிருக்கிறார. அப்படி அவர்கள் சொல்லியதன் மூலமாக இந்தியாவினுடைய தலைமை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு திருமதி இந்திரா காந்தி அவர்களை இங்கே இழுத்து வந்திருக்கிறார்கள். பிறந்த தேதி தொடர்பான வழக்கு ஆர்.பி. ஆக்ட் 31-ன் கீழ் அது நடந்தது. ஆர்.பி. ஆக்ட் 31-ன் கீழ்தான் பிரதம மந்திரி இந்திரா காந்தி அவர்கள் மீதும் வழக்கு நடந்தது. ஒருவருக்கு வயது என்ன என்பதுபற்றி வழக்கு நடந்தது. மற்றவருக்கு அவர் தங்கியிருந்த விலாசம் என்ன என்று வழக்கு நடந்தது. இதுவும் அதுவும் ஆர்.பி. ஆக்ட் 31-ன் கீழ்தான் நடந்திருக்கிறது. ஆக; அது வேறு விவகாரம் என்பதை மாத்திரம் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்குள்ளே நான் போக விரும்பவில்லை. இங்கே நான் சொல்ல விரும்புவதெல்லாம் ஒன்றே ஒன்று தான். பிரிட்டானியா நாடாளுமன்றத்தினுடைய நடைமுறைதான் இன்று வரை நம் நாட்டில் இருந்து வருகிறது. அந்த பிரிட்டானியா நாடாளுமன்றத்தினுடைய நடைமுறையை எடுத்துக் கொண்டாலும், 1600-வது ஆண்டுகளில் ஏறத்தாழ 'ஜே வெர்சஸ் டாப்ஹாம்' "Jay vs Topham" வழக்கு 17, 18 ஆண்டுகள் நடைபெற்றிருக்கிறது. அந்த வழக்கைப் பார்த்தால் கூட, எந்த அளவுக்கு நாடாளுமன்றத்தினுடைய பாராளுமன்றத்தினுடைய உரிமைகள் காக்கப்பட்டிருக்கின்றன என்பது தெரிய வரும். இன்றைக்கும் கூட திரும்பத் திரும்பச் சொன்ன பிறகும் கூட 19 ஆம் நூற்றாண்டிலே மத்திய தரைக் கடல் நாடுகளிலே வாழ்ந்துக்கொண்ருந்த சிரஞ்சீவி சிந்தனையாளர்களைப் போல, நீதிபதிகள் தேவ தூதர்கள் என்று அடித்துப் பேச சில பேர் ஆரம்பித்திருக்கிறார்கள். நான் உங்களுக்குச் சொல்கிறேன். 400 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தே பாராளுமன்றத்தினுடைய தாய் என்று வர்ணிக்கப்படுகிற ஆங்கிலேய நாட்டினுடைய அரசியல் வரலாறு தான் இன்றைக்கும் இந்த நாட்டிலே பின்பற்றப்படுகிறது. அவர்கள் இந்த வழக்கை நடத்தியதற்காக நீதிபதிகளைக் கைது செய்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த மன்றத்திலே எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் என்று சொல்கிறபோது, கட்சி வரவில்லை. பேதா பேதங்கள் வரவில்லை. பூசல் வரவில்லை. எல்லோரும் ஒன்று சேர்ந்து உறுப்பினர்களுடைய உரிமை பாதிக்கப்படுகிற நிலை வருகிறபோது, வழக்கு போட்டவர்களைக் கைது செய்தார்கள். வாதாடியவர்களைக் கைது செய்தார்கள். நீதி சொன்னோம் என்று சொல்லி தீர்ப்பு சொன்னவர்





களைக் கைது செய்தார்கள். அவர்கள் நாடாளுமன்றத்திற்கு வர வேண்டுமென்று 16 ஆம் நூற்றாண்டிலேயே உத்தரவிடப்பட்டது. அது இன்றைக்கும் நடைமுறையாக இருக்கிறது என்பதையும் பார்க்க வேண்டும். இந்தியாவில் கூட 1965—69 ஆம ஆண்டுகளில் கேசவ் சிங் வழக்கு நடைபெற்றது. உத்தரப் பிரதேசத்தில், இந்தியாவினுடைய சட்ட வரலாற்றில் இடம் பெற்றிருக்கிற கேசவ சிங் வழக்கிலே அப்படித்தான் தீர்ப்பு வருகிறபோது, சட்டமன்றத்தை ஒருவர் அவமதித்தார் என்று தீர்ப்பு வந்தது. ஹேபியஸ் கார்பஸ் தான் போட்டார். ஹேபியஸ் கார்பஸ் என்று சொல்லி, produce the body என்று போடுகிற அந்த அடிப்படையில் கூட தீர்ப்பு எழுதிய நீதிபதிகள் மீது அன்றைக்கு ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். அன்றைக்கு வழக்கு போட்ட கேசவ் சிங், அவருக்காக வாதாடிய வழக்கறிஞர்கள், தீர்ப்பு எழுதிய நீதிபதி இவர்களையெல்லாம் கைது செய்ய வேண்டுமென்று 19 ஆம் நூற்றாண்டல்ல, 18 ஆம் நூற்றாண்டல்ல, 1964 ஆம் ஆண்டிலே, உத்தரப் பிரதேசத்திலே நடைபெற்ற வழக்கு ஒன்றில் தீர்ப்பு ஆகியது. அவர்களைக் கைது செய்ய வேண்டுமென்ற தீர்மானத்தைப் போட்ட பிறகு தான், அவர்கள் கொஞ்சம் மனதை மாற்றிக்கொண்டு கான்பிரான்டேஷன் கூடாது, மூரண்பாடு வேண்டாம், மோதலைத் தவிர்க்க வேண்டும் என்று எண்ணித்தான் மக்களாட்சியினுடைய மாண்பு காக்கப்பட வேண்டுமென்றுதான் ஒரு முடிவுக்கு வந்தார்கள். மக்களாட்சியினுடைய மாண்புகள், அதனுடைய அடிப்படைகள் ஒருசில நீதிபதிகளால் அழிக்கப்பட்டு விடக் கூடாது என்கிற கருத்தில் தான் அந்த நீதிபதியும், வழக்கறிஞர்களும், வழக்கு போட்டவரும் சட்டசபைக்கு வரலாம் என்றார்கள். அப்போதும் கூட நீதிபதிகள் வந்து விளக்கம் சொல்ல வேண்டுமென்று தீர்ப்பு இருக்கிறது. இன்றைக்கு கட்சி மாச்சரியங்களை மனதிலே வைத்துக் கொண்டு இவர்களுக்காக நாம் என்ன வாதாடுவது, இவர்களோடு சேர்ந்து பேசுவதா என்கிற முடிவுக்கு உறுப்பினர்களில் சில பேர் ஒருவேளை தவறுதலாக வந்துவிட்டால், எதிர்காலத்திலே ஒரு மாற்றுத் தீர்ப்பு வருகின்ற காலம் வரை, இதுவே ஒரு தவறான வழிகாட்டி நெறியாக அமைந்து விடும். அன்றைக்கு உறுப்பினர் எல்லோருடைய உரிமைகளும் பறிக்கப்படுகிற ஒரு சூழ்நிலை வந்துவிடும். நான் இன்றைக்கு எடுத்துச்சொல்வதெல்லாம் உச்ச நீதிமன்றத்தைக் கேட்டார் குடியரசுத் தலைவர். அதற்கு பின்பு தீர்ப்புகள் வந்தன. அந்தத் தீர்ப்புகள் கூட காலா காலத்திற்கும் எல்லோரையும் கட்டுப்படுத்தாது. அதற்குக் காரணம் உச்ச நீதிமன்றத்தினுடைய பல தீர்ப்புகள் மாறியிருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே இன்றைக்கு

[திரு. வலம்புரி ஜான்] [1983 மார்ச 28

முதலமைச்சர் பொறுப்பிலே நீடிக்கலாமா என்பது முதலமைச்சரைப் பொறுத்ததல்ல. அவர் ஓர் உறுப்பினர் என்கிற முறையில் எல்லோருடைய உரிமையையும் பாதிப்பது. நடைபெற்றுள்ள வழக்குகளை எல்லாம் வைத்துக் கொண்டு பார்த்தால் கூட—கல்கத்தா உயர் நீதிமன்றத்தில் 1951-ல் நடைபெற்ற வழக்கு மற்றும் ஓரிசா உயர் நீதிமன்றத்தில் 1955ல் நடைபெற்ற வழக்கு இவைகளை எல்லாம் பார்க்கிறபோது மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் இங்கே வாசித்துக் காட்டியிருக்கிறார்களே அதற்கேற்ப விளக்கம் சொல்லலாம். நான் பேசுவது தவறு என்று தெரிந்திருந்தும், உள்நோக்கத்தோடு பேசுகிறேன் என்பதை அறிந்திருந்தாலும் பேசலாம் என்று இருக்கிறது. அப்படித்தான் குறிப்பிட்ட அந்தப் பிரிவிற்கும் விளக்கம் சொல்லலாம். உள்நோக்கம் கொண்டது என்று அறிந்திருந்தாலும் பேசலாம். காரணம் அந்தக் குறிப்பிட்ட பிரிவினுடைய நோக்கம், ஆப்ஜெக்ட் என்று வருகின்றபோது, அதற்கு முழு சுதந்திரம் இருக்க வேண்டும். நான்கு சுவர்களுக்குள் அவர்கள் எது வேண்டுமானாலும் பேசலாம். எது வேண்டுமானாலும் என்று சொல்கிற போது 'Anything' என்று வருகிறது. 'Anything' என்கிற சொல்லுக்கு சுப்ரீம் கோர்ட் என்ன சொல்கிறது என்றால், 'Everything' என்று பொருள் சொல்கிறது. பொறுப்பானவர்களாக நாம் பேச முடியும். ஆகவே நாம் பொறுப்பானவர்களாகப் பேச இயலும். பொறுப்பற்றவர்களாக, கட்டுப்பாடற்றவர்களாக சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் நடந்து கொள்ள மாட்டார்கள் என்ற நம்பிக்கை நாட்டு மக்களுக்கும் வேண்டும். எல்லோருக்கும் வேண்டும். இந்தக் குறிப்பிட்ட பிரச்சினையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்கள் முதலமைச்சர் என்பதற்காக மட்டுமல்லாமல் ஓர் உறுப்பினர் என்கிற முறையில் அவரைப் பாதிக்கிற ஒன்றாக, உறுப்பினர்களைப் பாதிக்கிற ஒன்றாக இது இருக்கிறது. ஆகவே கட்சி மாச்சரியங்கள் காரணமாக அவருக்குச் சாராது பேசுவது தம் மீது நாமே நெருப்பை வைத்துக்கொள்வது என்கிற நிலையை நன்றாக உணர்ந்து, உறுப்பினர்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை உணர்ந்து, அந்தக் குறிப்பிட்ட நோட்டீசுக்கு பதில் தரக்கூடாது என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் ஒருவர் பதில் தர வேண்டுமென்று சொல்கிறார். அன்றைக்கு டாக்டர் கிருஷ்ணா ராவ் அவர்கள் சபாநாயகராக இருந்தார்கள். அன்றைக்கு அமைச்சராக இருந்த ஒருவர் செய்த முடிவு நோட்டீஸ் வரக்கூடாது என்பது. ஆனால் இன்றைக்கு அவர் அமைச்சராக இல்லை. வெளியிலே



1983 மார்ச் 28] [திரு. கா. இராசா முகமது]

இருக்கிறார். இன்றைக்கு அவருடைய முடிவு நாம் நோட்டிசை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது. ஆளுக்கொரு நீதி, நாளுக்கொரு வாதம், இதனை நாடு பார்த்துக்கொண்டிருக்கிறது. ஆகவே முடிவாக நான் இந்த அரசைப் பாராட்டிச் சொல்ல வேண்டியதெல்லாம் * * *

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, நான் இந்த இறுதி துணை நிதி நிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு முன்னால், இதற்கு முன்னாலேயே நான் எழுப்பிய ஒரு பிரச்சினைக்கு மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களால் ரூலிங் வழங்கப்பட்டது. அது சரியா தப்பா என்பது வேறு. ஆனால் ஒரு வழக்கைப்பற்றி நீதிமன்றத்தில் இருக்கிற வழக்கைப்பற்றி, தீர்ப்பு கூறுவதற்கு முன்பு இங்கே விவாதிப்பது என்பது அந்த வழக்கினுடைய தீர்ப்பு சாதக பாதகமான நிலையில் அமைய ஏதுவாகும். நம்முடைய விதி 67-ன் கீழ் இந்த மன்றத்தை நடத்துவதைப் பொறுத்தவரை, இந்த விதிகளின் அடிப்படையிலே தலைவர் அவர்கள் முழு ஆதிபத்தியம் பெற்றிருக்கிறார்கள். அந்த ஆதிபத்தியத்தை அடக்கு

(நண்பகல் 12-00)

வதற்கோ, குறைப்பதற்கோ இந்த உலகத்தில் யாருக்கும் எங்கேயும் சக்தியில்லை. அந்த அளவுக்கு விதிகள் வழியாக நாங்கள் அனைவரும் ஒரு அதிகாரத்தைத் தங்களுக்குத் தந்திருக்கிறோம். அந்த விதி என்ன சொல்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். போடப்பட்ட வழக்கு சரியா அல்லது தப்பா என்பதல்ல பிரச்சினை. அது தனிப்பட்டவரின் உரிமையைப் பொறுத்ததா அல்லது நம்முடைய அவையின் உரிமையையே பாதிக்கிறதா என்பதெல்லாம் வேறு பிரச்சினை. இப்போது நம்முன் உள்ள பிரச்சினை இதுதான். ஒரு வழக்கு நீதி மன்றத்தில் இருக்கும்போது, அவையில் அதைப் பற்றி நாம் பேசலாமா கூடாதா என்பதுதான். ஒருவேளை அளிக்கப்படும் தீர்ப்பு தவறாக இருந்தால், நாம் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகலாம். அங்கேயும் நியாயம் வழங்கப்படவில்லை என்றால், அதையே நாம் ஒரு தேர்தல் பிரச்சினையாக ஆக்கி இறுதியில் அரசியல் நிர்ணயச் சட்டத்தையே கூட மாற்றலாம்.

எனவே இன்றைக்கு ஒரு வழக்கு நீதிமன்றத்தில் இருக்கும்போது, விவாதிக்கலாமா கூடாதா என்ற பிரச்சினை பின்னால் எழுப்பப்பட்ட பிறகு, தாங்கள் அதை ஆராய்ந்து, அதைப்பற்றி நாம் இங்கே விவாதிக்கக்கூடாது

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1983 மார்ச் 28

என்று தீர்ப்பளித்திருக்கிறீர்கள். என்றாலும், தங்களின் தீர்ப்பையும் மீறி அந்தப் பொருள் குறித்து அதற்குப் பிறகும் இங்கே விவாதிக்கப் பட்டிருக்கிறது. எனவே இதில் தங்களின் முடிவான தீர்ப்பை நான் எதிர் நோக்குகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** வழக்குபற்றி விவாதிப்பது என்பது வேறு. அந்த வழக்கில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சம்மன்சைப் பெறலாமா கூடாதா என்பதில் உறுப்பினர் தம்முடைய கருத்தைத்தான் சொல்லியிருக்கிறார். எனவே இதை வழக்கிற்குள் சென்று பேசுவதாகக் கருதக்கூடாது. அதாவது ஒரு வழக்கின் உள்ளே போய் பேசுவது என்பது வேறு. அது விதிப்படி தவறாகும். ஆனால் இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தம்முடைய கருத்தைக் குறிப்பிட்ட ஒரு பிரச்சினையைக் குறித்து மட்டும் தெரிவித்திருக்கிறார். அந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட சம்மன்சை—நோட்டீசை—வாங்கிட வேண்டியதில்லை என்று ஒரு பொதுவான கருத்தைத்தான் சொல்லியிருக்கிறார்.

Thiru A. R. DAMODARAN: * * *

It is casting an a aspersion.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** ஸ்டே கொடுத்ததாக மாண்புமிகு உறுப்பினர் சொன்னதாக எனக்குத் தெரியவில்லை. அதாவது ஒரு வழக்கிற்குள்ளே போய் பேசுவது என்பது வேறு. அவருடைய கருத்தைச் சொல்வது என்பது வேறு. அந்த அர்த்தத்தில் மட்டும் எடுத்துக்கொள்வது நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இது குறித்து ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டு அது அவைக் குறிப்பில் இருக்க வேண்டும். அப்போதுதான் அது பிற்காலத்தில் எல்லோருக்கும் உதவும். . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வழக்கு சம்பந்தப்படாத செய்திகள், விமரிசனங்கள், அறிவுரைகள், ஆலோசனைகள் என்பவைகளைத் தவிர, வழக்கிற்குள்ளாகச் சென்று சொல்லப்பட்ட கருத்துக்கள் அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும் என்று ஆணையிடுகிறேன்.

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



1983 மார்ச் 28]

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தற்போது வழக்கு சம்பந்தப் படாத செய்திகள் எவையெவை என்று சொல்ல முடியாது. அவைகளைப் பார்த்துத்தான் சொல்ல வேண்டும். அதுவரை அவைக் குறிப்பு நடவடிக்கைகள் வெளியிடுவதை நிறுத்திவைத்து,—மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்கூட இங்கே இருக்கிறார்கள் - அவரோடும் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் அமர்ந்து பேசி, எந்தெந்தப் பகுதியை நீக்கலாம் என்றுகூட முடிவெடுக்கலாம்.

**திரு. ஏ. ஆர். தாமோதரன் :** இதில் சட்ட அமைச்சரிடம் பேச வேண்டிய அவசியமே இல்லை. மாண்புமிகு மேலவைத் தலைவர் அவரைக் 'கன்சல்ட்' செய்ய வேண்டும் என்று எந்த ரூலிலும் இல்லை.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** விதிகள் என்பவை நாம் உருவாக்கியவைகள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இந்த விதிகளை விதிக் குழு மாற்ற முடியும். நாளைக்கு அவையின் விதிக் குழு கூடும், கூட முடியும். விதிகள் என்பவை நம்மாலே போடப்படுபவை. எப்போது வேண்டுமானாலும் மாற்றப்படலாம். எனவே விதிகளை நாம் உண்டாக்கிவிட்டு பிறகு விதிகளுக்கு நாம் அடிமைகளாக மாறிவிடக்கூடாது. யதார்த்தமாகப் பார்க்க வேண்டும். எனவே மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மொத்தத்தையும் படித்துப் பார்த்து எந்தச் சொற்றொடரை நீக்க வேண்டும் என்று முடிவு செய்யலாம். எனவே அதைக் குறிப்பிட்டு நீக்கப்பட வேண்டும் என்று சொன்னால், நல்லதாக இருக்கும்.

**திரு. செ. முத்துசாமி :** * * *

**திரு. வலம்புரி ஜான் :** தவறு என்று சொன்னது என்னுடைய கருத்தல்ல. எனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் சொல்வது சரியல்ல.

. . . . . . . . It is not a castigation of the Judges. I have been referring to a passage from the Supreme Court Judgment. Will you consider and construe that the very passage of the Supreme Court Judgment. is castigation ? I am quoting a Supreme Court Judgment.

Thiru A. R. DAMODARAN : The passage in the Supreme Court Judgment does not refer to this particular case.

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

Thiru VALAMPURI JOHN : It may not refer to this particular case, but it has relevance.

Thiru A. R. DAMODARAN : Sir, I must confess that I am not going into the merits of his argument. We are all concerned only with the privileges.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர்கள் அனைவரும் உட்கார வேண்டு. இந்த விவாதத்தில், அவை குறிப்பு முழுவதையும் வரச் செய்து, அதில் வழக்குக்குள் சென்று பேசிய அந்தப் பேச்சுப் பகுதிகள் எவை எவை என்று தெரிகிறதோ அந்தப் பகுதிகள் நீக்கப்படும். அதுவரை மொத்தமாக அவைக் குறிப்பை நிறுத்தி வைக்க ஆணையிடுகிறேன். எல்லாவற்றையும் பார்த்து எந்தெந்தப் பகுதிகளை மட்டும் நீக்குவது என்று முடிவு செய்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிற துணை மானியக் கோரிக்கைகளைப் பொறுத்தவரையில், . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இது குறித்து செய்தித் தாள்களில் எதையும் பிரசுரிக்க வேண்டாம் என்றும் ஆணையிடுகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையில் வைக்கப்பட்டிருக்கும் துணை மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கை அளிக்கப்பட்ட பிறகு ரூ. 540.48 கோடிக்கான துணை மானியக் கோரிக்கை அளிக்கப்பட்டு இந்தத் தொகை தேவைப்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கான முக்கியமான காரணங்கள் எவையென்பதையும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தம்முடைய உரையில் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார். அனுகூலமற்ற ஒரு பருவ நிலை ஏற்பட்டதன் காரணமாக இந்த அரசு மக்களுக்குக் குடிநீர் வழங்குவதற்கு ரூ. 12.78 கோடிக்கு அதிகமான அளவுக்கு சென்ற ஆண்டு நிதியில் செலவாகியிருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார். கூடுதல் செலவு செய்தாவது மாநிலத்தில் உள்ள வறட்சியை, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்றுதான் நாம் கருதுகிறோமே தவிர, இதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது.



இன்றையதினம் குடிநீர்ப் பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையாக ஆகி விட்டது என்பதை நாம் உணர வேண்டும். சென்னையைவிட மாவட்டங்களில் குடிநீர்ப் பற்றாக்குறை மிக அதிகமாக இருக்கிறது. தென் மாவட்டங்களைக் காட்டிலும் வட மாவட்டங்களில் இந்தப் பிரச்சினை இன்னும் கடுமையாக இருக்கிறது. தென்மாவட்டங்களைப் பொறுத்த வரையிலாவது, இன்னும் ஒரு மாத காலத்தில் தென் மேற்குப் பருவ மழை பெய்யும்—அதாவது மே மாதக் கடைசி அல்லது ஜூன் மாதத் தொடக்கத்தில் தென்மேற்குப் பருவ மழை பெய்யலாம் என்று எதிர்பார்க்கிறோம். மாண்புமிகு கொறடா டாக்டர் ஜனார்த்தனம் அவர்களின் மாவட்டத்தில் இப்போதே மழை பெய்கிறது என்று குறிப்பிட்டார். அவர் அந்த மாவட்டத்தில் பிறந்ததன் காரணமாக ஒரு வேளை பெய்கிறதோ என்னவோ ? மற்றப் பகுதிகளில் அப்படியில்லை. என்றாலும் மாண்புமிகு கொறடா அவர்கள் இங்கே இருப்பதால், இங்கேயும் மழை பெய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். தற்போது மழையில்லை. இன்னும் மூன்று மாத காலத்திற்கு மழை இல்லாத நிலைமைதான் இருக்கும். இதுதான் இயற்கையான காலநிலை. அதற்கு விதிவிலக்காக மழை பெய்தால், பெரிதும் பயனுள்ளதாக இருக்கும். நாமும் அதைப் பாராட்டி வரவேற்போம். எனவே இதை உணர்ந்து நாம் குடி நீர்ப் பிரச்சினையை அணுக வேண்டியிருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. இந்தப் பிரச்சினை என்பது ஏதோ விவாதித்துத் தீர்க்கப்படக் கூடியதல்ல. ஆங்காங்கே இருக்கிற நிலைமைகளில் எல்லோரும் இணைந்து நின்று குடி நீர்ப்பிரச்சினையைத் தீர்த்தாக வேண்டும். எங்கிருந்தாவது குடிநீரைக் கொண்டுவந்து விநியோகித்தாக வேண்டும். தண்ணீர் கிடைக்கும் பகுதி களில் பெரிய குழாய்க் கிணறுகளை அமைத்து அங்கேயிருந்து சென்னை நகரில் விநியோகிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

44 லட்சம் மக்கள் வாழ்கிற சென்னை நகரில் 20 லட்சம் பொது மக்களுக்கு மட்டும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தான் தண்ணீர் வழங்கப்படுகிறது. 80 சதவீத சென்னை மக்கள் கிணறு களையும் மற்றும் வியாபாரத்திற்கு வருகிற நீரையும்தான் நம்பியிருக் கிறார்கள். சென்னை நகர மக்களின் நிலைமை மிகவும் பரிதாபமாக இருக்கிறது. சங்க இலக்கியத்தில் சொல்வார்கள். பாலை நிலத்தைப்பற்றி அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் ஒரு பெரிய கவிஞர் வேறு. சங்க இலக்கியங்களில் நிரம்ப அனுபவம் உடையவர். நான் ஏதோ கொஞ்சம் படித்திருக்கிறேன்.

அந்த சங்க இலக்கியத்தில் பாலை நிலத்தைப்பற்றிச் சொல்லும்போது, 'பாலை நிலத்தின் வழியாக நடந்து செல்லும் பாணர்கள், கொடிய பாலையைக் கடந்து செல்லுகிற நோக்கில் இலையில்லாத உடை மரத்தின் நிழலில் தங்கியிருந்துவிட்டு செல்லுகிற நோக்கில், அவர்களுக்கு கண்ணிலிருந்து வருகிற கண்ணீரே உண்ணீராகப் பயன்பட்டது' என்று சொல்லப் படுகிறது. அந்த அளவுக்குக் கொடிய நீர்ப் பற்றாக்குறையை இந்த நாடு முன்னாலே சந்தித்திருக்கிறது. ஆனால் இன்றையதினம், இவ்வளவு பெரிய விஞ்ஞான வளர்ச்சிக்குப் பிறகும், முன்னேற்றத்திற்குப் பிறகும், பல்வேறு வகைகளின் இயற்கையே கடந்துவிட்ட பிறகும், நாட்டு மக்களைக் காப்பதற்காக என்றே ஒரு க்ஷேம நல அரசு உருவாகிவிட்ட நிலையிலும், இப்படிப் பட்ட பெரியதொரு பற்றாக்குறை வந்து பாதித்திருப்பதன் காரணமாக நாமெல்லாம் மிகவும் எச்சரிக்கையோடு செயல்பட வேண்டியிருக்கிறது. இந்தப் பிரச்சினையின் கோர உருவத்தை உணர வேண்டுமென்றால், இரண்டு பத்திரிக்கைகளைப் பார்த்தால்போதும். இந்து பத்திரிக்கையிலும், எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையிலும் உள்ள படங்களைப் பார்த்தால் தெரியும். இரவு இரண்டு மணிக்கு மாம்பலம் பகுதியில் குடங்களை வைத்துக்கொண்டு குழாயடியில் காத்துக்கொண்டிருப்பதும், இன்னும் சிலர் அங்கேயே படுத்துக் கொண்டிருப்பதும், வரிசையாக பல குடங்களும், மற்ற பாத்திரங்களும் வைக்கப்பட்டிருப்பதும் பிரச்சினையின் உண்மையை நமக்குப் புலப்படுத்திக் கொண்டிருக்கின்றன. இதையெல்லாம் ஏதோ மிகைப்படுத்தியிருக்கிறார்கள் என்று எண்ணக்கூடாது. அவர்கள் உண்மையில் இருக்கிற சூழ்நிலையைத் தான் படம் பிடித்துக் காட்டுகிறார்கள். நகர்ப்புறங்களில் ஒவ்வொரு தெருவிலும் குழாயடியில் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொள்வது அதிகமாகிக் கொண்டு வருகிறது. ஒருவருடைய குடம் எப்போது நிறையும் என்று தெரியாமல் காத்துக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. குடம் முழுவதும் நிறையும் என்ற உறுதிகூட இல்லை. ஆகவே கால் குடம் முடிந்ததும் நீ எடு, நான் பிடித்துக்கொள்கிறேன் என்று வருகிறார்கள். இதன் காரணமாக வலிமை பெற்றவர்களின் ஆதிக்கமும், வலிமை இழந்தவர்கள் தொல்லை படுவதும் அதிகமாகிறது. எனவேதான் சென்னை நகரம், மதுரை நகரம்

(பிற்பகல் 12—10)

போன்ற நகரப் பகுதிகளில் இன்னும் முறையான அளவில் வேகன்களில் கொண்டு வந்து தண்ணீர் கொடுக்க வேண்டும். தண்ணீர் கொண்டுபோகிறபோது ஒழுகுகிற தண்ணீரைக் கூட பிடிக்கிறார்கள். இது நடக்கிற நிகழ்ச்சி. நான்





போய் பார்க்கவில்லை. எனக்குக் கொஞ்சம் தண்ணீர் கிடைக்கிறது. ஆனால் மற்ற பகுதிகளில் தண்ணீர் கிடைக்கவில்லை என்று எண்ணுகிற போது, வீட்டுக்கு பத்துக் குடம் தண்ணீர் அல்லது ஐந்து குடம் தண்ணீராவது கிடைக்கிற நிலையை திட்டமிட்டுச் செய்ய வேண்டும். சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில், இந்தப் பிரச்சினையை குடிநீர் அமைச்சருக்கு மட்டும் விட்டுவிடாமல் மேலும் மூன்று, நான்கு அமைச்சர்கள் பொறுப்பேற்றுக்கொண்டு எந்தெந்தப் பகுதிகளில் தண்ணீர் வருகிறது என்பதைப் பார்த்தால்தான், பிரச்சினையைத் தீர்க்க முடியும். இது போன்ற மக்களுடைய பிரச்சினையில் எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் துணை நின்று மக்களுடைய துயரைத் தீர்த்தால் தான், மக்களுக்குத் துயர் தெரியாமல் இருக்கும். இந்தச் சமயத்தில் சட்டச் சிக்கல்களைப்பற்றி நாம் பேசிக்கொண்டிருக்கிறோம் என்று தெரிந்தால், நம்மையெல்லாம் அடித்தாலும் அடிப்பார்கள். அந்த அளவிற்கு மக்கள் வேதனைக்குள்ளாகியிருக்கிறார்கள். அப்படி அவர்கள் அடிப்பதிலே கூட தப்பில்லை, அந்த அளவிற்கு வேதனை அங்கே இருக்கிறது என்பதை மிக உரிமையோடும், அழுத்தத்தோடும் சொல்லிக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்திலே ராசிபுரம் போன்ற பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறை மிகுதியாக இருக்கிறது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூட பேசும்போது, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், பரவாயில்லை என்று சொன்னார்கள். அவர் அங்கே ஒரு கூட்டத்திற்கு வந்திருந்தபோது, என்னிடத்திலே சொன்னார்கள். எல்லா மாவட்டத்திற்கும் போய் பேசியிருக்கிறேன். ஆயிரக்கணக்கான மக்கள் வருகிறார்கள். மக்களிடையே செழிப்பு தெரிகிறது பார்த்தீர்களா என்று கேட்டார்கள். உண்மைதான் என்று நான் சொன்னேன். இப்போது அதற்கும் சேர்த்து வறுமை வந்திருக்கிறது. இங்கேயுள்ள மரங்கள் எல்லாம் ஓராண்டில் மூன்று மாத மழையையும், 9 மாத வறட்சியையும் தாங்கிப் பழக்கம். ஆனால் கன்னியாகுமரியில் உள்ள மரங்கள் இரண்டு மாதங்கள் கூட தொடர்ந்து மழை இல்லாமல் இருந்ததில்லை. அப்படி வளர்ந்த தென்னை மரங்கள் பல மாதங்களாக மழை இல்லாமல், சாகப் போகும் கோழி தன்னுடைய சிறகைத் தூக்கிக்கொண்டு இருப்பதைப் போல, தன் சருகுகளை சாய்த்துக்கொண்டிருக்கின்றன. அதைப் பார்த்து வளர்த்த நாங்கள் வரும் ஐந்தாண்டுகளுக்கு, ஏழாண்டுகளுக்கு அதிலிருந்து ஒன்றையும் எதிர்பார்க்க முடியாது. அங்குள்ள விவசாயிகளுக்கு பலா, தென்னை, இரப்பர் போன்ற பெரிய மரங்களிலிருந்து சில ஆண்டுகளுக்கு எந்தவிதமான பலனும் கிடைக்காது. ஆகவே,

குடிக்கத் தண்ணீர் கிடைக்காத இந்த நேரத்தில் அந்த மாடுகளுக்குத் தண்ணீர் கொடுங்கள் என்று நான் கேட்கவில்லை. அதனால் பாதிக்கப்படக் கூடிய விவசாயிகளின் நிலை என்ன என்பதை உணர்ந்து அவர்களுக்கு எப்படி உதவி செய்வது என்பதைப்பற்றி யோசிக்க வேண்டும். அவர்களுக்கு இருக்கக் கூடிய கடனை ரத்து செய்வது, அல்லது ஐந்தாண்டு, ஏழாண்டு களுக்கு அதை வசூல் செய்யாத சூழ்நிலையை உருவாக்குவது ஆகியவற்றைப் பற்றியெல்லாம் சிந்திக்க வேண்டும். அதுதான் இன்றுள்ள பிரச்சினை. வேறு பிரச்சினைகள் எல்லாம் இப்போது மக்கள் பிரச்சினை அல்ல என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

நாகர்கோயில் நகருக்கு பேச்சிப்பாறை அணையிலிருந்து தண்ணீர் வருகிறது. அங்கே நான்கைந்து பம்பு வைத்து அடித்து கொண்டு வருகிறார்கள். மேட்டூர் அணையில் பம்பு வைத்து பூமிக்குக் கீழேயிருந்து தண்ணீர் கொண்டு வருகிறார்கள். அங்கேயும் மீன்கள் செத்து பல நாட்களாக அழுகி, தண்ணீர் அசுத்தமாகி அதனால் பல தொத்து நோய்கள் பரவுகின்றன. அதை பாதுகாப்பதோடு, குடிக்கிற நிலையில் பாதுகாப்பான மருந்துகளைச் சேர்த்து அனுப்புவதோடு மக்களுக்கு எச்சரிக்கையும் செய்ய வேண்டும். சென்னை நகரத்தில் உள்ள வானொலியைத் திருப்பினால், காலை முதல் மாலை வரை இரண்டு மூன்று தடவை, தண்ணீரைக் கொதிக்க வைத்துத்தான் குடிக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். அதைப் போலவே எல்லா இடங்களிலும் தெரிவிக்க வேண்டும்.

வறட்சிப் பகுதியாகத் தஞ்சாவூரை அறிவியுங்கள் என்றால், அதற்கு இலக் கணம் இல்லை என்று சொல்லுகிறார்கள். மாண்புமிகு அரசு கொறடா அவர் கள் கூட வெள்ளைக்காரன் காலத்திலே எழுதி வைத்ததைச் சொன்னார்கள். அவன் போன பிறகும் அவன் எழுதியதை மாற்ற முடியவில்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** அப்படி மாற்றி எழுதுகிற அதிகாரம் நம்மிடம் இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவிக்கிற பட்டினிச் சாவு என்பதற்கும் வறட்சி என்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இதை மாற்றி எழுதுகிற அதிகாரம் மத்திய அரசுக்கு இருக்கிறது. பஞ்சம், வறட்சி என்று அறிவிப்பதற்குரிய வரன் முறையைச் செய்வதை மத்திய அரசு வைத்துக்கொண்டிருக்கிறது என்று அவர் பேசும் போதே சொன்னார். அங்கே வறட்சி என்று அறிவிக்க வேண்டும்



என்றாலும், அவர்கள் பார்த்து ஒப்புக்கொண்ட பிறகுதான் அப்படி அறிவிக்க முடியும் என்ற நிலை இருக்கிறது. இதையெல்லாம் மாற்ற வேண்டுமென்று தான் தென் மாநில முதலமைச்சர்கள் பெங்களூரில் கூடி பேசினார்கள். அதன் விளைவாக சர்க்காரியா கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. அது ஒரு நபர் கமிஷனாக இல்லாமல், அதிலே மூன்று நான்கு நிபுணர்களைப் போட்டு டெர்ம்ஸ் ஆப் ரெப்ரன்சில் அறிக்கை தரக்கூடிய நாளைக் குறிப்பிட்டுச் சொல்லி, மாநிலம் அதிக அதிகாரங்களைப் பெற நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து உழைப்போம், வெற்றி பெறுவோம். இப்போது தமிழகத்திலே இருக் கக்கூடிய பாராளுமன்ற உறுப்பினர்கள், நம்முடைய நிதியமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்கள், ஆகியவர்கள் எல்லாம் டில்லியிலே சந்தித்து, இந்தப் பகுதியிலே இரண்டு நாளைக்கு ஒரு முறைதான் குடிநீர் கொடுக்க முடியும் என்ற நிலை வந்த பிறகு, அதை பஞ்சப் பிரதேசம் என்று அறிவிக்காமல் என்னவென்று அறிவிப்பது என்று கேட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்று இந்தியத் தலைமை அமைச்சர் அவர்கள் சென்னைக்கு வர விரும் பது மகிழ்ச்சிக்குரியது. அவர்கள் பார்க்கிற இடமும் நேரமும் ரொம்பவும் குறை வாக இருக்கிறது. கன்னியாகுமரி வரை பார்த்துவிட்டு திருவனந்தபுரம் சென்று விமானத்தில் செல்லலாம். இன்று இரவே போவதைவிட நாளை காலை போனால் பயனுடையதாக இருக்கும். இருந்தாலும் அவருடைய பெரிய வேலைகளுக்கிடையில், வந்து இதைக் காணுவது என்பது ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்—என்பதைப் போல இருக்கிறது. அவர் அமைச்சர்களோடு சேர்ந்து பேசி நல்ல முடிவுக்கு வந்து நம்முடைய நிவாரணப் பணிக்கு நல்ல முறையில் ஊக்கம் தரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் உங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னைப் பொறுத்தவரையில், இந்தகைய பிரச்சினைகளை வைத்துக் கொண்டு வேறு பிரச்சினைகளைப்பற்றிப் பேச முடியவில்லை. நான் குடிநீர்ப் பிரச்சினையை மிகைப்படுத்திப் பேசுவதாகக் கருத வேண்டாம். நான் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன். எங்களுடைய மாவட்டத்தில் மாடுகளை அச்ச உணர்வின் காரணமாக வேறு வழியில்லாமல் விற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஐந்தாயிரம் ரூபாய் கொடுத்து வாங்கிய மாடு களை இரண்டாயிரம் ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் மாடுகளை வளர்க்க முடியவில்லை. மனிதனுக்கே குடிக்கத் தண்ணீர் கிடைக்கவில்லை என்று சொல்லும்போது, மாட்டைக் குளிப்பாட்ட அவற்றைப் பாதுகாக்க தண்ணீர் எங்கேயிருந்து கிடைக்கும்?

மேலும் மழை எப்போது பெய்யும் என்று தெரியாத நிலை இருக்கிறது. தமிழ் நாட்டில் ஓரிரு மாதங்கள் கழித்துப் பெருமழை பெய்தாலும், விவசாயிகள் உழுவதற்கு மாடுகள் இருக்காது. செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகத்திலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சந்தைகளில் மாடுகள் என்ன விலைக்கு விற்கப்படுகின்றன என்று பார்த்தால், நூறு ரூபாய்க்கும் 25 ரூபாய்க்கும் விற்கப்படுகின்றன. இரண்டாயிரம் ரூபாய் மாடு 250 ரூபாய்க்கும் 300 ரூபாய்க்கும் விற்கப்பட்டு பொள்ளாச்சி சந்தைக்கும், கொல்லம் சந்தைக்கும் கறிக்காக போய்க்கொண்டிருக்கின்றன என்பதை அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, கால்நடைத் துறையும், வங்கிகளும் ஈடுபட்டு, பணத் தேவையின் காரணமாகவும், காப்பாற்ற முடியாமலும் விற்றுவிடுவதை வாங்கித் தங்கள் பாதுகாப்பில் வைத்துக்கொண்டு பிறகு இரண்டு, மூன்று மாதங்களுக்குப் பிறகு அவர்களிடம் கொடுக்க வேண்டும். மாட்டுச் செல்வம் இல்லாவிட்டால் விவசாயம் செய்ய முடியாது. எருவும் கிடைக்காது. ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களுக்குச் சென்று நாங்கள் ஏழாயிரம் ரூபாய், எட்டாயிரம் ரூபாய் கொடுத்து வாங்குவதுண்டு. பெங்களூர் காளை ஏழாயிரம் ரூபாய் ஆகும். கோயம்புத்தூர் மேச்சேரி மாடு மூன்றாயிரம் ரூபாய்க்கு வாங்கலாம். நாங்கள் இரண்டு மாடுகளையும் வாங்கி உழுகிற விவசாயிகள். ஆகவே கால்நடைச் செல்வங்களைக் காப்பாற்ற முயற்சி செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 12-20)

கிணற்றில் தண்ணீர் இருக்கும் விவசாயிகள் கொஞ்சம் புஞ்சைப் பயிரை ஏற்றியிருக்கிறார்கள். இன்றைக்கு ஆறு மணி நேரத்திற்கு மின்சாரம் கொடுக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். ஆனால் உண்மையில் இரண்டு மணி நேரம் மூன்று மணி நேரத்திற்குத்தான் மின்சார விநியோகம் வேண்டும். அப்படிச் செய்தால்தான் புஞ்சைப் பயிர்களையாவது நாம் காப்பாற்ற முடியும். நாம் அதையாவது செய்ய வேண்டுமென்று இந்த சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய துணை மானிய அறிக்கையிலே சாலை போடுவதற்கு என்று ரூபாய் இரண்டு கோடி அளவுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். தமிழகம்தான் இந்தியாவிலேயே நெடுஞ்சாலைத் துறையில் முதல்தரமானதாக இருந்தது. ஆனால் இப்போது அப்படியில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்மைவிட கேரளாதான் மிஞ்சி இருக்கிறது. முன்னாலே கேரளாவிலே





நிலைமை மோசமாக இருந்தது. மத்திய அரசு உதவியோடு பராமரிக்கின்ற நெடுஞ்சாலைகளை நாம் கவனிக்க வேண்டும். அங்கே சரியான ராப் போர்ட் இருக்க வேண்டும். இணைப்புப் பாலம் சரியில்லை. அந்த அமைப்பு முறையிலே எங்கோ கோளாறு ஏற்பட்டிருக்கிறது என்று நான் நினைக்கிறேன். அதைப்பற்றி நாம் கவனிக்க வேண்டும். நமது நெடுஞ்சாலைகள் முன்னால் இருந்தது போன்று சிறப்பான முறையில் இருக்கத்தக்க முயற்சிகள் எடுக்க வேண்டும்.

இன்னொன்று. நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே சத்துணவுத் திட்டத்திற்கு என்று நிதி ஒதுக்கியிருக்கிறார்கள் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்னால் செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் 97 சென்ட்ரல் கிச்சன்ஸ், மைய உணவுக் கூடங்கள் இருந்தன. அந்த சத்துணவு மையங்கள் ஜூலை · ஆகஸ்டிலே இருந்து மூடப்பட்டன. அதிலே 97 சூப்பிரிடென்டுகள் வேலை செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் இப்போதும் அந்தப் பதவியிலே இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு அந்த வேலையில்லை. ஆனால் அதற்கு அவர்கள் சம்பளம் வாங்குகின்றார்கள். அவர்களை வேறு இடத்திற்கு இதுவரையில் 'டைவர்ட்' பண்ணவில்லை. ஆனால் அவர்கள் பணம் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். வேலையில்லாமல் இருக்கிறார்கள். நாடு வறட்சியிலே இருக்கின்றது. ஆனால் அவர்கள் வேலையில்லாமல் இருக்கின்றார்கள். சி.ஈ.ஓ. கட்டுப்பாட்டில் 97 பேர்கள் அப்படி இருக்கின்றார்கள். அவர்களையாவது 'டைவர்ட்' பண்ணிக்கொள்ளலாம். அங்கே வேலை நடக்கும். அதையும் செய்யவில்லை. 97 உணவு மையங்கள் பெரிய பெரிய கட்டிடத்தில் இருக்கின்றன. நாம் கேர் நிறுவனத்தின் உதவியோடு கட்டியவை அவை. அவற்றை அடைத்து வைத்திருக்கிறோம். அதை நாம் பயன்படுத்தவில்லை. அதனுடைய வாகனங்கள், சுமார் 100 வாகனங்களுக்கு மேற்பட்டவைகள். மெயின் ரோடிலே கிக்கிரவாண்டியிலே வரிசையாக இருக்கின்றன. இதை வேண்டுமானால் தண்ணீர் கொடுக்கவாவது பயன்படுத்தலாம். புதிய திட்டம் கொண்டுவருகின்றபோது, பழைய திட்டங்களில் ஒதுக்கப்பட்டதை, அதிலே இருக்கின்ற அமைப்புகளை நாம் பயன்படுத்தலாம். அந்த அளவுக்கு நாம் விரைவாகச் செயல்படவில்லை என்றால், நாம் எப்படித்தான் செயல்படப்போகிறோமோ என்ற சந்தேகம் எழுகிறது. உதவியாளர்களை அனுப்பிவிட்டோம். சத்துணவுத் திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து செயல்பட வேண்டும். நாம் முடிவு

[திரு. ம. சங்கரலிங்கம்] [1983 மார்ச் 28

எடுப்பதிலே, செயல்திட்டங்களைச் செயல்படுத்துவதிலே தீவிரமாக கவனம் செலுத்த வேண்டும். அதில் ஆமைவேகம் இருந்தால், இந்த குடிநீர்ப் பிரச்சினையில், வறட்சி நிவாரணப் பணிகளில் நாம் எப்படி வேகமாகச் செயல்பட முடியும் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்னொன்றைச் சொல்லி நான் முடித்துக்கொள்ள விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலே தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு, விவசாயம் பாதிக்கப்படுகின்றபோது, நாங்கள் எல்லாம் அங்கே இருக்கின்ற பேச்சிப்பாறை—பெருஞ்சாணி இரண்டு அணையிலிருந்தும் இராட்சச இயந்திரத்தை வைத்து விவசாயத்திற்குத் தண்ணீர் கொண்டுவர வேண்டுமென்று கேட்டோம். அதற்கு வேண்டிய முயற்சிகளை கலெக்டர் அவர்களும் தொடங்கினார்கள். நம்முடைய மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்தார்கள். அது எப்படி செயல்பட்டிருக்கிறது என்று பார்க்க வேண்டும். 11—1—1983ல் நான் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே பேசினேன். 11—1—1983 அன்று ஒரு கடிதம் எழுதப்பட்டது. இங்கே இருக்கக்கூடிய பாசனத் துறைச் செயலாளருக்கு எழுதியது. நாங்கள் எல்லாம் அதற்கு ஏற்பாடும் பண்ணியிருக்கிறோம். அந்த இயந்திரங்களை ஜனவரி மாதம் அனுப்பினால்தான், அது பயன்படும். ஜனவரி முடிந்தால் அந்தப் பயிருக்கு அது பயன்படாது என்று எழுதியிருந்தோம். அதற்கு 28—2—1983 அன்று கடிதத்திலே எழுதியிருக்கிறார்கள். அப்போதே பயிர்கள் கரிந்துபோயிற்று. அப்போதே தீய்ந்துபோயிற்று. அவை அழிந்துபோயிற்று. அந்தக் கடிதத்திலே கீழே அரசு துணை செயலாளருக்காக என்று ஒருவர் கையெழுத்து போட்டு அனுப்பியிருக்கிறார். கையெழுத்து 'துணைச் செயலாளருக்காக' என்று போட்டிருக்கிறார்கள். நாம் செயலாளருக்கு அனுப்பினால், பதில் 'அரசு துணைச் செயலாளருக்காக' என்று சொல்லி யாராவது ஒருவர் கையெழுத்துப் போட்டு அனுப்புகிறார்கள். அதிலே போட்டிருப்பது 8—3—1983. அதிலே தெரிவித்திருக்கின்ற செய்தி என்னவென்றால் 'பார்வையில் கண்ட தங்கள் கடிதம் கிடைக்கப்பெற்று, மேற்குறித்த பொருளின் மீது தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது' என்பது தெரிவிக்கப்படுகிறது'. இப்படியிருந்தால் எப்படி? ஒருவேளை அவர்களுக்கு ஒரு அறிக்கை வரலாம். அங்கே அவர்கள் ஒரு சின்ன மெஷினைக் கொண்டுவந்து வைத்து பார்த்திருப்பார்கள். அது சக்சஸ்ஃபுல்லாக இல்லை. அங்கே அந்த முயற்சி எல்லாம் எடுத்திருக்கிறார்கள்.



1983 மார்ச் 28] [திரு. ம. சங்கரலிங்கம்]

நம்முடைய பாசனத் துறை அமைச்சர் அவர்கள் தந்தி மூலமாகக்கூட தொடர்பு கொண்டு எப்படியாவது தண்ணீர் இறைக்கச் சொன்னார்கள். அப்போது பொருத்திய இயந்திரத்தை வைத்துக் கொண்டுதான் இப்போது குடிதண்ணீர் வருகிறது. தொடர்ந்து தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. இதைக் கூட கூடுதலாகப் பண்ணலாம். ஆனால் இந்த இலாக்காக்களிலே செயல்படுவதைப் பார்த்தால், நம்முடைய லெதார்ஜிக் அட்மினிஸ்ட்ரேஷனிலே இப்படித்தான் இருக்கும் என்று கருதுகிறேன். ஒரு சோம்பல் நிலை. அதை என்ன வார்த்தை சொல்லி குறிப்பிடலாம் என்று எனக்குத் தெரியவில்லை. ஒரு உறுப்பினர் மெத்தனம் என்கிறார். அப்படி மெத்தனமான முறைகள் இருக்கின்றன. நாம் இந்த அதிகாரிகளை வைத்து இப்படித்தான் செயல்பட வேண்டியிருக்கிறது. இந்த வறட்சி நிவாரணத்திலும்கூட. . .

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த விஷயம் குறித்து, நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் திரு. வின்சென்ட் அவர்களும் என்னிடத்திலே தொலைபேசியில் பேசிய 24 மணி நேரத்திற்குள்ளாக பொறியாளர்களை அனுப்பி நடவடிக்கையை நாம் மேற்கொண்டோம். அது குறித்து அந்த நடவடிக்கைகளை இன்னும் அதிகமாகச் செய்திருக்கலாம் என்பது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கருத்தாக இருக்கலாம். எவ்வளவு அதிகமாகச் செய்ய முடியுமோ அந்த அளவுக்கு, அதுவும் 24 மணி நேரத்திற்குள்ளாகவே புறப்பட்டுப்போய்ச் சேரும்படி எல்லா ஏற்பாடுகளும் செய்தோம். அவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டும் என்பது முறையாக இருக்கலாம். இயற்கையாக எந்த அரசாக இருந்தாலும், பதில் வர காலதாமதமாகலாம். ஒரு மாதம் கடந்து அவர்களுக்கு பதில் சொல்லியிருக்கிறார்கள். ஒரு மாதம் கழித்து பதில் தெரிவித்தது சரியில்லை என்ற பிரச்சினை வேறு. இது குறித்து சட்டமன்ற உறுப்பினர்கள் ஏதாவது தங்களுடைய தொகுதியில், அல்லது சில மாவட்டங்களில், தமிழ் நாட்டில் உள்ள முக்கியமான இடங்களில் ஏதாவது செய்ய வேண்டும் என்று அரசுக்கு எழுதினால், அவர்களுக்குப் பதில் அனுப்பும்போது, அது எங்களுடைய ஒப்புதலைப் பெற்று, இன்னும் சொல்லப்போனால் நேர்முகக் கடிதமாக அவர்களுக்கு நாங்களே பதில் சொல்கின்ற அளவிலேதான் முறைகளை வைத்திருக்கிறோம். இந்தத் தவறு எப்படி நடந்தது என்பதைப் பற்றி நாங்கள் விசாரிப்போம். இந்தத் துறையைப் பொறுத்த அளவிலே, அப்படித்தான் அனுப்பப்பட வேண்டும் என்று நான் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அப்படித் தெரிவிப்

பதுதான் நல்லது என்று சொல்லியிருக்கிறோம். முன்பாகவே அதிகாரிகளிடம் நாங்கள் விவரங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்கிறோம். என்ன என்ன குறிப்புகள் அதில் இருக்கின்றன என்று கேட்டு, பதில் அனுப்புகிறோம். அப்படித்தான் சில நடைமுறைகளை நாங்கள் பின்பற்றி வருகிறோம். தயவுசெய்து இதை ஒரு குறையாக எடுத்துக்கொள்ள வேண்டாம். இந்தப் பிரச்சினையில் மிக விரைவாக நாம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு முன்னவர்—நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்திற்கு நன்றி. அவருடைய உணர்விற்கு நான் மதிப்பளிக்கிறேன். அந்தக் கடிதத்திலே இப்படி பதில் சொல்லியிருக்கலாம். பார்வையில் கண்ட தங்கள் கடிதம் கிடைக்கப் பெற்று மேற்கொண்டு அந்தப் பொருள் குறித்து தலைமைப் பொறியாளர் உடனடியாக நடவடிக்கை எடுத்து இயந்திரங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன என்று பதில் தந்திருக்கலாம். அதுதான் சரி. ஆனால் அந்த அதிகாரிகள் இதை காசுவலாகத்தான் கருதியிருக்கிறார்கள். அவர்கள் நாம் என்ன நினைக்கிறோமோ அந்த அளவுக்கு உணர்கிறார்களா என்றுதான் கேட்கிறேன். கடிதம் போட்டிருக்கிறார்கள். அந்தக் கடிதத்தை உங்களிடம் தருகிறேன்.

(உறுப்பினர் அவர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கடிதத்தைக் கொடுத்தார்கள்.)

அந்தக் கடிதத்தில் 28—2—1983 என்று மேலே போடப்பட்டிருக்கிறது. கடைசியிலே டெஸ்பாச் செக்ஷனிலே யாராவது வராவிட்டால் அப்படியே நின்றுவிடும். அதுவும் எனக்குத் தெரியும். 8—3—1983லே கையெழுத்து போட்டிருக்கிறார்கள். எனக்கு இப்போதுதான் வந்தது. 11—3—1983-ல் வந்தது. அதிலே சொன்னது 11—1—1983 நீர்பாசனத் துறைக்கு கடிதம் எழுதி, விளைந்து இருக்கின்ற பயிருக்கு தண்ணீர் விடுவதுபற்றி எழுதி அனுப்பினோம். வேண்டுமானால் ரிப்ளையில் உங்கள் கடிதம் கிடைத்தது, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தந்திருந்தால்கூட, நன்றாக இருந்திருக்கும். என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது என்று. ஒருவேளை அந்த அறிக்கையிலே அங்கே என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்றுகூட வந்திருக்கலாம். அதைப் பற்றி ஒன்றுமில்லை. எனக்கு வந்திருக்கின்ற அறிவிப்பிலே இன்னொரு அறிக்கையை அவர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த



லெதார்ஜிக் முறை, இந்த மெத்தனமான முறை இருக்கிறதே இந்த முறை இந்த நாட்டிலே இப்போது இருக்கக்கூடிய வறட்சிப் பிரச்சினை, குடிநீர்ப் பிரச்சினை இவைகளுக்கு நல்லது அல்ல. அந்தந்தத் துறையிலே இருக்கக் கூடியவர்கள் ஏதோ ஒரு கடமையாக செய்வதுமாதிரி இல்லாமல், நம்முடைய வீட்டிலே வந்திருக்கின்ற பஞ்சம் என்று நினைத்துச் செய்ய வேண்டும். அரசிடம் சட்டமன்றத்திலே உறுப்பினர்கள் எடுத்துச் சொல்கின்ற நேரத்திலே யார் சொல்கின்றார்கள் என்று கருதாமல், இந்தப் பிரச்சினையை எடுத்துக் கொண்டு செயல்பட வேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் சுட்டிக் காட்டுகிறேனே அல்லாமல் வேறில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, வறட்சி நிவாரணப் பணிகளில் குளங்களை ஆழப்படுத்துவது. சாலைகளை செப்பனிடுவது என்பதற்கு இந்தத் துணை நிதிநிலை அறிக்கையிலே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. குளங்களை ஆழப் படுத்துவதற்கு என்று பெருந்தொகை ஒதுக்கீடு செய்யவில்லை. மற்ற மாவட்டங்களில் இருப்பது போல கன்னியாகுமரி மாவட்டத்தில் இல்லை. அதில் சொல்லப்பட்டிருக்கின்ற ரூபாய்க்கு ஆள் இல்லை. சாதாரணமாக பெண்கள்கூட வருவதில்லை. ஒரு நபருக்கு 15 ரூபாய்க்குக் கீழே ஆள் வருவதில்லை. பெண்கள்கூட ரூ. 7-க்குக் கீழே வாங்கிக்கொண்டு வேலை செய்வதில்லை. ஆகவே அந்தத் தொகை செலவு செய்யப்படாமல் அப்படியே இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசி முடித்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதில் உரை முடியும் வரை அவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப் படுகிறது.

(பிற்பகல் 12-30)

திரு. ம. சங்கரலிங்கம்: அப்படி அந்த மாவட்டத்திற்கென வறட்சி நிவாரணப் பணியில் குளங்களை ஆழப்படுத்தும் திட்டத்திற்கு, மாவட்ட ஆட்சித் தலைவரோடும், சீஃப் இன்ஜினியரோடும் கலந்து பேசி ஒரு ரேட் பிக்ஸ் பண்ணி, 25 சதவிகிதம் கூட்டிக் கொடுத்தால்தான், வேலை நடைபெறும் என்று சொல்லிக்கொள்கிறேன். துணை மானிய கோரிக்கையில் மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் கேட்டுள்ள பணத்தைவிட கூடுதலாகக் கேட்டிருந்தாலும், மகிழ்ச்சியோடு ஒப்புதல் தருவோம்.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1983 மார்ச் 28

அரசு ஊழியர்கள்; ஆசிரியர்கள் கோரிக்கைகளிலும் கவனம் செலுத்தி, அவர்கள் ஊதியங்களைக் கொஞ்சம் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதை உணர்கிறோம் என்று ஓரளவிற்காவது 2 அகவிலைப்படி உயர்வுகளை அறிவித்திருந்தால், அவர்கள் மகிழ்ச்சி அடைந்திருக்கலாம். ஓய்வு பெறும்போது 10,000 ரூபாய் அளிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இரண்டிலே ஒன்றையாவது அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். திரும்பத் திரும்பச் சொல்லுகிறார்கள். சிலர் ஆத்திரப்பட்டுச் சொல்லுகிறார்கள், சிலர் நல்லபடியாகச் சொல்லுகிறார்கள், சிலர் வாக்குத் திறனுடன் சொல்லுகிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் அறிவிக்க வேண்டுமென்று எண்ணுகிறார்கள். நிதி அமைச்சரவர்கள் நிதிப் பற்றாக்குறை இருக்கிறது என்று சொல்லுவார்கள். இருந்தாலும் இந்தக் கோரிக்கைகளை நினைவூட்டி, அமைகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, 1982-83ஆம் ஆண்டுக்கான இறுதி துணை மதிப்பீடுகள் இம்மன்றத்தின் முன் வைக்கப்பட்டு, அது பற்றிய கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் பல்வேறு பிரச்சினைகளையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அத்தனை பேர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் வறட்சி நிலையைப் பொறுத்தும், குடிநீர் நிலையைப் பொறுத்தும் இங்கே பல கருத்துக்களைச் சிறப்பாக எடுத்துத் தெரிவித்தது மட்டுமல்ல, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலும், கட்சி வேறுபாடு கருதாமல் எல்லோரும் ஒன்றாக இணைந்து நின்று, நாட்டை எதிர்நோக்கியுள்ள இடர்ப்பாடுகளைக் களைவதிலே முனைப்புள்ளம் கொண்டு, முயற்சி செய்து, எல்லோரும் தங்களுடைய அறிவாற்றல், திறன் இவற்றுக்கு ஏற்ற அளவிற்கு உதவி புரிய வேண்டுமென்ற கருத்து தெரிவித்திருப்பதை நான் மனதார வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். இருக்கின்ற நிலைமையை எப்படியும் சமாளிக்க வேண்டிய தன்மையில் இருக்கிறோம். அரிசியைப் பொறுத்தவரையில், அகில இந்திய அளவில் உபரியாக உள்ள பிற மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்து, மத்திய இருப்பிலே வைத்து, இந்த மாநிலத்திற்குக் கொடுக்க வேண்டிய கணக்கின் அடிப்படையிலே ஓரளவிற்குத் தாருங்கள் என்று தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கும் அளவிற்கு இந்த அரசு இருக்கிறது. ஆனால் தண்ணீரைப் பொறுத்தவரையில், வேறு யாரிடத்திலும் கேட்க முடியாது. அதைக் கொண்டு வரவும் முடியாது. அப்படிக் கொண்டு வரும்



1983 மார்ச் 28] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

முயற்சியும் உடனடியாக நடக்காது. உலகிலே பல நாடுகளிலே தண்ணீர் பற்றாக்குறைக் கொடுமையைத் தாங்கித் தாங்கிப் பழக்கப்பட்டவர்கள் அதைத் தாங்கிக்கொள்கிறார்கள். இப்போது மத்தியக் கிழக்கு நாடுகளில், குறிப்பாக எண்ணெய் வளமுள்ள நாடுகளில் எல்லாம் குடிநீர் இல்லாத நிலை இருக்கிறது. பம்பாயிலிருந்து கப்பல்கள் திரும்பிச் செல்லும்போது குடிநீரை ஏற்றிச் செல்லுகின்றன என்று 10 நாட்களுக்கு முன்பு பத்திரிகையில் பார்த்தேன். எனவே இருக்கிற குடிநீரை நாம் அளவோடு, சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். அதற்காக பெரும் முயற்சிகள் எடுக்க வேண்டுமென்ற தன்மையின் அடிப்படையிலே பணியாற்றுகிறோம். மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர் அவர்களும், மற்ற உறுப்பினர்களும் எடுத்துக் கூறியதற்கிணங்க, எங்கெங்கு தண்ணீர் கிடைக்கிறதென்பதை அறிந்து தண்ணீர் கிடைக்காத இடங்களுக்கு அதை எப்படி நகர்த்துவது என்பதை ஆராய வேண்டும். எவ்வளவு செலவானாலும் லாரிகள் மற்ற வகைகள் மூலமாக நகர்த்த பெரு முயற்சிகளில் ஈடுபடுகிறோம். அதற்கான பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. போர்க்கால அடிப்படையிலே நடவடிக்கைகளை எடுக்கும் அவசியத்தில் இருக்கிறோம். அதற்கான முயற்சிகள் ஆங்காங்கு எடுக்கப்பட்டு வருகின்றன. வறட்சி நிலை பற்றிய அறிக்கையை மத்திய அரசுக்கு அனுப்பி, அவர்களின் உதவியைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம் என்றாலும், அந்த உதவி வரும் வரையில் இந்தப் பணிகளை நிறுத்தி வைத்திருக்கிறோம் என்பதல்ல. நிதிநிலை அறிக்கையின்மீதான விவாதத்திற்கு பதில் அளித்தபோது தெரிவித்ததுபோல, செலவு செய்து கொண்டிருக்கிறோம் முடிந்த அளவிற்கு. வறட்சியைப்பற்றி முழு அளவிற்கு பிப்ரவரி, மார்ச் மாதத்தில் தான் கணிக்க முடியும். 1967-68லும் சரி, 1974-75லும் சரி, வறட்சி நிலை ஏற்பட்டபோது, பிப்ரவரி, மார்ச் மாதத்திலேதான் முழு அறிக்கையைக் கொடுக்க முடிந்தது. இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில், வறட்சி நிலை அறிக்கையை அக்டோபர், நவம்பரில் தந்திருந்தால், இந்த மாநிலத்தின் வறட்சி நிலைக்கு 25, 30 கோடி அளவிற்குத்தான் அறிக்கை தந்திருப்போம். 30 கோடிதான் கேட்டார்கள், அவ்வளவுதான் தருவோம் என்று மத்திய அரசினர் சொல்லியிருப்பார்கள். அவர்களுக்குத் தகவல்கள் அளித்துக்கொண்டே வரப்படுகின்றன. இங்கேயுள்ள சூழ்நிலைகள் தெரிவிக்கப்படுகின்றன. எல்லாவற்றையும் கணக்கிட்டு எவ்வளவு என்று பார்க்கும்போது, 190 கோடி ரூபாய் என்ற அளவிற்கு வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும், அந்த அளவிற்கு மத்திய அரசு உதவி செய்ய வேண்டுமென்றும் வற்புறுத்தினோம். மத்திய அரசின் ஆய்வுக் குழு வந்த பிறகு, அவர்களிடம் தெரிவித்து ரூ. 217 கோடி அளவிற்கு இப்போது நிவாரணப் பணிகளைச் செய்ய

அடுத்து, கால்நடைகளைப்பற்றிச் சொன்னார்கள். தண்ணீர் இல்லாத நெருக்கடியில் கால்நடைகளுக்குத் தேவையான தீவனம் முக்கியம்தான். அதற்காகத் தான் ஆந்திராவிலிருந்து வைக்கோல் போன்றவைகளை எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு நம்முடைய நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக வாங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் ஒரு விஷயத்தைப்பற்றி இங்கே குறிப்பிட்டதாகச் சொன்னார்கள்.

"The additional funds required is due to taking up several urgent repair works as recommended by the Collectors. Very Important Persons, etc."

உள்ளபடியே இன்னின்ன, இங்கு இங்கு தேவை என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள்தான் குறிப்பிடுகிறார்கள். அவர்கள் குறிப்பிடுகிற அடிப்படையில்தான் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. வி.ஐ.பி. என்று, சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள் பங்கெடுக்க வேண்டுமென்கிற நல்லெண்ணத்தின் அடிப்படையில் அப்படி போட்டிருப்பார்கள். கலெக்டர்களுடைய ரிப்போர்ட்டின் அடிப்படையிலேதான் பணிகள் முடிவடைகின்றன. வி.ஐ.பி. என்று சொன்னால், அந்தப் பகுதிகளிலுள்ள சட்டமன்றப் பேரவை மற்றும் சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் எல்லாம் மக்களுடைய குறைகளைக் கண்டறிந்து, இன்னின்ன இடங்களில் இன்னின்ன பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்கிற சூழ்நிலை ஏற்பட வேண்டுமென்கிற எண்ணத்தில்தான் அப்படி போட்டிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் இருக்கிற பகுதி என்பது மட்டுமல்ல.

அடுத்து, சத்துணவுக் கூடங்களைப்பற்றிச் சொன்னார்கள். ஏற்கெனவே நாம் மைய சமையற் கூடங்களை வைத்திருந்தோம். எல்லாப் பள்ளிகளிலும் இப்போது நாம் சத்துணவு போட வேண்டிய சூழ்நிலை இருப்பதால், அவற்றை மூட வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் அவர்கள் பணியை இழக்க வேண்டிய நிலை இருக்காது. காரணம் அவர்களை கல்வித் துறையிலேயே வேறு பணிகளில் ஈர்த்துக்கொள்கிற அளவுக்கு முயற்சிகள் இருக்கின்றன. அண்மையிலே கூட ஒரு கையெழுத்து போட்டேன் என்று நினைக்கிறேன். ஏற்கெனவே இவற்றில் சூப்பரின்டென்ட்டுகளாக இருந்தவர்களை எல்லாம் டி.இ.ஓ. க்களுக்கு பி.ஏ. க்களாகப் போட்டு மாற்றுப் பணியில் நிரந்தரமாக்கலாம் என்று முடிவெடுத்தோம். அப்படிக் கொடுத்த பிறகும், மேலும் நபர்கள் வேலையில்லாமல் இருந்தால், அவர்களையும் விரைவிலே கல்வித் துறையிலே ஈர்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே





விரைவிலே அந்தப் பணி ஈடேறும். மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப் போன்று, மாதந்தோறும் அவர்களுக்குச் சம்பளத்தைக் கொடுத்து அவர்களிடம் வேலை வாங்காமல் இருப்பதை விட, இது நல்லது. அவ்வாறு வேலை வாங்காமல் சம்பளம் கொடுத்துக் கொண்டிருப்பது நல்லதல்ல. எவ்வளவு விரைவிலே அவர்கள் அத்தனை பேரையும் பயன்படுத்த முடியுமோ அவ்வளவு விரைவிலே அவ்வளவு பேர்களையும் பயன்படுத்திக்கொள்வோம்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒரு அருமையான கருத்தைச் சொன்னார்கள். அப்படி வேலை இல்லாமல் இருப்பவர்களை இதுவரை மேல் நிலைப் பள்ளிகளில் எழுத்தர்களாக நியமிக்கவில்லை. எழுத்தர் வேலையை இப்போது தலைமையாசிரியர்களே செய்கிறார்கள். அப்படி வேலையில்லாதவர்கள் இருக்கிறார்கள் என்கிற நிலை வரும்போது, ஒரு மேல் நிலைப் பள்ளிக்கு ஒரு எழுத்தர் என்கிற முறையில் அவர்களையே நியமிக்கலாம். அந்த வகையில் இவர்களை நியமித்து மேல் நிலைப் பள்ளிகள் சிறப்பாக நடக்க மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** டி.இ.ஓ.-க்களுக்கு பி.ஏ. வாகப் போட்ட பிறகு, வேலையில்லாதவர்கள் இருக்கிறார்களா என்று பார்த்து, அவர்களை இவ்வாறு போடலாமா என்று பார்க்க வேண்டும். இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்து ஒரு புதுத் திட்டமாக இருக்கிறது. அவ்வாறு எல்லா மேல் நிலைப் பள்ளிகளுக்கும் போடுவதென்றால், அதற்கான நிதி ஆதாரம் பற்றியெல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஆனால் இவைகள் மூடப்பட்டபோது 99 பேர் இருந்தார்கள். இவர்களில் டி.இ.ஓ. க்களுக்கு பி.ஏ. ஆக போட்ட பிறகு மிச்சமுள்ளவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்கிற நிலையைப் பார்க்கிறபோது, 2 ஆயிரம், 3 ஆயிரம் மாணவர்கள் படிக்கிற மேல்நிலைப் பள்ளிகளில் தேவைப்பட்டால், அங்கே இவர்களை நியமிக்கலாமா என்கிற யோசனையைப் பரிசீலித்துப் பார்க்கலாம்.

அடுத்து, இங்கே தனியார் பள்ளிகளுக்கு, காப்பகங்களுக்கு பொறுப்பாளர்கள் நியமிக்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி குறிப்பிட்டார். அதுசம்பந்தமாக சில தனியார் பள்ளிகளில் வழக்குமன்றத்திற்குச் சென்றிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் குறிப்பிட்டார். இது சம்பந்தமான நியமனங்கள் போன்ற அதிகாரங்கள் தங்களிடம் தான் இருக்க வேண்டுமென்று தனியார் பள்ளிகள் கேட்கின்றன. அந்த

வகையில் தனியார் பள்ளிகளுக்கு நாம் அதற்கான அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறோம். ஆனால் மைய உணவுக் கூடங்களுக்குப் பொறுப்பு என்று வருகின்றபோது, அவர்களே நியமிக்க, வைக்க, எடுக்க என்று வரும்போது, இரண்டு துறைகளிடம் அதற்கான பொறுப்பு இருக்கிறது. காப்பகங்களைப் பொறுத்தவரையில், அவைகள் சமூக நலத் துறையின் கட்டுப்பாட்டுக்குள்ளும், பள்ளிகளை எடுத்துக்கொண்டால் அவைகள் கல்வித் துறையின் கட்டுப்பாட்டுக்குள்ளும் வருகின்றன. ஆனால் நியமனங்களைப் பொறுத்தவரையில், தள்ளி வைக்க, நியமிக்க, எடுக்க, மாற்றம் செய்ய போன்ற அதிகாரங்கள் அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தால் நல்லது. நாம் அவர்களை நியமிக்கிறோம் என்று சொல்லும்போது, முதல் உரிமை விதவைகளுக்குத் தருகிறோம். இரண்டாவது தாய் தந்தை இல்லாதவர்களுக்குத் தருகிறோம். மூன்றாவது எந்த வேலையும் இல்லாதவர்களுக்குத் தருகிறோம். இதில் தவறு செய்தார்கள் என்றால், நம்முடைய கட்டுப்பாட்டுக்குள் இருந்தால், உடனடியாக அதற்குக் காரணமானவர்களை மாற்ற நாம் நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால் தனியார் துறையிடம் இதற்கான அதிகாரங்கள் இருந்தால், நாம் நடவடிக்கை எடுப்பதில் இடர்ப்பாடுகள் ஏற்படும். இந்தக் காரணத்தால் தான், சில பேர் அரசை எதிர்த்து வழக்குமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். ஆனால் அந்தப் பள்ளிக்கூடங்களுக்கு 33 ஆயிரம் பொறுப்பாளர்களை நியமிக்கிற வகையில் நிதித் துறை ஏற்கெனவே அனுமதித்திருக்கிறது. நாம் நியமிக்க முயற்சிக்கிறபோது, சில இடர்ப்பாடுகள் வந்தன. ஆனால் ஆசிரியர்களுக்கு எந்த வித கஷ்டமும் வராமல் அரசு தேவையான முயற்சிகளை எடுக்கும். இது கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு அவர்களால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று நம்புகிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு மிகப் பணிவோடு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். தனியார் பள்ளிகளில் முழுமையாக அமைப்பாளர்கள் நியமிக்கப்படவில்லை. ஏப்ரல்-மே மாதங்களில் விடுமுறை வருகிறது. ஆசிரியர்கள் பள்ளிக்கூடங்களுக்குச் சென்று பணியாற்ற வேண்டுமென்ற நிலை வருகிறது. மற்ற ஆசிரியர்கள் விடுமுறையில் இருக்கும்போது, இவர்கள் சமைத்து, சாப்பாடு போட வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். தனியார், ஆகவே வழக்குமன்றத்திற்குச் செல்கிறார்கள் என்பதல்ல பிரச்சினை. ஏப்ரல் 1ஆம் தேதியிலிருந்து இதற்கு ஒரு மாற்று ஏற்பாட்டினை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மனது வைத்தால் செய்ய முடியும். பல காரியங்களில் அவர்கள் மனது வைத்து செய்தும் இருக்கிறார்கள். அதுபோல் இதையும் செய்ய வேண்டும்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மனது இல்லாமலா நிதி ஆதாரத்தைக் கூட பொருட்படுத்தாமல் 33 ஆயிரம் பேர்களை 'சேங்ஷன்' பண்ணினேன். எல்லா தனியார்களும் தாங்கள் தான் நியமனம் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். அவ்வாறு அவர்கள் சொன்னதால்தான் பிரச்சினை வந்தது. சாங்ஷன் ஆகிவிட்டது. ஆட்களையும் பார்த்து விட்டார்கள். இப்போது அமர்த்துவதில்தான் சங்கடம். கூடுமானவரை இதில் சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டால், இதனை நடைமுறைப்படுத்துவதில் அரசுக்கு ஒன்றும் ஆட்சேபணையில்லை. மேலும் சமைக்கின்ற பொறுப்பு ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை. அந்தப் பொறுப்பு ஆயாக்களிடம் தான் இருக்கிறது. மேற்பார்வையிடுவது, கணக்குப் பார்ப்பது போன்ற பொறுப்புகள்தான் இவர்களிடம் இருக்கின்றன. இவ்வளவு நாள் ஆசிரியர்கள் நல்ல தியாக உணர்வோடு சேவை செய்தார்கள். அதனை தொடர்ந்து அவர்கள் செய்ய வேண்டுமென்று விரும்பி வேண்டுகோள் விடுக்கிறேன். விடுமுறை போய்விட்டது என்கிற பிரச்சினையை அவர்கள் எழுப்பாமல் இருப்பது நல்லது. இல்லாவிட்டாலும் கூட அடுத்த கல்வி ஆண்டிலிருந்து இதுகுறித்து எந்தக் குறைபாடும் இல்லாமல் என்னென்ன செய்ய வேண்டுமோ அதற்குரிய ஏற்பாட்டினை இந்த அரசு செய்யும். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் இது கொண்டுவரப்படும். மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்களும் அந்த வகையில் அரசாங்கத்திற்குக் கஷ்டம் உண்டாக்காத வகையில் உதவி செய்தால், அரசும் அடுத்த கல்வி ஆண்டிலிருந்து தக்க ஏற்பாடுகளைச் செய்யும்.

*(திரு. முத்துசாமி இருக்கையிலிருந்து எழுந்தார்.)*

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** தொடர்ச்சியாக கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருக்க வேண்டாம்.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உதவ வேண்டுமென்று கேட்டதால் சொல்கிறேன்.

*(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் மணி அடித்தார்கள்)*

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இதுவரை பெருந்தன்மையோடு, தியாக உணர்வோடு ஆசிரியர்கள் செய்து வந்த பணியை இனியும் தொடர்ந்து செய்ய வேண்டும். அவர்களுக்கு உதவ வேண்டாமென்ற, வஞ்சிக்கிற எண்ணம் எங்களுக்குத் துளியும் இல்லை. இந்நிலை தனியார் பள்ளிகளை நிர்வகிப்பவர்களால் ஏற்படுத்தப்பட்டது. ஆசிரியர்களை வஞ்சிக்க வேண்டுமென்கிற நிலை எங்களுக்கு இல்லை. எனவே, நான் முதலில் சொன்ன

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1983 மார்ச் 28

(பிற்பகல் 12-50)

படி இதற்காகப் பணம் ஒதுக்கப்பட்டு சாங்ஷன் செய்யப்பட்டுவிட்டது. இந்தப் பிரச்சினையை விரைவில் முடிக்க வேண்டும் என்பதுதான் அரசின் எண்ணமாகவும் இருந்து வருகிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் கல்வித் துறையைப்பற்றி பல்வேறு கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். வழக்கம்போல் மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இதற்கெல்லாம் விளக்கம் அளிக்கத் தக்க வாய்ப்பு ஏற்படும் என்று சொல்லிக்கொள்கிறேன். கல்விக் கொள்கையின மீது விவாதிப்பதற்கு 2 நாட்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். அப்போது மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இவைகளுக்கெல்லாம் விரிவான விளக்கம் அளிப்பார்கள். நிதித் துறையும், கல்வித் துறையும் சேர்ந்து செய்ய வேண்டிய பணிகள் இருப்பின், அவைகளை இரு துறையும் விவாதித்து எடுக்கும் முடிவுகளின் அடிப்படையில் நிதித் துறை ஆராய்ந்து பார்த்து எதை எதைச் செய்ய இயலுமோ அதையெல்லாம் கண்டிப்பாக ஆராய்ந்து பார்த்துச் செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். பாலிடெக்னிக்பற்றி கூட குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். ஆனால் அவைகளைப்பற்றி முழு நிலைமை என்ன என்பதை இப்போது எடுத்துச் சொல்ல இயலாத நிலையில் இருக்கிறேன். என்றாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய அனைத்துப் பிரச்சினை களுக்கும் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் உரிய முறையில் விளக்கம் அளித்து, உரிய நடவடிக்கை எடுப்பார் என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் கூட ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். நான் நிதி நிலைமையைப்பற்றி ஏற்கெனவே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். மத்திய அரசே இன்னும் இரண்டு அகவிலைப்படி உயர்வுகளை அறிவிக்கவில்லை. எனவே அவர்கள் அப்படி அறிவித்த பிறகு, மாநில அரசும், வழக்கம்போல் என்னென்ன முறைகளைக் கையாள வேண்டுமோ அந்த முறைகளைக் கையாண்டு, எப்போதும் செய்கிற அந்தத் தன்மையில் மாநில அரசு ஊழியர் களுக்கும் செய்ய இருக்கிறது என்பதை மட்டும் இப்போது தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



1983 மார்ச் 28] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

மற்றும் பதவியிலிருந்து ஓய்வு பெறும்போது, ரூ. 10,000 கொடுக்கப்பட வேண்டும் என்று அடிக்கடி இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. அதன் தன்மையை அன்றைக்கு எடுத்துச் சொன்னபோது, நான் அன்றைக்கு கிராச்சுவிட்டி பற்றிக் குறிப்பிட்டேன். நான் கிராச்சுவிட்டியைப்பற்றி குறிப்பிட்டதற்குக் காரணம், மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் "வெறுங் கையோடு அவர்களை அனுப்புகிறீர்களே" என்று சொன்னார்கள். அப்படி "வெறுங்கையோடு அவர்களை அனுப்பவில்லை, கிராச்சுவிட்டியோடு தான் அனுப்புகிறோம்" என்று அதற்காகத்தான் அதைக் குறிப்பிட்டேன். எனவே இதற்கு மேலும் இப்படி ஒரு திட்டம் வந்தால் நல்லது என்று சொன்னார்கள். அந்த வகையில் இதைப்பற்றி ஆராய வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கருதினார்கள். எனவே அதுபற்றிய பிரச்சினைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்து ஒரு முடிவெடுத்து ஒரு திட்டம் அறிவிக்கப்படுகிற சூழ்நிலை இங்கே ஏற்பட்டால், நிதியமைச்சர் என்ற முறையில் எனக்குத்தான் மகிழ்ச்சி அதிகமாக இருக்கும். காரணம் அப்போதாவது நீங்கள் பாராட்ட மாட்டீர்களா என்ற எண்ணம்தான். உங்களுடைய பாராட்டுதல்களைப் பெறுவதில் எனக்கு என்ன கஷ்டம் இருக்கிறது? எனவே இருக்கிற சூழ்நிலைகளை எடுத்துச் சொல்லி, இருக்கிற நிலைமைகளை ஆராய்ந்து பார்த்து வைத்திருக்கிறேன். இதன் காரணமாகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி ஒரு முடிவெடுக்க வேண்டும் என்று நான் அப்போது குறிப்பிட்டேன். இதன் காரணமாக நான் மாண்புமிகு முதலமைச்சரையே பார்க்க முடியவில்லை என்று நான் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் இங்கே பேசும்போது,

* * *

என்று கேட்டிருக்கிறார். முதலமைச்சரை நான் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். ஆனால் இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் கலந்து பேசிட ஒரு நாள் தனியாக ஒதுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். அப்படி ஒரு நாள் தனியாக ஒதுக்கப்பட்டால், உரிய அதிகாரிகள் மற்றுமுள்ளவர்களோடு உட்கார்ந்து பேசி பிரச்சினையை எடுத்து அலசி ஆராய்ந்து தெளிவுபடுத்த வேண்டும், புள்ளிவிவரங்களோடு இருக்கிற சூழ்நிலைகளைத் தெரிவிக்க வேண்டும் என்று நினைத்துக் கேட்டிருக்கிறேன். எனவே இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், என்னென்ன செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்று முடிவெடுக்க வேண்டியவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான். முதலமைச்சர் அவர்கள் மட்டு

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

மல்ல, அமைச்சரவையும் முடிவெடுக்க வேண்டும். இதற்கு முன்னால் மாண்புமிகு முதலமைச்சரே கூட என்னிடம் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். இதில் ஒரு முடிவெடுப்பதற்கு முன்னாலேயே, தேவைப்பட்டால் நீங்களே சங்கங்களின் முக்கியமான தலைவர்களையெல்லாம் கூப்பிட்டுப் பேசி அவர் களின் ஐயங்களைப் போக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அதையும் செய்யுங்கள் என்று குறிப்பிட்டார்கள். ஓராண்டு காலத்திற்கு முன்னாலே இங்கே சங்கப் பிரதிநிதிகளோடு பேசும்போது கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "மீண்டும் உங்களைச் சந்தித்துப் பேசுவேன்" என்று வாக்குறுதி தந்திருக்கிறார்கள். எனவே அப்படிப்பட்ட ஒரு அவசியம் ஏற்பட்டால், அவர்களோடு கலந்து பேசி ஒரு முடிவெடுக்க வேண்டிய நிலைமை கூட ஏற்படும். இப்போது என்ன நிலைமை இருக்கிறது என்பதைப்பற்றி நான் ஏற்கெனவே தெரிவித்துவிட்டேன்.

1978ஆம் ஆண்டில் கூட இப்படிப்பட்ட ஒரு திட்டம் தெரிவிக்கப்பட்டது. அதாவது மாதம் ரூ. 15 கட்ட வேண்டும் என்று சொல்லி அரசு அலுவலர்கள் ஓய்வு பெறும்போது அவர்கள் ரூ. 15 வீதம் கட்டிய தொகையும் வட்டியும் சேர்த்துத் தருவோம் என்று திட்டம் தரப்பட்டது. அலுவலர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று நானே அப்போது சொன்னேன். அவர்கள் மாதந்தோறும் பணத்தைப் போட்டு, அதற்கு வட்டியை மட்டும் நாம் சேர்த்துக் கொடுப்பது என்றால். இதை ஏற்ப தற்குப் பதிலாக தங்கள் பணத்தை வங்கியிலேயே போட்டுக்கொள்ளலாமே என்று நினைப்பார்கள் என்று சொன்னேன். அதாவது அலுவலர்கள் என்ன கருதுவார்கள் என்றால், இப்படி நம் பணத்தை அரசாங்கத்தில் போடுவதற்குப் பதில் இந்தியன் பேங்கிலோ அல்லது இந்தியன் ஓவர்சீஸ் பேங்கிலோ போட்டால், அவர்களே வட்டியைப் போட்டுத் தருவார்களே என்றுதான் சொல்லுவார்கள். அந்தத் திட்டம் சரியாக இருக்காது என்று நான் அப் போதே சொன்னேன். எனவே நாம் வேறு ஒரு திட்டம் வகுக்க வேண்டும் என்றால், அலுவலர்கள் எவ்வளவு பணம் செலுத்துகிறார்களோ அந்த அளவுக்கு நாம் பங்கு கொடுப்பது போல் இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டேன். அதோடு அவர்களுடைய பணம் நம்மிடம் இருக்கும் அளவுக்குத் தகுந்தாற் போல் வட்டியையும் சேர்த்துக் கொடுக்க வேண்டும் என்ற அந்த முயற்சியின் அடிப்படையில்தான் நான் ஒரு கணக்கே போட்டு வைத்திருக்கிறேன். அதைத் தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வைத்து, படிப்படியாக இதில் ஒரு முடிவெடுக்க வேண்டும் என்று சொன்னேன். இந்தத் திட்டம் வரும் போதுகூட, பல ஆண்டுக்காலம் கழித்து ஓய்வு பெறுகிறவர்களுக்குத்தான்



முழுத் தொகையும் கிடைக்கும். எனவே அவர்கள் எவ்வளவு தொகை போடு கிறார்களோ அதற்குக் கூடுதலாக அரசு ஒரு தொகையைப் போட்டு, வட்டி யோடு சேர்த்துத் தருவோம் என்று சொல்லியிருக்கிறேன். 1978ஆம் ஆண்டி லேயே அரசு ஊழியர்கள் இதை ஏற்க மறுத்துவிட்டார்கள். எனவே தான் புதிய முறையில் நான் கணக்குப் போட்டு வைத்திருக்கும் அடிப்படையில் பேசி முடிவெடுக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்காகத் தனியாக ஒரு நாளை ஒதுக்கிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். விரைவில் முடிவெடுக்கப்பட்டால். உங்களின் பாராட்டுதல்கள் விரைவில் கிடைக்குமல்லவா என்று சொல்லி விரைவில் நாள் ஒதுக்குமாறு கேட்டுக்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வற்புறுத்தியிருக்கிறேன். அதோடு தற்போது தலைமைச் செயலாளர் பொறுப்பில் இருக்கும் இரண்டாம் செயலாளர் அவர்களிடம் கூட நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். நீங்களே சங்கத் தலைவர்களைக் கூப்பிட்டு நான் செய்திருக்கிற இந்த முடிவைப்பற்றி எடுத்துச் சொல்லி. தெளிவுபடுத்துங்கள். அவர்களோடு நீங்கள் பேசி அவர்களின் அபிப்பிராயத்தைத் தெரிந்து வைத்துக்கொண்டால், பின்னாலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பேசுவதற்குக்கூட நல்லதாக இருக்கும் என்று அவரிடம் தெரிவித்திருக்கிறேன். அவருக்குச் சௌகர்யமான நேரத்தில் அந்தத் தொழிற்சங்கத் தலைவர்களைச் சந்தித்துப் பேசுங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். எனவே இந்த வகையில் நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டிருக்கின்றன என்பதை மட்டும் இந்த வாய்ப்பில் தெரிவித்துக்கொள் கிறேன்.

நான் ஏற்கெனவே சொன்னபடி இந்த அரசுக்கு நாங்கள் மட்டும் சொந்தக் காரர்கள் அல்ல. அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் மற்றவர்களும் ஆக எல்லோரும் சேர்ந்துதான் இந்த அரசை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். ஆனாலும் இந்தச் சமுதாயத்தில் இந்தப் பிரிவினரைக் காட்டிலும் அரசின் மிகுந்த கண்காணிப்புக்கும் பாதுகாப்புக்கும் உட்பட்டவர்கள் வேறு யாராவது இருக்கிறார்களா என்றால் இல்லை. அந்த அளவுக்கு அரசின் பாதுகாப்பை அரசு அலுவலர்களும் மற்ற ஆசிரியர்களும்நான் பெற்று வருகிறார்கள். என்றாலும் அவ்வப்போது இருக்கிற நிதி நிலைமைகளுக்குத் தகுந்தாற்போல் முடிவெடுக்கப்படுகின்றன என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் "குடும்ப நலப் பாதுகாப்புத் திட்டம்" என்பதன் அடிப்படையில் அரசு அலுவலர் ஒவ்வொருவரும் மாதம் ரூ. 1 கட்டினால் போதும் என்று வைத்திருக்கிறோம். அந்த அரசு அலுவலர் இறந்தால், அவருடைய குடும்பத்திற்கு மொத்தமாக ரூ. 10,000 வழங்குவது

பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருந்தாலும், அது பற்றிய தொடர்புடைய அமைச்சர்கள் தக்க விளக்கங்கள் தருவார்கள் என்பதையும், மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச்சொன்ன கருத்துக்களை அரசின் நினைவிலே எடுத்துக்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ப. மாணிக்கம்:** துணைத் தலைவர் அவர்களே, விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான வருமான வரம்பு இப்போது நீக்கப்படுவதாக அரசு அறிவித்துள்ளது. சில மாதங்களுக்கு முன்னால் வருமான வரம்பு நிர்ணயம் காரணமாக சிலரிடத்திலேயிருந்து தொகை ரெக்கவரி செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இதற்கு ரெட்ராஸ்பெக்டீவ் எஃபெக்ட் இருக்குமா? ஏற்கெனவே ரெக்கவரி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. நான்கைந்து பேர்கள்தான் இருப்பார்கள். அவர்களுக்கு இந்தச் சலுகை கிடைக்குமா அல்லது இனிமேல் புதிதாக வருபவர்களுக்குத்தான் இந்தச் சலுகை கிடைக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இப்போது அறிவித்தபடி இனிமேல் வருபவர்களுக்குத்தான் என்ற அளவிற்கு இருக்கிறது. இதற்கான ஆணைகள் இனிமேல்தான் பிறப்பிக்கப்படும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் ஒரு புதிய கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். சிலபல மாதங்களுக்கு முன்னால், வருமானத்தைத் தாண்டி கொடுத்துவிட்டதன் காரணமாக பிடித்தம் செய்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அது மிக மிக அண்மைக் காலத்திலே செய்யப்பட்டிருக்குமானால், அனுதாபத்தோடு கவனித்து அரசு நடவடிக்கை எடுக்க ஆயத்தமாக இருக்கும். நான்கைந்து பேர்கள்தான் இருக்கக் கூடும் என்றும் சொன்னார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தால், அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அல்லது அரசே ஆராய்ந்து என்ன நடவடிக்கையை எடுக்கலாமோ அந்த நடவடிக்கையை எடுக்க ஆயத்தமாக இருக்கிறது.

Thiru A. R. DAMODARAN: Sir, the Hon. Minister was not here when I mentioned this. We have only three more days before the 1st April comes into operation. Since he has advised us that the entry tax would be applicable from the 1st April, in the interests of the consumer himself, I would request the Government to clarify whether prices are to be increased from the 1st April or whether they should wait till the Bill is introduced and it is passed by the Legislature.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டு, அதற்குப் பிறகு இரு அவைகளும் நிறைவேற்றிய பிறகுதான் நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டியிருக்கும். ஏப்ரல் 1ஆம் தேதி அமுலுக்கு வரும் என்று சொல்லியிருந்தாலும், இப்போது தெளிவுபட எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். பேரவையிலே சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்படு, பிறகு நிதிநிலை அறிக்கை, மானியக் கோரிக்கைகள் முடிந்த பிறகு, சட்டமுன்வடிவு நிறைவேறி சட்டமாக ஆக்கி நடைமுறைப்படுத்துகிறபோது, அதைக் கொண்டுவரலாம் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. ஆகவே உடனடியாக ஏப்ரல் 1ஆம் தேதி முதல் இருக்காது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் இதைக் குறிப்பிட்டு என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்ததற்காக அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இல்லாவிட்டால் பெரும் குழப்பம் ஏற்பட்டு அதன் காரணமாக பல பேர் வரியை இந்தச் சந்தர்ப்பத்தில் அதிகமாக்கிவிட்டு அதன் காரணமாக மக்களுக்கு இடர்ப்பாடு ஏற்பட்டிருக்கும். அப்படி இடர்ப்பாடு இல்லாமல் இருப்பதற்காக தெளிவுபடுத்த வாய்ப்பு ஏற்படுத்தியதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சட்டம் நிறைவேறிய பிறகு கொண்டுவருவதுதான் எனக்கும் குழப்பம் இல்லாமல் இருக்கும், தெளிவு இருக்கும். இல்லாவிட்டால் அவர்கள் சொன்னதைப் போல ஹாரஸ்மென்ட் இருக்கும் என்பதால், தெளிவுபடுத்த விரும்புகிறேன். அந்த வகையிலே அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** துணைத் தலைவர் அவர்களே, வெக்கேஷன் டிப்பார்ட்மெண்டில் பணிபுரிகின்ற ஊழியர்கள் தங்களுடைய கோடை விடுமுறைக் காலத்திலே விடுமுறையை அனுபவிக்க முடியாமல் வேறு பணி வந்துவிட்டால் அதற்குரிய ஈட்டிய விடுப்பை அவர்களுக்குத் தரலாம் என்று தற்போது விதிமுறைகள் இருக்கின்றன. இந்த விதிமுறையையொட்டி, தனியார் பள்ளிகளோடு இணைந்திருக்கின்ற சத்துணவுக் கூடங்களில் கோடை காலங்

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1983 மார்ச் 28

களில் பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்குப் பலன் கிடைக்கக் கூடிய வகையில் தகுந்த குறிப்பை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கல்வித் துறைக்கு அனுப்புவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான் இதை மாற்றிச் சொல்லுகிறேன். இதுபற்றி கல்வித் துறை மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவதை ஆராய்ந்து கருத்தை நிதித் துறைக்கு அனுப்பினால், நிதித் துறை அதை ஆராய்ந்து நியாயத்தின் அடிப்படையில் முடிவு எடுக்கும் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேலவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று மீண்டும் நாளை காலை. . .

(மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முத்துசாமி இருக்கையிலிருந்து எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்களுக்கு ஒன்று தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் அவையில் இருக்கின்றபோது, திரு. முத்துசாமி அவர்கள் அவையில் இருக்கிறாரே என்று அஞ்ச வேண்டியதாக இருக்கிறது.

**திரு. செ. முத்துசாமி :** துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் அஞ்சக் கூடிய அளவிற்கு நான் நடந்துகொள்ளமாட்டேன். ஒரே ஒரு வேண்டுகோள். நீங்கள் அனுமதித்திருக்கிறீர்கள், நன்றி. நிதியமைச்சர் அவர்கள் கல்வித் துறையைப்பற்றிச் சொன்னார்கள். இப்போது அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். ஏப்ரல், மே மாதங்களில் வாக்காளர் பட்டியலைத் தயாரிக்க 30, 35 நாட்கள் என்று பணியை ஒதுக்கியிருக்கிறார்கள். கர்நாடகா மாநிலத்தில் இப்படிப்பட்ட நிலை வந்த போது, அதாவது விடுப்பு நாட்களில் வேலை செய்த ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் அதற்கு ஈடாக ஈட்டிய விடுப்புத் தந்திருக்கிறார்கள். சென்சஸ் எடுக்கும்போதுதான் அப்படிக் கொடுத்திருக்கிறார்கள். அதையே இங்கும் முன்னுதாரணமாகக் கடைப்பிடிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1983 மார்ச் 28]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றி ஆராய்ந்துதான் முடிவு எடுக்க வேண்டும். என்ன முடிவு எடுப்பது என்பது பற்றி இப்போது சொல்ல முடியாது. மாண்புமிகு உறுப்பினர் சிலபல செய்திகளைச் சொல்லியிருக்கிறார்கள். கல்வித் துறையின் மூலமாக ஆய்வுக்குக் கொண்டு வரப்பட்டு என்னுடைய ஆய்விற்குக் கொண்டு வரப்படும்போது நியாயத்தின் அடிப்படையில் முடிவு எடுப்பேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேலவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. மீண்டும் நாளை காலை 9.30 மணிக்கு அவை கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-07)

## 4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

207. Notification issued in G.O. Ms. No. 1345, Forests and Fisheries, dated 19th November 1981 regarding certain amendments to the Tamil Nadu Preservation of Private Forest Rules, 1949. [Laid on the Table of the House under section 12-A of the Tamil Nadu Preservation of Private Forest Act, 1949 (Tamil Nadu Act XXVII of 1949).]

208. Notification issued in G.O. Ps. No. 306, Commercial Taxes and Religious Endowments, dated 12th March 1982 regarding exemption from levy of Sales Tax on the sale of two-wheeler and three-wheeler motor vehicles produced by Electromobiles (India) Limited. [Laid on the Table of the House under section 53 (3) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959).]

209. Notification issued in G.O. Ps. No. 324, Commercial Taxes and Religious Endowments, dated 16th March 1982 regarding exemption from Sales Tax on purchase of drugs medicines, Lab equipments and instruments to Shree Jain Medical Relief Society. [Laid on the Table of the House under section 53 (3) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959).]

210. Notification issued in G.O. Ps. No. 1068, Commercial Taxes and Religious Endowments, dated 20th September 1982 regarding amendment to the First Schedule of the Tamil Nadu General Sales Tax Act, 1959. [Laid on the Table of the House under section 53 (3) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

211. Notification issued in G.O. Ps. No. 1056, Commercial Taxes and Religious Endowments, dated 16th September 1982 regarding amendment to Rule 26 (1) of the Tamil Nadu General Sales Tax Rules, 1959. [Laid on the Table of the House under section 53 (3) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

212. Notification issued in G.O. Ms. No. 655, Housing and Urban Development, dated 20th July 1982 regarding the variation to the Master Plan for Madras Metropolitan area in Tarapakkam village (Tamil and English). [Laid on the Table of the House under section 123 (3) of the Tamil Nadu Town Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

213. Notification issued in G.O. Ms. No. 1926, Revenue, dated 24th November 1982 regarding amendment to the Tamil Nadu Land Reforms (Payment for Surplus Land) Rules, 1966. [Laid on the Table of the House under section 112 (2) of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961).]

214. First Annual Report of the Tamil Nadu Milk Producers Co-operative Federation Limited for the year 1981 (Tamil and English). [Laid on the Table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act 1 of 1956).]

215. Third Annual Report of the Tamil Nadu State Farms Corporation Limited for the year 1977-78 (Tamil and English). [Laid on the Table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act 1 of 1956).]



*B. Reports, Notifications and other papers.*

76. Demand No. 5—Stamps Administration (Tamil and English).

77. Demand No. 6—Policy Note on Registration Department (Tamil and English).

78. Demand—Land Revenue, 1983-84 (Tamil and English).

79. Performance Budget on Revenue Department, 1983-84 (Tamil and English).

80. SIDCO'S Contribution to Small Scale Industrial Development in Tamil Nadu (Tamil and English).

ஆவணக்காப்பகம் மற்றும்
10.சன.1984
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

[ISSUED 16—11—1983

307
84/6

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

TUESDAY 29th MARCH 1983

Volume CXCVI (No. 3)

©
GOVERNMENT OF TAMIL NADU
1983

*Legislative Council Department*
*Fort St. George, Madras*-600 009.

Price *Rs.* 2.75 *Paise*]

(3)

# பொருளடக்கம்


பக்கங்கள்.

1. வினாக்கள்—விடைகள் .. .. .. 147—171

2. கவன ஈர்ப்பு—

(1) சென்னையிலுள்ள மேற்கு மாம்பலம், அசோக் நகர் ஆகிய பகுதிகளில் குடிநீர் வராததால் மக்கள் படும் அவதி குறித்து .. .. .. 172—173

(2) சென்னையை அடுத்த பள்ளிக்குப்பம் கிராமத்தில் பெட்ரோல் லாரி கவிழ்ந்து விபத்தால் பலர் மாண்டது குறித்து .. 174—176

3. தனி உறுப்பினர் அலுவல்—

தீர்மானங்கள்—

(1) மேலவைத் தேர்தலில் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு வாக்குரிமை .. 176—210

(2) கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு அரசுப் பணிகள் நியமனத்தில் முன்னுரிமை வழங்குவது பற்றி .. 211—228

4. அறிவிப்பு—

28—3—83 அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து சில பகுதிகள் நீக்கப்பட வேண்டியது குறித்து .. .. 2 0—211

5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. 228—229


143171

D II C 13-1

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை

செவ்வாய்க்கிழமை, 1983 மார்ச் 29

பங்குனி 15, துந்துபி—திருவள்ளுவராண்டு-2014

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Computation of Annual Increment in Selection Grade.*

*201. Q.—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that, as per Memorandum No. 10969/PR I/77-1, Personnel and Administrative Reforms (PR. I) Department, dated 2nd July 1977, the service from the date of last increment in the ordinary grade post is to be counted for purposes of increment in the Selection Grade post in all cases;

(b) if so, the reasons for not implementing the same in certain Aided Schools in Ramanathapuram and Madurai Districts; and

(c) the action proposed to be taken thereon?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) ஆம்.

(இ) அம்மாதிரி பிரச்சினை எதும் இல்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பொதுவாக சாதாரண நிலையில் உள்ள ஆசிரியப்பெருமக்கள் 10 ஆண்டுப் பணி முடிந்துவிட்டால், தேர்வு நிலை பெறும்போது. முன்தேதியிட்ட முந்திய ஊதிய உயர்வு நாள் முதல் கணக்கு எடுக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆனால் சில சமயங்களில் அந்தக் கால அளவு 9 மாதத்திற்குக்கூட வருகிறது.

அந்த முறையிலே அதை மாற்றியமைக்க நிலைமைகள், காரணங்கள் இருப்பதால், அப்படி முறையீடுகள் வந்தால், அதை ஆராய்ந்து அதில் நியாயம் வழங்க மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? ஏனென்றால் கால் ஆண்டு கால் ஆண்டு என்று ஊதிய உயர்வினைச் செய்வதை மாற்றியிருக்கிறார்கள். அப்படி கால் ஆண்டு என்று மாற்றிய காரணத்தினால் இது ஏற்பட்டது. இந்த நிலை உருவாகும் என்றால், அதற்கு ஏற்ப ஆணை வழங்குவார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, பணியாளர்களுக்கு சாதாரண பணியிடத்தில் வழங்கிவந்த கடைசி ஊதிய உயர்வு தேதியே தேர்வுநிலையிலே கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று இருக்கிறது. அதுதான் விதியில் இருக்கிறது. மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் தனியார் பள்ளிகளில் அதை அமுல்படுத்தவில்லை என்று சொல்கின்றார்கள். ஆனால் அங்கே அமுல்படுத்தப்பட்டிருக்கிறது. அங்கே அமுல்படுத்தப்படாமல் இல்லை என்ற தகவல் எனக்கு வந்திருக்கிறது. இதிலே வேறு மாற்றம் செய்ய முகாந்திரம் இல்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ரா. தாமஸ் அவர்கள் குறிப்பிட்ட இந்தப் பிரச்சினை வேறு சில மாவட்டங்களில் இருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் ஊதிய உயர்வு நிர்ணயம் செய்கின்ற ஆணைகளைப் பிறப்பிக்கும்போது, அதற்கான ஊதிய நிர்ணயம் குறித்து ஒரு அட்டவணையை இணைத்து பிறப்பிக்காததுதான். ஆகவே அந்த வகையில் ஆணை பிறப்பித்தால், இந்தப் பிரச்சினைக்கு துரிதமாகத் தீர்வு காணலாம். இதற்கு முன்பு நிதித் துறையிலிருந்து எந்தெந்த ஊதியத்தில் இருப்பவர்களுக்கு எப்படி ஊதிய உயர்வு நிர்ணயம் செய்வது என்று தெரியும் அளவில் அனுப்பினார்கள். அப்போதெல்லாம் இந்தப் பிரச்சினைகள் எழவில்லை. ஊதிய உயர்வு, சிறப்பு ஊதியம், புதிய ஊதிய நிலை நிர்ணயிப்பது போன்றவற்றிற்கு என்று ஒரு அட்டவணையையும் ஆணையோடு பிறப்பிக்க கல்வித் துறை ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசனையைப் பரிசீலிக்கலாம்.

*Special Pay to Teachers with Diploma in Geography.*

* 202. *Q.*—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that the Tamil Nadu Graduate Teachers' Association has made a representation to the Government, to sanction a Special Pay of Rs. 25 to the Teachers with Diploma in Geography, handling Higher Secondary Classes; and

(b) if so, the action taken thereon?



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) மற்றும் (இ) : முறையீடு ஏதும் வரவில்லை. ஆனால் சில மேல் நிலைப் பள்ளிகளில் பட்டப்படிப்பில் புவியியலை முதன்மைப் பாடமாக பயின்ற ஆசிரியர்கள் கிடைக்காத காரணத்தினால், புவியியல் பட்டயம் பெற்றவர்கள் மேல் நிலைப் பள்ளிகளில் வகுப்புகளை நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்டனர். இவர்களுக்கும், ஏனைய மேல்நிலைப் பள்ளிகளில் உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களுக்கு வழங்கும் சிறப்பூதியமாகிய ரூ. 25 அளிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**திரு. பா. ரா. தாமஸ் :** மேல்நிலை வகுப்புகள் புகுத்தப்பட்ட காலத்திலே ஹிஸ்டரி அண்டு ஜியாகிரபி என்று படித்தவர்கள் 'டிப்ளமோ இன் ஜியாகிரபி' என்று ஒரு பட்டத்தைப் பெற்றிருந்த காரணத்தினால், அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படாமல் இருந்து, அதைப்பற்றி நாங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லி, அதன் பேரில் அவர்கள் ஓரளவுக்குச் சாதகமாக முடிவு எடுத்திருக்கிறார்கள். இந்த ரூ. 25 என்பது ரூ. 40 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. இன்டக்டட் ஆசிரியர்களுக்கு ரூ. 25 என்பதை ரூ. 40 என்று உயர்த்திய அந்த முறையிலேயே இவர்களுக்கு ரூ. 40 ஆக ஆக்குவதோடு அந்த முதுகலை இன்டக்டட் ஆசிரியர்கள் வாய்ப்புக்களை வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அது குறித்து பரிசீலிக்கப்படும்.

*Fifth World Tamil Conference.*

* 203 *Q.*—Thiru P. R. THOMAS (on behalf of Thiru D. SANTOSHAM): Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) the amount originally intended to be spent for effecting improvements in Madurai City, in connection with the World Tamil Conference ;

(b) whether any reduction was made in this amount for want of time for effecting the improvements ; and

(c) whether, in view of the postponement of the said Conference to 1981, the entire amount originally proposed, will be spent ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) உலகத் தமிழ் மாநாடு தொடர்பாக மதுரை மாநகர மேம்பாட்டிற்காக சுமார் ரூ. 5 கோடி செலவிட 1979 ஆரம்ப காலத்தில் உத்தேசிக்கப் பட்டிருந்தது.

(இ) இல்லை. மாறாக இத்தொகை பின்னர் அதிகரிக்கப்பட்டு ரூ. 765.26 இலட்சம் மாநகராட்சி மூலமும், ரூ. 183.71 இலட்சம் அரசுத் துறைகள் மூலமும் செலவிடப்பட்டது.

(உ) மதுரையில் 1981 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 4 முதல் 10-ஆம் நாள் வரை ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டையொட்டி உத்தேசித்த மேம்பாட்டு வேலைகள் யாவும் நிறைவேற்றப்பட்டன.

**திரு. பா. ரா. தாமஸ்:** அங்கு பணிகள் சிறப்பான முறையில் நடைபெற்றதை நாங்கள் அறிவோம். குறிப்பாக கல்வியைப் பொறுத்து அதிகமான பணம் ஒதுக்கப்பட்டு, அதிலே சிறப்பான மேம்பாடுகள் செய்கின்ற வகையில், பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில் என்ன செய்யப் பட்டிருக்கின்றது என்று அறிந்து கொள்ளலாமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அந்த விவரம் என்னிடம் இப்போது இல்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** அடுத்த தமிழ் மகாநாடு எங்கே நடைபெறவிருக்கிறது என்ற தகவல் உண்டா? சிங்கப்பூரில் நடைபெற இருப்பதாகப் பேச்சு அடிபடுகிறதே.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** எனக்கு அது பற்றி தகவல் இல்லை.



## தேசிய கல்விக் கொள்கை.

*204 **வினா—திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தேசிய கல்விக் கொள்கையின் நகல் திட்டத்தை மத்திய அரசு மாநில அரசுக்கு அனுப்பியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதுபற்றிய நமது அரசின் கருத்து என்ன?

(உ) மாநிலக் கல்வி அமைச்சர்களின் மகாநாட்டில் இதுபற்றிய ஒருமித்த கருத்து நிலவியதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) 1979-ஆம் ஆண்டு பாராளுமன்றத்தின் முன் வைக்கப்பட்ட புதிய 'தேசியக் கல்விக் கொள்கை வரைவு' மாநில அரசுகளுக்கு அனுப்பப்பட்டது.

(இ) 24—7—1968-ம் ஆண்டு நிறைவேற்றிய 'தேசிய கல்விக் கொள்கை'யைப் போன்றே 1979-ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட வரைவிலும் மொழிகள் பற்றிய பகுதியைத் தவிர பிற பகுதிகள் பொதுவாக அனைவரும் ஏற்கத்தக்க பரந்த கோட்பாடுகளே ஆகும். மொழி பற்றிய பகுதி இவ்வரசுக்கு உடன்பாடானது அல்ல என்றும், அப்பகுதி 23—1—1968 அன்று அறிஞர் அண்ணா ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டு சட்டமன்றம் நிறைவேற்றிய 'இரு மொழிக் கொள்கை' பற்றிய தீர்மானத்தில் கண்டுள்ள விஷயங்களுக்கேற்ப திருத்தப்பட வேண்டும் என்றும் இவ்வரசு 26—6—1979 அன்று மைய அரசுக்கு எழுதியது.

(உ) 1968-ஆம் ஆண்டு நாடாளுமன்றம் நிறைவேற்றிய தேசியக் கல்விக் கொள்கையையே தொடர்ந்து கல்வி வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிப்படையாக வைத்துக் கொள்ளலாமென்று அண்மையில் மைய அரசு முடிவு செய்துள்ளதாகவும், அதனை மாற்றலாமா என்ற கருத்துடன் முந்தைய மைய அரசு 1979-ல் தயாரித்த புதிய வரைவின் மீது மேல் நடவடிக்கை எடுக்காமல் விடப்பட்டு விட்டது என்றும் 3—11—1981 அன்று மைய அரசுக் கல்வித் துறை தெரிவித்துள்ளது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மத்திய அரசு தெரிவித்திருக்கக்கூடிய தேசிய கல்விக் கொள்கையில், இரு மொழித் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறதா? மத்திய அரசினுடைய கருத்துக்கு மாநில அரசு தன்னுடைய கருத்தை எடுத்துச் சொன்ன பிறகு, 1980 ஜூன் மாதம் 25 ஆம் நாள், முன்னாள் கல்வி அமைச்சராக இருந்த திரு. பி. சங்கரானந் மாநில அரசுகளுடைய கருத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து, அது பரிசிலனை செய்யப்படும் என்று

பாராளுமன்றத்தில் சொன்ன பிறகும், அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இப்போது அந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** 1979 ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கை வரைவின்மீது தமிழ்நாடு அரசு 26—6—1979 அன்று பின்வருமாறு தன்னுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறது.

"23—1—1968 அன்று அறிஞர் அண்ணா ஆட்சிக்காலத்தில் தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நிறைவேற்றிய இருமொழிக் கொள்கை தீர்மான அடிப்படையில் தேசிய கல்விக் கொள்கையைத் திருத்த வேண்டும். அதே தீர்மான அடிப்படையில் தமிழ் உட்பட அனைத்து தேசிய மொழிகளுக்கும் இந்திக்கு அளிப்பது போல் மத்திய அரசு உதவி செய்ய வகை செய்தும் தொல் மொழி என்ற அடிப்படையிலே சமஸ்கிருதத்திற்கு மைய அரசு அளிக்கும் உதவியைப் போல் தமிழுக்கும் அளிக்க வகை செய்தும் தேசிய கல்விக் கொள்கை வரைவு திருத்தப்பட வேண்டும்" என்று நாம் எழுதியிருக்கிறோம். ஆனால் அவர்கள் இரு மொழிக் கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது மட்டுமல்ல, மும் மொழித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சியில் தான் ஈடு பட்டிருக்கிறார்கள். இப்போது சமீபத்திலே மத்திய கல்வி ஆலோசனைக் குழு, சென்ட்ரல் அட்வைசரி போர்ட், அதனுடைய கூட்டம் 4 ஆம் தேதி நடை பெறுவதாக இருந்தது. ஆனால் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய அஜெண்டா வந்திருக்கிறது. அதிலே அவர்கள் அந்த மும்மொழித் திட்டத்தை எப்படி அமுல் நடத்துவது என்பது பற்றி ஆலோசிக்க வேண்டும் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக மத்திய அரசைப் பொறுத்தமட்டில், மும் மொழித் திட்டத்தை விடவில்லை என்பது மட்டுமல்ல, அதை எல்லா மாநிலங்களிலேயும் அமுல்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் செயல் பட்டு வருகிறது.

(முற்பகல் 9-40)

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவரவர்களே, எல்லா மாநிலங்களுடைய கருத்துக்களையும் ஏற்று, அமுல்படுத்தாத நிலையில் அதை எப்படி தேசியக் கல்விக் கொள்கையாக ஏற்றுக்கொள்ள முடியும்? மாநில அரசுகளிடையே ஒருமித்த கருத்து இல்லாதபோது, அது ஒரு பகுதியின் கல்விக் கொள்கை யாகத்தான் அமையும். இந்த நிலையில் மத்திய அரசு தேசியக் கல்விக் கொள்கை என்று அறிவித்து, அதை அமுல் நடத்த முயலும்போது, அதற்கு எந்த விதத்தில் எதிர்ப்பைத் தெரிவிக்க நம்முடைய அரசு உத்தேசித்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, நாம் கலந்து கொள்ளும் ஒவ்வொரு கூட்டத்திலேயும் மும்மொழித் திட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்றும், இருமொழிக் கொள்கையைத்தான் வலியுறுத்தி வருகிறோம் என்றும், அதைத்தான் எங்களுடைய மாநிலத்தில் நிறைவேற்று வோம் என்றும் உறுதியாகச் சொல்லியிருக்கிறோம். இதிலே இருக்கிற ஒரு முக்கியமான தவறு என்று கருதுவது, கல்விக் கொள்கையில் மும்மொழி பற்றிப் பேச வேண்டியதில்லை என்பதுதான். மும்மொழித் திட்டம் என்பது அரசியல் ரீதியான பிரச்சினையே தவிர வேறொன்றுமில்லை. கல்விக் கொள்கை என்று வரும்போது, ஒரு மொழிதான் இருக்க வேண்டும். அவரவர் தாய்மொழியில் படிக்க வேண்டும், தாய்மொழியில் அறிவு பெற வேண்டும், தாய்மொழியில் ஆராய்ச்சி செய்ய வேண்டும், தாய்மொழி மூலமாக பெற்ற அறிவை மக்களுக்குப் பயன்படுத்த வேண்டும். அறிவு பெறுவதும், ஆராய்ச்சி செய்வதும், பெற்ற அறிவை மக்களுக்குப் பயன்படுத்துவதும் இயல்பாக தாய்மொழி மூலமாக நடைபெற வேண்டும். ஆகவே ஒரு மொழிக் கொள்கை தான் எல்லா நாடுகளிலும் பின்பற்றப்பட்டு வருகிறது. அந்த நாடுகளில் முன்னேற்றத்திற்கு அடிப்படைக் காரணமாக அதைச் சொல்லலாம். இங்கே நாம் இரண்டு மொழி தேவை என்று ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆங்கிலத்தைப் படிப்பது அல்லது தெரிந்துகொள்வது இப்போதுள்ள நவீன அறிவைப் பெற உதவியாக இருக்குமென்றும், இந்திய நாட்டில் அரசியல் ரீதியான இந்த அம்சத்திற்கு வாய்ப்பு தரவும் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். மும்மொழிக் கொள்கை என்பதை மத்திய அரசு வற்புறுத்தி வருகிறதே தவிர, எந்த ஒரு மாநிலத்தாலும் அது நேர்மையான முறையில் பின்பற்றப்படவில்லை என் பதையும் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே தமிழ் நாட்டை அவர்கள் மேலும் வற்புறுத்துவது என்பது, மற்றவர்கள் செய்யாததையும், நாம் விரும்பாததை யும் செய்யச் சொல்லி வற்புறுத்துவதாகும்.

**Thiru A. R. DAMODARAN :** In view of the fact that even primary education has been brought within the Concurrent List there is a great danger of the Central Government trying to enforce a uniform National Policy on Education which will not be acceptable not only to Tamil Nadu but to many of the eastern States like Bengal and Assam. May I know from the Hon. Minister whether he would consider the possibility of having a conference of Education Ministers of the South as well as some Ministers of Bengal, Assam and Orissa which may be able to take a united stand on this issue to impress upon the Central Government that it would be dangerous to have a policy insisting on a three-language formula throughout India?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, பொதுப் பட்டியலில் கல்வியைக் கொண்டு வந்து சேர்த்ததே இப்படி ஒரு தவறான எண்ணத்தின் அடிப்படையில்தான் என்ற சந்தேகம் தமிழகத்து மக்களுக்கு இருக்கிறது. ஆகவே இதை நாம் தவிர்க்க வேண்டும். பொதுப் பட்டியலிலிருந்து மாநிலப் பட்டியலில் கல்வியைச் சேர்க்க வேண்டுமென்ற எண்ணத்தை, கொள்கையை நாம் ஒவ்வொரு கூட்டத்திலும் வலியுறுத்தி வருகிறோம். மேற்கு வங்க அரசு அமைச்சர்கள் மாநாட்டைக் கூட்டியது. அதிலே எல்லா அமைச்சர்களும் வந்து கலந்து கொள்கிறபோது, அங்கே ஸ்டேட் லிஸ்டிலே இருக்க வேண்டுமென்று சொல்கிறவர்களும் இருந்தார்கள், பொதுப் பட்டியலில் இருக்க வேண்டுமென்று சொல்கிறவர்களும் இருந்தார்கள். நாம் கூட்டிய அமைச்சர்கள் மாநாட்டிலும் அதே நிலைதான் இருந்தது. இப்போது குறிப்பாக இதில் முடிவு எடுக்க வேண்டுமென்றால், like-minded Governments அதாவது பொதுப் பட்டியலிலே இருக்கவே கூடாது, மாநிலப் பட்டியலில்தான் இருக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்ட அரசுகளின் அமைச்சர்களைக் கூப்பிட்டு, ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பினால், இந்த எதிர்ப்பின் பரிமாணத்தை அவர்கள் தெரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வதிலே நூற்றுக்கு நூறு உண்மை இருக்கிறது. இன்றைய நிலையில் அவர்கள் ஒரு மசோதா கொண்டு வந்து நிறைவேற்றினால், சட்டப்படி நாம் அதற்குக் கட்டுப்பட வேண்டிய நிலைமை உருவாகும். அப்போது அரசியல் ரீதியாக நம்முடைய எதிர்ப்பைக் காட்ட வேண்டி வரும். போராட்டம் என்று வரும். இப்போதுள்ள சூழ்நிலையில் மத்திய அரசுக்குத் தலைவலி தரும் சூழ்நிலையை நிச்சயமாக ஏற்படுத்தும். மத்திய அரசு, சமீபத்திலே மத்திய மாநில உறவுகளைப் பரிசீலிக்க ஜஸ்டிஸ் சர்க்காரியாவினுடைய தலைமையிலே ஒரு குழு போட்டிருக்கிறது. அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு அது வேலை செய்யும் என்பதைவிட அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டோ அல்லது வெளிப்பட்டோ எதை நல்லது என்று கருதுகிறதோ அதைச் சொன்னால்தான், நல்ல தெளிவான முடிவு எடுக்க முடியுமென்ற கருத்தை நாங்கள் சார்ந்துள்ள அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தெரிவித்துள்ளோம். அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்ததே நான்தான். இந்தியாவில் அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்தவும், குறிப்பாக மக்களின் வறுமையைப் போக்கவும் முன்னேற்றமான காரியங்களில் மத்திய அரசு கவனம் செலுத்த வேண்டு





மென்றால், ஒரு ஏகோபித்த உணர்வை உருவாக்குவது நல்லது. அதற்கு இத்தகைய நிலைமைகள் அவர்களுக்கு வாய்ப்பாக இருக்கும். பொதுப் பட்டியலில் உள்ள கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வந்து சேர்ப்பது இந்திய அரசியல் சூழ்நிலைகளுக்கு அவர்கள் செய்கிற மிகப் பெரிய சேவை என்று நான் கருதுகிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவரவர்களே, மும்மொழிக் கொள்கை என்று பேசப்பட்டாலும், இந்தி பேசுகிற சில மாநிலங்களில் இரு மொழித் திட்டம்தான் கடைபிடிக்கப்படுகிறது. ஆகவே இரு மொழிக் கொள்கையை நாம் வலியுறுத்தும்போது, இருமொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் இந்தி பேசும் மாநிலங்களின் ஒத்துழைப்பு நமக்குக் கிடைக்குமென்று அரசு கருதுகிறதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, அதிலேதான் தவறு இருக்கிறது. இந்தி பேசும் மாநிலங்களில் இரு மொழிக் கொள்கையைச் செயல்படுத்தவில்லை என்பதுதான் நம்முடைய குற்றச்சாட்டு. அவர்கள் இந்திதான் படிக்கிறார்கள். ஆங்கிலம் இருக்கலாம். ஆனால் அதில் பரிட்சை இல்லை, மார்க் இல்லை என்ற நிலை வந்த பிறகு, ஒரு மொழி படிப்பதாக அதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. இன்றைக்குள்ள நிலை இந்தி பேசுகிற மாநிலங்களில் இரு மொழிக் கொள்கையும் செயல்படுத்தப்படவில்லை, மும்மொழிக் கொள்கையும் செயல்படுத்தப்படவில்லை என்பதுதான். அவர்கள் ஜெர்மனி, ஜப்பான், பிரான்ஸ் போன்ற நாடுகளில் உள்ளதுபோல் அல்லது நான் சொன்னதுபோல ஒரு மொழிக் கொள்கையைத்தான் தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறார்கள்.

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவரவர்களே, எல்லா மாநிலங்களுடைய கல்வி அமைச்சர்களையும் கூட்டி விவாதிக்கிறபோது இரண்டு கருத்துக்கள் வருவதால், ஒத்த கருத்துள்ள அமைச்சர்களைக் கூப்பிட்டுப் பேசுவதற்கு நம்முடைய மாநில கல்வி அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்தினுடைய நன்மைக்காக, பாதுகாப்பிற்காக அந்த நடவடிக்கை தேவை என்று படுகிற பட்சத்தில் நாம் அந்த முயற்சி எடுப்பதில் எந்தவிதத் தவறுமில்லை. அப்படி எடுக்காமல் இல்லை. ஒரு மாநாட்டைக் கூட்டியிருக்கிறோம். அடுத்தபடியாக கோவாவைச் சேர்ந்த கல்வி அமைச்சரவர்கள் கூட்டுவதாகச் சொல்லிச் சென்றார். வேறொரு மாநிலத்தில் அந்தக் கூட்டத்தைக் கூட்டுவதாக இருந்தால், அந்த வாய்ப்பைத் தரலாம். வேறொருவர் கூட்டவில்லை என்றால், நிச்சயமாக தமிழ் நாடு அந்தக் கூட்டத்தைக் கூட்டும்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் ஒரு அருமையான கருத்தைச் சொன்னார்கள். எல்லா நாடுகளிலும் அந்தந்த நாடுகளின் மொழியை மட்டும் படித்து வல்லமை பெற்று முன்னேறுகிறார்கள் என்று சொன்னார்கள். வட மாநிலங்களிலேகூட இந்தியை மட்டும் படித்து முன்னேறும் சூழ்நிலை இருக்கிறதென்று சொன்னார்கள். பக்கத்திலே இருக்கக்கூடிய ஸ்ரீலங்காவிலேகூட மருத்துவக் கல்வி, இன்ஜினியரிங் கல்வி போன்றவற்றை தமிழிலேயே படிக்குமளவிற்கு முன்னேறியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு அறிவியலிலே முன்னேறியிருக்கிறார்கள். தமிழிலே முன்னேறியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட முன்னேற்றம் தமிழகத்திலே வரவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அறிவைப் பெருக்க ஆங்கிலத்தை நாடும் நிலையை மாற்றி, தமிழிலேயே மருத்துவக் கல்வி போதனையையும், தொழில் நுட்பக் கல்வி போதனையையும் கொண்டுவர எப்போது நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் ஸ்ரீலங்காவில் இருப்பதைப் பின்பற்றலாமா ?

**மாண்புமிகு திரு. செ.அரங்கநாயகம் :** தலைவரவர்களே, தமிழ் மூலமாகத்தான் கல்வி தர வேண்டுமென்ற கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அதற்கு படிப்படியாக நாம் முயற்சிகளை மேற்கொள்ளுகிறோம். இப்போது மேல்நிலைக் கல்வி வந்திருக்கிறது என்றால், 12 ஆண்டுகள் தமிழில் கல்வி பெறும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். அதாவது முதலாம் ஆண்டு பி.ஏ., பி.எஸ்சி. அளவுக்கு தமிழில் கல்வி பெறுகிறார்கள். பாலிடெக்னிக்குகளிலும் சில பாடங்களை தமிழிலே கற்றுத் தரச் சொல்லி, அதன்படி தமிழிலே சொல்லிக் கொண்டு வருகிறார்கள். தமிழிலே பரிட்சை எழுதுகிறார்கள். இப்போது எந்த மொழியில் மாணவர்கள் பரிட்சை எழுத விரும்புகிறார்களோ, அதிலே பரிட்சை எழுத அனுமதிக்கலாமா என்பதை அரசு பரிசீலிக்க யோசித்துக் கொண்டிருக்கிறது.

(முற்பகல் 9-50)

திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் : தேசிய கல்விக் கொள்கைத் திட்டம் குறித்து மாநில அரசு மத்திய அரசுக்கு அனுப்பிய பதில் பற்றிய விவரங்கள் எல்லாம் பத்திரிகையில் சுருக்கமாக வந்தது. ஆனால் முழுமையாக அது பற்றிய விவரங்களை சட்டமன்ற உறுப்பினர்கள் அறிந்துகொள்ள வாய்ப்பில்லை. அது கிடைப்பதும் இல்லை. இவ்வாறு இம்மாநிலம் சம்பந்தப்பட்ட தேசிய கல்விக் கொள்கை பற்றிய முக்கியத்துவம் வாய்ந்த





விஷயங்கள் குறித்து மாநில அரசு கருத்துக்களை அனுப்புகின்றபோது, அந்த பதில்களை சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் விவரமாக அனுப்பி வைக்க கல்வித் துறை நடவடிக்கை எடுக்குமா ? அண்மையில் தொடக்கக் கல்வி, உயர்நிலைக் கல்வி, மேல்நிலைக் கல்வி, கல்லூரிக் கல்விக்கு உட்பட்ட வல்லுநர்கள் அடங்கிய இரு உயர்மட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் குழுவில் மாநில அரசைக் கலந்தாலோசித்து உரிய பிரதிநிதிகள் இடம் பெற மத்திய அரசு ஏற்பாடு செய்ததா ? இதுகுறித்து மத்திய அரசு மாநில அரசைக் கலந்தாலோசித்ததா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அந்தக் கல்விக் குழுவில் உறுப்பினர்களை அவர்களேதான் போட்டார்கள். ஆனால் நம்முடைய பிரதிநிதிகளும் இடம் பெற வாய்ப்பு அளித்திருக்கிறார்கள். தேசிய கல்விக் கொள்கைப்படி இன்றைக்குக் கேள்வியும் பதிலுமாக இருக்கிற ஒரே பிரச்சினை மும்மொழித் திட்டம் பற்றி தான். இன்றைக்கு 12 ஆண்டுக் கல்வி இருக்கிறது. தொழில் கல்வி இருக்கிறது. ‘ பிரி எஜுகேஷன் ’ இருக்கிறது. இங்கேயும் பிரச்சினைகள் வரத்தான் செய்கிறது. ஆனால் ஒன்றைப் பெருமையோடு சொல்கிறேன். தேசிய கல்விக் கொள்கையில் சொல்லப்பட்டிருக்கிற பல்வேறு கொள்கைகளில் இரு மொழித் திட்டம் நீங்கலாக மற்றவைகளை நிறைவேற்றுவதில் தமிழ் நாடு தான் முன்னணியில் இருக்கிறது. மற்ற மாநிலங்கள் அதைச் சரிவர நிறைவேற்றவில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. பா. ரா. தாமஸ் : அகில இந்திய அடிப்படையில் மாநிலங்கள் மற்றும் மத்திய அரசுக்கிடையேயான உறவுபற்றி சீர்தூக்கிப் பார்க்கக்கூடிய புதிய ஒரு சூழ்நிலை உருவாகி வருகிறது. இன்றைக்கு சர்க்காரியா குழு இது சம்பந்தமாகப் போடப்பட்டிருக்கிற நிலையில், ரெப்ரசென்டேஷன் பற்றி திட்டவட்டமாகத் தெரியாவிட்டாலும்கூட. ‘ டேர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ் ’-ல் இரு மொழித் திட்டம் பற்றி சொல்லி, ஆங்காங்கே உள்ள மாநிலங்களும் இதனை ஆதரிக்கும் வகையில் அவர்களுடைய ஆதரவையும் ஒன்று திரட்டி இதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இவைகளைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்வார்கள்.

## Transfer of Tamil Pandits.

*205. Q.—Thiru A. R. DAMODARAN (on behalf of Thiru G. SWAMINATHAN): Will the Hon. Minister for Education be pleased to state :

(a) whether any representation has been received from the Tamil Pandits originally belonging to the District Board High Schools, Thanjavur district, and now working in Tiruchirappalli district, requesting transfer to their native district; and

(b) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) மற்றும் (இ) தஞ்சாவூர் மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகளைச் சார்ந்த தமிழாசிரியர்கள் எவரும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு மாற்றப்படவில்லை. ஆனால், தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்த 11 இடைநிலை ஆசிரியர்கள் தமிழாசிரியர்களாகப் பதவி உயர்வு பெற்றனர். அப்போது அம்மாவட்டத்தில் தமிழாசிரியர் பணியிடங்கள் காலியில்லாததால் அவர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்துக்கு மாற்றப்பட்டனர். பிறகு தஞ்சாவூர் மாவட்டத்தில் தமிழாசிரியர் பணியிடங்கள் உருவாக்கப்பட்ட போது, அவ்வாசிரியர்களின் வேண்டுகோளுக்கிணங்க, அவர்கள் மீண்டும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலிருந்து, தஞ்சாவூர் மாவட்டத்துக்கு இக்கல்வி ஆண்டின் துவக்கத்தில் மாற்றப்பட்டுள்ளனர்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இடம் காலியில்லாத காரணத்தால், பதவியில்லாத காரணத்தால், பிற மாவட்டங்களுக்கு ஆசிரியர்கள் மாற்றப்படுகின்ற பிரச்சினையைப் பொறுத்தவரையில், அவ்வாறு மாற்றப்படுகின்றவர்கள் எந்த நிலை ஆசிரியர்கள் ஆனாலும் சரி, பணியிடங்கள் உருவாக்கப்படும் போது, அவர்களைச் சொந்த மாவட்டங்களுக்கு, வேண்டுகோள் தராவிட்டாலும்கூட, மாற்ற வேண்டும். இது குறித்து அரசு பரிவோடு ஆணை ஒன்றைப் பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இப்போது அவர்கள் வேண்டுகோள் வைக்காவிட்டால் மாற்ற வேண்டுமென்ற நிலையில் பிரச்சினை இல்லை. மாற்ற வேண்டுமென்று கேட்டால், அவர்களை மாற்ற வேண்டுமென்ற அடிப்படையில் ஒரு லிஸ்ட் வைத்து அதன்படி மாற்றிக் கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே இந்த முறை தான் நடைமுறையில் இருக்கிறது.



**திரு. செ. முத்துசாமி :** இதுபோல் மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆசிரியர்களை, பதவி உயர்வு காரணமாக, போடும்போது, சொந்த மாவட்டங்களிலிருந்து பல்வேறு இதர மாவட்டங்களுக்கு தலைமையாசிரியர்களாகவும், ஆசிரியர்களாகவும், தமிழ் ஆசிரியர்களாகவும் போடுகிறார்கள். இப்படி இதர மாவட்டங்களுக்குச் சென்றவர்கள் சீனியாரிட்டி அடிப்படையில் சொந்த மாவட்டங்களுக்கு வர வாய்ப்பினைத் தராமல் ஏதோ தெரிந்தவர்களுக்கு மட்டும் இந்த வாய்ப்பைத் தருவது என்ற நடைமுறையை கல்வித் துறை பின்பற்றி வருகிறது. அப்படி வெளி மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகிறவர்களைப் பொறுத்தவரையில், சீனியாரிட்டி லிஸ்டை ஒழுங்காக வைத்திருந்து அதன் அடிப்படையில் நார்ம்ஸைப் பின்பற்றி, எல்லோருக்கும் ஒரே மாதிரியாக நியாயம் வழங்க வேண்டும் என்கிற வகையில் அதிகாரிகளுக்கு ' இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் ' வழங்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அரசு யாரை வேண்டுமானாலும் மாற்றலாம், திரும்பக் கொண்டுவரலாம் என்கிற வகையில், அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது. ஆசிரியர் சொந்த மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு பதவி உயர்வு காரணமாகச் சென்றிருந்தால், அவ்வாறு போனவர்களை அவர்களுடைய சொந்த மாவட்டத்திற்கே திரும்ப கொண்டு வர வேண்டுமென்ற நல்ல உணர்வோடு அவர்களுக்காக உதவியும் செய்து வருகிறது இந்த அரசு. ஆனால் அதே நேரத்தில் ஆசிரியர்களுக்கு எந்த அளவில் உணர்வுகள் வளர்ந்திருக்கின்றன என்று பார்த்தால், அவர்கள் மக்களுக்குப் பயன்படுகிற முறையில் சொந்த ஊருக்கு வந்த பின் தங்களுடைய ஆசிரியர் பணியை இன்னும் சிறப்பாகச் செய்வதற்கு பதிலாக, கல்விப் பணியைத் தவிர, வேறு பணிகளில் ஒவ்வொரு ஆசிரியரும் ஈடுபடுவது என்பது இன்றைக்கு ஒரு பெரிய பிரச்சினையாயிருக்கிறது. அவர்கள் சொந்த ஊரிலேயே 10 ஆண்டு, 15 ஆண்டு, 20 ஆண்டு இருப்பதால், பள்ளிக்கூடம் கெட்டு வருகிறது என்கிற அடிப்படையில் அவர்களை உடனடியாக மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. நாம் ஒரு பக்கத்தில் அவர்களுக்கு உதவி செய்துகொண்டு வரும் நிலையில், அவர்கள் இன்னொரு பக்கம் தங்கள் சொந்த மாவட்டத்திற்கு வந்து, சொந்த வீதிக்கேகூட வருகிற நிலைமையில் கூட, மக்களுக்குப் பயன்படாத வகையில், அவர்கள் மட்டும் வளர்ந்து கொண்டிருக்கிற நிலை இருக்கிறது. இவ்வாறு அவர்கள் கல்விப் பணியில் ஈடுபடாது வேறு பணியில் ஈடுபடுவது நல்லதல்ல. ஆசிரியர் பிரதிநிதிகளுக்கு நான் சொல்வதெல்லாம் தமிழ் நாட்டிலே எந்த இடத்தில் ஆசிரியர்களைப் போட்டாலும், அங்கே சென்று பணியாற்றத் தயார் என்கிற உணர்வை அவர்களிடம் நாம் வளர்ப்பது கூட ஒரு வகையில் நல்லது.

[1983 மார்ச் 29

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ஆசிரியர்களுடைய சொந்த மாவட்டங்களுக்கு அவர்களை மாற்றலாம், சொந்த ஊருக்கு மாற்றக்கூடாது என்கிற வகையில் வேண்டுமானால் ஒரு சட்டத்தை அல்லது நார்ம்ஸை உருவாக்கலாம். ஆனால் சொந்த மாவட்டத்தை விட்டு, பிற மாவட்டங்களில் ஆசிரியர்கள் பணியாற்று கிற நிலைமையைப் பொறுத்தவரையில், அவர்கள் பெற்றுக் கொண்டிருக்கிற ஊதிய நிலைமை, ஏறிக்கொண்டிருக்கிற விலைவாசி இவற்றையெல்லாம் பார்த்தால், அவர்கள் வேறு மாவட்டங்களில் பணியாற்றுவது அவர்களுக்குச் சிரமமாக இருக்கும். அந்த வகையில் ஆசிரியர்களுடைய சொந்த ஊரிலே இல்லாவிட்டாலும்கூட, சொந்த மாவட்டத்திற்கு மாற்றம் தருவதில் ஒன்றும் தவறு இல்லை. அந்த அடிப்படையில் வேண்டுமானால் அரசு முடிவெடுக்கலாம். இன்னொன்று விருது பெறுகின்ற ஆசிரியர்கள் ஒரே பள்ளியில் இத்தனை ஆண்டுகள் பணியாற்றியிருக்கிறார்கள் என்ற கருத்தை வைத்து, அத்தகைய ஒரு நார்ம்சை வைத்து அந்த விருதைக் கொடுக்கிறார்களே, அப்படியானால் அமைச்சர் அவர்கள் ஒரு ஆசிரியர் ஒரே பள்ளியில் 10, 15, 20 ஆண்டுகள் பணி யாற்றுவது நல்லதல்ல என்று சொல்கின்ற வாதத்திற்கு நேர்மாறாக இருக் கிறதே, அதற்கேற்ப விருது பெறுகின்ற ஆசிரியர்களுடைய 'நார்ம்ஸ்' மாற்றப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஆசிரியர்களை சொந்த ஊருக்கு மாற்றுவதை தவறு என்று நான் சொல்லவில்லை. ஆனால் அவர்களுடைய சொந்த ஊருக்கு அவர்களை எதற்காக அனுப்பி உதவி செய்கிறோம். என்றால், அங்கு படிக்கின்ற குழந்தைகள் மீது அதிக அக்கறை எடுத்து படிப்பைச் சொல்லிக் கொடுத்து, நல்ல முறையில் கல்விப் பணியாற்ற வேண்டு மென்ற அடிப்படையில்தான் இதனைச் செய்கிறோம். ஆனால் அவர்கள் இன்றைக்கு அதற்கு நேர் மாறாக தவறான சூழ்நிலைகளை உருவாக்கி, அரசுப் பள்ளிகளில் கல்விப் பணி பாதிக்கப்படக்கூடிய அளவுக்குப் பெரிய பிரச்சினைகளை உருவாக்குகிறார்கள். சொந்த ஊர், சொந்த மாவட்டம் என்று வரும்போது, அவர்கள் குழந்தைகளுக்குப் படிப்பைச் சொல்லித் தர வேண்டுமென்கிற அக்கறை இல்லாமல், சொந்தக் காரியங்களைச் செய்வதால் குழந்தைகளுடைய கல்வி பாதிக்கப்படுகிறது. இதையெல்லாம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. அதே சமயத்தில் குழந்தைகளுக்கு நல்ல முறையில் படிப்பு சொல்லிக் கொடுக்கக்கூடிய ஆசிரியர்களும் இருக்கத் தான் செய்கிறார்கள். அத்தகையவர்களுக்குத்தான் மனப்பூர்வமாக விருது



1983 மார்ச் 29]

தரப்படுகிறது. நாம் இங்கே சொல்லிக்கொண்டிருப்பது பிரச்சினைக்குரிய ஆசிரியர்களைப் பற்றித்தான். பெரும்பான்மையான ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், நாம் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறோம். இந்த அரசைப் பொறுத்தவரையில், முதல்படியாக குழந்தைகளுக்குப் படிப்பு சொல்லித் தருவதுதான் முக்கியத்துவம். அதற்குப் பிறகுதான் ஆசிரியர் களைப்பற்றிப் பேச வேண்டும்.

**திரு. செ. முத்துசாமி :** இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஆசியயர்களைத் தொடர்ந்து ஒரே இடத்தில் 10, 15, 20 ஆண்டுகள் வைக்கலாமா அல்லது வேண்டாமா என்கிற முடிவை எடுக்க அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. நான் அதில் தலையிடவில்லை. நான் கேட்பதெல்லாம் பக்கத்து மாவட்டங்களுக்கு பதவி உயர்வு காரணமாக ஆசிரியர்கள் செல்கிறார்கள் என்றால், மறுபடியும் அவர்கள் உள்ளே வர வேண்டுமானால், அதாவது சொந்த மாவட்டத்திற்கு வரவேண்டுமானால் நியாயமான அடிப்படையில் ஒரு சீனியாரிட்டி பட்டியல் இருக்க வேண்டும். சில பேருக்கு, குறிப்பாக செல்வாக்கு உள்ளவர்களுக்கு உள்ளே வருவதற்கான வாய்ப்பு இப்போது இருக்கிறது. இந்தச் சலுகை செல்வாக்கு இல்லாதவர்களுக்கு இல்லை. நியாயமான முறையில், கல்வித் துறையிலே இருக்கிற அனைத்துப் பிரிவு ஆசிரியர்களுக்கும் நியாயம் பெறும் வகையில், உள்ளே வரக்கூடிய வகையில், பாதிப்புக்கு உள்ளாகாத வகையில் இதற்கு நியாயமான தீர்வு காண நான் சொன்ன அடிப்படையில் அமைச்சர் அவர்கள் வழிவகை காண முன்வருவார்களா ?

அடுத்து, 10, 15, 20 ஆண்டுகள் பணியாற்றிய ஆசிரியர்களை மாற்றுவது பற்றியும் இங்கே சொன்னார்கள். நான் சொல்வதெல்லாம் என்ன கொள்கை முடிவு வேண்டுமானாலும் அரசு எடுக்கலாம். ஆனால் எந்தக் கொள்கை முடிவை அரசு எடுத்தாலும் தயவுசெய்து அது எல்லோருக்கும் பொருந்துகிற வகையில், நியாயம் எல்லோருக்கும் சமமாக இருக்கும் வகையில், எல்லோ ருக்கும் நீதி கிடைக்கும் வகையில் ஒரு கருத்தை உருவாக்கி, அதற்கு ஒரு முறையறையை ஏற்படுத்தி, 'நார்ம்ஸ்' பிக்ஸ் பண்ணி அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? அதேபோல் வெளி மாவட்டங்களுக்குச் சென்றுள்ள ஆசிரியர்கள் உள்ளே வர சீனியாரிட்டி லிஸ்ட் ஒன்று ஏற்படுத்தி, அதன் அடிப்படையில் சொந்த மாவட்டங்களுக்கு ஆசிரியர்கள் வரும் வகையில் ஆசிரியர் பெருமக்களுக்காக ஏற்பாடு செய்ய முன்வருவார்களா ?

(முற்பகல் 10.00)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இப்போதும் சீனியாரிட்டி பின்பற்றப்படுகிற முறைதான் இருக்கிறது. ஓரிருவர் தங்களுக்குள்ள தனிப்பட்ட கஷ்ட நஷ்டங்களைச் சொல்லி அல்லது தாங்கள் சங்கத்தின் நிர்வாகப் பொறுப்பில் இருக்கிறோம் என்ற காரணத்தைக் காட்டி மாறுதல் பெற்று வந்திருக்கலாம். அத்தகைய விவரங்கள் என்னிடம் இல்லை. ஆனால் பொதுவாக சீனியாரிட்டி முறைதான் பின்பற்றப்படுகிறது. சீனியாரிட்டி என்பதை ஒரு உரிமையாக்கி தங்களுடைய சொந்த மாவட்டங்களுக்கு அல்லது சொந்த ஊருக்குப் போவது என்ற கொள்கையின் காரணமாக, ஆசியர்கள் மத்தியில், தமிழ்நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் நம்முடைய மக்களே நாம் எங்கேயும் போய் பணியாற்ற வேண்டும். அதிலும் குறிப்பாக மலைப் பகுதிகளிலும், தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கிற பகுதிகளிலும் சென்று பணியாற்ற வேண்டும், அவர்கள் உயர்வுக்காக நாம் வேலை செய்ய வேண்டும் என்ற உணர்வு—தெரிந்தோ தெரியாமலோ இல்லாமல் ஆகி வருகிறது என்பதை மட்டும் வேதனையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

## *House Rent Allowance to School Staff.*

*206. Q.—Thiru A. R. DAMODARAN (on behalf of THIRU G. Swaminathan). Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that House Rent Allowance has not yet been granted to the staff working in T. A. Higher Secondary School, Thiruvidaimaruthur, Thanjavur District, even after one year sence upgradation of Thiruvidaimaruthur as a taluk:

(*b*) if so, the reasons therefore; and

(*c*) the action proposed to be taken by the Government in the matter ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) திருவிடைமருதூர் மேல்நிலைப் பள்ளியில் பணியாளர்கள் அனைவருக்கும் வீட்டு வாடகைப்படி வழங்கப்பட்டுள்ளது.

(இ) மற்றும் (உ) இக்கேள்விக்கு இடமில்லை.



**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் திருவிடைமருதூர் தனி வட்டமாக உயர்த்தப்பட்ட பின்னால், அங்கே இருக்கும் பணியாளர்களுக்குத் தரப்படாதிருந்த வீட்டுவாடகைப்படி தற்போது தரப்பட்டிருக்கிறது. அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போலவே தஞ்சை மாவட்டத்தில் தரங்கம்பாடி துணை வட்டமாக இருந்து தற்போது வட்டமாக உயர்த்தப்பட்டும் அங்குள்ள பணியாளர்களுக்கு வீட்டுவாடகைப் படி கொடுக்கப்படாததனை காரணமாக அவர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே ஒரு துணை வட்டத்தை வட்டமாக உயர்த்தினாலோ அல்லது புதிதாக ஒரு வட்டத்தை உருவாக்கினாலோ உடனடியாக அந்த வட்டத்தில் பணியாற்றுகிறவர்களுக்கு இந்தப் படி வழங்கப்பட வேண்டுமென்ற நிலையான அரசாணை பிறப்பிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஒவ்வொரு பகுதியும் வட்டமாக உயர்த்தப்படும்போது எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய முடிவு இது. இப்போது என்னிடம் இருக்கிற விவரம் தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூரைப் பற்றியதுதான். தரங்கம்பாடி பற்றிய விவரம் என்னிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** தற்போது தமிழ் நாடு அரசின் நிதித் துறை ஒரு நல்ல முடிவெடுத்து ஒரு அரசாணையை வெளியிட்டுள்ளது. அதாவது வீட்டுவாடகைப் படி போன்றவைகளைப் பொறுத்த வரையில், ஏற்கெனவே போடப்பட்ட உத்தரவுகளின் சில பகுதிகள் விடப்பட்டிருந்தாலோ அல்லது அந்தக் குறிப்பிட்ட எல்லைக்குள் அந்தப் பகுதிகள் வராமல் இருந்திருந்தாலோ, அல்லது நிர்வாகக் காரணங்களால் விடப்பட்டிருந்தாலோ பின்னால் நிதித் துறை அந்தப் பகுதிகளுக்கும் இப்படிப்பட்ட படிகளை வழங்கும்போது, எந்தத் தேதியிலிருந்து மற்றவர்களுக்கு இந்தப் படி வழங்கப்பட்டதோ அந்தத் தேதியிலிருந்தே இவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று முன்தேதியிட்டு வழங்குவதற்கு ஆணையிடப்பட்டிருக்கிறது. அதற்காக என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே நிதித் துறையின் உத்தரவின் அடிப்படையில் கல்வித் துறையின் மூலம் எந்தெந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கு இது வழங்கப்பட வேண்டும் என்ற குறிப்புரையை வெளியிட அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வாரா ? அப்படி ஆணை வெளியிடப்படும்போது, முன் தேதியிலிருந்தே வீட்டு வாடகைப் படி வழங்கப்பட வேண்டும் என்றும் கல்வித் துறை அறிவிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கல்வித் துறை எதைத் தருவதாக இருந்தாலும், நிதித் துறைக்குத் தெரியாமல் தர முடியாது. நிதித் துறைக்குச் செல்லும்போது, ஏற்கெனவே அப்படி ஒரு ஆணையிருந்தால் இதற்கும் செய்துதான் ஆக வேண்டும். ஆசிரியர்களுக்கு இருக்கிற உரிமைகளைப் பெற்றுத் தருவதில் எப்போதுமே கல்வித் துறை ஊக்கத்தோடுதான் இருக்கும்.

### உடல் ஊனமுற்றவர்களுக்கான வேலைவாய்ப்பு.

* 207. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் மற்றும் திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) உடல் ஊனமுற்றோர் ஆண்டான 1981 ஆம் ஆண்டில் மட்டும் தமிழக அரசின் பல்வேறு துறைகளில் பணியில் அமர்த்தப்பட்ட உடல் ஊனமுற்றவர்களின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக எத்தனை ?

(இ) அவர்களில் தற்காலிக பணிகளில் இருப்பவர்கள் எத்தனை பேர் ? நிரந்தரப் பணியில் இருப்பவர்கள் எத்தனை பேர் ?

(உ) 1980 ஆம் ஆண்டைக் காட்டிலும் இத்தொகை அதிகரித்துள்ளதா? இல்லை எனில் இனிவரும் ஆண்டுகளிலாவது அவர்களுக்கென ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) 1981 ஆம் ஆண்டில் தமிழக அரசின் பல்வேறு துறைகளில் பணியிலமர்த்தப்பட்ட உடல் ஊனமுற்றவர்களின் எண்ணிக்கை 2,654.

மாவட்ட வாரியான விவரம் பின்வருமாறு :—

| | |
|---|---|
| 1. சென்னை (உடல் ஊனமுற்றவர்களுக்கான தனி வேலை வாய்ப்பு நிலையம்) | 1,316 |
| 2. செங்கல்பட்டு | 48 |
| 3. வட ஆர்க்காடு | 77 |
| 4. தென் ஆற்காடு | 117 |





| | |
|---|---|
| 5. சேலம் | 108 |
| 6. தர்மபுரி | 72 |
| 7. பெரியார் | 30 |
| 8. கோவை | 11 |
| 9. நீலகிரி | 56 |
| 10. திருச்சிராப்பள்ளி | 20 |
| 11. தஞ்சை | 143 |
| 12. புதுக்கோட்டை | 15 |
| 13. இராமநாதபுரம் | 138 |
| 14. மதுரை | 230 |
| 15. திருநெல்வேலி | 209 |
| 16. கன்னியாகுமரி | 65 |
| | 2,654 |

| | |
|---|---|
| (இ) தற்காலிகப் பணியில் இருப்பவர்கள் | 2,462 |
| நிரந்தரப் பணியில் இருப்பவர்கள் | 192 |

(உ) 1980 ஆம் ஆண்டைக் காட்டிலும் இத்தொகை அதிகரித்துள்ளது. மேலும் அரசாணை நிலை எண் 602 சமூக நலத் துறை நாள் 14—8—1981 இல் அரசு பணிகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் உடல் ஊனமுற்றோர்க்கென மூன்று சதவிகித இட ஒதுக்கீட்டிற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்களில், நியமிக்கப்பட்ட 2,654 பேரில் 2,462 பேர் இன்னும் தற்காலிகமாகத்தான் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 192 பேர் மட்டுமே நிரந்தரமாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே தற்காலிகமாக உள்ளவர்களும் நிரந்தரமாக ஆக்கப்படுவதற்குள்ள தடைகள் அல்லது இடையூறுகள் என்ன ? அவைகளைத் தவிர்த்து அவர்களையும் நிரந்தரமாக ஆக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : நிரந்தரமாக ஆக்கப்படுவதற்கு என்று சில வரைமுறைகள் இருக்கின்றன. அந்த வரைமுறைகளின் அடிப்படையில்தான் அவர்கள் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அதே அடிப்படையில் அவர்கள் நிரந்தரமாகவும் ஆக்கப்படுகிறார்கள். 2,462 பேர்

தற்காலிகமாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களும் அந்த வரையறைக்குள் வந்தால், கண்டிப்பாக அவர்களையும் இந்த அரசு நிரந்தரமாக ஆக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஈ எஸ். வெங்கடேசன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தலைமை செயலகத்தில் உடல் ஊனமுற்றவர்கள் எத்தனை பேர் பணியாற்றுகிறார்கள் ? அமைச்சர்கள் யார் யாரிடம் உடல் ஊனமுற்றவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** அதுபற்றிய விவரம் என்னிடம் இல்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** உடல் ஊனமுற்றவர்கள் நிரந்தரமாக ஆக்கப்படுவதற்கு சில வரையறைகள் இருப்பதாகச் சொல்லப்பட்டது. அரசு கருணை உள்ளத்தோடு உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. எனவே உடல் ஊனமுற்றவர்களிலும், அரசின் வரையறைக்கு உட்படாதவர்கள் இருப்பதால், அவர்களையெல்லாம் திருப்பி அனுப்பி விட்டால், அவர்களுக்கு வேலை இல்லாமல் செய்துவிட்டால், அவர்களுடைய குடும்பங்கள் அனைத்தும் மிகவும் சங்கடப்படும். இதை அரசே உணரும் என்று கருதுகிறேன். எனவே அரசின் வரையறைக்குட்படாவிட்டாலும்கூட, அவர்களுக்கு அரசு தவிர்ப்பு வழங்கி அவர்களின் பணியில் நிரந்தரமாக்க, கருணை உள்ளத்தோடு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** இந்த அரசின் கொள்கையே, பணியில் அமர்த்தப்பட்டவர்கள் அனைவரும் தங்கள் பணியில் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்பதுதான். அவர்கள் பணியிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை.

**திரு. செ. முத்துசாமி :** கோவை மற்றும் பெரியார் மாவட்டங்களில் மிகவும் குறைவான எண்ணிக்கையிலேயே உடல் ஊனமுற்றவர்கள் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறார்கள். மற்ற மாவட்டங்களைப் பொறுத்த வரையில், மிக அதிகமான எண்ணிக்கையில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே இது குறித்த தேர்வு எந்த அடிப்படையில் நடந்தது என்று தெரியவில்லை. அடுத்து, உடல் ஊனமுற்றவர்களுக்கு எல்லாப் பகுதிகளிலும் வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டது. சமுதாய நலத் துறை அமைச்சர்தான் இதற்கு பொறுப்பேற்றிருக்கிறார். எனவே அவருடைய அமைச்சகத்திலேயாவது—அவருடைய ஆபீசிலேயாவது—





இந்த ஆண்டில் உடல் ஊனமுற்றவர்களுக்குப் பணியளிக்கப்பட்டிருக்கிறதா ? அவருடைய பி.ஏ., டைப்பிஸ்ட் போன்றவர்கள் யாரேனும் உடல் ஊனமுற்றவர்களாக இருந்து நியமிக்கப்பட்டிருக்கிறார்களா ? இந்த விவரம் கண்டிப்பாக அமைச்சர் அவர்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மூலக் கேள்வி 1981ஆம் ஆண்டு பொதுவாக அரசுத் துறை நிறுவனங்களில் எத்தனை பேருக்கு வேலையளிக்கப்பட்டது என்பதாகும். இப்போது அமைச்சர் அவர்களின் அலுவலகத்தில் பணியாற்றக் கூடியவர்களில் எத்தனை பேர் ஊனமுற்றவர்கள் என்று கேட்கப்பட்டிருக்கிறது. அமைச்சர்கள் எண்ணிக்கை அவ்வப்போது அதிகரிக்கப்படுவதில்லை. ஆனால் அரசுத் துறைகளைப் பொறுத்தவரையில், அதிகமானவர்கள் ஆண்டுதோறும் ரிடையர் ஆகிறார்கள். அதன் காரணமாக வேலை வாய்ப்புகள் உருவாகின்றன. எனவே அமைச்சர்கள் எவ்வளவு போடுகிறார்கள் என்று கேட்பது சரியல்ல. மூலக் கேள்வி 1981 ஆம் ஆண்டில் எவ்வளவு ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது என்பதுதான். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட வாரியாக விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். கோவை மாவட்டத்திலும், பெரியார் மாவட்டத்திலும் வேலை பெற்றவர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்றால், அந்த மாவட்டத்தில் ஊனமுற்றவர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்று அர்த்தம். அது பெருமைக்குரிய ஒன்றே தவிர, வருத்தப்படக் கூடிய ஒன்றல்ல.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** அரிதரிது மானிடராகப் பிறத்தல் அரிது. அதிலும் அரிதரிது குறையில்லாமல் பிறத்தல் அரிது. அதிலும் அவர்களுக்காகக் குரல் கொடுப்பது அரிது என்ற வகையில் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக என்று தனியான பிரிவு அமைக்கப்பட்டு, அவர்கள் பிரச்சினைகள் கவனிக்கப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** உடல் ஊனமுற்றவர்களை வேலை வாய்ப்பில் அமர்த்தும் பொருட்டு சென்னையில் தனியான வேலை வாய்ப்பு அலுவலகம் நிறுவப்பட்டிருக்கிறது. கோவை, திருச்சி, மதுரை போன்ற மாவட்டங்களில் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் உடல் ஊனமுற்றவர்களுக்காக ஒரு தனிப் பிரிவு அமைக்கப்பட்டு அந்தப் பிரிவில் அவர்கள் பெயர்கள் பதிவு செய்யப்பட்டு அதன் மூலம் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

**திரு. ஜேப்பியார் :** உடல் ஊனமுற்றவர்கள் என்பது பிறப்பாலா? வேலையே செய்ய முடியாதவர்கள் சிலர் இருக்கிறார்கள். ஓரளவுக்கு வேலை செய்ய முடியும் என்று இருப்பவர்கள் உடல் ஊனமுற்றவர்களாகக் கருதப் படுமா? ஒரு கண் இருந்து மற்றொரு கண் இல்லாதவர் நிலை என்ன? ஏனென்றால் இது ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. எப்படிப்பட்ட வர்களை அரசு உடல் ஊனமுற்றவர்கள் என்று வகைப்படுத்தியிருக்கிறது?

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** ஊனமுற்றவர்கள் என்றால் வாய் பேச முடியாதவர்கள், காது கேளாதவர்கள், கை, கால் சரியான முறை யில் இயங்காதவர்கள், கண் பார்வையற்றவர்கள். இந்த அடிப்படையில்தான் மனிதர்களை ஊனமுற்றவர்களாக அரசு ஏற்றுக்கொண்டு சலுகைகளை அளித்து வருகிறது.

Thiru A. R. DAMODARAN : Sir, at present the security staff of Legislature is being recruited from the Police Force. May I know whether opportunities would be given for physically handi- capped people to serve among the security staff, as legislators are generally peace-loving people and nothing will happen to these people?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளை அரசு பரிசிலனை செய்யும்.

**திரு. செ. முத்துசாமி :** நான் இருப்பவர்களை வீட்டுக்குப் போகச் சொல்லவில்லை. அந்த ஆண்டில் அமைச்சர்களுடைய அலுவலகங்களில் ஏதாவது வேகன்சி ஏற்பட்டு அதிலே அவர்களைப் போட்டிருக்கிறார்களா என்றுதான் அறிய விரும்புகிறேன். சமூக நல அமைச்சர் அவர்கள் யாரையாவது தன்னுடைய அலுவலகத்தில் நியமனம் செய்தார்களா என்று கேட்டேன். அப்படிச் செய்திருந்தால் தகவல்களைத் தெரிவிக்குமாறு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** 1981-ஆம் ஆண்டு அதனுடைய தகுதியின் அடிப்படையில் யாரும் என்னிடம் அணுகவில்லை. அப்படி யாராவது அணுகியிருந்தால், வேலை வாய்ப்பைக் கொடுத்திருப்பேன். ஏனென்றால் தனியார் துறைகளிலும் மற்றத் துறைகளிலும், அவர்களைக் கண்டிப்பாக வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்கிறபோது,



என்னுடைய துறையைப் பொறுத்தவரையில் அவர்களைக் கண்டிப்பாக ஏற்றுக் கொண்டாக வேண்டும். அப்படி தகுதியின் அடிப்படையில் என்னை யாரும் அணுகவில்லை. யாராவது அணுகினால் வேலை வாய்ப்பு கொடுப்பேன். கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** ஊனமுற்றவர்கள் என்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்தார்கள். செயலாற்றுவதில் திறமை குறைந்தவர்கள், மூளை வளர்ச்சி குன்றியவர்கள் ஆகியவர்கள் எல்லாம் எந்த வகையில் ஊனமுற்றவர்களாகக் கருதப்படுவார்கள்?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மூலக் கேள்வி உடல் ஊன முற்றோருக்கு வேலை கொடுக்க வேண்டும் என்பது. மாண்புமிகு உறுப்பினர் மூளை சரியில்லாதவர்கள், செயல்பட முடியாதவர்கள் ஆகிய வர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். மூளை சரியாக இருப்பதால்தான். உடல் ஊனமாக இருந்தாலும் அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கிறோம். மூளை சரியாக இல்லாவிட்டால், அவர்களை எப்படி சரிப்படுத்த வேண்டுமோ அப்படிச் சரிப்படுத்த பயிற்சி கொடுத்து அவர்கள் சுயமாக வாழ வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்து வருகிறது.

**திரு. ஏ. ஜே. தாஸ் :** எல்லா சமுதாயத்தினருக்கும் இத்தனை சத வீதம் என்று ஒதுக்கப்படுவதைப் போல உடல் ஊனமுற்றவர்களுக்காக ஒரு பத்து சதவீதமாவது ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** ஊனமுற்றவர்களுக்காக மூன்று சதவீதம் ஒதுக்கீடு செய்து அதன் மூலமாக வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டு வருகிறது.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முத்துசாமி வினா கேட்க கையை உயர்த்தினார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஏற்கெனவே இரண்டு துணை வினாக் களைக் கேட்டுவிட்ட பிறகும் மூன்றாவது வினா கேட்க வேண்டுமா? ஏதாவது முறை இருக்க வேண்டாமா?

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் மூளை வளர்ச்சிபற்றி சொன்னார்கள். அவர் டாக்டர் என்பதால், அதிலே ஏதாவது ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் கேள்வி போட வேண்டியது டாக்டர் சனார்த்தனத்துக்கல்ல, அமைச்சருக்கு,

[1983 மார்ச் 29

கூமாபுல் பயிரிடுதல்

* 208. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. வி. வி. வி. ஆனந்தம் சார்பில்): மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) மதுரை மாவட்டத்தில், கூமாபுல் என்ற மரம் கால்நடைக்கு உணவாகவும், உரமாகவும் பயன்பட அரசு ஊக்கம் அளிப்பது போல, இராமநாதபுரம் மாவட்டத்திலும் அதைப் பயிரிட ஊக்கம் அளிக்கும் திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) இல்லை எனில், இனியாவது பரிசீலனை செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) மதுரை மாவட்டத்தில் கூமாபுல் என்ற மரம் கால்நடைகளுக்கு உணவாகவும், உரமாகவும் பயன்பட அரசு ஊக்கம் அளிப்பதுபோல இராமநாதபுரம் மாவட்டத்திலும் அதைப் பயிரிட அரசு ஊக்கமளிக்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. ஆகவே, புதியதாகத் திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம்: கூமாபுல்லுக்கு அதிகத் தண்ணீர் தேவையில்லையென்று சொல்கிறார்கள். இது கால்நடைகளுக்கு உதவியாக இருக்கிறது என்றும் சொல்கிறார்கள். ஆகவே இந்த வறட்சிக் காலத்திலே கால்நடைகளைக் காப்பாற்ற அரசினர் இதை அதிகமாகப் பயிரிட நடவடிக்கை எடுப்பார்களா? காமா பயில்வானைப் போல இந்தக் கூமாபுல் கால்நடைகளுக்கு உதவியாக இருக்கும் என்பதால் இதை அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: சாத்தூர் ஆட்டுப் பண்ணையிலும், செட்டிநாடு மாவட்டக் கால்நடைப் பண்ணையிலும் இந்தப் புல் உற்பத்தி செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அதிகமாகத் தண்ணீர் தேவையில்லை என்று குறிப்பிட்டார்கள். இதற்குத் தண்ணீர் தேவைப்படுகிறது. சாத்தூர், செட்டிநாடு பண்ணைகளில் பயிரிடப்பட்டு அதனுடைய நாற்றுகள் மற்றப் பண்ணைகளுக்கும், மற்றும் கால்நடை மருத்துவ நிலையங்கள் மூலமாக விநியோகம் செய்யப்பட்டு பயிரிடப்படுகின்றன.



1983 மார்ச் 29]

திரு. ம. சங்கரலிங்கம்: கால்நடைகளுக்குத் தீவனமாகப் பயன்படுகிற இந்தக் கூமாப் புல்லை பயிரிட என்னென்ன சலுகைகள் அளிக்கப்படுகின்றன? இராமநாதபுரம் மாவட்டத்திற்கு விஸ்தரிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதைப் போலவே எல்லா மாவட்டங்களுக்கும் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படுமா? இதற்கு முன்னாலே கினியா கிராஸ், நேப்பால் கிராஸ் என்ற இருவகை புல்கள் சிபார்சு செய்யப்பட்டன. அதைவிட கூமாபுல் என்ன சிறப்பு அம்சங்களைக் கொண்டுள்ளது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், விருதுநகர் தாலுகா, சாத்தூர் தாலுகா, ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா, ராஜபாளையம் தாலுகா ஆகியவற்றில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மற்ற மாவட்டங்களிலும் 1982-83 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட முறையில் வழங்கப்பட்டிருக்கிறது:—

புதுக்கோட்டை மாவட்டத்தில் 72,000 கன்றுகள்.

சேலம் மாவட்டத்திலே 2,200 கன்றுகள்.

திருநெல்வேலி மாவட்டத்திலே 17,408 கன்றுகள்.

தஞ்சாவூர் மாவட்டத்திலே 2,11,715 கன்றுகள்.

மதுரை மாவட்டத்திலே 3,56,090 கன்றுகள்.

திருச்சி மாவட்டத்திலே 3,13,385 கன்றுகள்.

பெரியார் மாவட்டத்திலே 5,62,000 கன்றுகள்.

செங்கற்பட்டு மாவட்டத்திலே 19,000 கன்றுகள்.

கடலூர் மாவட்டத்திலே 38,500 கன்றுகள்.

இந்த முறை மற்ற மாவட்டங்களிலும் கூமாபுல் நாற்றுக்கள் கொடுக்கப்பட்டு பயிரிடப்பட்டு வருகிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி(*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்)

2. கவன ஈர்ப்பு.

(1) சென்னையிலுள்ள மேற்கு மாம்பலம், அசோக் நகர் ஆகிய பகுதிகளில் குடிநீர் வராததால் மக்கள் படும் அவதி குறித்து.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

" சென்னையிலுள்ள மேற்கு மாம்பலம், அசோக் நகர் ஆகிய பகுதிகளில் குடிநீர் வராததால் மக்கள் படும் அவதி குறித்து ".

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அவையின் முன் ஒரு விவர அறிக்கை @ வைக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையில் தொட்டிகள், லாரிகள் பற்றி குறிப்பிடப்பட்டிருப்பது முன்பு சேகரிக்கப்பட்ட விவரங்கள், அதை அப்டேட் செய்து சொல்ல வேண்டுமென்றால், தண்ணீர் தொட்டிகள் 1683, லாரிகள் 171, டிராக்டர்கள் 16, கை பம்புகள் 11,356, ஆழ்துளை பம்புகள் 132 என்று திருத்தி வாசித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறவாறு, அரசு நீர்த் தொட்டிகள், லாரிகள் ஆகியவற்றை அதிகமாக ஏற்பாடு செய்திருக்கிறது என்பதை ஒத்துக்கொள்கிறேன். அப்படி ஏற்பாடு செய்திருந்தாலும்கூட, யாரோ சிலர் பொதுமக்களிடம் காசு வசூலிப்பதாகவும், மக்கடை, சோடா கம்பெனி ஆகியவர்களிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு மொத்தமாகத் தண்ணீரைத் தந்துவிடுவதாகவும், லாரிகளுடைய டிரைவர்களுக்கு ஏதோ தந்து நிவர்த்தி செய்து கொள்வதாகவும், போலீஸ்காரர்கள்கூட அதற்குப் பாதுகாப்பாக, பக்கபலமாக இருப்பதாகவும் புகார்கள் வருகின்றன. வழக்குமன்றத்திலே கூட வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. அதையெல்லாம் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்ற வகையிலே விவர அறிக்கையின் கடைசியில் இரண்டு, மூன்று குறிப்புகள் தரப்பட்டிருக்கின்றன. புகார்களைத் தவிர்க்கவும், தண்ணீரை ஒழுங்காக விநியோகம் செய்யவும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது என்றும் 100 ரூபாய் சம்பளத்தில் ஆள் நியமிக்கப்பட்டிருக்கிறது என்றும் மற்றும் சில பணிகளைப் பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி உண்மையிலேயே அறிவுறுத்தப்பட்டிருக்கிறதா ? ஆணையிடப்பட்டிருக்கிறதா ? அப்படியானால் எந்தத் தேதியில் ? அது நடைமுறையில் இருக்கிறதா ? இப்போது புகார்கள் தவிர்க்கப்பட்டிருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

---

@ 230–231 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, புகார்கள் வந்தவுடனே அந்தந்த அதிகாரிகளிடம் சொல்லி குறிப்பிட்ட தொழிலாளர்களுக்கு அறிவுறுத்திச் சொல்கிறோம். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொன்னதுபோல, ஒவ்வொரு நீர் வழங்கு தொட்டிக்கும் ஒவ்வொரு நபரை மாதம் ரூ. 100 சம்பளத்தில் நியமிக்கவிருக்கிறோம். அவர்கள் தண்ணீருக்காக வரும் மக்களை ஒழுங்குபடுத்தி நீர் வழங்கவும், சென்னை பெருநகரில் லாரிகளில் ஆயுத போலீஸ்கூட பாதுகாப்புக்கு என்று போடுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அந்த ஏற்பாடுகள் செய்வதாக இருக்கின்றன. இவைகளை எல்லாம் செய்துவிட்டால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் இந்த மாதிரி புகார்கள் வராது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, இப்போது அறிக்கையிலே சில வீடுகளிலே சொந்தக் கிணறுகள் உள்ளன என்று சொல்லப்பட்டிருக்கிறது. சொந்தக் கிணறுகள் உள்ள பகுதிகளிலே, அந்தக் கிணறுகளில் தூர் வார முடியாமல் இருக்கின்றது. அப்படிச் சில பகுதிகளிலே இருக்கின்றது. தண்ணீர் தட்டுப்பாடு இருப்பதை நீக்க நடவடிக்கைகள் எடுக்கும்போது, தூர் வார முடியாமல் இருக்கின்ற சொந்தக் கிணறுகளை ஒழுங்குபடுத்தி அதிலேயிருந்து மக்களுக்கு நீர் கிடைக்கச் செய்ய, அரசு மானியமாகவோ, முழுச் செலவை ஏற்றோ ஏற்பாடு செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, சொந்தக் கிணறுகள் ஒவ்வொருவருடைய வீட்டுக்குள்ளேயே இருப்பது. அதற்குள்ளே நாம் சென்று தூர் வாருவது என்பதில் இருக்கக்கூடிய சிக்கல்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று நான் கருதுகிறேன். ஒரே ஒருவர் அப்படிச் சொல்லியதாக எனது ஞாபகத்திற்கு வருகிறது. அங்கே என்ன தூர் எடுத்தாலும் தண்ணீர் வராத நிலை இருக்கிறது என்பது தெரிந்தது. எனவே, இது ஒரு சிக்கலான பிரச்சினை. எனவே அங்கிருந்து ' நீங்கள் தூர் எடுங்கள், அப்படி தூர் எடுத்தால் நிரம்பத் தண்ணீர் வருமானால், அந்தத் தண்ணீரை எல்லோருக்கும் பகிர்ந்தளிக்கத் தயாராக இருக்கிறோம் ' என்று சொல்லி மனுக்கள் வருமானால், அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

[1983 மார்ச் 29

**(2) சென்னையை அடுத்த பள்ளிக்குப்பம் கிராமத்தில் பெட்ரோல் லாரி கவிழ்ந்து விபத்தால் பலர் மாண்டது குறித்து.**

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியைக் குறித்து மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"சென்னையை அடுத்த பள்ளிக்குப்பம் கிராமத்தில் பெட்ரோல் லாரி கவிழ்ந்து விபத்தால் பலர் மாண்டது குறித்து."

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** (போக்குவரத்து அமைச்சர் அவர்கள் சார்பாக) : மேலவைத் தலைவர் அவர்களே, அவைமுன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

* **திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே அந்த பெட்ரோல் லாரியை ஓட்டி வந்த டிரைவரைக் கைது செய்ததாக இருக்கிறது. அவர் செய்த குற்றம் என்ன ? அவர் பேரில் என்ன வழக்கு தொடரப்பட்டிருக்கிறது ? இந்த விவர அறிக்கையிலேயிருந்து என்ன தெரிய வருகிறது என்றால். ஸ்பிரிட்டை, பெட்ரோலைத் திருடச் சென்றபோது, தீப்பற்றிக் கொண்டதனால், சிலர் இறந்து போயிருக்கிறார்கள், காயமுற்று இருக்கின்றார்கள். டிரைவரைக் கைது செய்து அவர் மீது வழக்கு தொடர்வதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவர் அவர்களே, விபத்து என்று ஏற்பட்டால், 'ராஷ் அண்டு நெக்லிஜெண்ட் டிரைவிங்' என்பது போன்று பல்வேறு பிரிவுகள் அந்த விதிகளிலே இருக்கின்றன. அது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். ஒருவேளை இந்த அறிக்கையிலே வேண்டுமானால், அதுபற்றி இல்லாமல் இருக்கலாம். இந்த விபத்திலே டிரைவர் ஒழுங்காக லாரியை ஓட்டி வந்தாரா என்று கண்டுபிடிக்கின்ற அடிப்படையிலேதான் அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

---

@ 232 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1983 மார்ச் 29]

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, சிந்திய ஸ்பிரிட்டை எடுக்க சிலர்தான் முயற்சி செய்ததாக அறிக்கையிலிருந்து தெரிகிறது. அப்படியிருக்க ஆறு பெண்கள் அந்த இடத்திலே மாண்டு, 50 பேர்கள் தீக்காயம் உற்றதாகத் தெரிகிறது. அது எப்படி என்று அரசு ஆராய்ந்து பார்க்க வேண்டும். பெட்ரோல் ஏற்றி வந்த லாரியில் தீப்பற்றி இந்த விபத்து ஏற்பட்டிருப்பதால், அந்த இறந்தவர்கள் குடும்பத்திற்கும், காயமுற்றோர் குடும்பத்திற்கும் சட்டப்படி அந்த லாரி கம்பெனி மூலம் போதிய நஷ்ட ஈடு கொடுக்க அரசு உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே மிகத் தெளிவாகக் கொடுத்திருக்கிறார்கள். முதலிலே லாரி கவிழ்ந்திருக்கிறது. ஸ்பிரிட் லீக்கேஜ் இருந்தது. அதை எடுத்துக் கொள்ளலாம் என்று முதலிலே 6, 7 பேர்கள் வந்தார்கள். அந்த நேரத்திலே தீப்பற்றிக் கொண்டுவிட்டது. அப்போது ஆவலோடு வந்தவர்கள் அந்தத் தீ விபத்திலே சிக்கிக் கொண்டார்கள். அது ஒரு துரதிருஷ்டமான விபத்து. அதற்குப் பிறகு அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. அதிலே உள்ள பிரச்சினை என்னவென்றால், செங்கல் சூளையிலே வேலை செய்ய வந்தவர்கள், அந்தப் பகுதியைச் சார்ந்தவர்கள் அல்ல. வெளி மாவட்டங்களிலே இருந்து பலபேர் பிழைப்புக்காக பணியாற்ற வந்தவர்கள் என்று தெரிகிறது. எனவே அவர்களுடைய வாரிசுகள் யார் யார் என்று அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலம் அறிய வேண்டியிருக்கிறது. அதனால் கொஞ்சம் காலதாமதம் ஆகிறது. அந்த விபத்திற்குள்ளானவர்களில் பெரும்பகுதியினர் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் அல்ல. வேறு மாவட்டங்களிலே இருந்துகூட வந்திருக்கிறார்கள். அவர்களுடைய வாரிசுகள் யார் என்று இப்போது நாம் தேடிக் கொண்டிருக்கிறோம். விவரங்கள் கிடைத்த உடனே நஷ்ட ஈடு கொடுக்க அரசு முயற்சி செய்யும்

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இப்போது இறந்தவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை கொடுப்பதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அந்த மருத்துவ விடுதியில் 6 ஆண்களும், 11 பெண்களும் சிகிச்சை பெற்று வருவதாக இப்போது சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி சிகிச்சை பெற்று வருகின்றவர்கள் உடல் ஊனமுற்று மீண்டும் தொடர்ந்து வாழ்க்கை நடத்த முடியாத நிலைக்கு வந்திருக்கலாம். உயிர் மட்டும் இருந்து வாழ்க்கை நடத்த முடியாத நிலையிலே இருக்கலாம். அவர்களுக்கும் இந்த உதவித் தொகை கொடுப்பது குறித்து அரசு பரிசீலிக்குமா ?

(முற்பகல் 10-30)

இங்கிலாந்து பார்லிமென்டரி முறையைப் பின்பற்றி நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டம் இயற்றப்பட்டது என்றாலும்கூட, சமஷ்டி ஆட்சி முறையை இணைத்திருக்கிறோம். இங்கிலாந்து பார்லிமென்டரி முறையோடு யூனிட்டரி கவர்ன்மென்ட்—சமஷ்டி ஆட்சி முறை கொஞ்சம் இணைக்கப்பட்டிருக்கிறது என்றாலும், பெரிய அளவிற்கு யூனிட்டரி கவர்ன்மென்ட் முறை இருக்கிறது என்றால், அதில் தவறில்லை. இங்கிலாந்தில் 2 அவைகள் இருக்கின்றன. House of Commons, House of Lords என்று இரண்டு அவைகள் இருக்கின்றன. நாம் மேலவை என்று சொல்லுவதுபோல, அங்கே பிரபுக்கள் சபை என்று சொல்லுகிறார்கள். இன்னொன்று, அதை Judicial Body ஆக வைத்திருக்கிறார்கள். அதுதான் கடைசி Appellate Authority, Privy Council என்பது Supreme Court தீர்ப்புக்கு மேலே மறு ஆய்வு செய்யும் அவை. நம் ஜனநாயகத்திலே 3 அமைப்புகளைப் பார்க்கிறோம். ஒன்று Parliament அல்லது Assembly, இன்னொன்று Executive இன்னொன்று Judiciary. இந்த மூன்று அமைப்புகளும் இணைந்து இயங்கினாலும், ஒன்றுக்கொன்று ஆட்சொள்ளப்படாமல், water-tight compartments போல தனித்தனியாக இயங்கும். அவை தனி ஆக்கம் பெற்ற அமைப்புகளாக இருக்க வேண்டும். பாராளுமன்றத்திலே இருந்து உருவாகக் கூடியதுதான், நிர்வாகம் Executive அதிலிருந்து அதிகாரம் பெற்று, செயல்பட வேண்டும். சட்டங்களை அமுல்படுத்தும் போது ஏற்படும் தவறுகள், அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ செய்கிற செய்கைகள் மூலமாக தனி நபர் உரிமைகள் பாதிக்கப்படும்போது, அதைப்பற்றி விளக்கம் கொடுக்கும்போது, அரசு இயந்திரம் ஒரு விளக்கம் கொடுக்கும்போது அது ஒருவரைப் பாதிக்கும்போது, நீதிமன்றம் சொல்ல வேண்டும். அதை அமைப்பது எக்சிகியூடிவ்தான். அதை அமைப்பது எக்சிகியூடிவ்-ஆக இருந்தாலும், நீதிமன்றம் தனித்திருக்க வேண்டும். அசெம்பிளி அல்லது பாராளுமன்றம் நிர்வாகத்தைச் செம்மையாக நடத்தும் அதிகாரத்தைப் பெற்று, இயங்கக்கூடியது. இங்கிலாந்தில் நீதிமன்றத்திற்கு மேலே தான் பார்லிமெண்ட் என்று வைத்திருக்கிறார்கள். அதைத்தான் 'பார்லிமென்டரி சுப்ரிமசி' என்று சொல்லுவார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் உயர் அமைப்பு முறைக்கு உயரிய நிலையைக் கொடுத்து, நீதிமன்றத்திற்கு மேலே வைத்திருக்கிறார்கள் என்பதை உணரும் போது, இந்த மேலவைக்கு இன்னும் சில அதிகாரங்களைக் கொடுத்து, இதனுடைய அமைப்பு முறையிலே, பேரவையிலே இருக்கும் அரசியல் காழ்ப்புணர்ச்சிகள் வாராத நிலையிலே, அதனுடைய அமைப்பு முறைகளை வகுத்து, இங்கிலாந்தில் உள்ளது





போல இந்தியாவிலும் செய்யலாமா என்று ஆராய்ந்தால்கூட தவறில்லை. அதை விட்டு அமெரிக்க பிரிசிடென்சியல் ரூலுக்குப் போகலாமா என்று அரசியல் சிந்தனையாளர்கள் சிந்திக்கிறார்கள். இப்போதுள்ள தவறுகளுக்குக் காரணம் நாம்தான் என்பதை மறந்துவிட்டு, நாட்டிலே உள்ள வறுமைதான்; இங்கேயுள்ள இல்லாமைதான்; ஆட்சியிலே இருப்பவர்களிடத்திலே உள்ள நெறி இன்மைதான் ன சட்டமன்றத்திலே உள்ள உறுப்பினர்களிடம் உள்ள இல்லாமைதான் எல்லாவற்றிற்கும் காரணம் என்று புரியாமல், பார்லிமென்ட்டரி முறை தவறு, பிரசிடென்சியல் முறைக்குப் போகலாமென்று சொல்லுகிறார்கள். பார்லிமென்ட் தீர்மானம் போட்டாலும், அமுல்படுத்தாமல் இருக்கலாம், பிரசிடெண்ட் அமுல்படுத்தும் ஒன்றை பார்லிமென்ட் 'வீட்டோ' பண்ணலாம். இப்படியே 6 ஆண்டுகளுக்கு நடந்து கொண்டு போகட்டுமே என்று அரசியல் நிபுணர்கள் சிந்தித்து, அதை வெளியே சொல்லி, அது விவாதிக்கப்படும் பொருளாக மாற்றப்பட்டு, நம்முடைய சிந்தனைக்குள்ளே அது ஏற்றப்பட்டிருக்கிறது என்பதை மறந்துவிடுவதற்கில்லை. அந்த நிலையில் சுதந்திரம் பெற்று 35 ஆண்டுகளாகவும், விடுதலை பெறுவதற்கு முன்னால் 12 ஆண்டுகள், 1935 ஆம் ஆண்டு ஆக்ட்படியும், இந்த அவைகள் எல்லாம் செயல்பட்டு வருகின்றன. சுமார் 50 ஆண்டுகள் இந்த மன்றங்கள் செயல்பட்டு, மக்கள் மத்தியில் இந்த மன்றங்களில் செயல்பாடு முறையாக இருந்தால் நன்மையாக அமையும் என்ற கருத்து வலுப்பெற்றிருக்கிறது. அந்த நிலையில் மேலவை சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்றால், இப்போதிருக்கும் அமைப்பு முறையில் ஏதாவது மாற்றம் வேண்டுமா என்று ஆராயலாம். அதில் அரசியல் ஆதிக்கம் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பேரவையில் அரசியல் ரீதியாக வந்தவர்கள் விவாதிக்கும் கருத்துக்கள் பற்றி இங்கே விவாதிக்கிறோம். ஆனால் நிதானமான முறையில், இங்கே கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்படுகின்றன. பேரவை எடுக்கும் முடிவுகளைப் பற்றிச் சொல்லக்கூட உரிமையில்லை. பேரவைச் செயலைப் பற்றிச் சொல்ல உரிமையில்லை. அவர்கள் பல்வேறு சூழ்நிலைகளில் முடிவுகளை எடுக்கிறார்கள். அதனால் ஏற்படும் விளைவுகளைச் சிந்தித்து, அமுல்படுத்தும் நிர்வாகத்திற்கு, எக்சிகியூடிவ்-க்கு உணர்த்தும்போது, அந்தக் குறைபாடுகள் வராமல் நிர்வாகத்தை நடத்துவதற்கு இந்த அவையின் செயல் பயன் உள்ளதாக இருக்கும். இது 'டியூப்ளிகேஷன் ஆப் ஒர்க்', இது 'கிரிமினல் வேஸ்ட்', இதனால் பணச் செலவு அதிகமாக ஏற்படுகிறது என்று எல்லாம் சொல்லப்படுகிறது. ஆனால் முறையாக, செம்மையாகக் காரியங்களைச் செய்ய அக்கறை எடுக்கும்போது, அது பணச் செலவு அல்ல. மேலவைக்குச் செலவு செய்யும் தொகையைக் கணக்கிடும்போது, மிகக் குறைந்த சதவிகிதம்தான் அது. இங்கே அவை கூடும் நேரங்களிலே அங்கே இருக்கும் அமைச்சர்கள் எல்லாம் இங்கேயும் கலந்து கொள்ளும் நிலை ஏற்படுகிறது. அதை 'வேஸ்ட்' என்று கருதவில்லை. இன்னொரு கோணத்தில்,

இன்னொரு சார்பில் கருத்து எடுத்து வைக்கப்படுகிறது என்று தெரிந்து கொண்டால், நல்லதுதான். கட்சி ரீதியான ஜனநாயகத்திலே இப்போது இருக்கிறோம். அதாவது 'விப் கண்ட்ரோல்' பண்ணும் ஜனநாயகம். இங்கே, மேலவையிலே விப்புக்கு வேலையில்லை. அடி விழாது. அடித்தாலும் உரைக்காது. அடிக்க சக்தி இராது. அப்படித்தான் நினைக்கிறேன். பேரவை 'விப்' அப்படியில்லை. நான் நம்முடைய பேரவை, மேலவையை வைத்துச் சொல்லவில்லை. கட்சி ரீதியான ஜனநாயக அமைப்பிலே தலைமை சொற்படி 'விப்' செயல்பட்டால், அதற்குப் பிறகு 'டிசிப்ளினரி ஆக்ஷன்' எல்லாம்கூட இருக்கிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : இது சாட்டை இல்லாத பம்பரம்.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவாவர்களே, அங்கே ஒரு சூழ்நிலையின் காரணமாக ஒரு கருத்து உருவாகி, அதன் மூலம் வெற்றி பெற வாய்ப்பு இருக்கிறது. திறந்த மனத்தோடு, நாட்டு மக்களின் நலனில் அக்கறையோடு, ஒன்றைச் செயல்படுத்துவதால் வரக்கூடிய நன்மை தீமைகளை எந்தப் பக்கமும் சாயாமல் நடுநிலை தவறாமல் எடுத்துச் சொல்லும் ஓரமைப்பாக மேலவை செயல்பட்டால், அப்படி எல்லா இடங்களிலும் மேலவைகள் செயல்பட்டால், அது உண்மையிலேயே வரவேற்கப்பட வேண்டிய அவையாக இருக்கும். அப்படி அவை நடக்க அதிகாரம் இருப்பது தவறில்லை. பிரிவி கவுன்சிலை அப்படித் தான் வைத்திருக்கிறார்கள். ஓரளவிற்கு மன்னருடைய கருத்து—சாவரனிட்டி, ஆதிபத்திய உரிமை அங்கு உண்டு என்று ஒரு வினாவை எழுப்பிக் கேட்டால், புரியும். "கிரவுன் இன் பார்லிமென்ட்"—அரசன் பார்லிமென்டில் இணைந்தால் தான் சாவரனிட்டி. அரசனுக்கு சாவரனிட்டி இல்லை. "கிரவுன் இன் பார்லிமென்ட்"—பார்லிமென்ட் முழு அதிகாரம் பெற்றது. அரசனும் இணைந்திருக்க வேண்டும். இங்கே அரசன் என்று வைத்துக் கொள்ளவில்லை. நம்முடைய நாட்டில் சாவரனிட்டி பாராளுமன்றத்தில் இருக்கிறது. அசெம்பிளி, கவுன்சிலில் இருக்கிறது. எனவே இந்த அவைக்கு இன்னும் கொஞ்சம் அதிகாரங்களைக் கொடுக்கலாமா என்று சிந்தனையாளர்கள் சிந்திக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

அப்படி அதிகாரம் கொடுக்கிறபோது அரசியல் காழ்ப்புணர்வுகள் இங்கு வராது இருந்தால்தான், நீதிமன்ற அமைப்புகளுக்கு உள்ள இயல்புகள் இங்கும் இருக்க முடியும். இங்கிலாந்தில் இம்மாதிரித்தான் இருக்கிறது. அண்மையில்



கூட அந்த வகையில் அங்கிருந்து இரண்டு தீர்ப்புகள் வந்தன. 4½ கோடி மக்களைக் கொண்ட அந்த நாடு அப்படி வைத்திருக்கிறது. நம்முடைய தமிழக மக்கள் தொகையும் 4½ கோடிதான். அதோடு நம்மிடம் ஜனநாயகப் பண்பும் இருக்கிறது. ஆனால் நாம் பல ஆண்டுகளாக இந்தியாவில் இணைந்திருப்பதால், அனைத்தையும் இழுத்துக்கொண்டு போகக் கூடிய ஒரு நிலையை வளர்த்து விட்ட ஒரு குறையும் நம்மிடம் உண்டு. அப்படி அமைக்கப்படுகிற அமைப்பில் ஆசிரியர் பிரதிநிதிகளும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். நான் முதலில் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது மாநில அளவில். பிறகு தான் ஆசிரியர் பிரதிநிதிகளை மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கும் முறை வந்தது. அப்போது மாநில அளவில் திரு. சீனிவாச வரதன் என்பவர் உறுப்பினராக இருந்தார். இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இரண்டு பேர் ஓய்வு பெறுவர். 1962 ஆம் ஆண்டில் அந்த முறையை மாற்றி மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கும் முறை வந்தது. அந்த சமயத்தில் திருநெல்வேலி-கன்னியாகுமரி சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டவரை ஒதுக்கி வைத்திருந்தார்கள். அவர் மறைந்த பிறகு நடைபெற்ற தேர்தலில் ஆசிரியர்கள் சார்பாக நான் வந்தேன். இந்த அவையின் சிறப்பு மேலும் சிறக்க வேண்டுமானால், ஆசிரியர் தொகுதி மாநில அளவில் முன்பு மாதிரி இருக்க வேண்டும். முன்பு பட்டதாரி ஆசிரியர்கள் தொகுதி, லோக்கல் பாடிஸ் தொகுதி இவை எல்லாம் மாநில அளவில் தான் இருந்தன. ரீஜினல் அளவில் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறை பிறகு தான் அமுலுக்கு வந்தது. மாவட்ட அளவில் என்று இப்போது இருப்பதால், ஜாதியைச் சொல்லி, லோக்கல் ஏரியாவில் இருக்கிற சூழ்நிலையைப் பயன்படுத்தி வரக்கூடிய வாய்ப்பிருக்கிறது. இது தவறு.

அடுத்து, ஆசிரியர் பிரதிநிதிகள் என்று வந்ததற்குப் பிறகு, ஆசிரியர் தொகுதி வாக்காளர்கள் யார் என்று பார்ப்பது அடுத்த பிரச்சினை. நான் 1964 ஆம் ஆண்டு முதன் முதலாக இந்த அவைக்கு வருகிறபோது, நம்முடைய எதிர்க் கட்சித் தலைவராக டாக்டர் லட்சுமணசாமி முதலியார் அவர்கள் இருந்தார்கள். டாக்டர் ராஜமன்னார் அவர்கள் இருந்தார்கள். திரு. கே. பால சுப்பிரமணியம் அவர்கள் வழக்கறிஞர்கள் சார்பாக இருந்தார்கள். இப்போதைய முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு உறுப்பினராக இருந்தார்கள். அப்போது எல்லோரையும் விட நான் சின்னவன். 20 வருடத்திற்கு முன்பு அப்பேர்ப்பட்ட பெரியவர்கள் எல்லாம் இந்த அவையை நடத்திக் கொண்டிருந்தார்கள். அப்போது புதிதாக நாங்கள் 21 பேர் ஒரே சமயத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு சேர்ந்து வந்தோம். இப்போது லோக்கல் பாடிஸ் இல்லாததால், ஒரே சமயத்தில் 21 பேர் சேர்ந்து வருவதில்லை. 21 பேர் சேர்ந்து வருகிறபோது, அவையில் இருக்கிற வயதான பெரியவர் ஒருவர் வருபவர்களை சபையில் வரவேற்பது என்பது ஒரு கன்வென்ஷன். பிறகு அவர் பேசுவார். கடைசியில் தலைவர்

[திரு. ம. சங்கரலிங்கம்] [1983 மார்ச் 29

அவர்கள் வரவேற்றுப் பேசுவார்கள். வருகிறவர்கள் சார்பாக ஒருவர் நன்றி சொல்வது என்பது சடங்கு மாதிரி இருந்து வந்தது. அப்போது திரு. கே. பாலசுப்பிரமணியம் அவர்கள் தான் வரவேற்றார்கள். அவர்கள் நீண்ட நேரம் பேசுவார்கள். 20 வருடங்களுக்கு முன்பு அவர்கள் பேசிய பேச்சு இன்றைக்கும் நடவடிக்கைக் குறிப்பில் இருக்கிறது. எங்களையெல்லாம் வரவேற்ற பிறகு, இந்த அவையினுடைய சிறப்பையெல்லாம் 21 பேருக்கும் உணர்த்தினார்கள். அப்போதே இந்த அவை இருக்க வேண்டுமா, இருக்க வேண்டாமா என்கிற பிரச்சினை இருந்திருக்கிறது. அரசியல் மட்டத்தில் இந்த அவை இருக்க வேண்டுமா வேண்டாமா என்கிற பிரச்சினை எழுந்திருக்கிறது. காமராஜ் அவர்களுடைய வட்டாரத்தில் இந்த அவையை ஒழிக்கலாமா என்கிற பிரச்சினை வந்திருக்கிறது என்று அவர்கள் அப்போது சொன்னார்கள். அதற்காக வேண்டி பெரியவர்கள் எல்லோரும் சேர்ந்து யோசித்தோம். இடையில் தூது கோஷ்டியாகப் போய் முதலமைச்சர் அவர்களைப் பார்க்கலாம் என்று சொன்னார்கள். அதற்காக வேண்டி இங்கிலாந்து, யு. எஸ். ஏ. போன்ற நாடாளுமன்ற முறைகளையெல்லாம் படித்துப் பார்த்து, 'அப்பர் ஹவுஸ்' இருப்பதன் தேவையைப்பற்றி விரிவாகக் குறிப்பெடுத்து, 21 பக்கத்தில் ஒரு குறிப்பை வரிசைப்படுத்தி முதலமைச்சரிடம் போய் 'டைம்' கேட்டேன். முதலமைச்சர் அவர்கள் 7 பேர் உள்ள எங்களுடைய குழுவுக்கு 'டைம்' தந்தார்கள். என்னென்ன எல்லாம் பேசுவது என்பது குறித்து ஹைக்கோர்ட்டில் வழக்கறிஞராக இருந்த நண்பரையும் கலந்தாலோசித்து விட்டுத் தான் போனோம். நாங்கள் போனவுடன் என்ன என்று முதலமைச்சர் கேட்டார். "மேல் சபை" என்று சொன்னோம். உடனே "அதைப் பற்றிக் கவலை வேண்டாம், ஒழிக்க மாட்டோம். நீங்கள் போகலாம்" என்று சொன்னார்கள். "எங்கள் ஆட்களுக்கு இடம் கொடுக்க வேண்டாமா" என்று சொன்னதுடன் கூட "அதற்காக வேண்டி நீங்கள் 21 பேரும் அப்படி நினைக்க வேண்டாம், உங்களுடைய கடமைகளை நல்ல முறையில் செய்யுங்கள்" என்று அவர்கள் சொன்னது இன்றைக்கும் என்னுடைய நினைவில் பசுமையாக இருக்கிறது. இங்கே இருக்கிறவர்கள் அரசியல் சார்பானவர்களாக இருந்தாலும்கூட, அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் சொல்லியதற்கு ஏற்ப, அந்த உணர்வைப் பெற்று இன்னும் அன்றைக்கு இருந்த சிறப்பு சிறிதும் குன்றாத வகையில் நாம் பணி செய்து வருகிறோம். எவ்வளவு தான் காரசாரமாகப் பேசினாலும், ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் நின்று இந்த மன்றத்தினுடைய சிறப்பு குன்றாமல்



1983 மார்ச் 29] [திரு. ம. சங்கரலிங்கம்]

நின்று, நம்முடைய சிந்தனையாலே, உணர்வாலே, செயலாலே நாம் நம்மை உணர்ந்து ஆட்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதாலே பெருமைப்படுகிறோம். இந்த அவைக்கு வருகிற பட்டதாரி பிரதிநிதிகளைப் பொறுத்த வரையில், பட்டதாரிகளாக இருக்கிற அனைவருக்கும் வாக்குரிமை இருப்பதால் அவர்கள் ஓட்டு போட்டு இவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆக, அனைத்து பட்டதாரிகளுக்கும் வாக்குரிமை இருக்கிறது. வேலை இல்லாவிட்டாலும், பட்டதாரியாக இருந்தால், வாக்குரிமை இருக்கிறது. கல்லூரி ஆசிரியர்களுக்கு, மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு, எஞ்ஜினியரிங் கல்லூரி ஆசிரியர்களுக்கு, மருத்துவக் கல்லூரி ஆசிரியர்களுக்கு எல்லாம் வாக்குரிமை உண்டு. ஆனால் மிகப் பெரும்பான்மையான எண்ணிக்கையில் இருக்கிற, உண்மையிலேயே ஆசிரியர்களாக பணியாற்றிக் கொண்டிருக்கிற ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கும், நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் வாக்குரிமை இல்லை. எங்களை ஆசிரியர் பிரதிநிதிகள் என்று சொல்கிறார்கள். உண்மையிலே எங்களை அனுப்பி வைத்திருப்பவர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிற ஆசிரியர்கள்தான். அவர்களுக்கு இருக்கிற வாக்குரிமை ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு இல்லை. இது அரசியல் சட்டத்திலே ஏற்பட்ட தவறு. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியும் சரி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியும் சரி, ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு வாக்குரிமை அளிக்கும் வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்கிற எண்ணத்தை எடுத்துக் கூறி வந்திருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். அதோடு நம்முடைய பணி தீரவில்லை. அரசியல் அமைப்புச் சட்டத்தையே இதற்காக வேண்டி திருத்த வேண்டும். மாநில மத்திய உறவு பற்றி ஆராய சர்க்காரியா கமிஷன் வேறு போட்டிருக்கிற இந்தக் கால கட்டத்தில் இந்தத் தீர்மானம் வந்திருப்பது மிகவும் பொருத்தமானது என்பதோடு கூட, இன்னமும் அது வலிமை பெறுகிறது. ஏனென்றால் மத்திய அரசு ஒரு நபர் குழு போட்டிருப்பது வெறும் மத்திய மாநில உறவைப் பற்றி மட்டும் ஆராய என்பதற்கில்லை. நிதியைப் பகிர்ந்தளிப்பது, அதிகார வரம்பில் மாற்றம், பொதுப் பட்டியலில் இருக்கின்ற சப்ஜெக்டுகளில் மாற்றம் போன்றவற்றில் அரசியல் சட்டத்தில் என்னென்ன திருத்தங்கள் செய்வது என்பது பற்றி நம்முடைய தீர்மானங்களை கமிஷனுக்கு அனுப்பி வைக்க வேண்டும். நாம் ஏற்கெனவே தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு வாக்குரிமை அளிக்கின்ற தீர்மானத்தைப் பற்றி விவாதித்திருக்கிறோம். எல்லாக் கட்சியினரும் ஏகமனதாக இதற்கு ஆதரவாகக் கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆசிரியர் தொகுதி என்று சொல்லிவிட்டு, 30 சதவிகித ஆசிரியர்களுக்கு வாக்குரிமையை அளித்துவிட்டு, 70 சதவிகித ஆசிரியர்களுக்கு வாக்குரிமை அளிக்காமல் இருப்பது நியாயம்தானா?

(மாற்றுத் தலைவர் திரு. பா. ரா. தாமஸ் தலைமை)

பொதுவாகவே நாங்கள் ஆசிரியர்களுடைய பிரச்சினைகளைப் பற்றிப் பேசுகிற போது மற்றவர்களுக்கு வெறுப்பாக இருக்கும். காரணம் நாங்கள் ஒரு இன்கிரிமென்டுக்காகக் கூட ஆசிரியர்களுக்காக வேண்டி போராடியிருக்கிறோம். முன்பெல்லாம் நான்தான் ஆசிரியர்களுக்காக வேண்டி முன்னணியில் நின்று போராடிக் கொண்டிருந்தேன். இப்போதெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மீனாட்சிசுந்தரமும், திரு. முத்துசாமியும் போராடிய பிறகு, கடைசியாக நான் போராடுகிறேன். ஒரு இன்கிரிமென்டுக்காக வேண்டி, 3 ரூபாய்க்காக வேண்டிகூட போராடியிருக்கிறார்கள். அவர்களுடைய பிரதிநிதிகளாக நாங்கள் இருக்கிற காரணத்தால், இதை வாங்கிக் கொடுத்தால், அத்துடன் அவர்களுக்கு வேறு வருவாய் ஒன்றும் இல்லாததால், திருப்தி அடைந்து அவர் ஆசிரியர் களுடைய பணியை நல்ல முறையில் செய்து கொண்டிருப்பார்கள். ஆசிரியர் களுடைய பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை என்கிற அடிப்படையில் அவர்களுடைய குறைகள், சர்விஸ் பிரச்சினைகள் எல்லாவற்றையும் இங்கே பேசுகிறோம். அந்த வகையில் கல்வித் துறை சிறப்பாக நடைபெற நம் முடைய அவை ஒரு வழிகாட்டியாக இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 10-50)

ஆசிரியர்களின் பணியில், மேல் நிலையில் பணியாற்றுவது என்பது சுலபம். மேல்நிலைக் கல்வியை அஞ்சல் வழி மூலமாகக் கூட நடத்தலாம். தற்போது ஏற்பட்டுள்ள விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக அஞ்சல் வழிப் பாடபோதனை மூலம்கூட நடத்தலாம். கேரளத்தில் ரெகுலர் காலேஜுகளுக்குச் சமமாக 'பேரலல் காலேஜ்' என்று நடத்தி வருகிறார்கள். இப்படிக் கல்லூரிக் கல்வியை பிரைவேட்டாகக் கூட படித்துக் கொள்ள முடியும். ஆனால் ஆரம்பக் கல்வியை மட்டும் பிரைவேட்டாகப் படித்துக் கொள்ள முடியாது. எஸ். எஸ். எல். சி., ஹையர் செகண்டரி போன்ற அனைத்து வகுப்புகளுக்கும் பிரைவேட் ஆகப் படித்து தேர்வு எழுதலாம். ஆனால் 1 முதல் 8 வகுப்பு களுக்கான கல்வியை ஆசிரியரின் மூலம்தான் நாம் படித்தாக வேண்டும். அவர் கள்தான் உண்மையான ஆசிரியர்கள். ஆனால் அவர்களுக்கு ஓட்டுரிமை இல்லை என்று சொல்லிவிட்டு ஆசிரியர்களுக்குத் தொகுதி என்று பெயர் மட்டும் வைத்துக் கொண்டிருக்கிறோம்.

கல்லூரிகளில் உள்ள ஆசிரியர்கள் ஆசிரியர்களே அல்ல. அவர்களின் பெயரே லெக்சரர்கள். அவர்களுக்கும் மாணவர்களுக்கும் இருக்கிற உறவே ஒரு மணி நேரத்திற்கு அறையில் எதையாவது பேச வேண்டும். மாணவர் கள் அதைக் கேட்டுச் சிரித்துக் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு சப்ஜெக்ட்





இல்லாமல் பேசுகிற ஆசிரியர்கள் கல்லூரிகளில் பலர் இருக்கிறார்கள். ஆனால் 5 வயது குழந்தையைக் கொண்டு வந்து அவனைத் துணி உடுக்கச் செய்வதி லிருந்து, சட்டை போடச் செய்வதிலிருந்து, பவுண்டன் பேனா வைத்துக் கொள்ளச் சொல்லிக் கொடுப்பதிலிருந்து, பெற்றோர்களிடமும், பெரியவர்களிட மும் ஒரு பொருளைக் கொடுக்க வேண்டுமென்றால்கூட, இரண்டு கையையும் சேர்த்து எடுத்துக் கொடுக்க வேண்டும் என்று பணிவை உருவாக்குவதி லிருந்து அனைத்து விஷயங்களிலும் அறிவை ஊட்டிக் கொண்டிருப்பவர்கள் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள். ஒரு சிறுவனைக் கொண்டு வந்து சமுதாயத்திற் குத் தேவைப்படும் ஒரு மனிதனாக, சிறந்த மாண்புகளை உண்டாக்குகிற மாணவர்களாக உருவாக்குகிற பணியைச் சிறப்பாகச் செய்பவர்கள் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள்தாம்.

> "ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே,
> சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே
> வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லர்க்குக் கடனே"

என்று பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே தமிழகத்தில் யார் யாருக்கு என்னென்ன கடமைகள் என்று சங்க இலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன. சங்க காலத்து மூதாட்டி ஒருவள் தனக்கு என்ன கடன்—என்ன; கடமை என்பதைச் சொல்லும்போது, ஒரு நல்ல மகனை ஈன்று தருதல் என்னுடைய கடமை என்று சொல்லுகிறாள். அப்படி உருவாக்கித் தந்த அந்த மகனைச் சான்றோனாக்குதல் தந்தையின் கடன் என்று சொல்லுகிறாள். அது மட்டு மல்ல, "நல்நடை நல்கல் வேந்தர்க்கு கடனே" என்றும் சொல்லுகிறாள். படித் தால் மட்டும் போதுமா? அவன் நல்ல நடத்தை உள்ளவனாக இருக்க வேண்டாமா? அப்படி ஒருவனை நல்ல வழியில் செல்லும் மனிதனாக ஆக்க வேண்டிய பொறுப்பு அந்தக் காலத்தில் வேந்தர்க்கு இருந்தது. இந்தக் காலத் தில் அரசுக்கு இருக்கிறது. அதுமட்டுமல்ல. அந்தக் காலத்தில் ஒவ்வொரு வரும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய நிலைமை இருந்தது. அதன் காரணமாக ஒவ்வொரு இளைஞனுக்கும் ஒரு வேல் கொடுக்கப்பட்டது. அந்த வேலை வடித்துக் கொடுப்பது கொல்லர்க்குக் கடனாக இருந்தது. அந்த ஆயுதம் ஒவ்வொரு இளைஞனிடமும் இருக்க வேண்டும் என்ற நிலைமை அப் போது இருந்தது. இப்படியெல்லாம் உருவாக்கப்பட்ட அந்த இளைஞனுக்கு என்ன கடன் என்றால்

"..... போர்க் களத்திலே களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" என்று சொல்லப்பட்டிருக்கிறது. போர்க்களத்தில் எதிரியையும் அவனுடைய யானையையும் பொருது மாய்த்தல் அந்த இளைஞனுடைய கடன் என்று சொல்லப்பட்டது.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1983 மார்ச் 29

இவ்வாறு நல்நடை நல்கல் அரசுக்குக் கடனாக இருந்தது. அது இப்போது ஆசிரியரின் கடனாக இருக்கிறது. 3, 4 வயதிலேயே தன் குழந்தையை ஆசிரியரிடத்தில் தந்தை விட்டு விடுகிறார். அரசு செய்ய வேண்டிய கடமையை இன்றைக்கு ஆசிரியர்கள் செய்கிற காரணத்தால்தான், அரசு அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கிறது, பள்ளிகள் வைத்து நடத்துவதற்கு மானியம் கொடுக்கிறது. சான்றோன் ஆக்குதலும், நன்நடை நல்குதலுமாகிய இரண்டு கடமைகளையும் இன்றைய தினம் இந்தச் சமுதாயத்தில் ஆசிரியர்கள்தான் செய்து வருகிறார்கள். அத்தகைய மிகச் சிறந்த பொறுப்பு வாய்ந்தவர்களாக ஆரம்ப பள்ளி ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அரசும் தந்தையும் ஆற்ற வேண்டிய கடமையை அவர்கள் ஆற்றி வருகிறார்கள். இந்தப் பணியை ஆற்றும் ஆசிரியர்கள் நிலைமை என்ன என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு ஆசிரியரின் முயற்சியால் ஒரு மாணவன் நன்கு படித்துத் தேறினால், உடனே என்ன சொல்வார்கள் தெரியுமா? "எங்கள் வீட்டில் எல்லோருமே நன்றாகப் படிக்கிறவர்கள். இவன் என்ன, இவனுக்கு முன்னால் எல்லோரும் நிறைய மார்க் வாங்கியவர்கள்" என்று அவர்களுடைய குடும்பப் பெருமையை எடுத்துச் சொல்லி விடுவார்கள். ஆனால் ஒரு மாணவன் "பூஜ்யம்" மார்க் வாங்கினால், உடனே என்ன கேட்பார்கள் தெரியுமா? "எந்த வாத்தியாரடா உனக்குப் படிப்புச் சொல்லிக் கொடுத்தான்?" என்பார்கள். அதைப்போலவே ஒரு பையன் தவறு செய்தால்கூட, "நீ எந்தப் பள்ளிக்கூடத்தில் படிக்கிறாய்?" என்று தான் கேட்பார்கள். நல்நடை நல்கல் . என்பது வேந்தனுக்குக் கடனாக இருந்தாலும், யாரும் அரசைக் குறை சொல்வதில்லை. மாறாக ஆசிரியர்களிடத்தில்தான் குறை சொல்வார்கள். அப்படி பெற்றோர்களுக்கு இருக்கும் பொறுப்பையும், அரசுக்கு இருக்கும் பொறுப்பையும் இன்றைக்கு ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் . . . .

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் ஆசிரியர்களுடைய பெருமையைச் சொல்கிறார்கள். நான் பெற்றோர்களுடைய நிலைமையையும் இங்கே சொல்ல வேண்டியிருக்கிறது. நம்முடைய குழந்தைகள் குறைவாக மார்க்குகள் வாங்கினால், அதைக் குறித்து ஆசிரியர்களிடம் கேட்கும்போது, "உங்களுடைய பிள்ளை இதை விடவா வாங்கி விடுவான் ?" என்று எங்களைப் பார்த்துக் கேட்கிறார்கள். இந்தக் கஷ்டம் எங்களுக்கு இருக்கிறது என்பதையும் நான் இங்கே எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** மாணவர்கள் சில சமயம் நன்கு படித்தால் "நல்ல பிள்ளை" என்று பாராட்டுவதும், மோசமாகப் படித்தால் "எந்த வாத்தியாரடா உனக்குச் சொல்லிக் கொடுத்தது?" என்று கேட்பதும் வழக்கமாக இருக்கிறது.



1983 மார்ச் 29]

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** சில நேரங்களில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதன் காரணமாக அவர்கள் மார்க் வாங்குவது குறைந்து விடுகிறது என்ற புகார்களும் வந்து கொண்டிருக்கின்றன என்பதை மறந்து விடக்கூடாது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இவ்வாறு மாணவர்கள் 100க்கு 100 வாங்கினால், உடனே அவர்கள் தங்களின் குடும்பப் பெருமையைச் சொல்லி, "இவன் என்ன சார், எங்களுடைய பாட்டனார் கணக்கில் புலி" என்றும், "எங்கள் குடும்பமே கணக்கில் புலி" என்றும் சொல்லிக் கொண்டிருப்பதும், பழி வருகிறபோது ஆசிரியர்கள் மீது பொறுப்பைப் போடுவதும் வழக்கமாக இருக்கிறது. இப்போது நாமே கூட இங்கே பல கேள்விகளைக் கேட்கிறோம். ஒரு மாணவர் கூட வெற்றி பெறாத பள்ளிகள் மாநிலத்தில் எத்தனை இருக்கின்றன என்று கேட்கிறோம். அதற்கு உரியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறோம். ஆசிரியர்களைக்கூட தண்டிக்கிறோம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டமாதிரி, சில இடங்களில் ஆசிரியர்கள் முறையாகச் சொல்லிக் கொடுத்தாலும், "இவர்களுக்கு என்னடா தெரியும்?" என்று பெற்றோர்கள் சொல்லிக் கொடுத்து, இருக்கிற அறிவையும் தொலைத்து விடுகிற நிலைமையும் இருக்கிறது.

நம்முடைய 'ரிவைஸ்டு சிலபஸ்'படி பிளஸ் 2 வகுப்பிற்குக் கணக்கைச் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்றால், முன்னாலே பி. எஸ்சி. கணிதம் படித்தவரேகூட சொல்லிக் கொடுக்க முடியாது. அந்த அளவுக்குப் பாடத் திட்ட முறைகள் உயர்ந்திருக்கின்றன. இவ்வாறு கல்வியின் சிறப்பை உணர்ந்து மதிக்கத்தான் ஆசிரியர்களுக்கு நாம் இங்கே பிரதிநிதித்துவம் கொடுத்து வைத்திருக்கிறோம். இப்படிப்பட்ட நிலையில் உண்மையான ஆசிரியர்கள் என்று சொல்லத் தக்க ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் வாக்குரிமை அளிக்காமல் வைத்திருக்கிறோம். இது சரியல்ல என்பதால் தான், இன்றைக்கு அவர்களுக்கும் உரிமை வழங்கப்பட வேண்டும் என்று கேட்கிறோம்.

ஆசிரியர்களுக்கு என்று தனியான பிரதிநிதித்துவம் கொடுத்ததற்குக் காரணம் அவர்கள் சமுதாயத்தில் பெற்றிருக்கிற இடத்திற்கு ஒரு சிறப்பு அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான். இதன் காரணமாகத்தான் அரசு ஊழியர்களுக்கு அளிப்பதைப்போலவே ஆசிரியர்களுக்கும் ஊதியம் தந்து கொண்டிருக்கிறோம். இதை முன்பிருந்த அரசும் சரி, இப்போது இருக்கிற அரசும் சரி, ஏற்றுக்கொண்டுதான் அரசு ஊழியர்களுக்கு என்று சம்பளச் சீர்திருத்தம் செய்யும்போது, அரசு ஊழியர்களோடு ஆசிரியர்களுக்கும் ஊதிய உயர்வை வழங்கிக் கொண்டிருக்கிறோம். அந்த அளவுக்கு நாம் ஆசிரியர்

களைச் சிறப்பாக நடத்தி வருகிறோம். அந்த அளவுக்கு நாம் அவர்களை மதிக்கிறோம். இங்கே 6 பேர் ஆசிரியர் பெருமக்கள் அமர்ந்திருக்கிறார். இதன் மூலம் ஆசிரியப் பெருமக்களே மதிப்பைப் பெறுகிறார்கள்.

திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் கன்னியாகுமரி மாவட்டம் சேர்ந்திருந்த போது, ஆசிரியர்கள் என்பவர்கள் எந்த அளவுக்குச் சிறப்பாக நடத்தப்பட்டார்கள் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். நாகர்கோவில், திருவனந்தபுரம், கொல்லம், ஆலப்புழை போன்ற நகராசபைகளின் தலைவர்களின் பதவி ஏதாவது ஒரு காரணத்தைக் கொண்டு செயல்பட முடியாத நிலை உருவாகுமானால்—ராஜிநாமா செய்வதன் காரணமாகவோ, அல்லது வேறு ஏதாவது ஒரு காரணத்தால் செயல்பட முடியாத நிலை உண்டாகுமானால்—புதிய தலைவர் பொறுப்பேற்கும் வரையில் - அல்லது புதிதாகத் தலைவர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படும் வரையில் அங்கே உள்ள அரசுப் பள்ளியின் தலைமை ஆசிரியர்தான் நகர சபைத் தலைவராகச் செயல்பட வேண்டும் என்ற நிலைமை அப்போது இருந்தது. இப்போதுதான் நகர சபைத் தலைவர் பதவி காலியாகும்போது, இடைக்காலத்தில் ஆர். டி. ஓ. அந்தப் பதவியை வகிக்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. எவ்வாறு கவர்னர் பதவியில் இருப்பவருடைய பதவி காலியாகும்போது, ஆட்டோமேடிக்காக இங்கே உள்ள மாநில உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ஆக்டிங் கவர்னராகச் செயல்படுகிறாரோ, அந்த முறையில் அந்தக் காலத்தில் பெரிய நகரசபைகளின் தலைவர் பதவி காலியாக இருக்கும்போது, புதியவர் ஒருவர் பொறுப்பேற்கும் வரை, அந்த ஊர் அரசுப் பள்ளித் தலைமை ஆசிரியர்தான் அந்தப் பொறுப்பை வகித்து வருவார். அந்த அளவுக்கு அந்தக் காலத்தில் ஆசிரியர்களுக்கு மதிப்பும் சிறப்பும் கொடுக்கப்பட்டிருந்தது. நாம் மாத்திரம் தான் அந்த வகையில் ஆசிரியர்களுக்குச் சிறப்பு செய்கிறோம் என்பதல்ல. இந்தியா முழுவதிலுமே முறையாக ஆராய்ந்து பார்த்தால், ஆசிரியர்களை வணங்கி வாழ்த்தி பெருமைப்படுத்துவதன் மூலமாகத்தான் பலர் உயர்ந்திருக்கிறார்கள். புராண காலத்தில்கூட பெரிய மன்னர்கள், படை வீரர்கள் என்பவர்கள், யாரை மதிக்க மறந்தாலும், தங்களுடைய ஆசிரியர்களை மதிக்க மறந்ததில்லை என்பதைப் பார்க்கிறோம். புராணத்தில் துரோணாச்சாரியாரைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதைப் பார்த்தால், இது நன்கு புரியும். அந்த முறையில் பார்க்கும்போது, ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் என்பவர்கள் சமுதாயத்தால் மதிக்கப்பட வேண்டியவர்கள். அதன் காரணமாகத்தான் அவர்களுக்கு அளிக்கப்படும் ஊதியத்திற்கும் மேலாக இப்படி ஒரு சிறப்பான நிலையை நாம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம்.





(முற்பகல் 11-00)

அதிலே ஒரு பெரிய குறை ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு அந்தச் சிறப்பைக் கொடுக்காமல் ஒதுக்கி வைத்திருக்கிறோம் என்பது. அரசியல் அமைப்புச் சட்டத்திலே உள்ள குறைபாட்டை அவர்கள் உணரவில்லை. நாம் அதை அவர்களுக்குச் சரியாக உணர்த்தவில்லை. ஆசிரியர்கள் மன்றங்கள், ஆசிரியர்கள் சங்கங்கள் சார்பிலே டில்லியிலே கூட கிளப்பியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் ஆசிரியர்கள் அத்தனை பேரையும் அழைத்துக்கொண்டு போய், டில்லியிலே பிரதம அமைச்சருடைய வீட்டிற்குப் போய், தினசரி அவர் பொதுமக்களைச் சந்திக்கிற நேரத்திலே, அவரைச் சந்தித்து இதைச் சொல்லியிருக்கிறார் என்று நினைக்கிறேன். நாம் எல்லோரும் அவ்வப்போது சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆகவே நாமும் இந்த அவையில் இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றி அனுப்பி வைக்க வேண்டும். ஆசிரியர் தொகுதியில் வாக்கு அளிக்கிற உரிமையை ஒரு சாராருக்குத்தான் கொடுக்க வேண்டும் என்று வந்தால், வேண்டுமானால் கல்லூரி ஆசிரியர்களை விட்டு விடுங்கள் என்று கல்லூரி ஆசிரியர்களின் சார்பிலே நான் சொல்லுகிறேன். ஒரு சாராருக்குத்தான் கொடுக்க வேண்டும் என்றால், முதலிலே ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கும், அதற்கடுத்த நடுநிலை ஆசிரியர்களுக்கும், அதற்குப் பிறகு உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும், அதற்குப் பிறகு மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் அதற்கும் பிறகுதான் கல்லூரி ஆசிரியர்களுக்கும் என்ற நிலை வர வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். பழங்கால வரலாற்றை எடுத்துப் பார்த்தாலும், ஆசிரியர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்திருக்கிறார்கள். ஏற்கெனவே ஆசிரியர்கள் மதிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். சில பகுதிகளில் சில ஆசிரியர்கள் தாங்களாகவே தாம் தாழ்த்திக் கொள்கிறார்கள். சில இடங்களில் ஆசிரியர்கள் அவமதிக்கப்படுகிறார்கள். இருந்தாலும் மொத்தத்தில் ஆசிரியர்கள் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கும் வாக்குரிமை அளித்தால்தான், உண்மையான ஆசிரியப் பிரதிநிதிகள் இங்கே வந்து உட்காருகிற நிலை உருவாகும். ஆசிரியப் பிரதிநிதியாக வருகிறவர்கள் அத்தனை ஆசிரியர்களுக்கும் பிரதிநிதியாக வருகிற அளவிற்கு ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கும், நடுநிலை பள்ளி ஆசிரியர்களுக்கும் வாக்குரிமை அளிக்கிற அளவிற்கு அரசியல் அமைப்பு சட்டத்தைத் திருத்த வேண்டும் என்ற இந்தத் தீர்மானத்தை இந்த மன்றம் சிபாரிசு செய்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி வாய்ப்பளித்தமைக்காக தங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள் 'மேலவைத் தேர்தலில் ஆசிரியர் தொகுதியில் தொடக்கப் பள்ளி ஆசிரியர்

[திரு. கா. இராசா முகமது] [1983 மார்ச் 29

களுக்கு வாக்குரிமை அளிக்கும் வகையில் அரசியல் அமைப்புச் சட்டத்திலுள்ள "Not lower in standard than that of the Secondary Schools" என்ற வார்த்தைகளை நீக்கம் செய்யவேண்டி மத்திய அரசுக்கு வலியுறுத்த, இந்த அவை மாநில அரசுக்குப் பரிந்துரை செய்கிறது" என்ற தனி நபர் தீர்மானத்தை முன்மொழிந்ததன் பேரில் மாமன்றத்தினுடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அரிய பல கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். இறுதியாக நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நல்ல விளக்கங்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள்.

இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில், அரசுக்கு இதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை என்பதை முதலிலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். மேலவைத் தேர்தலில் ஆசிரியர் தொகுதியில் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு வாக்குரிமை அளிக்க வேண்டும் என்ற கொள்கையை அண்ணாவின் பெயரால் கட்சி அமைத்து அவர் பெயராலே ஆட்சி செய்து வருகிற இந்த அரசு கொள்கை அளவில் ஏற்றுக்கொள்கிறது. அதற்கு என்ன காரணம் என்றால், இப்படிப்பட்டதொரு கோரிக்கை வந்தபோது 23—3—1968 அன்று நம்முடைய ஒப்புயர்வற்ற மறைந்த மாபெரும் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையில் அமைந்த அமைச்சரவையில் இப்பொருள் பற்றி விவாதித்து ஆசிரியர் தொகுதியிலே வாக்களிக்கக் கூடிய உரிமை தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு இருக்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டு, 1968 ஏப்ரலில் இப்பொருள் குறித்து இந்தியத் தேர்தல் ஆணைக் குழுவிற்கு எழுதி அதிலிருந்து தொடர்ந்து திராவிட இயக்கத்தைச் சார்ந்த அரசு, பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலும் சரி, டாக்டர் கலைஞர் அவர்கள் காலத்திலும் சரி, இன்றைக்கு புரட்சித் தலைவர் காலத்திலும் சரி, இந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கிறோம் என்பதுதான். எனவே கொள்கையைப் பொறுத்தவரையில் எந்தவிதமான வேறுபாடும் கிடையாது.

ஆனால் ஒரு தீர்மானத்தை முன்மொழிகிறபோது, அரசு ஒருவேளை மெத்தனமாக இருக்கிறது என்று கருதினால் அல்லது அரசு வேறுபாடுகள் காட்டுகிறது என்ற நிலைமை இருக்குமானால், அது குறித்து மிகவும் வலியுறுத்திப் பேச வேண்டிய அவசியம் ஏற்படும். ஆனால் அரசைப் பொறுத்த வரையில், எந்த அளவிற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் அக்கறை காட்டுகிறார்களோ அந்த அளவிற்கு அரசும் இதிலே அக்கறை காட்டுகிறது.



1983 மார்ச் 29] [திரு. கா. இராசா முகமது]

மேலவையினுடைய சிறப்புகளையெல்லாம் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லி வந்ததை நான் கேட்டேன். அவர் அப்படிப் பேசியபோது சில விஷயங்களை நினைக்க வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டுவிட்டது. எந்தக் கொள்கை எப்படி இருந்தாலும், அதைச் சொல்லுகிறபோது, அந்தக் கொள்கையை முன் நிறுத்தி வழி நடத்திச் செல்லுகிற தலைவர்களால் அந்தக் கொள்கைக்கே மரியாதை வந்து விடுவதுண்டு. சில நேரங்களில், நல்ல கொள்கை என்றாலும், அதை எடுத்துச் சொல்லுகிற தலைமையில் ஏதாவது குறைபாடு ஏற்படுமானால், அந்தக் கொள்கையே ஊனப்பட்டுப் போவதை நாம் பார்க்கிறோம். அந்த அடிப்படையிலேதான் சில அமைப்புகளுக்கு இயற்கையாகவே பெருமை இருந்தாலும், அதை நடத்தி செல்வதில் சில கோளாறுகளின் காரணமாக அந்த அமைப்புகள் பற்றிச் சில சந்தேகங்கள் வர வாய்ப்பு இருக்கிறது. அதிலே அவர்கள் மேல்நாடுகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அது ஒரு காலத்திற்குப் பொருந்துவதாக இருந்திருக்கலாம். இன்றைக்கு ஜனநாயக விழிப்புணர்ச்சி வளர்ந்திருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி முறையும், மன்னர் ஆட்சி முறையும் இணைந்து Monarchical Constitution என்று சொல்லக்கூடிய அளவிற்குப் புதிய மரபுகளைக் கொண்டது பிரிட்டிஷ் நாடாளுமன்ற முறை. அதற்குப் பிறகு வரலாற்றுப் போக்கிலே ஏற்பட்ட பல்வேறு மாற்றங்கள் காரணமாக Presidential form of Government or Democracy என்ற ஒரு முறையை வரலாற்றிலே பார்த்தோம். இதிலே ஏற்பட்ட சில குறைபாடுகளின் காரணமாக Parliamentary System என்று வந்தது. Parliamentary form of Demccracy or Government என்று வைத்திருக்கிறோம். அவைகளால் சில விஷயங்களில் வெற்றிகரமாகச் செயல்பட முடியவில்லை என்ற போக்கு ஏற்பட்டபோது Peoples Democracy (மக்கள் ஜனநாயக முறை) மலர்ந்து சோஷலிச ஆட்சி அமைப்புகள் இன்றைக்கு உருவாகி, கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதி மக்களுக்கு மேல் ஏற்றுக்கொண்ட நிலையில் புதிய ஜனநாயக அமைப்பு ஏற்பட்டிருக்கிறது. ஜனநாயகத்திற்கு இதுதான் விளக்கம் என்று நான் சொல்ல முடியாது. அப்படியொரு விழிப்புணர்ச்சி, வளர்ச்சி இன்றைக்கு பொது வாழ்க்கையில் அரசியலில் ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எப்போதுமே உண்மைகளை, மனதிலே படுவதைப் பேசக்கூடியவர். அவரை எதிர்க் கட்சித் தலைவர் என்று சொல்லுவதற்குக் கூட யோசிப்பதுண்டு. காரணம் அவர் அப்படி நடந்துகொள்ளாத காரணத்தாலே, அவரை எதிர்க் கட்சித் தலைவர் என்று அழைப்பதில்லை

மேலவையை மறு ஆய்வு மன்றம் என்றுகூட சொல்லலாம். கீழவை, மேலவை என்று சில நேரங்களில் பேசி விடுகிறார்கள். மேலவைக்குச் சரி யான மொழியாக்கம் "மறு ஆய்வு மன்றம்" என்பதுதான். பேரவையில் நிறைவேற்றப்படுகிற அனைத்துச் சட்ட முன்வடிவுகளும் இங்கே உள்ளவர் களாலே தனித்தனியாக மறு ஆய்வு செய்யப்படுவது நன்மை பயக்கும். இங்கே கொஞ்சம் நிதானமாகவும் விவாதிக்கப்படுகிறது. பெரிய ஆலோசனைகளை வழங்கக்கூடிய மன்றம் இந்த மன்றம். இந்த மன்றம் தேவையா, இல்லையா என்ற கேள்வி எழும்போது, நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பில் இப்படிப் பட்ட மன்றம் அவசியம் என்பதிலே யாருக்கும் கொள்கை ரீதியான கருத்து வேறுபாடு கிடையாது. இந்த மன்றம் இருக்க வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்களும் விரும்பினார்கள். நம்முடைய புரட்சித் தலைவர் அவர் களும் அதே கருத்திலேதான் இருக்கிறார்கள். அதிலே குழப்பமில்லை. சில நேரங்களில் விவாதத்தின்போது, சில எண்ணங்களைச் சொல்லுகிறோம். பேரவையிலே மாமன்ற உறுப்பினர்களுக்குச் சில பிரச்சினைகள் இருக் கின்றன. அல்லது சில நிர்ப்பந்தங்கள் இருக்கின்றன. ஆனால் இங்கே அப்படி நாம் செயல்பட வேண்டிய அவசியம் இல்லை.

நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கட்சித் தலைவராக இருந்தாலும்கூட, அவர் பாங்குடன் செயல்படுவதைப் பார்க்கிறோம். என்றைக்கும் அரசியல் உணர்வோடு செயல்படுவதைப் பார்க்க முடியவில்லை. பொது நன்மையைக் கருதி செயல் பட்டு வருகிறார். அதனாலே அவர் பேசுகின்றபோது, எந்தத் தரப்பிலே குறை இருந்தாலும், அதைச் சுட்டிக் காட்டுகிறார்கள். அதை ஒத்துக் கொள்ளுகிறார்கள். அது எப்படி இருக்க வேண்டும் என்று எடுத்துக் காட்டுகிறார்கள்.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

(முற்பகல் 11-10)

அப்படிச் செயல்படுகின்றபோது மேலவை என்பது அதற்குரிய இலக்கணத் தோடு செயல்படுவதைப் பார்க்கிறோம். மகிழ்ச்சியாகக் கூட இருக்கிறோம். சில நேரங்களிலே இதையே அரசியல் ரீதியாக விவாதிக்கின்ற மன்றமாக நாம் எடுத்துக் கொள்கின்றபோது, என்ன என்ன பாணியிலே செயல்கள் நடக் கின்றனவோ அவற்றையே இங்கேயும் கொண்டு அறிமுகப்படுத்த வேண்டும் என்று நினைக்கின்றபோது, மக்களுடைய வரிப் பணத்தைப் பயன்படுத்து கின்றதன் நோக்கம் பற்றி யோசனை வந்து விடுகிறது. அந்த மாதிரியான நிர்ப்பந்தம் வந்து விடக்கூடாது என்ற எண்ணத்திலேதான் சில நேரங்களில் சிலர் கருத்து சொல்லியிருப்பார்களே தவிர, மேலவை என்பது தமிழகத்திலே இருக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய கருத்து.





மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் கொண்டு வந்திருக் கின்ற இந்தத் தீர்மானத்தைப் பொறுத்த அளவிலே நான் சொல்கிறேன். ஆசிரியர்கள் தொகுதிக்குத் தேர்தல் நடத்துகின்றபோது, அவர்கள் வற்புறுத் தக்கூடிய கருத்து, தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கும் வாக்குரிமை அளிக்க வேண்டுமென்பதுதான். அது இந்த அரசினுடைய திட்டவட்டமான கொள்கை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதிலே இன்னொன்றைக் கூட யோசித்துப் பார்க்கலாம். எல்லோரும் சேர்ந்து செயல்படுத்த முயற் சிக்கலாம். அதில் ஈடுபட வேண்டுமென்று சொல்கிறேன். என்னுடைய தனிப் பட்ட கருத்தாக இதை நான் சொல்கிறேன். அப்படிச் சொல் வதிலே தவறில்லை என்று கருதுகிறேன். ஒரு அவை என்று வருகின்ற போது, அதற்கு அதிகமாக அதிகாரம் பெற்று, நிறைய உறுப்பினர்களைக் கொண்டு மிகச் சிறந்த முறையிலே இந்த விவாதங்களிலே ஈடுபட்டு நாம் அதையெல்லாம் வழி நடத்திச் செல்ல வேண்டுமென்ற ஆசை, எதிர்பார்ப்பு நம் மிடையே அதிகமாக இருக்கிறது. சில நேரங்களிலே அதைச் சொல்வதிலே தவறில்லை என்று கருதுகிறேன்—ஒரு 10 அல்லது 15 பேர்கள் உட்கார்ந்து விவாதிக்கின்றபோது, ஏன் இதை மேலவைத் தலைவர் அவர்கள் அறையிலேயே பேசி விவாதித்துக்கொண்டு சென்று விடலாமே என்றுகூட ஒரு எண்ணம் வரலாம். அப்படி என்றால், உள்ளாட்சி மன்றத் தேர்தல் மூலம் வரக்கூடிய வர்கள் எல்லாம் இருக்கிறார்கள் என்று சொல்லலாம். அதற்குமேல் நாம் ஒன்றை யோசித்துப் பார்க்க வேண்டும். நம்முடைய அரசியல் சட்டம் வழங்கியிருக்கின்ற உரிமைகளின்படி, ஒரு மாநில அரசு சில முறைகளை மேற் கொள்ள வேண்டும். உதாரணமாக இன்றைக்கு ஒரு நாடாளுமன்றத் தொகுதியை எடுத்துக் கொண்டால், 6 சட்டமன்ற உறுப்பினர்கள் அதில் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்கள். ஆனால் 9 சட்டமன்ற உறுப்பினர்கள் வரை தேர்ந்தெடுக்கப்படலாம். அப்படி ஒரு கணக்கு பார்க்கின்றபோது, தோராயமாக நான் சொல்கிறேன். இரண்டொன்று முன் பின் இருக்கலாம். 354 சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படலாம். கர்நாடக மாநிலத் திலே நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதியில் கிட்டத்தட்ட 8 சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அதிகமாக உறுப்பினர்கள் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதன் மூலம் மேலவைக்கு மேலும் கூடுதலான உறுப்பினர்கள், மூன்றில் ஒரு பங்கு என்ற வரை முறைக்குள் வரும்போது, 120 உறுப்பினர்களை நம் மேலவைக்குக் கொண்டுவர முயற்சித்தால் நல்லது என்று நினைக்கிறேன். அப்படி 120 பேர்கள் வருகின்றபோது (எற்கெனவே புதிதாக) அப்படி சட்டமன்றம் நடைபெறுவதற்காக இந்தச் சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கின்ற இந்தக் கோட்டைக்கு எதிர் புறத்திலேயே ஒரு பெரிய சட்டமன்றக் கூடம் கட்டுவதற்கான முயற்சிகளிலே எல்லாம் இந்த அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. இந்த மேலவையை எப்படி கட்ட வேண்டும்

என்பதையும் நாங்கள் மேலவைத் தலைவர் அவர்கள் அறையிலே உட்கார்ந்து,
மேலவைத் தலைவர் அவர்கள் தலைமையிலே விவாதித்தோம். அவர்கள்
தலைமையிலே, பேரவைத் தலைவர், பேரவை முன்னவர் மாண்புமிகு நிதி
அமைச்சர் நாவலர் அவர்கள், இந்த மேலவையினுடைய முன்னவர் என்ற
முறையில் நான் எல்லாம் கலந்துகொண்டு அதைச் செய்கின்றபோது என்ன
செய்யலாம் என்று யோசித்தோம். 354 உறுப்பினர்கள் சட்டசபைக்கு
வருவார்களேயானால், மேலவைக்கு அதையொட்டி மூன்றில் ஒரு பங்குக்கு
மிகாமல் உறுப்பினர்கள் எண்ணிக்கை இருக்க வேண்டும் என்று சொல்கின்ற
போது, கிட்டத்தட்ட 120 உறுப்பினர்கள் வரை வருவதற்கு வாய்ப்பு இருக்
கிறது. அப்படி வந்தால் 120 உறுப்பினர்களிலே ஒரு 100 பேர்களாவது
சராசரியாக வந்து கலந்து கொள்கின்ற வாய்ப்பு ஏற்படுகிறது. இந்த அவை
யிலே அப்போது பல்வேறு பிரச்சினைகள் பற்றி விவாதிக்கின்றபோது, இன்னும்
அதற்கு வலிமை அதிகமாக இருக்கும். அதைக்கூடச் செய்யலாம் என்கின்ற
அளவுக்கு மேலவைத் தலைவர் தலைமையில் நாங்கள் எல்லோருமாகக்
கருத்தை வைத்து யோசித்துப் பார்த்தோம். அப்படி என்றால் இந்த அரசு
மேலவையை எந்த அளவுக்கு விரும்புகிறது என்று பார்க்கிறோம். இங்கே
இன்னொரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். மேலவைக்கு நீதித்துறைக்கு
மேலே ஒரு கூடுதலான அளவுக்கு அப்பர் அவுஸ் என்ற ஹவுஸ் ஆப் லார்ட்ஸ்
க்கு இருப்பது போன்ற நல்ல அதிகாரங்கள் இருக்க வேண்டும், கூடுத
லான அதிகாரங்கள் இருக்க வேண்டும் என்கின்ற கருத்துக்கூட
இப்போது போகின்ற போக்கைப் பார்த்தால், இருப்பதாகத் தெரிகிறது
பல்வேறு விஷயங்களைக் குறிப்பிட்டு விவாதிப்பதற்கு மேலவைக்கு
அதிகாரம் இருக்க வேண்டும் என்பதை நானும் கூட ஒத்து
கொள்கிறேன். நீதி சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் உட்பட மேலவைக்கு
அதிகாரம் இருக்க வேண்டும். மறு ஆய்வு மன்றம் என்ற அடி
படையிலே அது எல்லாம் உட்பட்டதுதான். அதை உறுப்பினர் அவர்க
வகுத்துச் சொன்னார்கள். அதாவது லெஜிஸ்லேச்சர், எக்சிகியூடி
ஜுடிசியரி என்று சொன்னார்கள். மூன்று கூறுகளாக நம்முடைய அரசிய
அமைப்பிலே நாம் குறித்து வைத்துக்கொண்டு செயல்பட்டுக் கொண்டிரு
கிறோம். இதிலே அடிப்படை என்ன? ஒருவருக்கு ஒருவர் இணைப்பு
இருப்பது என்னவென்றால், 'மியூட்சுவல் டிரஸ்ட்', ,கோ-ஆப்பரேஷன்'—இ
தான் மிக முக்கியமானது. ஒவ்வொரு பிரிவிலேயும் ஒருவரை ஒருவர் நம்
செய்ய வேண்டும். ஒருவருக்கொருவர் நல்ல எண்ண அடிப்படையிலே
ஒத்துழைப்பு வழங்கி, அவர்கள் செயல்பட வேண்டுமென்பதுதான் இந்த அடி
படைத் தத்துவத்தின் நோக்கம். ஆனால்கூட இதிலே கோ-ஆர்டினே





பண்ணுவது என்று ஒரு சக்தி இருக்க வேண்டும். அதைத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்களா இல்லையா என்று வேண்டுமானால் இருக்கலாம். பாராளுமன்றத்திலே இந்தப் பிரச்சினை வந்தது. நாடாளுமன்றத்திற்கு நீதித் துறைக்கு மேற்பட்ட அதிகாரம் இருக்கிறதா இல்லையா? எது மிக உயர்ந்த அமைப்பைப் பெற்றது அல்லது அதிகாரம் பெற்றது? which is the supreme body— லெஜிஸ்லேட்சரா அல்லது ஜுடிசியரியா என்று வந்தது. நாடாளுமன்றத்திலே அது விவாதிக்கப்பட்டது. மக்கள் ஆட்சி நடைபெறுகின்ற இந்த நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றம் தான் உயர்ந்தது என்பதிலே யாருக்குமே கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால் அதே நேரத்தில் அவரவர்கள் பணியைச் செய்யும்போது, ஒருவருக் கொருவர் குறுக்கிடு செய்யக்கூடாது. அதிலே குற்றங்குறைகள் இருக்கு மானால், அதற்கு என்று வரைமுறை இருக்கிறது. நீதித் துறையிலே தீர்ப்பு ஒன்று இருக்கிறது. வழக்கு மன்றத்திலே ஒரு தீர்ப்பு வருகிறது, அதிலே பாதிக்கப்பட்டவர்கள் அந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொன்னால், அதற்கு மேல் முறையீடு என்று இருக்கிறது. அதற்கு மேல் உச்ச நீதி மன்றம் வரை போகிறோம். சில நேரங்களில் உச்ச நீதி மன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டு, தண்டிக்கப்பட்டவரைக்கூட குடியரசுத் தலைவர் அவர் களுக்குள்ள அதிகாரத்தை வைத்து அந்த தண்டனையிலிருந்து அவரை நீக்கி, அவர் அனுபவித்தது போதும் என்று சொல்லக்கூடிய நிலைமையும் இருக் கிறது என்று சொன்னால், இது எதைக் காட்டுகிறது? ஜனாதிபதிக்கு அவ்வளவு பெரிய அதிகாரம் இருக்கிறது என்றால், இது எதனுடைய் அடையாளம் என்று பார்க்க வேண்டும். மக்கள் ஆட்சியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதிக்கு அந்த அதிகாரம் இருக்கிறது என்று சொன்னால், தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றத்திற்கு அதிகாரம் உண்டு, அதிலே யாருமே தலையிட்டுவிட முடியாது என்பதுதான் நிலைமை. அதிலே எந்த வார்த்தையில் பெரிய பெரிய சட்ட நிபுணர்கள் எல்லாம் அவரவர்கள் வசதிக்குத் தக்கப்படி வாதிட்டாலும் சரி. வாதிடுகின்ற வழக்கு மன்றத்திலே எல்லாம் it is a paradise for lawyers அது எல்லாம் வேறு விஷயம். ஏழை மக்களுக்கு அது எல்லாம் எட்டாது. இங்கே பேசினாலும் ஏழை மக்களுக்கு அது எட்டுகிறதா என்ற சந்தேகம் இருக்கிறது. வழக்கு மன்றத்திலே அதை எதிர்பார்க்க முடியாது. ஆனால் ஒன்று. லெஜிஸ்லேட்சருக்கு இருக்கக்கூடிய முக்கியத்துவம் என்னவென்றால் 'லெஜிஸ்லேட்சர் வெர்சஸ் ஜுடிசியரி' என்று மோதல் வந்து விடாமல் பார்த்துக் கொள்வது என்ற பெரும் பொறுப்பிலே நாம் இருக் கிறோம். இன்னும் சொல்லப் போனால், ஒருசிலர் தவறாக நினைக்கிறார்கள். ஒரு மாநில முதலமைச்சருக்கு எதிராகவோ, ஆளுநருக்கு எதிராகவோ அல்லது உறுப்பினர்களுக்கு எதிராகவோ ஒரு நீதிமன்றம் இன்னின்ன குறை

[திரு. கா. இராசா முகமது] [1983 மார்ச் 29

ளுடைய கோரிக்கையைப் பரிசீலிக்க வேண்டும்" என்று சட்ட அமைச்சகத்தோடு நாம் செப்டம்பர் திங்களில் தொடர்பு கொண்டோம். அவர்கள் பார்த்தார்கள். பார்த்ததற்குப் பிறகு, சட்ட அமைச்சகம் சம்பந்தப்பட்ட மாநில அரசுடன் கலந்தாலோசித்தது; மற்றும் பல்வேறு பிரச்சினைகளைப் பரிசீலித்த பின்னர் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு வாக்குரிமை அளிப்பது அவசியமில்லை என்று முடிவு செய்தது என்று அவர்கள் 1977லே திரும்ப ஒரு கருத்து தெரிவித்தார்கள். அதாவது தேவையில்லை என்று. 1977லே அப்படி தெரிவித்ததற்குப் பிறகு நம்முடைய ஆட்சி ஏற்படுகிறது. அப்போது திரும்பவும் அமைச்சரவைக்கு இந்தப் பிரச்சினை வருகிறது. அப்படி வந்தபோது மீண்டும் மத்திய அரசுக்கு அனுப்பி, சாதகமான பதிலைப் பெற முயற்சிக்கலாம் என்று மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவர். அவர்கள் 22—11—1977 அன்று ஒரு உத்தரவு போடுகிறார். அண்ணா காலத்தில் துவக்கப்பட்டது, திரும்பவும் 1977-லே அனுப்புகிறோம். 10—12—1977-ல் சட்ட அமைச்சகத்துக்கு மீண்டும் எழுதப்பட்டது. "இந்தச் செயற்குறிப்பில் அடங்கும் எல்லா அம்சங்களையும் கருத்தில் கொண்ட பின்னர்தான் அதனை ஏற்க முடியாது என்று முடிவு எடுக்கப்பட்டது. ஆகையால் தன் முடிவை மறு ஆய்வு செய்ய இயலாது" என்று 20—2—1978-ல் சட்ட அமைச்சகம் நமக்குத் தெரிவித்து விட்டது. இதற்கிடையில் 13—12—1977 அன்று நாடாளுமன்ற உறுப்பினர் திரு. திலீப் சக்ரவர்த்தி அவர்கள் மூலமாக அகில இந்திய ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் கூட்டணி ஒரு மனுவைக் கொடுத்து, நாடாளுமன்றத்திற்கு அனுப்பி, அவர்கள் சில முடிவுகளை எடுக்க வேண்டுமென்று சொல்லி, கல்வி அமைச்சகம் அதிலே தொடர்பு கொள்ள வேண்டுமென்று கேட்டு, அது குறித்து அவர்களும் சில இடங்களிலே தொடர்பு கொண்டார்கள். அதற்கு கல்வி அமைச்சகம். சம்பந்தப்பட்ட மாநில அரசுகளைக் கலந்து ஆலோசித்ததில், சட்ட மேலவை உள்ள அந்த மாநிலங்களில் பெரும்பான்மையானவை இந்தச் செயற்குறிப்புக்கு ஆதரவு காட்டவில்லை என்று தெரிவித்தது. அதாவது மேலவை இல்லாத மாநிலங்கள் வேறு. மேலவை உள்ள மாநிலங்களில், தமிழகம் எடுத்துக்கொண்ட முயற்சியை மற்ற மாநிலங்கள் எடுத்துக்கொள்ளவில்லை. பொதுவான ஆதரவு அதற்கு இல்லாத காரணத்தால், இதைச் செயல்படுத்தவில்லை என்று கல்வி அமைச்சகம் ஒரு குறிப்பை நமக்குத் தெரிவித்தது. இந்த நிலைமையிலேதான் நாம் திரும்பவும் இதை விவாதித்துக் கொண்டிருக்கிறோம்.



1983, மார்ச் 29] [திரு. கா. இராசா முகமது]

நேற்றைய தினம் அவை முடிந்ததற்குப் பிறகுகூட மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பா. ரா. தாமஸ், திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் ஆகியோர் நிதி அமைச்சர் அவர்களைச் சந்தித்து, அரசுக்கு இதிலே என்ன பிரச்சினை இருக்கிறது என்று கேட்டபோது, நிதி அமைச்சரவர்கள் தெளிவாக ஒன்றைச் சொன்னார்கள். "இதிலே ஒன்றுமே இல்லை, நீங்கள் சொல்வதை அப்படியே ஏற்றுக்கொண்டு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கிறோம், இன்னமும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால் எடுக்கிறோம்" என்று சொன்னார்கள். இன்னொரு கருத்துக்கூடச் சொன்னார்கள். பட்டதாரித் தொகுதிகள் என்று எப்படி வைத்திருக்கிறோமோ அப்படி தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு 2 தொகுதிகள், தொடக்கப் பள்ளிகள் அல்லாத உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு இரண்டு தொகுதிகள், கல்லூரி ஆசிரியர்களுக்கு இரண்டு தொகுதிகள் என்று பிரிக்க வேண்டுமென்று கருத்து சொன்னால்கூட, அதைப் பரிசீலிக்க அரசுக்கு ஆட்சேபணை இல்லை. நம்முடைய கொறடா அவர்கள் கூட நகைச்சுவையாக ஒரு கருத்தைச் சொன்னார்கள், 'எலக்டோரல் காலேஜ்' என்று இருக்கும். பெரிய தேர்தல்களைச் சந்திப்பதற்கு முன்பு அங்கே தேர்வு செய்யப்பட வேண்டும். அதைப்போல ஓர் ஆசிரியர் போட்டியிடுகிறார் என்றால், அவர் எந்தப் பள்ளியிலே வேலை பார்க்கிறாரோ அந்தப் பள்ளி மாணவர்களின் அனுமதி பெற்று தேர்தலில் போட்டியிட்டால் நல்லது என்று நகைச்சுவைக்காக கொறடா அவர்கள் சொன்னார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தால், மாணவர்களுக்கு அக்கறையோடு சொல்லிக் கொடுத்து, அவர்கள் நன்மதிப்பைப் பெற அவர்கள் கூடுதலாக முயற்சி செய்வார்களென்று சொன்னார்கள். எப்படி வந்தாலும், இந்த விஷயத்தைப் பொறுத்த அளவில், ஆசிரியர்களுக்கு என்று தனியாக 2 இடங்களை ஒதுக்க வேண்டுமென்று வந்தாலும் சரி, மேலவை ஆசிரியர்கள் தொகுதிக்குப் போட்டியிடுகின்ற அதே நேரத்தில் வாக்குரிமை வேண்டுமென்று கேட்டாலும் சரி, எந்த முறையிலே வந்தாலும், அரசு அதை ஏற்றுக்கொண்டு, அப்படியே சம்பந்தப்பட்ட மத்திய தேர்தல் ஆணைக் குழுவாக இருந்தாலும் சரி, சட்ட அமைச்சகமாக இருந்தாலும் சரி அவர்களுக்குப் பரிந்துரை செய்து, அதை நிறைவேற்றத் தயாராக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள், இந்தத் தீர்மானத்திலே அவருக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை என்றும், அதை ஏற்றுக் கொள்ளலாம் என்றும் சொல்கிறார்கள். பொதுவாக இன்றைய தினம் இந்தியா முழுவதும் இந்தக் கருத்து உருவாகாத காரணத்தால், இப்போது இந்தச் சூழ்நிலை இருக்கிறதென்று சொன்னார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில், இந்த

அவையிலேயே இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு, மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தால், இதன் மூலம் மற்ற மாநிலங்கள் தமிழ் நாட்டிலே இப்படிப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று எண்ணி, அவர்களும் தீர்மானம் நிறைவேற்றக்கூடிய வாய்ப்பு இருக்கும். அதற்கு நம்முடைய அரசாங்கம் முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மாண்புமிகு தலைவரவர்களே, அன்னார் அவர்களை தூக்கி வைத்து, அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுத்து, அந்த முயற்சி தொடர்ந்து நடக்கும் இந்தச் சூழ்நிலையிலே மீண்டும் இதை வலியுறுத்த வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வோம். அதிலே வேறு சில திருத்தங்களுடன் அதை வலியுறுத்த நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வோம். அதற்குப் பிறகு முடியவில்லை என்றால், மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன வழிக்கு வர வேண்டியிருக்கும். தீர்மானம் போட்டுத்தான் கேட்க வேண்டுமென்ற நிலையைத் தாண்டிக்கூட சொல்லலாம். போகிற போக்கைப் பார்த்தால், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள், அமைப்புகள் ஏற்படுவதைப் பார்த்தால், சில விஷயங்களைக் கேட்காமல் செய்தால்கூட நல்லதுதான். அது வரவேற்கக்கூடியதுதான். ஒரு தீர்மானத்தை நிறைவேற்றும்போது, அரசுக்குள்ள பிரத்தியேகமான சங்கடங்கள் இருக்கின்றன. தனி நபர் தீர்மானங்களை இரண்டு விதங்களிலே நாம் பார்க்கிறோம். ஒன்று, கொள்கை ரீதியில் நமக்கு அதில் உடன்பாடு இல்லை என்றால், அரசு அதை ஏற்றுக் கொள்வதாக இல்லை, எனவே அதை எதிர்க்கிறோம் என்று சொல்லி, கடுமையாக எதிர்க்கலாம். கொள்கையில் வேறுபாடு இல்லை என்றால், அதை ஏற்றுக் கொள்கிறோம் என்பது மற்றொன்று. எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பெருந்தன்மையோடு ஒரு கருத்தைச் சொன்னார்கள். கல்லூரி ஆசிரியர்களுக்கு வாக்குரிமை வேண்டாம், நான் அவர்களிடம் சொல்கிறேன், உண்மையிலேயே பாடுபடக்கூடிய, குழந்தைகளை, மாணவர்களை மாண்பு உடையவர்களாக ஆக்கும் மிகப் பெரும் பணியில் ஈடுபட்டுள்ள தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு வாக்குரிமை கொடுப்பதுதான் மிக முக்கியம் என்று அவர் சொல்லும்போது பழைய சம்பவம் ஒன்றுக்கு நான் இழுத்துச் செல்லப்பட்டேன்.

அந்த நிகழ்ச்சி எந்த ஆண்டில் நடந்தது என்பது ஞாபகம் இல்லை. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கீழ்த் திசை நாடுகளைச் சுற்றிப் பார்க்க, 10, 15 ஆண்டுகளுக்கு முன் போனார்கள். அப்போது ஜப்பானுக்கும் போனார்கள். அங்கே பல்கலைக் கழகத்தைப் பார்க்க வேண்டுமென்று போனார்கள். பல்



கலைக் கழகத்திற்குள் செல்கிற நுழை வாயிலில் 2 பலகைகளைப் பார்த்தார்கள். ஒன்று, இந்தப் பாதை வழியாகச் சென்றால், பல்கலைக் கழகத்திற்குள்ளே விஞ்ஞானம் சொல்லிக் கொடுக்கும் பகுதியையும், பொறியியல் சொல்லி கொடுக்கும் பகுதியையும், மற்ற முக்கியமான பகுதிகளையும் பார்க்கலாம் என்று இருந்தது. இன்னொரு பலகையில், இந்த வழியாகச் சென்றால் ஜப்பானைப் பார்க்கலாம் என்று எழுதியிருந்தது. அவர்கள் இருப்பது ஜப்பான்தான். தலைநகரில் இருக்கிறார்கள். ஒரு பலகையில், இந்தப் பக்கம் போனால் பல்கலைக் கழகத்தின் பொறியியல் பிரிவு, மருத்துவப் பிரிவு, விஞ்ஞானப் பிரிவு, வரலாற்றுப் பிரிவு பார்க்கலாம் என்று எழுதிவிட்டு, இன்னொரு பலகையில் இந்தப் பக்கம் போனால் ஜப்பானைப் பார்க்கலாம் என்று போட்டிருக்கிறார்கள். ஜப்பானுக்குள்ளே என்ன ஜப்பான் இருக்கிறது என்று எண்ணி, அந்தப் பக்கம் போய் பார்த்தபோது, அங்கே தொடக்கப் பள்ளியைப் பார்த்தார்கள். ஜப்பான் அரசு என்ன நினைக்கிறது ? ஜப்பான் தொடக்கப் பள்ளிகளின் கையிலே இருக்கிறது என்று எண்ணி, அதற்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு உரிய உரிமைகளைக் கொடுக்கிறார்கள். இது ஒரு 'லவுட் திங்கிங்'தான். மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கல்வி அமைச்சரவர்கள் இது குறித்து என்ன கருதுகிறார் என்று கேட்டுவிடக்கூடாது. ஒரு கருத்து சொல்லுவேன். தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது. வெளியிலே சொல்லக் கூடாது. வெளியிலே சொல்லக்கூடாது என்றால், தவறாக திசை திருப்பிச் சொல்லக்கூடாது. எதிர்க் கட்சித் தலைவரவர்களின் கருத்தோடு சொல்கிறேன், பணி என்று சொல்லுகிறபோது மிகக் கஷ்டப்படக் கூடியவர்கள் தொடக்கப் பள்ளி ஆசிரியகள்தான்.

(முற்பகல் 11-30)

மாணவர்களை வைத்து வேலை வாங்குவது என்பது சாதாரணமான விஷயமல்ல. அடுத்து மேல்நிலைக் கல்வி என்று வரும்போது ஓரளவுக்கு சொல்லிக் கொடுக்கிறார்கள். ஆனால் கல்லூரிக் கல்வி என்று வரும்போது, ஆசிரியர்கள் அவ்வளவாக சொல்லிக் கொடுப்பதில்லை, அதிக அக்கறையும் செலுத்துவதில்லை. மாணவர்களும் சென்ற செப்டம்பரில் என்ன கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள் என்று பார்த்து, கேட்டிராத கேள்விகளைப் பார்த்தால் போதும் என்று நினைக்கின்ற நிலை இருக்கிறது. அந்த வகையில் நோட்சை, கெய்ட்ஸ்-ஐப் படித்து தேர்ச்சியுற்று வந்து விடுகிறார்கள். அந்த முறை மாற்றப்பட வேண்டும் என்பது வேறு. ஆனால் உண்மையிலேயே எந்தவித நோட்சும் இல்லாமல், கெய்ட்சும் இல்லாமல், யாருடைய கவனிப்பும் இல்லாமல் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் இருக்கிறார்கள். பெற்றோர்களும்

தங்களுடைய பிள்ளைகள் மீது அவ்வள தொடக்கப் பள்ளிகளில் படிக்கின்ற தங்களுடைய பிள்ளைகள் மீது அவ்வள வாக கவனம் செலுத்துவதில்லை. காரணம் 90 சதவீத பெற்றோர்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்துவதையே பெரும் போராட்டமாகக் கருது வதால், ஏதோ பையன் போகிறான், வருகிறான் என்று கருதி விடுகிறார்கள். இன்னும் சொல்லப் போனால், ஏழையெளிய தொழிலாளர்களுடைய பிள்ளை களை எடுத்துக் கொண்டால், தங்கள் பிள்ளைகள் எத்தனாவது வகுப்பில் படிக்கிறார்கள் என்பது கூட அவர்களுக்குத் தெரியாது. அந்த வகையில் அனைத்துப் பொறுப்புகளையும் ஏற்று, படிப்பையும் சொல்லிக் கொடுக்கக் கூடிய, பெரும் சுமை தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு இருக்கிறது. அதை யெல்லாம் பார்க்கும்போது, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு வாக்குரிமை அளிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிற பிரச்சினை மிக மிக சாதாரணமான உரிமைதான். பொதுவாகவே மற்ற ஆசிரியர்களை விட தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு அதிகமாகச் சலுகை கள் இருக்க வேண்டுமென்கிற கருத்தை உடையவன் நான். அப்படி எல்லாம் செய்து, அவர்களை நல்ல முறையில் பணி செய்ய வைத்து, பக்குவப்படுத்த வேண்டும். அந்த வகையில் பார்த்தால், இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொன்ன கருத்துக்கள் எல்லாம் இந்த அரசினுடைய கருத்துக்கள் என்பதில் எந்தவித வேறுபாடும் இல்லை. அந்த அடிப்படை யிலே தான் நான் இங்கே கருத்துக்களைச் சொல்லியிருக்கிறேன். இதற்கு மேலும் இதனை ஒரு தீர்மானமாக நாம் நிறைவேற்றி மேற்கொண்டு காரியங் களைச் செய்ய வேண்டிய அவசியமில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப் பிட்ட 'இரண்டு இரண்டு தொகுதிகளாகப் பிரித்து மூன்று நிலைகளுக்கும் கொடுக்கலாம்' என்ற கருத்து ரெக்கார்டில் பதிவாகியிருக்கிறது. அவற்றை யும் சேர்த்து, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்னதுபோல், பேரவையிலும், மேலவையிலும் இதனை வைத்து பெரும் தீர்மானமாகக் கொண்டு வருவதில் கூட இந்த அரசுக்கு ஆட்சேபணை இல்லை. கொள்கையளவில் இதனை இந்த அரசு ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவில் இருப்பதாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் எந்த உணர்வில் இருக்கிறார் களோ அதே உணர்வை இந்த அரசும் கொண்டிருப்பதாலும், எல்லோருடைய உணர்வையும் பிரதிபலிக்கிற வகையில் இதைச் செயல்படுத்தக்கூட இந்த அரசு தயாராக இருப்பதாலும், இந்தத் தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



திரு. கி. ரா. லெட்சுமிகாந்தன்: நான் பேசும்போது ஒரு முக்கிய கருத்தைக் குறிப்பிட்டேன். தற்போது அரசியல் சட்டம் நமக்குக் கொடுத் திருக்கிற உரிமையின்படி, சட்டமன்றப் பேரவையிலுள்ள உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்குக்கு மேற்படாமல் சட்டமன்ற மேலவையில் உறுப்பினர்களின் எண்ணிக்கை இருக்கலாம். அந்த அடிப் படையில் 78 உறுப்பினர்களாக நம்முடைய உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்துகிற அதிகாரம் நமக்கு இருக்கிறது. இப்போது 63 தான் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை. இன்னும் 15 உறுப்பினர் இடங்களை ஏற்படுத்தினால், இன்னும் சட்டமன்ற நடவடிக்கைகளை நல்ல முறையில் ஜனநாயக முறைப்படுத்த உதவிகரமாக இருக்கும். அந்த வகையில் இந்தக் கருத்து பரிசீலிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: இதைக் கூட இன்னும் பெரிதாக 120 உறுப்பினர்களைக் கொண்ட அவையாகக் கொண்டு வரக்கூட நாம் ஆலோசனை செய்யலாம். ஒரு மன்றம் என்று இருக்கும்போது, நிறைய உறுப்பினர்கள், நிறைய அதிகாரம் எல்லாம் உள்ளதாக இருக்க வேண்டும். இப்போது உள்ள அரசியல் சட்டம் வழங்கியிருக்கிற உரிமையின்படி இந்த எண்ணிக்கையை 120 ஆக ஆக்கலாமா என்கிற கருத்தை ஆலோசிக்கக் கூடிய சூழ்நிலை கூட வந்திருக்கிறது. அதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் வலி யுறுத்த வேண்டும். அரசும் இதைப்பற்றிப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: இங்கே மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பெரு நோக்கோடு, மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களுடைய உரைக்குச் சான்று அளிக்கக்கூடிய அளவுக்கு மிக ஆற்றலான விஷயங்களை யெல்லாம் சொன்னார்கள். அவர்கள் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு இருக்கக்கூடிய சிறப்புகளை எல்லாம் சொன்னதுடன், அவர்களுக்கு என் னென்ன தர வேண்டும் என்று நினைக்கிற உயர்ந்த உணர்வுகளைக்கூட இங்கே வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அதற்காக நான் மாண்புமிகு அவை முன்னவர் அவர்களைப் பாராட்டுகிறேன். ஆனால் ஒரே ஒரு உணர்வை பணிவோடு இந்த அவையில் வைக்கிறேன். தீர்மானங்களை யார் கொண்டு வருகிறார்கள் என்பதல்ல பிரச்சினை. பாராளுமன்றத்திலே கூட தனி நபரால் கொண்டு வரப்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதற்கு முன் உதாரணங்கள் இருக் கின்றன. இரண்டொரு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இங்கேயும் நாங்கள் தனி நபர் தீர்மானங்களைக் கொண்டு வருகிறோம். இந்தத் தீர்மானம் மிகவும் முக்கியமான தீர்மானம். இதை நிறைவேற்றினால் இந்த அரசினுடைய பெருந்தன்மை, பெரு நோக்கம் இன்னும் உயரும். ஏகமனதாக

எல்லோரும் இதனை நிறைவேற்றுகின்ற வகையில் பேசியிருப்பதோடு, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும் இது குறித்து உயர்வாக, தெளிவாக கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதோடு கூட இதற்கான பொறுப்புக்களை அரசிடம் விட்டு விடுங்கள் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தை இம்மன்றத்தின் மூலமாகக் கொண்டு வந்து நிறைவேற்றுவது பொருத்தமாக இருக்கும், மரியாதையாக இருக்கும் என்பதால்தான், இது இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானத்தை நாம் நிறைவேற்றினோம் என்றால், மற்ற மாநிலங்கள்கூட நம் வழியைப் பின்பற்ற வாய்ப்பாக இருக்கும். அந்த அளவில் இது குறித்து யோசிக்க வேண்டும். எல்லோரும் சேர்ந்து ஏகமனதாக இதனை நிறைவேற்றி, இது நடைமுறைக்கு வந்தால், நான் மிகவும் கடப்பாடு உடையவனாவேன். பெரிய மனது வைத்து இதனை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் பணிவன்போடு மாண்புமிகு அவை முன்னவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** பொதுவாகவே பேரவையோ, மேலவையோ, அல்லது இரண்டும் சேர்ந்தோ ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, மத்திய அரசுக்கு அனுப்புவது என்பது ஒரு அசாதாரண சூழ்நிலை. எப்படி பேரறிஞர் அண்ணா அவர்கள் இரு மொழிக் கொள்கையை நம்முடைய அவைகளிலே நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பினார்களோ அது போல. அந்த வகையில் அன்றைக்கு நம்முடைய தமிழக அரசின் கொள்கையை நிலைநாட்டியிருக்கிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படுகின்றபோது தான், இம்மாதிரி நிலை ஏற்படும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். இப்போது நாம் இதனை நிறைவேற்றி மத்திய அரசு இதனை ஏற்றுக்கொள்ளவில்லை என்கிற நிலை வருவது சரியாக இராது. இப்போதே நாம் அன்றாட அலுவல்களை கவனித்து இதிலே வருகின்ற கஷ்டங்களை சந்தித்துக் கொண்டிருக்கின்ற நிலையில் இத்தீர்மானத்தை நாம் நிறைவேற்றி, அதன் மூலமாக ஒரு அசாதாரண நிலையை உருவாக்குவது நல்லதல்ல. இப்போதே நாம் சில காரியங்களைக் குறித்து தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறோம் என்றால் கூட, அவர்கள் அவற்றை கவனிப்பதில்லை. ஏற்கெனவே மாநில-மத்திய அரசு உறவுகளைப் பற்றி ஆராய சர்க்காரியா குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. டெர்ம்ஸ் ஆம் ரெபரன்சில் வழிவகை இருக்கிறதோ இல்லையோ, இப்போதே நாம் இன்னும் பல விஷயங்களைப்பற்றி சர்க்காரியா குழு பரிசீலிக்க வேண்டுமென்று சொல்கின்ற போக்கு அதிகமாக இருக்கிறது. அந்த வகையில், அப்போது நாம் இதைப்பற்றியும் குறிப்பிட்டு உணர்த்தலாம். இதை நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தைப் பற்றி இப்போதே நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். பிறகு நாம் எல்லோரும் சேர்ந்து நிறைவேற்றுகின்ற சூழ்நிலை வரும்போது நிறைவேற்றலாம். இப்போதுள்ள நிலைமை இதுதான். ஆதலால் இப்போது மேற்கொண்டு இதை வலியுறுத்த வேண்டாமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.





**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு வாக்குரிமை அளிக்கும் வகையில் அரசியல் அமைப்புச் சட்டத்திலுள்ள குறிப்பிட்ட வாக்கியத்தை நீக்கம் செய்ய வேண்டி மத்திய அரசுக்கு வலியுறுத்த இந்த அவை மாநில அரசுக்குப் பரிந்துரை செய்கிறது என்கிற தீர்மானத்தை நான் முன்மொழிந்ததன் அடிப்படையிலே, இங்கே ஏறத்தாழ 13 உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இறுதியாக நம்முடைய மாண்புமிகு நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் தம்முடைய கருத்துக்களை மிகச் சிறப்பாக எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் அவ்வாறு சொல்கிறபோது, தொடக்கப் பள்ளி ஆசிரியர்களைப்பற்றி தனிப்பட்ட முறையிலே பரிவோடு, பெருந்தன்மையோடு பல்வேறு அரிய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அந்த ஆசிரியர் சமுதாயத்தைச் சார்ந்தவன் என்கின்ற வகையிலே எனக்கும் அது மகிழ்ச்சியை அளிக்கிறது என்பதாலே, என்னுடைய இதயபூர்வமான நன்றியை அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளவும் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பிரச்சினை விவாதத்திற்கு வந்து, அது முடிகின்ற நேரம் மிகவும் முக்கியமான நேரம். மேலவையைப்பற்றி ஒரு சர்ச்சை எழுந்தது. குறிப்பாக ஆந்திராவில் மேலவையை எடுத்துவிடக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டு, அதையொட்டி சர்ச்சை எல்லாம் நடந்துகொண்டிருக்கும்போது, நம்முடைய மேலவையை இன்னும் விரிவாக்க வேண்டும், மிகப் பெரிய அளவில் இதனை ஆக்க வேண்டும், அதிக அதிகாரம் உள்ளதாக ஆக்க வேண்டும் என்கிற கருத்துக்களையெல்லாம் இங்கே மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் அறிவித்தது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது—நாங்களெல்லாம் எதிர்பாராதது. அதை அவர்கள் இங்கே வெளியிட்டதற்காக நான் என்னுடைய நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில், ஆளும் தரப்பிலேயிருந்து பேசியவர்களானாலும் சரி, எதிர்த் தரப்பிலேயிருந்து பேசியவர்களானாலும் சரி, ஆசிரியர் பிரதிநிதிகளாக இருந்து பேசியவர்களானாலும் சரி, அரசியல் வாதிகளாக இருந்து பேசியவர்களானாலும் சரி, அனைவரும் ஏகமனதாக இதனை வரவேற்று, ஏற்றுக்கொண்டு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அரசே இது தொடர்பான தீர்மானத்தைக் கொண்டு வந்தால்கூட நல்லது என்கிற கருத்துக்களைக்கூட இங்கே தெரிவித்திருக்கிறார்கள்.

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1983 மார்ச் 29

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 11-40)

எனவே அவர் சொன்ன கருத்தின் அடிப்படையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் சொன்ன கருத்தின் அடிப்படையிலும், நம்முடைய அவை முன்னவர் அவர்கள், தேவையானால்—சந்தர்ப்பம் ஏற்பட்டால்—அப்போது அதைச் செய்ய முன்வருவோம் என்ற உறுதிமொழியைக் கூட தந்திருக்கிறார்கள். உண்மையிலேயே இது இந்தத் தீர்மானத்திற்கு நல்ல வலிமையை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முயன்றார்கள். அவருக்குப் பின்னாலே வந்த டாக்டர் கலைஞர் அவர்கள் காலத்திலும் இது குறித்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இப்போது நடக்கிற இந்த ஆட்சியிலும்கூட பலமுறை முயற்சி செய்திருக்கிறோம் என்ற வரலாற்றை எல்லாம் அவை முன்னவர் அவர்கள் மிகச் சிறப்பாக இங்கே எடுத்து வைத்தார்கள். இந்த முயற்சிகள் எல்லாம் 1978-க்கு முன்னாலே எடுக்கப்பட்டவை. மத்திய அரசின் குறிப்புக்குப் பின்னாலே எந்த முயற்சியும் எடுக்கப்பட்டதாக இங்கே குறிப்பிடப்படவில்லை. 1978 ஆம் ஆண்டுக்குப் பிறகு, அவர்களாக ஒப்புக்கொள்ளாவிட்டாலும். அதைப் பெறுவதற்குரிய நடவடிக்கைகளில் ஒரு பகுதியாக நான் முன்மொழிந்துள்ள இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் நம்முடைய அரசு அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு எடுத்துக்கொள்ளும் என்ற உறுதிமொழியையும் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இங்கே தந்தால், அது இன்னும் சிறப்பாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பிரச்சினையில் நாம் பேசும்போது, மற்றொரு பிரச்சினையையும் வலியுறுத்திப் பேசியிருக்கிறோம். அதாவது ஆசிரியர் தொகுதி உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதாகும். தற்போதுள்ள 6 தொகுதிகளை இரண்டிரண்டாகப் பிரிக்கலாம் என்றும் சொல்லியிருக்கிறோம். அதற்கு அப்பாற்பட்ட முறையிலும் ஒரு கருத்து இங்கே சொல்லப்பட்டது. அதாவது ஆசிரியர் தொகுதியில் தேர்தலில் போட்டியிடும்போது, அரசுப் பள்ளிகளைச் சார்ந்த ஆசிரியர்களாக இருந்தால், அவர்கள் தங்கள் பதவியை ராஜிநாமா செய்துவிட்டு தேர்தலில் நிற்க வேண்டுமென்றும், தனியார் மற்றும் ஸ்தல ஸ்தாபனங்களைச் சார்ந்த பள்ளி ஆசிரியர்களாக இருப்பவர்கள் இப்படி தங்கள் பதவிகளை ராஜிநாமா செய்ய வேண்டியதில்லை என்றும் ஒரு



1983 மார்ச் 29] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

வித்தியாசமான நிலை நமது அரசு விதித்துள்ள விதிமுறைகளின்படி இருக்கிறது. மத்திய அரசின் சட்டம் அப்படி இல்லை. எனவே அந்த விதிமுறையைக் கூட எடுத்துவிட்டு, அனைத்து ஆசிரியர்களுக்கும் ஒரே நிலையை ஏற்படுத்த வேண்டுமென்றும் கோரப்பட்டது. அதன் காரணமாக அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றால், அதற்குப் பின்னால் அவர்கள் தங்கள் பதவிக் காலம் முடிந்த பிறகு, மீண்டும் அதே பணியில் போய்ச் சேருவதற்குரிய வாய்ப்பாக ஒரு நிலையை உருவாக்கித் தரவேண்டும் என்ற வேண்டுகோளையும் விவாதத்தின்போது நாங்கள் இங்கே எடுத்து வைத்திருக்கிறோம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் அது சம்பந்தமாக எதுவும் குறிப்பிடாதது வருத்தத்தை அளிக்கிறது. எனவே இப்போதாவது அவர் அதைக் குறித்து அரசின் கருத்தைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் செல்வி ஆ. லீலாவதி அவர்கள் பேசும்போது ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அதாவது ஆசிரியர் தொகுதியில் ஒரு முட்டை வியாபாரி கூட போட்டியிட்டார் என்ற தகவலை அவர் இங்கே தெரிவித்தார். இன்றைக்கிருக்கிற சட்டப்படி பெயர்தான் ஆசிரியர் தொகுதியே தவிர, ஆசிரியர்கள் மட்டும்தான் இதிலே போட்டியிட வேண்டுமென்பதில்லை. ஆனால் பட்டதாரிகள் தொகுதி என்றால், பட்டதாரிகள்தான் போட்டியிட வேண்டும் என்று இருக்கிறது . . . பட்டதாரிகள் தொகுதியில் எப்படி இருந்தாலும், ஆசிரியர் தொகுதியைப் பொறுத்தவரையில் ஆசிரியர்கள் மட்டுமே போட்டியிட வாய்ப்பிருக்க வேண்டும்; வேறு யார் வேண்டுமானாலும் போட்டியிடக்கூடிய நிலைமை இருக்கக் கூடாது என்று கருத்து தெரிவித்தோம். அதைக் குறித்தும் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பதிலளிக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். காரணம் இன்றையதினம் ஆசிரியர் தொகுதியில் ஆசிரியர்தான் போட்டியிட வேண்டும் என்ற நிலைமை இல்லை. * * * இன்னும் கையெழுத்துப் போடத் தெரியாதவன்கூட போட்டியிடலாம் என்ற நிலைமை இருக்கிறது . . .

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** ஆசிரியர் தொகுதியில் * * * சொல்லப்பட்ட வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்குவது நல்லதாக இருக்கும் என்று நம்புகிறேன். யார் வேண்டுமானாலும் போட்டியிடலாம் என்று சொல்வது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

---

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

*மாண்புமிகு மேலவைத் தலைவர்:* மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்துத் தெரிவித்தபடி, அதை நீக்கிவிட ஆணையிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் * * * உரிமை உண்டு" என்று சொன்னதாகத்தான் நான் நம்புகிறேன். ஆனாலும் இந்த ஐயப்பாடு அமைச்சருக்கே வருகிறபோது, வெளியே இருப்பவர்களுக்கு வந்தால் நல்லதல்ல என்பதால், அந்த வார்த்தைகளை மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க ஆணையிடுகிறேன்.

*திரு. பா. ரா. தாமஸ்:* "பிரைமரி ரோலில்" பெயர் உள்ள எவரும் போட்டியிடலாம் என்ற முறையில்தான் சொன்னார் என்று நான் கருதுகிறேன்.

*மாண்புமிகு மேலவைத் தலைவர்:* எது எப்படியிருப்பினும், ஐயப்பாட்டிற்கு இடம் வேண்டாம் என்று நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

*திரு. க. மீனாட்சிசுந்தரம்:* ஆக, இப்படி யார் வேண்டுமானாலும் போட்டியிடலாம் என்ற நிலை இருப்பதால், வேறு பல நிலைமைகள் உருவாக வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே இந்த நிலைமையை மாற்றுவதற்கான வகையில் உரிய பதிலை மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் விளக்கமாகத் தர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர் தொகுதியில் போட்டியிடுகிறவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கே வந்து ஆசிரியர்களின் பிரதிநிதியாக அவையில் பணியாற்றும்போது, பல்வேறு துறைகளைப்பற்றியும் விளக்கமாகப் பேச வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அப்படிப் பேசுவதைக்கூட அரசியல் என்று கருதி, ஆசிரியர்கள் அரசியல் பேசலாமா என்று கேட்கிற சூழ்நிலை இங்கே ஏற்பட்டிருக்கிறது. ஆசிரியர்களின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எந்தப் பிரச்சினையைப்பற்றிப் பேசினாலும், ஆளும் தரப்பிலுள்ளவர்களுக்கோ அல்லது எதிர்த் தரப்பில் உள்ளவர்களுக்கோ அது உடன்பாடாக இல்லாவிட்டால், அதை வைத்து அரசியலாக்குவது என்பது நல்லதல்ல. அப்படிப்பட்ட முறையில் கருத்துக்களைத் தெரிவிக்கும்போது, அதற்கு ஒரு மகுடம் சூட்டி, அதற்கு ஒரு ஆக்ஷன், ரியாக்ஷன் என்ற முறையில் பேசுவது சரியல்ல என்பதையும் எடுத்துத் தெரிவித்தோம். அதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடையளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன். இதையெல்லாம் அவர் செய்ய வேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

எது எப்படி இருந்தபோதிலும், இந்தப் பிரச்சினையில் அரசு மிகுந்த முனைப்போடு இருக்கிறது. ஏற்கெனவே அண்ணா அவர்களின் காலத்திலிருந்து இந்த வகையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



நான் தீர்மானம் கொண்டு வந்துதான் இதை நிறைவேற்ற வேண்டும் என்பது கூட அல்ல. ஆனால் எந்தக் கோரிக்கை எந்தப் பகுதியிலிருந்து வந்தாலும், அது எந்தப் பகுதியிலிருந்து வருகிறது என்பதைப் பார்க்காமல், அந்தக் கோரிக்கையில் நியாயத் தன்மை இருக்கிறதா என்றுதான் பார்க்க வேண்டும். இதுதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறிய கருத்தாகும். எனவே அந்த அடிப்படையில் இங்கே நான் முன்மொழிந்துள்ள இந்தத் தீர்மானத்தின் நியாயத் தன்மை என்ன என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. அந்த வகையில் தேவைப்படுகிறபோது இன்னும் முயற்சி எடுத்துக் கொள்ளும், தேவைப்படுகிறபோது அரசே இதுபோன்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே உறுதிமொழி அளித்திருக்கிறார்கள். அதற்காக நான் அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் 1978 ஆம் ஆண்டிக்குப் பிறகு, இந்த வகையில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதை நாம் உணர வேண்டும். எனவே இதில் உடனடியாக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லி, நான் மேலே குறிப்பிட்ட 2, 3 பிரச்சினைகளுக்கும் அமைச்சர் அவர்கள் விளக்கமான பதில் அளிக்க வேண்டும் என்று கேட்டு, என்னுடைய தீர்மானத்தை நான் வற்புறுத்தவில்லை என்று கூறி அமைகிறேன்.

*மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:* மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இதில் முக்கியமான கருத்து ஒன்று இருக்கிறது. அரசு தொடர்ந்து இது குறித்து ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துக்கொண்டு வந்திருக்கிறது. ஆனால் குறிப்பிட்ட ஒரு ஆண்டிக்குப் பிறகு இதில் ஒரு தொய்வு ஏற்பட்டதற்குக் காரணம், மத்திய அரசின் பல்வேறு இலாக்காக்களோடு மற்றும் தேர்தல் கமிஷனோடு தொடர்பு கொண்டு ஒன்றும், அவர்கள் பிடிவாதமாக இருந்த காரணத்தாலே, தற்போது வலியுறுத்த வேண்டாம் என்று இருந்து விட்டோம். எனவே மீண்டும் இந்தக் கருத்தை வலியுறுத்தக்கூடிய முயற்சியில் கண்டிப்பாக இந்த அரசு ஈடுபடும் அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு உறுதிமொழியாகவே ஏற்றுக்கொள்ளலாம் என்று கூறிக்கொள்கிறேன்.

அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் தேர்தலில் போட்டியிட விரும்பினால், அவர்கள் பதவியை இராஜிநாமா செய்ய வேண்டும் என்று நாம் போடவில்லை. அது எலக்ஷன் ரூல்ஸில் இருக்கிறது. எலெக்ஷன் கமிஷனோடு தொடர்பு கொண்டு அதைப் பற்றியும் கலந்து பார்க்க வேண்டும். அது ஒரு கொள்கைப் பிரச்சினை. ஆசிரியர்கள் அதில் எந்த அளவுக்கு ஈடுபடலாம் என்பதைக்கூட மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களோடு கலந்து பேசித்தான் சொல்ல முடியும். மாண்புமிகு உறுப்பினர் [illegible] கோரிக்

துள்ள தீர்மானத்தின் அடிப்படையான கருத்து தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும் வாக்குரிமை அளிக்கப்பட வேண்டும் என்பது. அதை வலியுறுத்தும் வகையில் இந்த அரசு முனைப்போடு தொடர்ந்து ஈடுபடும் என்ற உறுதிமொழி யைக் கொடுத்து இந்த உறுதிமொழியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்கொண்டு தீர்மானத்தை வலியுறுத்தாமல் விவாதத்தை முடித்து வைத்ததற்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களால் முன்மொழியப் பட்ட தீர்மானம், அவையின் அனுமதியோடு, திரும்பப் பெறப்பட்டது.

## 4. அறிவிப்பு.

### 28—3—1983 அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து சில பகுதிகள் நீக்கப்பட வேண்டியது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 28—3—1983 நாள் அன்று துணை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது உறுப்பினர் திரு. வலம்புரி ஜான் அவர்கள் ஆற்றிய உரையில் சில பகுதிகள் விதிகளுக்கு உட் பட்டதல்ல என்ற பிரச்சினையை உறுப்பினர்கள் எழுப்பியிருக்கிறார்கள். மாண்புமிகு துணைத் தலைவர் இது குறித்து ஆய்ந்து தீர்ப்பளிப்பதாகவும், அதுவரை அந்தப் பகுதி பிரசுரிக்கப்படலாகாது என்றும் தீர்ப்பளித்துள்ளார்.

அரசியல் சட்டப்படி, ஒரு நீதிபதி தாம் ஒரு நீதிபதி என்ற முறையில் ஆற்றிய கடமை (Conduct in the discharge of his duties) குறித்து, அவருடைய நடத்தையை விவாதிக்கக் கூடாது. மற்றபடி பொது வாக, நீதிமன்றங்களின் நடைமுறை குறித்தோ, தீர்ப்புகளை உள்நோக்கம் கற்பிக்காமல் விமர்சனம் செய்வதற்கோ தடை இல்லை. சட்டமன்ற மேலவை விதி 67 (1)-ன்படி நீதிமன்றங்களின் விசாரணையில் இருக்கும் எந்தப் பொருளின் மீதும் உறுப்பினர் தமது கருத்தைச் சொல்லவோ அப்பொருள் பற்றிப் பேசவோ கூடாது. அந்த விதி வருமாறு :—

"உறுப்பினர் உரையாற்றுகையில்—

நீதி விசாரணையில் இருக்கும் எந்தப் பொருளின் மீதும் தமது கருத்தைச் சொல்லவோ, அப்பொருள் பற்றிப் பேசவோ கூடாது".

மேலே கண்ட விதிமுறைகளுக்குட்பட்டு, 28—3—1983 அன்று திரு. வலம்புரி ஜான் அவர்கள் ஆற்றிய உரையை ஆய்ந்து கீழ்க்கண்ட பகுதிகளை மட்டும் நீக்குகிறேன்.



(1) திரு. வலம்புரி ஜான் அவர்கள் பேசியதிலிருந்து கீழ்க்கண்ட பகுதிகள்:

* * * *

(முற்பகல் 11-50)

(2) இதன் தொடர்பாக திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் குறுக்கிட்டுப் பேசியதிலிருந்து கீழ்க்கண்ட பகுதிகள்:

* * * *

(3) திரு. செ. முத்துசாமி அவர்களின் குறுக்கிட்டுப் பேச்சிலிருந்து கீழ்க் கண்ட பகுதிகள் :

* * * *

ஆகிய பகுதிகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

## 3. தனி உறுப்பினர் அலுவல்—தொடர்ச்சி.

## தீர்மானங்கள்—தொடர்ச்சி.

### (2) கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு அரசுப் பணிகள் நியமனத்தில் முன்னுரிமை வழங்குவது பற்றி.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே,

"கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு அரசுப் பணிகளின் நியமனத்தில் முன்னுரிமை வழங்க வேண்டும் என்றும், அவர்களின் குழந்தை களுக்கு கல்லூரி வரையில் இலவசக் கல்வி வழங்க வேண்டுமென்றும் இந்த மன்றம் அரசுக்குப் பரிந்துரை செய்கிறது."

என்று நான் முன்மொழிகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களால் உரிய முறையில் வழிமொழியப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு அரசுப் பணிகளின் நியமனத்தில் முன்னுரிமை வழங்க வேண்டும் என்றும், அவர்களின் குழந்தை களுக்கு கல்லூரி வரையில் இலவசக் கல்வி வழங்க வேண்டுமென்றும் இந்த மன்றம் அரசுக்குப் பரிந்துரை செய்கிறது."

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் என்பது இப்போது தமிழகத்திலே மட்டுமல்லாமல் எங்கும் நிகழ்ந்து கொண்டிருக்கக் கூடிய விஷயம். இருந்தாலும் சாதிக் கொடுமைகள்

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[திரு. செ. முத்துசாமி] [1983 மார்ச் 29

இப்போது உயர்ந்து விளங்கிக் கொண்டிருக்கக் கூடிய கால கட்டத்திலே இவை களுக்கு நாம் எவ்வளவு முன்னுரிமை கொடுத்துச் சலுகைகளை வழங்கு கிறோமோ அந்த அளவிற்கு சமுதாய நல்லை உண்டாக்கியவர்களாக ஆவோம்.

சமுதாய அமைப்பைப்பற்றி சில கருத்துக்களைச சொல்ல விரும்புகிறேன். மனிதர்கள் முற்காலத்திலே காடுகளிலே வாழ்ந்தார்கள். பிறகு நாகரிகங்கள் வளர்ந்து பெண்களைப் பார்த்து திருமணம் செய்யும் நடைமுறை வந்து, சொந்த பந்தங்கள் ஆகி ஒரு சாதியாக மாறின. கூட்டம் கூட்டமாக வசித்து வந்த சாதிகள் மதம் என்ற பெயரால், தங்களைச் சீர்திருத்திக்கொள்வ தற்காக சில தலைவர்களைத் தோற்றுவித்தார்கள். இந்த மதங்களில் எது உயர்ந்தது, எது தாழ்ந்தது என்று ஒப்பிடக்கூடிய அளவிற்கு அதிலே பல மதங்கள் வந்து, ஒரு மதத்திற்குள்ளேயே பல உட்பிரிவுகள் தோன்றும் நிலைமைகள் வந்தன. தொழில்களின் அடிப்படையில் சாதிகள் வளர்ந்த தால், எந்தத் தொழிலைச் செய்பவன் சாதி உயர்ந்தது, எந்தத் தொழிலைச் செய்பவனின் சாதி தாழ்ந்தது என்ற நிலைமைகள் நாட்டிலே வளர்ந்தன. சாதி இந்துக்கள். கிறித்துவர்கள், அரிசனங்கள், முஸ்லிம்கள் என்ற பல மதங்கள் தோன்றின. சீக்கிய மதத்தின் பெயரால் இந்திய ஜனநாயகத்தையே உருக் குலைத்து சீரழிக்கக்கூடிய அளவிற்கு ஒரு பகுதியிலே நடந்துவரும் நிலைமை களை நாம் பார்க்கிறோம்.

அசாமிலே நடக்கக்கூடிய பிரச்சினைகள், மதப் பிரச்சினைகள், ஆகிய வற்றையும் நாம் கணக்கிலே எடுத்துக்கொள்ள வேண்டும். கிழக்கு வங்காளத் திலேயிருந்து அகதிகளாக குடிவந்தவர்கள் எண்ணிக்கை அதிகமானதால் கொஞ்ச காலத்திலே முஸ்லிம் நாடாக ஆகிவிடும் என்று அச்சப்பட்டு அங் கேயே விளைவுகள் பயங்கரமாக ஆகிக் கொண்டிருக்கின்றன. இதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்தியாவின் வட மேற்குப் பகுதியில் உள்ள சீக்கியர்கள் மதத்தின் பெய ரால் இந்திய நாட்டில் பெரிய ஆதிக்கத்தைச் செலுத்த வேண்டுமென்ற நிலை மையிலே அவர்களுக்கென்று தனியாக காலிஸ்தான் நிலையம் வைத்துக்கொண் மதப் பிரச்சாரம் செய்வதையும், போட்டி அரசாங்கம் உருவாக்க வேண்டுமென் எண்ணத்திலே இருக்கக்கூடிய வேகத்தையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டு

இன்னொரு பகுதியிலே ஒரு மதத்திலேயிருந்து இன்னொரு மதத்திற் மாற்ற வேண்டும் என்பதற்காக வெளிநாட்டுப் பணம் எல்லாம் கொடுத் அக்கிரமம் செய்கிறார்கள் என்ற விஷயத்தையும் நாம் சிந்திக்க வேண்டியிரு கிறது.



1983 மார்ச் 29] [திரு. செ. முத்துசாமி]

இன்னொரு பகுதியிலே அரசியல் சட்டத்தின் ஒரு பகுதி ஒரு பிரிவின ருக்குச் சலுகை அளிப்பதாகவும் இன்னுமொரு மதத்திற்குச் சலுகை இல்லாமல் இருப்பதும் வேடிக்கையாக இருக்கிறது. இன்றைக்கு மத்திய-மாநில உறவுகளைப் பரிசீலிப்பதோடு இந்திய அரசியல் சட்டத்தையே சீர்திருத்த வேண்டிய நிலையில் இருக்கிறோம். நமது அரசியல் சட்டம் என்பது முப்பது ஆண்டுகளுக்கு முன்னாலே அன்றைக்கிருந்த சூழ்நிலையில் சில பேராலே எழுதப்பட்டது. இன்றைக்கு உலக வளர்ச்சிக்கேற்ப, விஞ்ஞான வளர்ச்சிக் கேற்ப இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை புதிதாக ஏற்படுத்த வேண்டிய நிலைமை வந்திருக்கிறது என்பதை பட்டவர்த்தனமாக பாராளுமன்றத்தில் இருப்பவர்களுக்கும் இங்கே சட்டமன்ற மேலவையில் இருப்பவர்களுக்கும் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். புதிய கண்ணோட்டத்திலே அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்ற வேண்டும். அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்பது முதல் கோரிக்கையாக இருந்தாலும், இப்போதுள்ள அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ள சீர்கேடுகளை ஒழிப்பதற்கு கலப்புத் திருமணம் ஒன்றுதான் வழி வகுக்கும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு மதத்திற்கு ஒரு சலுகை, இன்னொரு மதத்திற்கு ஒரு சலுகை என்று இருக்கிறது என்பதை நான் குறிப்பிட்டுக் காட்டும்போது அவர்களைச் சொல்லுகிறார்கள், இவர்களைச் சொல்லுகிறார்கள் என்று தயவுசெய்து யாரும் கருதக்கூடாது. நாட்டிலே இருக்கக்கூடிய உண்மைகளை அறியும் போக் கிலே எடுத்துக்கொள்ள வேண்டும். சில மதத்தினருக்கு மைனாரிட்டி என்ற பெயராலே சில உரிமைகள் கொடுக்கப்படுகின்றன. சில மதக் கோயில்களில் அரசாங்கம் தலையிடக்கூடாது. சில மதங்களின் சொத்துக்களில் அரசாங்கம் தலையிடலாம். இதைச் சொல்லும்போது, ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறவர் களுக்குப் பயம் வருகிறது. எங்கே ஓட்டு கிடைக்காமல் போய்விடுமோ என்று அஞ்சுகிறார்கள். இந்த நாட்டிலே சமநீதி எல்லா மதத்திற்கும் எல்லா சாதிக்கும் வழங்கப்படுவதில்லை. சமநீதி வழங்க வேண்டும் என்று தேர்ந் தெடுக்கப்பட்டவர்களுக்கு உள்ளம் இருந்தாலும், அதை நடைமுறைப்படுத்து வதற்கு பயப்படுகிறார்கள். அந்த அளவிற்கு சாதி மத ஆதிக்கம் இந்த நாட்டிலே வளர்ந்து நிற்கிறது. சாதிக்கு ஒரு அமைச்சர். மதத்திற்கு ஒரு அமைச்சர் என்று பங்கு போட்டுக் கொடுக்கிற அளவிற்கு பாராளுமன்ற ஜன நாயகத்தில் கோளாறுகள் ஏற்பட்டிருக்கின்றன. இன்றைக்கு சாதியின் பெய ரால் பிரதிநிதித்துவம் வழங்கப்படுகிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். எந்த சாதியானாலும். எந்த மதமானாலும் அதிலே பணக் காரர்களாக உள்ளவர்கள். வசதியுள்ளவர்கள், பரம்பரையாகச் செல்வாக்கு உடையவர்கள், அந்தச் சாதிக்கு, அந்த மதத்திற்குத் தலைமை தாங்கு

கிறார்கள். ஆனால் அரசியல் கட்சியிலே அப்படியில்லை. அரசியல் கட்சிகளிலே சாதாரண தொண்டர்கள் கூட உழைத்து முன்னுக்கு வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அரசியலிலேகூட இப்போது பல்வேறு கோளாறுகள் ஏற்பட்டுவிட்டன. அரசியலிலேகூட தாங்கள் செய்யும் சேவையைப் பணமாக்குகிறார்கள்.

சாதியின் பெயரால் நடைபெறக்கூடிய திருமண கோஷ்டிகள் சில குறிப்பிட்ட சாலைகளில், கோயில்களில் செல்லக்கூடாது என்று கட்டுப்பாடு உண்டாக்குவதும், சாதி, மதத்தைக் காக்கும் உரிமை வேண்டும் என்ற பெயரால் பிறருடைய உரிமையை எடுத்துக்கொண்டு இளைஞர்களை ஒன்றாகத் திரட்டி, ஆத்திரமூட்டி, பகை நாட்டை வெல்வதைப்போல குறுகிய நோக்கோடு ஈடுபடக்கூடிய சாதி மதங்கள் அழிக! அழிக!! இதற்கெல்லாம் இன்னும் மருந்து கண்டுபிடிக்க முடியவில்லை. அதற்கு ஒரே மருந்து அந்தந்த சாதியைச் சேர்ந்தவர்கள் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்பதுதான். அந்த மனப்பக்குவம் வருமானால், நிச்சயமாக சமயமும், சாதியும் எப்படி உருவாக முடியும்?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஒரே சாதியைச் சேர்ந்த நம்பியும், நங்கையும் காதல் பண்ணிவிட்டால் என்ன செய்வது?

**திரு. செ. முத்துசாமி:** காதல் திருமணம் எல்லாவற்றையும்விட உயர்ந்தது. அதிலே யாரும் தலையிட முடியாது. கருத்து ஒருமித்து அவர்கள் ஒன்று சேரும்போது, அவர்களுடைய அன்பு எல்லாவற்றையும்விட உயர்ந்து நிற்கிறது. தலைவர் அவர்களே அந்தக் காதலைப் பற்றி . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இந்த வயதில் . . . .

**திரு. செ. முத்துசாமி:** இங்கே நினைவுபடுத்தினார். காதல் எல்லாவற்றையும் விட உயர்ந்தது. அதிலே யாரும் மோதவோ, செல்லவோ, தலையிடவோ கூடாது. இரண்டு மனமும் ஒன்றுபட்டால் அதைத் தவிர்க்க மரணம் ஒன்றால்தான் முடியும். மரணம் ஒன்றுதான் அவர்களுடைய பிடியிலிருந்து நீக்க முடியும். மற்றவர்களால் அவர்களை நிச்சயமாகப் பிரித்துவிட முடியாது. அதுதான் உயர்ந்த காதல். நான் காதலுக்கு வரவில்லை. இந்த நாட்டிலுள்ள நடைமுறைச் சங்கடங்கள் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் காதலுக்கு வரலாம். அவர் ஏன் என் மாதிரி இருக்க வேண்டும்?

**திரு. செ. முத்துசாமி:** ஏற்கெனவே நான் குடும்பம் அமைத்துக்கொண்டவன். நல்ல குடும்பஸ்தன்: நான் இனிமேல் காதல் கொள்ளுவது **நல்ல** நல்ல சமுதாயத்திற்குக் கேடு.



(நண்பகல் 12-00)

ஆதலால் உயர்ந்த தன்மையில் இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் அப்படி இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. இனிமேல் செய்ய வேண்டும் என்று தலைவர் அவர்கள் எண்ணிச் சொன்னதை என்னால் செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொரு திருமணம் நான் செய்துகொள்ள முடியும் என்று சொல்லவில்லை. அதைப்பற்றி விளக்கம்தான் நான் சொன்னேன். காதலைப்பற்றி விளக்குவது என்பது அதிலே அனுபவம் பெற்றவர்களுக்கு சிறப்பாக அமையலாம். ஆனால் எனக்கு அப்படிப்பட்ட அனுபவம் இல்லை. அதை மட்டும் நான் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆக கலப்புத் திருமணத்திற்கு வருகிறேன். திருமணம் செய்து கொள்ளும்போது, கலப்பு ஏற்படும்போது, என்ன பலன் என்று சொல்கிறேன். விஞ்ஞான ரீதியாக ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். ஏற்கெனவே ஜப்பான் நாட்டினுடைய மக்கள் வளர்ச்சி எப்படி இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். விஞ்ஞான ரீதியாக அவர்கள் சொல்கிறார்கள். ஒரு மனிதனுடைய ரத்தத்திலே 4 விதமான ரத்தப் பிரிவுகள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். 'ஓ' பிரிவு ரத்தம் என்று இருக்கிறது. ஒரு 'ஓ' பிரிவு ரத்தம் உள்ள பெண்ணுக்கும் ஒரு 'ஓ' பிரிவு ரத்தம் உள்ள ஆணுக்கும் திருமணம் செய்வது கூடாது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். அப்படி கண்டுபிடித்திருக்கிறார்கள். காரணம் என்ன என்றால் அப்படி 'ஓ' பிரிவு ரத்தம் உள்ளவர்கள் கல்யாணம் செய்துகொண்டால், மூளை வளர்ச்சி குறைந்த பிள்ளைகள் பிறக்கும் என்று சொல்கின்றார்கள். அப்படி ஜப்பானிலே கண்டுபிடித்து சொல்லியிருக்கிறார்கள். விஞ்ஞானப் பேராசிரியர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கருத்துக்கள் கல்வித் துறையிலே இடம் பெற வேண்டும். இது மருத்துவத் துறையிலே இடம் பெற வேண்டும். அவர்கள் எல்லோருக்கும் தெரிவிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் இருப்பதால், அவர்களுக்கு இந்த வேண்டுகோளை வைக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** அவர்கள் என் இலாக்காவிற்குள்ளே வந்ததால் சொல்கிறேன். அதிலே ஆர். எச். பேக்டார் என்று இருக்கிறது. அந்த பிரின்சிபிள், கொள்கை ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாக இருக்கிறது. ஆர். எச். பேக்டாரில் சரியான வகையிலே கவனிக்காமல் திருமணம் செய்துகொண்டால், அப்படி குறைகள் இருக்கும் என்று இருக்கிறது. ஆர்.எச். என்றுதான் குறிப்புக்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1983 மார்ச் 29

**திரு. செ. முத்துசாமி:** அதிலே இன்னும் நுணுக்கமாக முழுமையாக அவர்கள் தெரிந்து கொண்டிருப்பார்கள். அவர்கள் டெக்னிகல் எஜுகேஷன் பெற்றவர்கள். அந்தத் துறையிலே இருப்பதால், அவர்கள் சொல்கின்றார்கள். அதையே தயவுசெய்து அவர்கள் மக்களுக்குப் போதிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.' காரணம் நான் சொன்ன குரூப்பைச் சேர்ந்தவர்கள் திருமணம் செய்துகொண்டால், மூளை குறைவான பிள்ளையை, குழந்தையை அவர்கள் பெறுவார்கள் என்ற உணர்வை வைத்து அவர்களுக்குச் சொல்ல வேண்டும். மூளை குறைவான சரியாக வேலை செய்ய முடியாத குழந்தைகளைப் பெற்றால், நாட்டில் எப்படி வளர்ச்சி இருக்கும்? ஆகவே அதைச் செய்ய வேண்டும். அதை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** நான் உறுப்பினர் அவர்கள் கருத்தை 'சப்போர்ட்' பண்ணித்தான் பேசுகிறேன். அவர்கள் கவலைப்பட வேண்டாம். அதிலே இன்னும் சொல்கிறேன் மாடர்ன் கன்ட்ரியில், முன்னேற்றம் அடைந்த நாடுகளிலே கூட இப்படிப்பட்ட கல்யாணங்கள் தடுக்கப் படாமல் பண்ணிவிடுகிறார்கள்.

**திரு. செ. முத்துசாமி:** இது மிக உயர்ந்த கருத்து. இந்த நாட்டிலே உள்ள மக்களுக்குத் தயவுசெய்து அவர்கள் எல்லோரும் விரும்பி ஏற்கக்கூடிய அளவுக்கு அரசு செய்ய வேண்டும். இதுபற்றிய விவரங்கள் அவர்களுக்குத் தெரியவில்லை. நான் உண்மையைத்தான் சொல்கிறேன். ஆசிரியர்களுக்கும் பிளட் குரூப் பற்றிகூட தெரியவில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம்:** திரு. முத்துசாமி அவர்கள் இதற்கு முன்னால் பேசியது காதல் ஒன்றுதான் அதைச் செய்ய முடியும், முறியடிக்க முடியும் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு 'ஏ' குரூப்கூட முறியடித்து விடுகிறது என்று தெரிகிறது.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தம்கூட என்னிடம் கேட்டுக்கொண்டிருந்தார்கள். இப்படி ஒரு கதை. அதிலே காதலில் ஆரம்பித்து, இந்த பிளட் குரூப் டெஸ்ட் பண்ணி, பிறகு திருமணம் செய்துகொள்வதா வேண்டாமா என்ற பிரச்சினை வருகிறது. அப்படி நடந்துவிட்டால் குழந்தை நல்ல முறையில் பிறக்காது என்ற கருத்தில் கதை வருகிறது. அவர்கள் ஒரு நாடகத்தை வைக்கிறார்கள். அதிலே குழந்தை பிறக்க வேண்டுமென்ற வாய்ப்போடு, அங்கேதான் சிக்கல் ஏற்படுகிறது [illegible] சொன்னதில் வந்திருக்கிறது.



1983 மார்ச் 29]

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு சுவாரஸ்யமான கேள்வியைக் கேட்டார்கள். காதலர்கள் ஒன்றுபடுகின்றார்கள். ஆனால் என்ன பிளட் குரூப் என்று தெரியாமல் இருக்கிறார்கள்? அவருடைய கதையிலே என்ன வருகிறது? ரத்தம் என்ன குரூப் என்று திருமணம் நடப்பதற்கு முன் தெரிந்தால் யோசிப்பார்கள். மேல்நாடுகளிலே அவர்களுக்குப் பிறக்கும் குழந்தை மூளையில்லாத குழந்தையாக இருக்கும் என்றால், அதற்கு அவர்களுடைய கருத்தில் எதிர்காலத்தில் குழந்தையே இல்லை என்றாலும் பரவாயில்லை, இரண்டு பேர்களும் சேர்ந்து வாழ்வோம் என்று ஒரு முடிவு செய்கிறார்கள். அவர்களுக்குக் குழந்தை என்று பிறந்தால்தான் நாட்டிலே பிரச்சினை. அவர்கள்தான் பிறந்து வளர்ந்துவிட்டார்கள். அவர்கள் வாழ்வைப்பற்றிப் பிரச்சினை இல்லை. ஆனால் அவர்கள் உற்பத்தி பண்ணக்கூடிய ஒரு பொருள், இந்த நாட்டிலே வரக்கூடிய ஒரு மனித சக்தி, கேடு கெட்டதாக இருந்துவிடக்கூடாது என்ற கருத்திலேதான் சொல்கிறேனே தவிர, வேறு ஒன்றுமில்லை. கலப்புத் திருமணங்கள் மூலமாகப் பிறக்கக்கூடிய குழந்தைகள் நல்ல அறிவு பெற்ற குழந்தைகளாக இருக்கின்றன என்று விஞ்ஞான ரீதியாக நாம் அறிய முடிகிறது. சொந்த பந்தங்களிலேயிருந்து விடுபட்டு, அதே ரத்தத்திலே இருக்கக்கூடிய ஒரே இனத்தில் திருமணம் செய்துகொள்வதைவிட, இன்னொரு இனத்திலே திருமணம் செய்துகொள்வதால் ஏற்படக்கூடிய பலன் நல்லதுதான். இன்னும் கொஞ்சம் அதிகமாகச் சொல்லப்போனால், கலப்புத் திருமணங்கள் என்று சொல்லும்போது, கலப்பு இனங்கள், அதாவது பறவைகளிலே, மிருகங்களிலே உயர்ந்த ஹைபிரிட் வெரைட்டி என்று எல்லாம் சொல்கிறோம். அப்படி மனிதர்களிலே செய்ய முடியாது. நாம் ஒரு பண்பாட்டை வைத்திருக்கிறோம். பண்பாடு என்பது ஒருவருக்கு ஒருத்தி என்பது. ஒருவனுக்கு ஒரு பெண் என்று வைத்திருக்கிறோம். ஒரு ஜாதியைச் சேர்ந்தவர் அந்த ஜாதியிலேதான் திருமணம் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் பண்பாடு என்று சொல்கிறார்கள். ஜாதியினர்தான், மதவாதிகள்தான் அப்படிச் சொல்கின்றார்கள். அவர்களுடைய ஆதிக்கத்தினுடைய உச்ச கட்டம்தான் இந்த சமுதாயத்தை அழிக்கும் ஒரு சாதனமாக இருக்கிறது. அதனால்தான் இத்தகைய முறையிலே ஒரு நல்ல ஜெனரேஷன் வருவதற்காக இந்த நாட்டிலே கலப்புத் திருமணங்கள் மிகவும் நடக்க ஊக்குவிக்கவேண்டும். கலப்புத் திருமணங்களை ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காக இன்னும் சில நிகழ்ச்சிகளை, உருக்கமான நிகழ்ச்சிகளை, தமிழகத்திலே இருக்கக்கூடியவைகளைப் பற்றிச் சொன்னேன். பஞ்சாபிலே நடந்த விஷயத்தைச் சொல்லிவிட்டு நான் இங்கு வந்திருக்கிறேன். அந்த விஷயத்தைப்பற்றி, கொடுமையைப்பற்றிச் சொல்ல வேண்டும். பஞ்சாபிலே சீக்கியர்களிலே கூட மூன்று

[திரு. செ. முத்துசாமி] [1983 மார்ச் 29

பிரிவினர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கிடையேயும் ஒருவருக்கு ஒருவர் ஒற்றுமை வருவதில்லை. சில நேரங்களிலே வெட்டிக்கொள்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கிறது. ஒவ்வொரு இனமும் ஒவ்வொரு மதமும், ஜாதியின் பெயரால், மதத்தின் பெயரால் என்ன செய்துகொண்டிருக்கின்றன என்று பார்க்கிறோம். அந்த நிலைமைகள் எல்லாம் கலப்புத் திருமணங்கள் நடக்கும்போதுதான் நிச்சயமாக மறையும். சொந்த பந்தம் என்று சொல்லும்போது என்ன சொல்கிறோம்? ஒரு பெண்ணுக்கு இந்தப் பையன் இப்படி உறவு, அந்தப் பெண்ணுக்கு சித்தப்பா, அந்த சகலையோடு உறவு என்று சொல்கிறோம். இப்படி எல்லாம் உறவுகளைச் சொல்வது என்ன ஆகிறது? இப்படி அது ஒரே கிளையாக வருகிறது. ஒரு ஜாதியில் திருமணம் செய்வது என்று இருப்பதுதான் இதற்குக் காரணம். இப்படியில்லாமல் மற்ற ஜாதிகளிலிருந்து திருமணம் செய்துகொள்வது என்ற போக்கு வருமானால், எல்லா ஜாதியினரும் ஒன்றாக வருவதற்கு வாய்ப்பாக இருக்கும். இப்படிச் செய்வதற்கு அரசால் கட்டாயப்படுத்த முடியுமா என்று பார்க்க வேண்டும். கன்னியாகுமரியிலே நடக்கக்கூடிய அநத ஆவேசமான போர்க் கோலத்தை மாற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்று அவர்களே வேண்டுகோள் விடுத்தார்கள். நம்முடைய பெரியவர் திரு. சங்காலிங்கம் அவாகளும் சென்றார்கள். எல்லோரும் கண்ணீர் மல்க சொன்னார்கள். அப்படிச் சொன்னாலும், அவர்கள் ஆத்திரத்தின் உச்சகட்டத்திலேயிருந்து இறங்குவதாகத் தெரியவில்லை. மீண்டும் மோதல் இருக்கிறது. இதற்குக் காரணங்கள் எல்லாம் தங்கள் ஜாதி, தங்கள் இனம். தங்கள் மதம், தங்களுக்கு ஊறு விளைவிக்கப்படுகின்றது, அநீதி விளைவிக்கப்படுகின்றது என்பதைப் போல, இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கு உரிமை போய்விட்டது என்கிறார்கள். முஸ்லீம் மதத்தைச் சார்ந்தவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளை வைத்துக்கொள்ளலாம், பெண்களைத் திருமணம் செய்து கொள்ளலாம் என்று இருக்கிறது. அப்படி அனுமதிக்கும்போது, இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் ஏன் ஒரு திருமணம் மட்டுமே செய்துகொள்ள வேண்டும் என்று சொல்கிறோம்? அவர்களிடத்திலே இந்த வித்தியாசமான மனப்போக்கு இருக்கும்போது, நாம் ஏன் சேரக்கூடாது என்று கேட்கிறார்கள். இந்த நாட்டிலே அரசியல் சட்டத்திலேயே அவ்வளவு வேறுபாடு ஏன்? இங்கே அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள். அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் இன்றைக்கு இருக்கக்கூடிய மதங்கள், மத ஸ்தாபனங்கள் எல்லாம் ஒன்றுதான் என்று சொல்லலாம். இப்போதுள்ள அரசியல் சட்டப்படி இது 'செக்குலர் ஸ்டேட்'. மத சார்பில்லா ஒரு அரசு. இதுதான் அரசியல் சட்டம் சொல்வது. ஒரு மத சார்பற்ற அரசு மதத்திற்கு மதம் வேறுபாடான சலுகைகளைக் கொடுப்பது என்று



1983 மார்ச் 29] [திரு. செ. முத்துசாமி]

இருப்பது ஏன்? இது மத சார்பற்ற அரசா? ஏன் ஒருவரைச் சார்ந்து இருக்கிறது? அரசியல் சட்டத்திலேயே இந்தத் தவறு இழைக்கப்பட்டிருக்கிறது. முஸ்லிம் மக்களுக்கு, அந்த மதத்தினைக் காத்துக் கொள்வதற்கு ஒருவிதமான சட்டம். இந்து கோயில்களைக் காத்துக்கொள்வதற்கு ஒரு விதமான சட்டம். கிருத்துவ கோயில்களைக் காத்துக் கொள்வதற்கு ஒருவிதமான சட்டம். அதன் நிறுவனங்களைக் காத்துக் கொள்வதற்கு ஒருவிதமான சட்டம். இது என்ன கேலிக்கூத்தான சட்டம்? இதையெல்லாம் எடுத்துப் பேசுவதற்கு எனக்கு உரிமை உண்டு. இதில் தனிப்பட்டவர்கள் யாரையும் நான் தாக்கவில்லை. இந்த சமுதாயத்தை உருக் குலைத்துக்கொண்டிருக்கின்ற ஒரு அரசியல் சட்டமாக இது இருக்கிறது. 36 ஆண்டுக்காலம் ஆன பிறகும், அது உச்சகட்ட வடிவம் எடுத்து இன்றைக்கு ஆத்திரத்திலே மக்கள் தங்களை மடித்துக்கொள்கிறார்கள். கூட்டம் கூட்டமாக போர்க்கோலம் கொண்டு இருக்கின்றார்கள். இன்றைக்கு உள்ள அரசியல் சட்டத்தினுடைய மகிமை இதுதானா என்று கேட்க விரும்புகிறேன். அதன் புனிதம் என்ன என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஒவ்வொரு மதத்திற்கு ஒவ்வொரு விதமான சலுகையை வழங்கிக்கொண்டிருக்கின்ற நிலைமைகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். முடிவு கட்டியாக வேண்டும்.

**திரு. வலம்புரி ஜான்:** சிறுபான்மை மக்களுக்கு அரசியல் சட்டத்தில் உள்ள உரிமைகள் மறுக்கப்பட வேண்டும் என்று உறுப்பினர் அவர்கள் சொல்கின்றார்களா? உரிமைகள் வழங்கப்படவே கூடாது என்று சொல்கிறார்களா? அவருடைய கருத்து என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** சிறுபான்மை மக்களுக்கு கல்வி. உத்தியோகங்கள் இவற்றில் எல்லாம் உரிமை என்று இருக்கிறது. சிறுபான்மை உரிமை என்று சொல்லும்போது, அவர்களுக்கு மட்டுமே கோயிலில் அந்தஸ்து, போக்குவரத்து என்பதில் அவர்களுக்கு என்று ஒரு தனியான மரியாதை இருக்கிறது.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை.)

(பிற்பகல் 12-10)

பெரும்பான்மை மக்கள் என்பதால், மக்கள் எண்ணிக்கை அதிகம் இருப்பதால், அந்தக் கோவில்களுக்கும், அதன் சொத்துக்களுக்கும் தனி டிரீட்மென்ட். அது கூடாது. அவர்களை வாழ்விக்க, அவர்களை மேம்படுத்த, அவர்களுடைய வாழ்வை செம்மைப்படுத்த அவர்களுக்கு உரிமை கொடுப்பதிலே ஆட்சேபணை இல்லை.

திரு. வலம்புரி ஜான்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் கொஞ்சம் தெளிவாகச் சொல்ல வேண்டும். அவர் தெளிவாக வருவது நல்லது. சிறுபான்மை மக்களுக்கு உரிமைகள் தர வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆனால் ஆளுக்கு ஒரு சட்டம் எதற்குத் தேவை என்று அரசியல் சட்டத்தையும் பழிக்கிறார்கள். ஆகவே இரண்டு நிலை இங்கே இருக்கக்கூடாது. உதாரணத்திற்குச் சொல்கிறேன். இஸ்லாமியர்களுக்கு என்று தனிச் சட்டம் இருக்கிறது. சட்டம் நடைமுறையிலே இருக்கிறது. அது கூடாது என்கிறாரா? அதைத் தெளிவாகச் சொன்னால் தவிர, விளக்கம் பெறாத நிலையில்தான் நாங்கள் இருப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே. மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு விளக்கமாகச் சொல்ல முடியாத காரணத்தால் அவர்கள் குழப்பம் அடைந்திருக்கிறார்கள். இன்னும் தெளிவாக, விரிவாகச் சொல்லுகிறேன். என்னுடைய கருத்தில் நான் தெளிவாகவே இருக்கிறேன். எந்த மதமானாலும் கோவில்கள் என்று சொல்லிவிட்டால், ஒரேவிதமான நடைமுறைதான் இருக்க வேண்டும். அதிலே நான் தெளிவாக இருக்கிறேன். மைனாரிட்டி உரிமை என்று சொல்லும்போது கோவில்களில் கும்பிடுவதற்கு உள்ள உரிமைகளை நான் சொல்லவில்லை. மைனாரிட்டி உரிமை என்பது அவர்கள் கல்வி பெறுவது, உத்தியோகம் பெறுவது, அவர்கள் சட்ட மன்றத்திலே இடம் பெறுவது, பாராளுமன்றத்திலே இடம் பெறுவது—இப்படிப்பட்ட உரிமைகள் எல்லோரும் ஒப்பக்கொள்ளக்கூடிய விஷயங்கள்தான். காரணம் அவர்களுக்குப் பிரதிநிதித்துவப்படுத்த முடியாது. நான் அங்கே செல்லவில்லை. சாதிகள் பெயராலும், மதத்தின் பெயராலும் ஏற்பட்டிருக்கக்கூடிய கொடுமைகளினுடைய உச்ச கட்டத்தினுடைய அடியைத் தாங்க முடியாத நிலையில் வரும் உணர்வுகளே தவிர, மைனாரிட்டி மக்களுடைய உரிமைகளைப் பறிக்க வேண்டுமென்ற உணர்வு என்றும் என்னுடைய உள்ளத்தில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அப்படி மைனாரிட்டி உரிமை என்று சொல்லும்போது, கல்விக்கூடங்களிலே இன்றைக்கு உள்ள நிலைமைகளை எதிர்த்து, அது அநியாயம் என்று போராடுகிறோம். மைனாரிட்டி சமுதாயத்தினர் நடத்தும் கல்விக்கூடங்களில் பணியாற்றும் மைனாரிட்டி ஆசிரியர்களுக்கு மைனாரிட்டி உரிமை இல்லை. மைனாரிட்டி மேனேஜர் என்றால், அவரை எதும் கேள்வி கேட்காமல், அரசியல் சட்டத்திலே உள்ள நேச்சுரல் ஜஸ்டிசுக்கு எதிராக, ஆண்டான் அடிமைப் போக்கிலே இன்றைக்கு ஆசிரியர்களை வெளியேற்றுப்



அளவுக்கு அரசியல் சட்டப் பிரிவு இருந்தால், அது அழிக்கப்பட வேண்டும். விரைவாக அது திருத்தப்பட வேண்டும். அதிலே நான் உறுதியாக இருக்கிறேன். அந்த உரிமை தரப்படக்கூடாது. அவர்கள் மத நிறுவனங்களை நடத்திக் கொள்ளட்டும். எனக்கு ஆட்சேபணை இல்லை. பொதுக் கல்விக்கூடங்களை நடத்தும்போது, அவர்கள் தனிப்பட்ட உரிமைகளை எடுத்துக் கொள்ளக்கூடாது. அது அக்கிரமம், அநியாயம். அந்த சாதி, அந்த இன மக்களுக்கு எதிராக அக்கிரமம் புரிகிறார்கள். மைனாரிட்டி உரிமை என்ற பெயராலே, மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற நல்ல உணர்ச்சியாலே அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்கள் செய்ததை, நல்ல எண்ணத்தில் அவர்கள் செய்ததை, இன்றைக்கு மைனாரிட்டி மக்களுக்கு எதிராக, அவர்களுடைய இன, மத மக்களுக்கு எதிராக அக்கிரமக்காரர்கள் சில பேர்கள் உட்கார்ந்து கொண்டு, செய்து கொண்டிருக்கும் அக்கிரமங்களை பொறுக்க முடியாமல், ஆட்சியிலே இருப்பவர்கள்கூட அதைத் தடுக்க முடியாத அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன.

திரு. வலம்புரி ஜான்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உச்ச குரலில் பேசுவதன் காரணமாக உண்மையைச் சொல்லுகிறார் என்று ஆகாது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெளிவுபடச் சொல்லவில்லை என்றால், குழப்பம் அவரிடத்திலேதான் இருக்கிறது என்று அர்த்தம். சிறுபான்மைச் சமுதாயத்திலே சிறுபான்மை மக்களுக்கு அக்கிரமம் நடக்கிறது, அநியாயம் நடக்கிறது என்று ஓங்கிப் பேசுவதன் காரணமாக, உண்மையைப் பேசுவதாக அது ஆகாது. குறிப்பிட்டு சில இடங்களைச் சொல்ல வேண்டும். எங்கே நடக்கிறது என்று சொல்ல வேண்டும். ஒட்டுமொத்தமாக எந்தச் சமுதாயமாக இருந்தாலும் சரி, அவர்கள் இஸ்லாமியர்களாக இருக்கட்டும், கிறித்துவர்களாக இருக்கட்டும், சொல்லுகிறபோது சிறுபான்மைச் சமுதாயத்திலே நடைபெறுகிற கல்விக்கூடங்களிலே சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் அழிக்கப்படுகிறார்கள் என்று சொன்னால், எந்தத் துறையில் நடந்தது, எந்தப் பள்ளியில் நடந்தது என்று சொல்ல வேண்டும். காரணம், பொறுப்புள்ளவர்களாக இருக்கும்போது, ஒட்டுமொத்தமாக ஒரு சமுதாயத்தை இப்படிப் பிளவுபடுத்தி, பேதப்படுத்திப் பேசுவதை வன்மையாக ஆட்சேபிக்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): மாண்புமிகு உறுப்பினரவர்கள் இந்தப் பிரச்சினையை கல்விக் கொள்கைக் குறிப்பின் மீதான விவாதத்தில் பேசிக்கொள்ளலாம். இப்போது கலப்புத் திருமணம்பற்றி பேசலாம்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பிரச்சினையை எழுப்பி, பதில் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டதால். பதில் சொல்கிறேன். நானாக இந்தப் பிரச்சினையை எழுப்பவில்லை. ஒருவர் தனக்கு இருக்கிற சந்தேகத்தைக் கேட்கும்போது, அதற்குப் பதில் அளிக்க ஆற்றல் இல்லை என்று நிரூபிக்க நான் தயாராக இல்லை. என் கொள்கையைச் சொல்லத் தயாராக இருக்கிறேன். இந்த மன்றத்திற்கு அவர் புதிதாக வந்திருக்கிறார். இதே மன்றத்திலே மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் எத்தனை சிறுபான்மை பள்ளிகளில் ஆசிரியர்கள் கேவலப்படுத்தப்பட்டு, ஒன்றும் செய்ய முடியாமல், நடவடிக்கை எடுக்க முடியாமல், தடுமாறிக் கொண்டிருக்கிறோம் என்பதைச் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே. தாங்கள் சொன்னது போன்று கல்விக் கொள்கை விளக்கக் குறிப்பின் மீதான விவாதத்திலே இந்தப் பிரச்சினைகளைப் பேசலாம். எல்லா இடங்களிலும் திரும்பத் திரும்ப கல்வி அமைச்சரைப் பற்றி அல்லது கல்வித் துறையைப்பற்றிப் பேசும்போது, சில விஷயங்களிலே நல்லது நடக்க வேண்டுமென்று நினைத்தால்கூட, 'ப்ரஜுடிஸ்' ஆகிவிடுகிறது. மேலவையில் ஏற்கெனவே பேசினோம். மேலவைக்குள்ள உயர்ந்த பண்பாட்டில் ஒன்று, மறு ஆய்வு செய்யும்போது அமைதியாகச் சொல்ல வேண்டுமென்பதாகும். இந்த விவாதம் இப்போது தேவையில்லை. கல்விக்கூடங்கள் பற்றிய பிரச்சினை இதில் வராது. எல்லாவற்றிலும் எல்லாவற்றையும் பேச வேண்டுமென்பதில்லை. அதைத் தவிர்த்து கலப்புத் திருமணம்பற்றிப் பேசுவது நல்லது. வெளியிலே உட்கார்ந்திருந்தாலும், சுவையாகக் கேட்டுக்கொண்டிருந்தோம். அந்தப் பாணியில் மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேச வேண்டும். கல்விக் கொள்கைக் குறிப்பின் மீது மற்ற விஷயங்களைப்பற்றித் தெளிவாகப் பேசலாம்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** மாண்புமிகு உறுப்பினரவர்கள் நீண்ட நேரமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச வேண்டும். ஆதலால் சீக்கிரம் முடித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, தயவு செய்து கொஞ்சம் நேரம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள், உரத்த குரலில் நான் பேசுவதாகச் சொன்னார்கள். அது என்னுடைய இயல்பு. அவருக்குக்கூட உரத்த குரல் உண்டு. அத்தகைய குறைகளைச் சொல்ல வேண்டியதில்லை. அவர்களிடம் பணிவோடு தெரி



வித்துக் கொள்கிறேன், அவருக்கும் அத்தகைய குரல் உண்டு. எனவே அதில் கவனம் செலுத்த வேண்டாம். என்னுடைய கருத்துக்களை நான் வலிமையாகச் சொல்ல எனக்கு உரிமை உண்டு. மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசும்போது, அவருடைய கருத்தை அழகாக எடுத்து வைக்கலாம். இன்னும் 5, 6 நாட்கள் சிந்தித்து அடுத்த முறை தனி உறுப்பினர் அலுவல் நாளன்று அவர் பேசலாம். நான் அதை வரவேற்கிறேன். ஓர் உறுப்பினர் பேசும்போது, முழுமையாக எல்லாவற்றையும் தெரிந்துகொண்டு வருவார்கள் என்பதல்ல. என்னுடைய கொள்கை அடிப்படையில் நான் ஒன்றைப் பேசித்தான் ஆக வேண்டும். அதை வேறுவிதமாக மாற்றுவது என்பது யாராலும் முடியாது. நான். கல்விக்கூடங்களைப்பற்றிப் பேச வேண்டியதில்லை என்றுதான் சொன்னேன். முதலிலே கொஞ்சம் பாதுகாப்பாகவே சொன்னேன். இந்தப் பிரச்சினையை எடுத்துச் சொல்லும்போது அது கல்வித் துறைக்குப் போய்விடும் என்ற காரணத்தால், நான் அதைக்கூட சொல்லவில்லை என்று சொன்னேன். கலப்புத் திருமணத்திலே கல்வித் துறைப் பிரச்சினையைக் கலக்க வேண்டுமென்ற ஆசை இல்லை என்றாலும், கேள்வி கேட்டதால் பதில் சொல்ல வேண்டியதாகிவிட்டது. மீண்டும் நான் பதில் அளிக்கும்போது, நிச்சயமாக அவர்களின் உணர்வுகளுக்கு பதில் அளிப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் மீண்டும் பதில் அளிக்க எனக்கு வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய கருத்தைச் சொல்ல வேண்டும். நான் அவற்றுக்குத் தெளிவாக பதில் அளிக்கத் தயாராக இருக்கிறேன்.

அடுத்து, அறநிலையத்துறை அமைச்சரவர்களின் பாதுகாப்பில், அதிகாரத்தில் உள்ள இந்துக் கோவில்களுக்கு ஒருவிதமான நடைமுறை இருக்கிறது. அதே நேரத்தில் முஸ்லீம் கோவில்களுக்கு ஒருவிதமான நடைமுறையும், கிருத்துவக் கோவில்களுக்கு ஒருவிதமான நடைமுறையும் இருக்கிறது. இதுதான் இந்துக்களிடையே ஏற்பட்டுள்ள ஆத்திரமான நிலையாகும். அதை மறுக்க முடியாது. யாருக்காகவோ கூறுகிறார்கள், யாருக்காகவோ பேசுகிறார்கள் என்று நினைக்கக்கூடாது. நான் ஆர்.எஸ்.எஸ். அல்ல. தமிழகத்தில் அது பெரிதாக வளர்ந்துவிட்டது. அதற்கு வக்காலத்து வாங்கப் போகிறேன் என்பதல்ல. அப்படிக் கருதக்கூடாது. இன்றைக்கு ஏன் அவை வேரூன்ற வாய்ப்பு இருக்கிறது என்பதைச் சிந்திக்க வேண்டும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, இந்துக் கோவில்களுக்கு ஒரு முறை, மசூதிகளுக்கு ஒரு முறை, சர்ச்சுகளுக்கு ஒரு முறை என்று இருக்கும் வித்தியாசம் தானே அதற்குள்ள தனித் தன்மையைக் காட்டுகிறது. அதில் என்ன வித்தியாசத்தை மாண்புமிகு உறுப்பினரவர்கள் காண்கிறார்கள்?

[1983 மார்ச் 29

திரு. செ. முத்துசாமி: மாற்றுத் தலைவர் அவர்களே, முஸ்லீம் மசூதிகள் வடிவமைத்துக் கட்டப்படுவது ஒரு முறை, கிருத்துவ சர்ச்சுகள் வடிவமைத்து, சிலுவையை மேலே வைப்பது ஒரு முறை. இந்துக் கோவில்களுக்கு வடிவமைத்து, கோபுரம் அமைப்பது ஒரு முறை. அதில் எல்லாம் எந்தவிதமான தவறும் சொல்லவில்லை. கோவில்களுக்கு இருக்கக்கூடிய சொத்துக்கள் என்று வரும்போது, சொத்துடமை சமுதாயத்தில் மனிதர்கள் எல்லோரும் தவறு செய்வதற்கு உட்பட்டவர்கள்தான். ஆனால் ஒரு நிறுவனத்தின் சொத்தின் பிரச்சினையில் யாரும் தலையிடக்கூடாது, அதற்கு ஒருவிதமான சட்டம்; இன்னொரு கோவிலுக்கு ஒருவிதமான சட்டம். அந்த மாதிரி அரசியல் சட்டம் இடம் கொடுத்தால், அது மாற்றப்பட வேண்டும். அதுதான் நாட்டிலே இருக்கும் அடிப்படைச் சண்டைகளை உண்டாக்குகிறது என்பதால் தான், அந்தக் கருத்தைச் சொல்லுகிறேனே தவிர வேறல்ல. அவற்றுக்கான நடைமுறைகள் ஒரேமாதிரி வர வேண்டும். முஸ்லீம்கள் பல முறை தொழுகிறார்கள். அது அவர்கள் கோட்பாடு. அதை மனதார வரவேற்கிறேன். கிருத்துவர்கள் ஞாயிற்றுக்கிழமை தொழுகிறார்கள். அது அவர்களுடைய பக்தி மார்க்கம். ஏசுவை அவர்கள் நம்பிடுகிறார்கள். அதிலே யாரும் தலையிட முடியாது. அப்படித் தலையிடுபவன் மனிதனாக இருக்க முடியாது. எனக்கு அப்படிப்பட்ட கருத்துக்கள் இல்லை. மதமில்லாத சமுதாயம் அமைக்க வேண்டுமென்று நான் கருதினாலும், மதமற்ற, சாதியற்ற நல்ல சமுதாயம் உருவாக வேண்டும், மனித சமுதாயம் உருவாக வேண்டும்; உலகமெல்லாம் ஒன்றாக வேண்டும்; எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கக்கூடிய திசை நோக்கி நகருகிறது வையம் என்ற பாரதிதாசன் கொள்கையை ஏற்றுக் கொண்டாலும், இன்றைக்கு இருக்கும் கொடுமைகளைச் சொல்லும்போது, நானும் கொஞ்சம் உணர்ச்சிவசப்படுகிறேன். ஆதலால்தான் இந்த விஷயங்கள் வருகின்றன. அரசியல் சட்டத்திலே பாகுபாடு படுத்தி இருப்பதால்தான், அதன் பலகீனமான பகுதியை எடுக்க, சாதிகள், மதங்கள் மோதும் நிலைமை வந்திருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

சீக்கியர்களுக்கு தனிச் சலுகை கொடுத்து வருகிறார்கள். இன்னும் சீக்கியர்களுடைய போராட்டம் வன்மையாக, உயிரே போனாலும் கூட பரவாயில்லை என்கிற முறையில் இருப்பதால், இன்னும் அவர்களுக்கு தனிச் சலுகை கொடுப்பதாகவும், சட்டத்தையே திருத்துவதாகவும் கூட சொல்கிறார்கள். இந்நிலையில் மாநிலங்களுக்கு மாநிலம் வேறுபாடு காட்டப்படுகிறது. அதனால் தான் விரும்பத்தகாத போக்குகள் நாட்டிலே வளருகின்றன. சமுதாயத்



1383 மார்ச் 29] [திரு. செ. முத்துசாமி]

திலே கண்கூடாக நாம் காணுகிற இப்படிப்பட்ட சமுதாயக் கேடுகளை இந்த மன்றத்திலே சுட்டிக்காட்டுவதை என்னுடைய கடமையாக நான் கருதுகிறேன். கலப்புத் திருமணங்கள் இந்த நாட்டிலே ஏற்பட வேண்டும். அந்த வகையில் இந்தச் சமுதாயத்தைப் பிடித்துள்ள கேடுகளை அகற்ற வேண்டும். அந்த அடிப்படையில் என்னுடைய அனுபவத்துக்கு உட்பட்ட வகையில் தான் கருத்துக்களைச் சொல்கிறேன். இப்படிப்பட்ட சமுதாயக் கேடுகளை ஒழிக்க தந்தை பெரியார் அவர்கள் பாடுபட்டார்கள். கலப்புத் திருமணங்களை தந்தை பெரியார் அவர்கள் வளர்த்தார்கள். விதவைத் திருமணத்திலிருந்து வந்தவைதான் கலப்புத் திருமணங்கள். ஆகமங்கள், ஆதீனங்கள் இவற்றின் ஆதிக்கத்தை பெரியார் அவர்கள் எதிர்த்தார்கள். ஜாதி மத பேதமற்ற ஒரு சமதர்ம சமுதாயம் ஏற்பட வேண்டுமென்று இந்தியாவிலேயே பெரிய அளவில் போராடியது தந்தை பெரியார் அவர்கள்தான். வேறு ஒருவரும் அப்படி ஈடுபடவில்லை. அதனால்தான் அதைத் தொடர்ந்து தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் வேரூன்றி, அதன் பிறகு அதனுடைய அமைப்பாக இருக்கிற காரணத்தால்தான், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்திருக்கிறது. நாட்டிலே ஜாதியின் பெயரால், மதத்தின் பெயரால் ஏற்படுகின்ற மூட நம்பிக்கைகள், கொடுமைகள் ஏராளம், ஏராளம். இதனை ஒழிக்கத்தான் சீனாவில் மாசேதுங் கலாச்சாரப் புரட்சி செய்தார். அவரிடத்தில் அத்தனை சக்திகளும், அதிகாரங்களும் இருந்தும் அதில் அவர் தோல்வியடைந்த காரணத்தால்தான், இன்னும் ஒரு நூறு கலாச்சாரப் புரட்சியாவது நடத்தினால்தான் நாட்டு மக்களிடத்திலிருந்து மூட நம்பிக்கை ஒழியும் என்று அவர் சொன்னார். ஆனால் தந்தை பெரியார் அவர்கள் எதையும் சட்டை செய்யாமல், கல்லடி பட்டாலும், எதை எடுத்து வீசினாலும் கவலைப்படாமல், வீரனாக, வைராக்கியமுள்ளவராக இருந்து நாட்டிலே பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்தார்கள். அப்படி இருந்தும்கூட அவர்களுடைய கொள்கை நாட்டிலே வெற்றி பெறாமல் போய்விட்டது. நாட்டிலே கோயில்களின் ஆதிக்கங்கள், ஜாதியின் பெயரால் ஆதிக்கங்கள், மதத்தின் பெயரால் ஆதிக்கங்கள் அதிகமாகி விட்டன. கோயில் வேண்டாமென்று நான் சொல்லவில்லை. ஆனால் அதில் கூட சமத்துவம் இருக்க வேண்டாமா? கடவுள் பெயரால் இருக்கிற கோயில்களாவது சமத்துவத்துடன் நடத்தப்பட வேண்டாமா? ஐயப்பன் கோயிலுக்குப் போகிறவர்களுடைய எண்ணிக்கை இன்றைக்கு திருப்பதியை விட கூடியிருப்பதாகச் சொல்கிறார்கள். பழனி கோயிலுக்கு ஒரு கூட்டம். திருச்செந்தூர் கோயிலுக்கு ஒரு கூட்டம். திருத்தணிக்கு ஒரு கூட்டம். இப்படி எல்லாம் கோயில்களில் நாளுக்கு நாள் கூட்டம் கூடினாலும் கூட, கோயிலுக்குள்ளே போனவுடன் ஒன்றை கடவுளிடம் வேண்டுகிறார்கள். வெளியே வந்தவுடன் அதை

மறந்து விடுகிறார்கள். சமுதாயக் கேடுகளும் நாட்டிலே குறைந்தபாடில்லை. ஆதலால் இந்த பலவீனத்தைப் பயன்படுத்திக்கொண்டு மதத் தலைவர்களும் மக்களைக் கொடுமைக்கு ஆளாக்குகிறார்கள். இதற்கு முடிவு கட்ட நாட்டிலே கலப்புத் திருமணங்களை ஊக்கப்படுத்த வேண்டும். இன்றைக்கு நாட்டிலே சிறுபான்மையினரும், பெரும்பான்மையினரும் இருக்கிறார்கள். இன்றைக்கு சிறுபான்மையினருக்கு இருக்கக்கூடிய சக்தி பெரும்பான்மையினராக, ஜாதி ரீதியில் இருப்பவர்களுக்கு இல்லை. இந்து மதத்தில் ஜாதியின் பெயரால் நடைபெறுகிற தகராறுகள்தான் அதிகம். இந்து மதம் பெரும்பான்மையினரைக் கொண்டதாக இருந்தும்கூட, ஒரே மதத்திற்குள்ளே கூட விவகாரம் இருக்கிறது. இங்கு மதத் தலைவர்கள் ஆதிக்கம் பெறுவதால், அரசாங்கம்கூட ஜனநாயக ரீதியாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறது. இங்கே இதைப்பற்றி நான் பேச தயங்க வேண்டியதில்லை. இன்றைக்கு யார் ஆட்சியில் இருந்தாலும் யாரும் மத அமைப்பில் இருக்கிற குறைபாட்டை உணர்ந்ததாகத் தெரியவில்லை. கலைஞர் ஆட்சிப் பொறுப்பில் உட்கார்ந்திருந்தாலும், எம்.ஜி.ஆர். அவர்கள் உட்கார்ந்திருந்தாலும், சமுதாயத்தின் கோரப் பிடியிலிருந்து அவர்களை விடுவிக்க முடியாது. எங்கள் கட்சியினருக்கு அமைச்சர் பதவி கொடுங்கள் என்று வால்போஸ்டர் ஒட்டுகிற நிலையும், ஜாதியின் பெயரால் மாநாடுகள் நடத்துகிற நிலையும், இளைஞர்களையெல்லாம் கூட்டி, விஞ்ஞானம் வளர்ந்துகொண்டிருக்கிற இந்தக் காலத்தில் ஜாதியின் பெயரால் அவர்களைப் போராட்டத்திற்குத் தயார்ப்படுத்துவதும் சரிதானா? ஜாதியே புகாமல் இருந்து வந்த என்ஜினியரிங் காலேஜுக்குள் இன்றைக்கு ஜாதிப் பிரச்சினை புகுந்து அங்கு ஜாதியின் பெயரால் கொலை கூட நடந்திருக்கிறது. இப்படி எல்லாம் நடைபெறுகின்ற சமுதாயக் கேடுகளை ஒழிக்க மத்திய அரசானாலும் சரி, இந்த மாநில அரசானாலும் சரி கலப்புத் திருமணங்களுக்குச் சலுகைகள் கொடுத்தாவது ஊக்கப்படுத்த வேண்டும். இப்போது அகதிகளாக பாகிஸ்தான், பங்களா தேஷ், பர்மா, வியட்நாம் போன்ற நாடுகளிலிருந்து வருகின்றவர்களுக்கெல்லாம் நல்ல முறையில் சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. மனிதாபிமான அடிப்படையில் அவர்களுக்கு அரசு சலுகை அளித்து வருகிறது. இப்படி சலுகைகளைக் கொடுக்கும்போது, சமுதாயத்தில் இருக்கிற அநியாயங்களைக் களைய சில சலுகைகளைத் தருவது தவறல்ல.

வட கிழக்கு எல்லைப்புற மாநிலங்களிலே கல்வி நிறுவனங்களிலே நடைபெறுகிற மதப் பிரச்சாரம்தான் நாட்டிலே இவ்வளவு வேகத்தை உண்டாக்கியிருப்பதற்குக் காரணம் என்கிற குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள். பாராளுமன்றத்தில் கூட இதே கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. இவைகள் எப்படி



இருந்தாலும், இவைகள் எல்லாம் ஆதிக்கம் பெறுவது நாட்டினுடைய சுதந்திரத்தை, ஆதிபத்தியத்தை, உரிமையைத் தகர்க்கக்கூடிய முயற்சிகள் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. முன் காலத்திலே இந்த நாட்டிலே தோன்றிய இந்து மதப் பெரியோர்கள், கவிஞர்கள் அத்தனை பேரும் ஜாதிக் கொடுமைகளை மிகக் கடுமையாகச் சாடியிருக்கிறார்கள். யாருமே ஜாதிக் கொடுமைகளைப் போற்றவில்லை. அவர்கள் யாரும் இதற்காக கோயிலைப் பயன்படுத்தவில்லை. அவர்கள் வெளியே வந்து தலைமை தாங்கி போராடினார்கள். ஆனால் இன்றைக்கு சிலர் போராட்டத்திற்கு கோயிலைப் பயன்படுத்துகிற நிலையையும் நாம் பார்க்கிறோம். பஞ்சாபில் அப்படித்தானே நடைபெற்றது. வேகமாக அரசாங்கத்தை எதிர்த்துப் போராடி, நாட்டைப் பிரிக்க வேண்டுமென்று கோயிலிலே இருந்து சொல்பவர்களுக்கு ஒரு பாதுகாப்பு கொடுக்கப்படுகிறது. சீக்கியர் கோயில் அமிர்தசரஸில் இருக்கிறதே அங்கு சீக்கியர்கள் இருந்துகொண்டு போராட்டம் நடத்த, போர்க் கொடி தூக்க, ஆதிக்கம் செலுத்த பாதுகாப்பு. ஆனால் இங்கே இந்து கோயில்களுக்கு உள்ளே பூட்ஸ் போட்டுக்கொண்டு நுழைந்து அங்கிருக்கிறவர்களைக் கைது செய்வார்களாம். நியாயத்தைச் சொல்லும்போது, யாராக இருந்தாலும், ஒப்புக்கொள்ள வேண்டும். சீக்கியர்களுடைய கோயிலுக்குள் காக்கிச் சட்டைக்காரர்கள் செல்வது எப்படி புனிதமல்ல என்று சொல்கிறார்களோ அதேபோல இங்கேயும் இந்து கோயில்களுக்குள் காக்கிச் சட்டைக்காரர்கள் செல்வதும் புனிதமல்ல என்று சொல்வது எவ்வாறு தவறாகும்? இதிலுள்ள அடிப்படையை எண்ணிப் பார்க்க வேண்டும். உடலில் காயம் ஏற்பட்டால், உடனே மருந்து போடுகிறோம். அதற்கேற்ப நோய் வந்ததற்குப் பிறகு அதனுடைய அடிப்படைக் காரணம் என்ன என்பதை உணர்ந்தால்தான், அதற்குரிய தீர்வு காணமுடியும். நான் யாருடைய மனதையும் எந்த மதத்தினரையும் புண்படுத்த வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. நான் எப்போதுமே மாண்புமிகு உறுப்பினர் திரு. வலம்புரி ஜான் அவர்களுடைய பேச்சின் மீதும், அவர்கள் மீதும் கொஞ்சம் பற்றுதல் கொண்டவன். இருந்தாலும் கூட அவர்கள் நான் ஏதோ பிரச்சினையை வேறு விதமாகக் கொண்டு செல்கிறேன் என்று நினைக்கக்கூடிய அளவுக்கு என்னுடைய பேச்சு அமைந்து விட்டதற்காக உள்ளபடியே வருந்துகிறேன். இந்த சமுதாயத்தினுடைய அடிப்படையாக இருக்கக்கூடிய நோய்களை, ஜாதிக் கொடுமைகளை, சமுதாயக் கேடுகளை வேரிலேயே கிள்ளி எறிய வேண்டும். ஜாதி மத வேறுபாடு இல்லாமல், ஒன்றுபட்டு, அனைவரும் நிற்கக்கூடிய வகையில், ஒரே களத்தை நோக்கி, ஒரே சிந்தனையுடன் செல்லத்தக்க வகையில் ஒரு சமுதாயம் அமையத்தான் கலப்புத் திருமணத்தினுடைய அவசியத்தை நான் வலியுறுத்துகிறேன். இப்படிப்பட்ட போக்குகள் இன்றைக்கு அரசியலிலும்

வந்திருப்பதற்காக நான் உள்ளபடியே வருந்துகிறேன். ஆட்சியில் இருப்பவர்களை இன்புளுவன்ஸ் செய்தாவது இந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாமா என்கிற போக்கும், குறிப்பிட்ட பதவியைப் பெறுவதற்காக ஜாதிக்காரர்கள் எல்லாம் சேர்ந்து வருகிற போக்கும், இந்தக் குறிப்பிட்ட ஜாதியில் நீதிபதிகள் பதவி இல்லாமல் போய்விட்டது. ஆகவே நீதிபதி பதவி வேண்டுமென்று கேட்கின்ற போக்கும் ஒரு ஜனநாயகத்தில் ஒழிக்கப்பட வேண்டிய அம்சங்கள். இந்த வழியை எந்த அரசியல் கட்சிகளும் பின்பற்றக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா:** ஜாதியை எல்லோரும்தான் பயன்படுத்துகிறார்கள். எம்.எல்.சி. ஆக ஒரு ஆசிரியர் பிரதிநிதி வருகிறார் என்றால், அவர் ஆசிரியர் சமுதாயத்திற்காக வாதாடுகிறார். அதுபோல் இதுவும் இருக்கலாம். ஆனால் ஜாதியின் பேரில் நம்பிக்கை அவர்களுக்குக் கிடையாது என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** இந்தப் பொருள் பற்றிய விவாதம் அடுத்த முறை தனி உறுப்பினர் தீர்மானம் வரும்போது தொடரும்.

மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, அவை மீண்டும் நாளை (30—3—1983) பிற்பகல் 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 12·30)

### 5. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

#### *A. Statutory Rules and Orders.*

216. Notification issued with G.O. Ms. No. 400, Housing and Urban Development Department, dated 27th March 1980 regarding declaration of Avanashi as Local Planning area under section 10 (1) of Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil) [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

217. Notification issued with G.O. Ms. No 639, Housing and Urban Development Department, dated 19th July 1982 regarding variation to the Master Plan for Madras Metropolitan area in R.S. No. 1269/4 of Veppery village (Tamil and English) [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]



218. Notification issued with G.O. Ms. No. 662, Housing and Urban Development Department, dated 20th July 1982 regarding variation to the Master Plan for Madras Metropolitan Area (Tamil and English) [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Act 35 of 1972).]

219. Notification issued with G.O. Ms. No. 667, Housing and Urban Development Department, dated 20th July 1982 regarding variation to the Master Plan for Madras Metropolitan Area (Tamil and English) [Laid on the Table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 Nadu Act 35 of 1972).]

220. Notification issued with G.O. Ps. No. 882, Commercial Taxes and Religious Endowments, dated the 29th July 1982 regarding amendment to the Tamil Nadu General Sales Tax Act, 1959. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

221. Seventeenth Annual Report and Review of the Tamil Nadu Handloom Development Corporation Limited for the year 1981-82 [Laid on the Table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

#### *B. Reports, Notifications and other papers.*

**Nil.**

## இணைப்பு I

*[ ஆம் பக்கத்தில் இனம் 2 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]*

சென்னை நகரிலுள்ள மேற்கு மாம்பலம், அசோக்நகர் ஆகிய பகுதிகள் மாநகராட்சி கோட்ட எண் 111, 114, 115, 117, 118 ஆகியவை அடங்கியதாகும். இப்பகுதிகளில் சென்னையின் மற்ற பகுதிகளைப்போல் ஒன்றுவிட்டு ஒரு நாள் குடிநீர் குழாய்களின் மூலம் வழங்கப்படுகிறது. இப்பகுதிகளில் சில தெருக்கள் குடிநீர் அமைப்பின் கடைசிப் பகுதிகளில் (Tail ends) இருப்பதால் சற்று குடிநீர் தட்டுப்பாடு உள்ளது. ஆனால் இதனைச் சரிக்கட்ட லாரிகள் மூலமும், குழாய்க் கிணறுகள் மூலமும் தண்ணீர் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

சென்னை நகரில் இதுவரை 1,634 தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 575 மாண்புமிகு முதலமைச்சரின் சத்துணவு மையங்களில் உள்ளன. இந்தத் தொட்டிகளுக்குத் தண்ணீர் ஊற்ற வாரியத்திற்குச் சொந்தமான 30 லாரிகளும் வாடகைக்கு எடுக்கப்பட்ட 111 லாரிகளும், 13 டிராக்டர்களும் உபயோகப்படுத்தப்படுகின்றன. நகரிலுள்ள எல்லா தொட்டிகளுக்கும் வரிசை எண் கொடுக்கப்பட்டு ஒவ்வொரு லாரியும் எந்த நேரத்தில் எந்தத் தொட்டிகளுக்கு தண்ணீர் நிரப்ப வேண்டுமென்று பயண அட்டவணை தயாரி செய்யப்பட்டு அதன்படி குடிநீர் நிரப்பப்பட்டு வருகின்றனவா என்று சரி பார்க்கப்படுகிறது. இது தவிர ஒவ்வொரு தொட்டிக்கும் ஒரு தனி அட்டை கொடுக்கப்பட்டு தினந்தோறும் தண்ணீர் நிரப்பியதற்குச் சான்றாக பொது நல ஊழியர் அல்லது பொறுப்புள்ள ஒருவரிடமிருந்து ஓட்டுநர் தினந்தோறும் கையெழுத்து வாங்கி வருகிறார். லாரிகள் தொட்டிகளில் தண்ணீர் ஊற்றுகின்றன. டிராக்டர்கள், தொட்டிகளில்லாத சில தெருக்களில் நிறுத்தப்பட்டு அவற்றிலுள்ள குழாய்களிலிருந்து பொதுமக்கள் தண்ணீர் பிடித்துக் கொள்கிறார்கள். மேலும் வீட்டுக் குழாய்களில் குடிநீர் கிடைக்காத, சில இடங்களில், தெருக் குழாய்களின் மூலம் குடிநீர் பெற இயலும். தவிர பல வீடு



களில் சொந்தக் கிணறுகள் உள்ளன. ஒவ்வொரு கோட்டத்திலும் உள்ள தெருக் குழாய்கள், தண்ணீர் தொட்டிகள், குழாய்க் கிணறுகள் முதலியவற்றின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| வ. எண் | விவரம் | கோட்ட எண் 111 | 114 | 115 | 117 | 118 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | பொதுக் குழாய்கள் | 39 | 152 | 47 | 10 | 5 | 253 |
| 2. | தண்ணீர் தொட்டிகள் | | | | | | |
| | அ. மாண்புமிகு முதலமைச்சரின் சத்துணவு மையங்களில் | 2 | 6 | 4 | 2 | 1 | 15 |
| | ஆ. மற்ற தொட்டிகள் | 3 | 6 | 6 | — | 5 | 20 |
| 3. | குழாய்க் கிணறுகள் | 5 | 12 | 10 | 2 | 6 | 35 |
| | மொத்த தொட்டிகள் | 79 | 49 | 54 | 55 | 35 | 272 |

ஆகவே மேற்கு மாம்பலம், அசோக்நகர் பகுதிகளில் குடிப்பதற்கும், சமைப்பதற்கும் குழாய்கள் மூலமாகவும், லாரிகள் மூலமாகவும் குடிநீரும் மற்ற தேவைகளுக்கு நிலத்தடி நீரும் வழங்கப்பட்டு வருகிறது. தண்ணீர் தொட்டிகளில் தண்ணீர் ஒழுங்காக குறிப்பிட்ட நேரத்தில் நிரப்பப்பட்டு வருகிறது.

புகார்களைத் தடுக்கவும், தண்ணீரை ஒழுங்காக விநியோகிக்கவும், சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியம் கீழ்க்கண்டவாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது :—

1. ஒவ்வொரு நீர் வழங்கு தொட்டிக்கும் ஒரு நபரை ரூ. 100 மாதச் சம்பளத்திற்கு வேலைக்கு நியமித்தல்.

2. அவ்வாறு நியமிக்கப்பட்டவர் தொட்டிகளிலிருந்து தண்ணீர் பெறும் மக்களை ஒழுங்குபடுத்தி, நீர் விநியோகம் செய்ய வேண்டும்.

3. எல்லா சென்னைப் பெருநகர் வாரிய லாரிகளுடன் ஒரு ஆயுத போலீஸ் பாதுகாப்பிற்காக இருப்பார்.

## இணைப்பு II

[174ஆம் பக்கத்தில் இனம் 3 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

28—2—1983 அன்று பிற்பகல் 2-45 மணிக்கு பள்ளிக்குப்பம் கிராமத்தில், எம்.ஆர்.எல். 1915 என்ற பதிவு எண் கொண்ட ஸ்பிரிட் ஏற்றி வந்த லாரி ஒன்று பின்னாலே வந்த வண்டிக்கு வழி விடுவதற்காக ஓரமாக சென்றபோது கவிழ்ந்தது. அதில் இருந்த ஸ்பிரிட் கீழே கொட்டியது. அந்த இடத்தின் அருகாமையில் உள்ள 2 செங்கல் சூளைகளில் வேலை பார்த்து வந்த சிலர் கொட்டிய ஸ்பிரிட்டை எடுக்க முயற்சி செய்தனர். திடீரென்று லாரி தீப்பற்றிவிட்டதால் அவ்விடத்திலே இருந்த ஆறு பெண்கள் தீக்காயம்பட்டு மாண்டனர். சுமார் 50 பேர்கள் தீக்காயமுற்றனர். காயமுற்றோர்கள் சென்னை, கீழ்ப்பாக்கம் \மருத்துவமனையிலும், பொது மருத்துவமனையிலும், இராயப்பேட்டை மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டனர். இரண்டு பேர்கள் காயம் அடைந்ததற்கு சிகிச்சை அளிக்கப்பட்டு அனுப்பப்பட்டனர். மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நேரில் சென்று தக்க நடவடிக்கை எடுத்தார்கள். காஞ்சிபுரத்திலுள்ள மாவட்ட ஆட்சியர், வருவாய்த்துறை, சைதாப்பேட்டை விசேஷ துணை ஆட்சியர், உதவி ஆட்சியாளர் பொறுப்பிலே உள்ளவர் மற்றும் தாசில்தார் ஆகியோர் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களிடத்திற்கும் சென்று நடவடிக்கை எடுத்தார்கள். தீயணைக்கும் படையினரும், காவல் துறையினரும், தீயை அணைப்பதற்கும், மீட்புப் பணிகளிலும் ஈடுபட்டனர். காயம் அடைந்த பலரது நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருந்தது. அனுமதிக்கப்பட்டவர்களில் 21 ஆண்களும், 12 பெண்களும் பின்னர் இறந்தனர். மொத்தம் இறந்தவர்களின் எண்ணிக்கை 39. இவர்களில் 18 பேர் ஆண்கள், 21 பேர் பெண்கள். தற்போது 6 ஆண்களும், 11 பெண்களும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த லாரியை ஓட்டி வந்தவர் பம்பாயைச் சேர்ந்தவர் ரதன சிங் என்பவருடைய மகன் தர்சன் சிங் 5—3—1983 அன்று போலீசாரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக வழக்கு தொடரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இறந்தவர்களது குடும்பத்திற்கு இழப்பு ஈட்டு உதவித் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

143171
சென்னை-600 008.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

தவணைத்தாள்.

சே. எண் : 143101    ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| 12/8 | 23/7 | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F. 259A-6—1,00,000—30-1-84.